138
4 — 1910

R65,7
N10
799

ஸ்ரீலக்ஷ்மீஹயவதனபரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ பாகவத மஹாபுராணம்.

## தசமஸ்கந்தம்

(பூர்வபாகம்)

இஃது

தாப்புல்

ஸ்ரீநிவாஸராகவாசாரியரால்

எழுதப்பட்டு

பிரசுரிக்கப்பட்டது.

PRINTED AT THE SOWRASHTRA PRESS,

SALEM.

1910.

*Copy right registered.*

இதன் விலை ரூபாய் ஒன்று.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 14 JUL 1910 MADRAS.

57992

R65,7
N10
57992
89/21
1184
57992
2
MADRAS

# PURANAS.

## INTRODUCTORY NOTE.

The lexicon of Amara Simha gives, as a synonym of Purana, Panchalakshana, that which has five characteristic topics:— (1) Primary creation or Cosmogony. (2) Secondary creation or destruction and renovation of the worlds including chronology. (3) Genealogy of Gods (Pantheism) and Patriarchs. (4) Reigns of Manus or periods called Manwantaras. (5) History or such particulars as have been procured of the solar and lunar races and of their descendants.

Pantheism being one of the characteristics of the Puranas, they seem to the lay reader to have a sectarian or polemical tinge; but a close and intelligent study of the subject will convince him of the fact that, in consonance with the dictates of the Bhagavat Gita, one and all of them refer only to the Primal Cause of the Universe or the Great Author of all things from Whom all things proceed and to Whom all things return.

Krishna Dwaipayana Vyasa, the son of Parasara, is said to be the author of all the Puranas.

The theologion, the moralist, the metaphysician and every other scientist have recourse to the Puranas to find out exegetical passages in support of theories in their individual branch of science, thus showing the cyclopedic character of the works.

At a time when printing was unknown and good writing materials were rare, this literature passing by the name of Púranas, was studied very largely in spite of its voluminous character.

The Great Vydhyaranya, the worthy contemporary of Vedanta Desika, the Great Sri Vaishnava Reformer, who flourished in the thirteenth and fourteenth centuries of the Christian era, quotes with great facility in his invaluable commentary to Parasara Dharma Sastra many passages from almost all the Puranas. Every other commentator of the time or before, has done the same, more or less. This shows how the study of the subject was appreciated and [illegible] with greatness of purpose.

The sketch of the Puranas which will be found in the first few pages of this book, will give an idea of what they contain, and may even create a desire to learn more which can be done by resorting to the original works or their translations.

Actuated by a desire to have Tamil renderings of these monumental works in an easily understood style and at the same time in a compact and handy form, I now attempt to publish the Bhagavata Purana in parts. I crave the indulgence of the public to overlook any errors that may creep in, in the course of the publication.

VANIVILAS, CUDDALORE, 27—1—1909. K. T. SRINIVASA RAGHAVA CHARIAR.



# ஸ்ரீபாகவத மஹாபுராணம்

## தசமஸ்கந்தம்

(பூர்வபாகம்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 14 OCT 1910 MADRAS.

## விஷய சூசிகை.


| அத். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| | பதினெண்புராண விவரணம் ... ... | 1 முதல் 10 |
| | வரலாறு ... ... ... ... | 1 |
| 1 | பூமிதேவி முறையிடல் முதலியன ... | 2 |
| 2 | பலராமாவதாரமும் தேவகிதேவியின் கர்ப்பத்தின் சிறப்பும் ... ... ... | 7 |
| 3 | கண்ணன் திருவவதாரம் ... ... | 11 |
| 4 | கம்சனால் அடியுண்ட பெண் காளியாதல் முதலியன | 14 |
| 5 | நந்தகோபர் புத்திரோற்சவம் கொண்டாடல் ... | 17 |
| 6 | பூதனைவதம் ... ... ... ... | 19 |
| 7 | சகடபங்கம், திருணாவர்த்தவதம், விராட்டு ரூப தரிசனம் ... ... ... | 22 |
| 8 | கண்ணனுடைய பாலலீலைகள் ... ... | 25 |
| 9 | யசோதைப்பிராட்டி கண்ணனை உரலிற்கட்டல் | 31 |
| 10 | யமுளார்ச்சுன பங்கம் ... ... ... | 33 |
| 11 | வற்சாசுர பகாசுரவதம்... ... ... | 36 |
| 12 | அகாசுரவதம் ... ... ... | 39 |
| 13 | பிரமதேவன் சிறுவர்களையும் கன்றுகளையும் மறைத்தல் ... ... ... | 41 |
| 14 | பிரமஸ்தோத்திரம் ... ... ... | 44 |
| 15 | தேநுகாசுரவதம் ... ... ... | 47 |
| 16 | காளியமர்த்தனம் ... ... ... | 48 |
| 17 | பலராமர் காட்டுத்தீயை பானம்பண்ணியது ... | 53 |
| 18 | பிரலம்பவதம் ... ... ... | 54 |
| 19 | கண்ணன் காட்டுத்தீயை பருகினது ... | 55 |
| 20 | கார்கால வருணனை ... ... ... | 56 |
| 21 | கண்ணன் வேணுகானம் செய்தல் ... ... | 59 |
| 22 | கோபியர் வஸ்திராபஹரணம் ... ... | 60 |
| 23 | வேள்விமங்கையர் போக்கியான்னம் சமர்ப்பித்தது | 63 |

| | | |
|---|---|---|
| 24 | கோவர்த்தன பூஜை ... ... ... | 60 |
| 25 | கோவர்த்தனோத்தாரணம் ... ... | 69 |
| 26 | ஆயர்கள் கண்ணன் மகிமைகளை அறிதல் ... | 71 |
| 27 | கோவிந்தபட்டாபிஷேகம் ... ... | 73 |
| 28 | ஸ்ரீகண்ணபிரான் வருணலோகத்துக்கேகுதல் | 75 |
| 29 | கண்ணன் கோபியருடன் கூடி விளையாடல் ... | 77 |
| 30 | கோபியர்கள் கண்ணனை அடிபிடித்தல் ... | 82 |
| 31 | கோபிகா கீதை ... ... ... | 85 |
| 32 | கண்ணனைக்கோபியர் கூடல் ... ... | 87 |
| 33 | ராஸக்கிரீடை ... ... ... | 89 |
| 34 | பாம்புருக்கொண்ட வித்யாதரன் சரிதையும் சங்கசூடவதமும் ... ... | 92 |
| 35 | கோபியர் பகலில் கண்ணன் பிரிவாற்றாமை ... | 94 |
| 36 | அரிஷ்டாசுரவதம் முதலியன ... ... | 95 |
| 37 | கேசிவதமும் வியோமாசுரவதமும் ... | 101 |
| 38 | அக்ரூரர் கோகுலத்துக்கு எழுந்தருளியது | 104 |
| 39 | ராமகிருஷ்ணர்கள் மதுரைக்கெழுந்தருளல் ... | 108 |
| 40 | அக்ரூர ஸ்தோத்திரம் ... ... | 111 |
| 41 | மதுராபிரவேசம் மாலாகாராநுக்கிரகம் ... | 114 |
| 42 | கூனியைச்சுந்தரியாக்கியதும் வில்லை முறித்ததும் | 118 |
| 43 | குவலயாபீடவதம் ... ... ... | 121 |
| 44 | கம்ஸவதம் ... ... ... ... | 123 |
| 45 | ராமகிருஷ்ணர்களுடைய உபநயனமும் வித்தியாப்பியாசமும் ... ... ... | 127 |
| 46 | கோகுலத்துக்கு உத்தவரை அனுப்புதல் ... | 131 |
| 47 | பிரமரகீதையும் உத்தவர் கோபியரைப்புகழ்தலும் | 135 |
| 48 | கண்ணன் ஸைரந்திரிக்கு இன்பங்கொடுத்தல் முதலியன ... ... | 141 |
| 49 | அக்ரூரரை ஹஸ்தினபுரத்துக்கு அனுப்பியது | 143 |
| 50 | ஜராசந்தயுத்தம் யவநவதை முதலியன ... | 145 |
| 51 | முசுகுந்தன் முகுந்தனைக்காண்டல் முதலியன | 149 |
| 52 | ருக்குமணி கண்ணனிடம் வேதியரைத் தூதனுப்பல் ... ... ... | 154 |
| | ருக்குமணி சொல்லியனுப்பிய வாக்கியம் ... | 157 |
| 53 | நாரதியார் திருத்தேரேறியது ... ... | 159 |
| 54 | ஸ்ரீருக்குமணிப்பிராட்டியார் திருக்கலியாணம் | 164 |


# பதினெண்புராண விவரணம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
14 OCT 1910
MADRAS.

## 1. பிரம புராணம்.

இது மரீசி மகரிஷிக்கு பிரமதேவரால் சொல்லப்பட்டது. இதன் தொகை பதினாயிரம் கிரந்தம். முதலில் சிருஷ்டி, மனுவந்தரங்கள், சூரியசந்திரவம்சங்கள் இவைகளைப்பற்றியும், பிறகு பூலோக வர்ணனையும், ஒட்டிரதேசத்தின் மகாத்துமியமும், சூரியன், சிவன், ஜகந்நாதன் இவர்களுக்கு அத்தேசத்திலுள்ள ஆலயங்களின் சிறப்பைப்பற்றியும் சொல்லுகின்றது. ஜகந்நாதத்தினுடைய மகிமையை சிறப்பாய் வர்ணித்து, அங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகிருஷ்ணபகவானை ஆராதிப்பதாலுண்டாய விசேஷத்தை முக்கியமாய் உணர்த்தி, அவனுடைய திவ்விய சரித்திரங்களையும் கூறியுள்ளது. பிறகு யோகாப்பியாசம் செய்யவேண்டிய முறைமையையும் அதற்கு தேவதை ஸ்ரீகிருஷ்ணனென்பதையும் பிரதிபாதிக்கிறது. சில தீர்த்தமகாத்துமியமும் ஸ்தலமகாத்துமியமும் இப்புராணத்திற்குரியனவென்று சொல்லப்படுகிறது.

## 2. பாத்ம புராணம்.

இதன் தொகை ஐம்பத்தையாயிரங்கிரந்தம். இது சிருஷ்டிகாண்டம், பூமிகாண்டம், சுவர்க்ககாண்டம், பாதலகாண்டம், உத்தரகாண்டம், கிரியயோகசாரமென ஆறுபிரிவாகப்பிரிக்கப்பட்டுள்ளது.

### சிருஷ்டி காண்டம்.

இதில் பூலோக சிருஷ்டியும், மனுவந்தரங்கள், ராஜவம்சங்கள், பிதுர் வம்சங்கள் இவைகளும், பின்னால் புஷ்கரமகாத்துமியமும் கூறப்படுகின்றன.

### பூமி காண்டம்.

இதில் பலவித சரித்திரங்களும், தீர்த்த ஸ்தலமகாத்மியங்களும், பூலோக வர்ணனையும் உரைக்கப்படுகின்றன.

### சுவர்க்க காண்டம்.

பூலோகத்துக்கு மற்ற உலகங்கள் எவ்விடத்திலிருக்கின்றனவென்பதையும், அவைகள் எவ்வித சிறப்புவாய்ந்தவையென்பதையுங்கூறுகிறது. பின்பு ராஜாக்களுடைய சரித்திரங்கள், இன்னும் பலவிதமான உபாக்கியானங்கள், வருணாசிரமதருமங்கள் இவைகளை விவரிக்கின்றது.

### பாதல காண்டம்.

பாதலவர்ணனையும், ஸ்ரீராமபிரானுடைய திவ்யசரித்திரங்களையும், அவற்றில் அசுவமேதயாகத்தை முக்கியமாயும், ஸ்ரீகண்ணபிரானுடைய பால யௌவன சேஷ்டிதங்களையும் உணர்த்துகின்றது.

### உத்தர காண்டம்.

இது மாகமகாத்மியம், கார்த்திக மகாத்மியம், இவைகளையும், சாளக்கிராமம், துளசி முதலியவைகளின் விசேஷத்தையும் தப்தமுத்திரை முதலான ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாய விஷயங்களையும், திருமந்திரங்களின் மகிமையையும் செவ்வே உணர்த்துகின்றது.

### கிரியயோகசாரம்.

இதில் கலியுகத்தில் மானிடர் தவத்தால் வீடுபெறக்கூடாமையால், அவ்விதமோக்ஷத்தையடையும் உபாயமான பக்தியின் திறம் கூறப்படுகிறது.

## 3. விஷ்ணு புராணம்.

வராககற்பத்தின் சரித்திரத்தைப்பற்றிப் பராசரமுனிவர் ஸ்ரீவைஷ்ணவ தருமங்கள் விளங்கும்படி செய்தது. இதன்



தொகை இருபத்துமூவாயிரங்கிரந்தம். இதுதான் புராணங்களுக்குள்ள பஞ்சலக்ஷணங்களும் பொருந்தியிருக்கின்றது. இது ஆறு சம்ஹிதையுள்ளது. முதல் சம்ஹிதையில் சிருஷ்டி சம்ஹாரமுதலியனவும், இரண்டாவது சம்ஹிதையில் முதல் மனுவந்தரத்தில் ஆட்சிசெய்த ராஜாக்களின் வரலாறும், மூன்றாவது சம்ஹிதையில் வேத விபாகஞ்செய்த வியாசர்களுடைய வரலாறும், வருணாசிரம தருமமும், அபரகிரியைகளின் கிரமமும், நான்காவது சம்ஹிதையில் சூரிய சந்திரவம்ச ராஜாக்களின் சரித்திரங்களும், ஐந்தாவது சம்ஹிதையில் ஸ்ரீகண்ணபிரானுடைய அதிமானுஷ லீலாவிநோதங்களும், ஆறாவது சம்ஹிதையில் நித்திய நைமித்திக பிரளய வர்ணனை முதலியனவுங்கூறப்படுகின்றன.

## 4. சிவ புராணம்.

இதற்கு வாயுபுராணமென மற்றொருபெயருளது. இதன் தொகை இருபத்துநாலாயிரங்கிரந்தம். இது வாயுபகவானால் ஸ்வேதகற்பத்தில் மனிதர்கள் சாஸ்திரோக்தமாய்ச்செய்யவேண்டிய கடமைகளைப்பற்றிச் சொல்லப்பட்டது. இதில் ருத்திர மகாத்மியம் முக்கியமாய் சொல்லப்படுகிறது. இது பிரகிரியையென்றும், உபோத்காதமென்றும், அநுஷங்கமென்றும், உபசம்ஹாரமென்றும் நான்குபாதமாக பிரிக்கப்பட்டிருக்கிறது.

பிரகிரியை பாகத்தில் பிரதம சிருஷ்டியைப்பற்றிக் கூறப்படுகிறது.

இரண்டாவதாகிய உபோத்காதத்தில் முப்பத்துமூன்று கற்பங்களின் வர்ணனையும், அவற்றிற்கிடையதான ஸ்வேதகற்பத்தில் சிவபெருமான் வெண்மை நிறத்துடன் திருவவதாரஞ்செய்ததையும், கோத்திரத்தலைவருடைய வம்ச விஸ்தாரமும், பூலோகவர்ணனையும், ஆறுமனுவந்தரங்களின் வரலாறும், தக்ஷப்பிரஜாபதியினுடைய யாகமும், மஹேச்வர மகாத்மியமும், நீலகண்டஸ்தோத்திரமுதலானவையும் சொல்லப்படுகின்றன.

பிதுர்தேவதைகளின் சரித்திரமும், வேதவிபாகஞ்செய்தவர்களான மகரிஷிகளுடைய சரித்திரமும் இப்புராணத்தில் விசேஷமாய்க் கூறப்படுகின்றன.

மூன்றாவதுபாகமாகிய அநுஷங்கத்தில் சப்தரிஷிகளுடைய சரித்திரமும் அவர்களுடைய வம்ச விஸ்தாரமும், தக்ஷபுத்திரியின் சிருஷ்டி வியாபாரமும், பிதுர்ஸ்தோத்திரமும், அவர்களுக்குரியதான தீர்த்தங்களின் விசேஷமும், சிராத்தஞ்செய்யுமுறையும், சூரிய சந்திரவம்ச ராஜாக்களின் சரித்திரங்களும் கூறப்படுகின்றன.

நான்காவதாகிய உபசம்ஹாரபாகம் இனிவரும் மனுவந்தரங்களின் வர்ணனை, காலம் இடங்களின் பரிமாணம், பிரளய வர்ணனை, யோகசித்தியின் பயன், சிவபுரியின் மகிமை இவைகளை செவ்வே உணர்த்துகின்றது.

## 5. பாகவத புராணம்.

இது காயத்திரியின் பொருளால் தொடங்கி பகவத் சரித்திரங்களை சுகப்பிரம்மரிஷியால் பரிக்ஷித்துமகாராஜனுக்கு உபதேசிக்கப்பட்டது. இதன் தொகை பதினெண்ணாயிரங்கிரந்தம். இது பன்னிரண்டு ஸ்கந்தங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. பிரமோற்பத்தியும், சிருஷ்டி சம்ஹார முதலியனவும், ஸ்ரீ பகவானுடையவராகாவதார வைபவமும், சுவாயம்பு மனுவினுடைய புத்திரியான தேவபூதியை கர்த்தம பிரஜாபதி மணந்ததும், பகவான் கபிலாவதாரம்செய்து சாங்கிய தத்துவத்தை தமது அன்னைக்கு உபதேசித்ததும், துருவன், வேனன், பிருதுமுதலிய சக்கரவர்த்திகளுடைய சரித்திரங்களும், பூமண்டலாதி வர்ணனையும் முதல் ஐந்து ஸ்கந்தத்தில் சொல்லப்படுகின்றன. ஆறாவது ஸ்கந்தம் விஷ்ணுபக்தியின் மகிமையை உணர்த்தற்பாலதான திவ்வியசரித்திரங்கள் நிறைந்துள்ளது. ஏழாவது ஸ்கந்தமுழுமையும் பிரஹ்லாதாழ்வானுடைய வைபவம் கூறுகிறது. எட்டாவது ஸ்கந்தம் சில மனுவந்தரங்களின் விவரணம், கஜேந்திரமோக்ஷம், க்ஷீ



ராப்திமதனம், திரிவிக்கிரமாவதார விசேஷம் இவைகளை உணர்த்துகின்றது. ஒன்பதாவது ஸ்கந்தம் வைவச்சுதமனுவந்தரத்தில் அரசாக்ஷிபுரிந்த ராஜவம்சங்களின் சரித்திரங்களை சொல்லுகின்றது.

பத்தாவது ஸ்கந்தமுழுமையும் ஸ்ரீ கண்ணபிரானுடைய திவ்விய சரித்திரங்களையே கூறுகின்றது.

பதினோராவது ஸ்கந்தத்தில் உத்தவருக்குக் கண்ணபிரான் யோகமார்க்க உபதேசம் செய்கிறார். பன்னிரண்டாவது ஸ்கந்தத்தில் சில ராஜபரம்பரையும், யுகமுடிவில் சர்வவஸ்துக்களும் க்ஷீணித்து நாசமுறுந்தன்மையும் கூறப்படுகின்றன.

## 6. நாரதீய புராணம்.

இது பிருஹத்கற்ப தருமங்களைப்பற்றி நாரதமுனிவரால் நவிலலுற்றது. இதன் தொகை இருபத்தையாயிரங்கிரந்தமாகும். இதில் முக்கியமாய் விஷ்ணுபக்தியின் திறமும், துருவன், பிரஹ்லாதன், ருக்மாங்கதன், மார்க்கண்டேயர் முதலானவர்களுடைய சரித்திரமும், கங்கா மகாத்மியமும், சாகரர் கடல்தோண்டியதும், வருணாசிரம தருமங்களும், புண்ணிய பாப பலன்களும் செவ்வையாய் உணர்த்தப்படுகின்றன.

## 7. மார்க்கண்டேய புராணம்.

இது தருமாதருமங்களை விசாரிக்க மார்க்கண்டேயமுனிவரால் சொல்லலுற்றது. இதன் தொகை ஒன்பதினாயிரங்கிரந்தமாகும். இது ஜைமினி முனிவருக்கு பிங்காக்ஷன் முதலான தெய்வபக்ஷிகளால் பின்னால் உரைக்கப்பட்டது. இதில் பகவானுடைய திருவவதாரங்களுக்கும், திரௌபதிக்கு ஐந்து புருஷர்களுண்டானதற்கும், பலதேவர் பிரமஹத்தியைப்போக்க தபம்புரிந்ததற்கும், உபபாண்டவர்கள் மரணமடைந்ததற்கும் காரணம்

சொல்லுகின்றது. பிறகு சிருஷ்டியாதிக்கிரமமும், பூமண்டலாதி வர்ணனையும் சொல்லுகிறது. துர்க்காமகாத்துமியம் விசேஷமாய்க் கூறப்படுகிறது. இதுவே இப்புராணத்தின் முக்கியபாகமாயது.

## 8. அக்கினி புராணம்.

இது ஈசானகற்ப விருத்தாந்தங்களை வருணித்து அக்கினி பகவானால் வசிஷ்ட மகரிஷிக்குச் சொல்லப்பட்டது. இதன் தொகை பதினாயிரங் கிரந்தம். முதலில் பகவானுடைய ஸ்ரீராம கிருஷ்ணாதி அவதார விசேஷங்களும், வைதிக தருமங்களை அநுஷ்டிக்கவேண்டிய முறைமைகளும், பின்னால் கயா மகாத்துமியமும், ராஜதருமமும், வேதபுராண விபாகவகையும், தானப்பிரகரணமும், வைத்திய முறையும், அணியிலக்கணமும், யாப்பிலக்கணமும், வியாகரணமும் இவற்றின் சாரமும் கூறப்படுகின்றன. இவ்விதமாய் இப்புராணம் நானாசாஸ்திரவகராதிபோன்றது.

## 9. பவிஷ்ய புராணம்.

இது அகோரகற்ப விருத்தாந்தத்தைப்பற்றி பிரமதேவனால் உரைக்கப்பட்டது. இதன் தொகை பதினாலாயிரத்து ஐந்நூறு கிரந்தமாகும். முதலில் சிருஷ்டியாதிகளின் கிரமமும், பிறகு வைதிக கிருத்தியங்கள் செய்யவேண்டிய முறையும் கூறுகின்றன. இதில் பத்துவித சம்ஸ்காரங்களும், சந்தியாவந்தனமும், குரு சிஷியக்கிரமமும், வருணாசிரம தருமமும், விரதாதிகள் அநுஷ்டிக்கவேண்டிய முறையும் அடங்கியிருக்கின்றன. சூரியபகவானுடைய மகிமையை பிற்பாகத்தின் பெரும்பான்மை கூறுகிறது.



## 10. பிரம கைவர்த்த புராணம்.

இது நாராயண ரிஷியால் நாரதமுனிக்கு உபதேசிக்கப்பட்டது. இதன் தொகை பதினெண்ணாயிரங் கிரந்தம். இது பிரம, பிரகிருதி, கணேச, கிருஷ்ணஜன்ம கண்டங்களென நான்கு பிரிவுள்ளது. இவைகள் முறையே பிரமா, தேவி, கணேசன், கிருஷ்ணன் இவர்களைப்பற்றிச் சொல்லியிருப்பன. பிரமகாண்டத்தில் கம்மாள ஜாதியின் உற்பத்தியைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. இந்த ஜாதியைப்பற்றிய சில விவகாரங்களுக்கு இதிலிருந்து சில மேற்கோள்கள் எடுக்கப்படுகின்றன. கிருஷ்ணஜன்ம காண்டத்தில் பாகவதாதி புராணங்களிலுள்ள திவ்விய சரித்திரங்கள் தவிர ராதாதேவியினுடைய சரித்திரம் சிறப்பாய்க் கூறப்படுகிறது.

## 11. லிங்க புராணம்.

இது அக்கினிகற்பத்தின் முடிவில் அக்கினிலிங்கரூபியாய் மகேஸ்வரன் தருமார்த்தகாமமோக்ஷங்களை விளங்கச் செய்தது. இதன் தொகை பதினோராயிரங் கிரந்தம். சிருஷ்டி பிரதிசிருஷ்டி, பிதுர்வம்சமுதலியனவும், சிவபெருமானுடைய இருபத்தெட்டு அவதார விசேஷங்களும், தேஜோலிங்கமஹிமையும், பூமண்டலாதி வர்ணனையும், ராஜவம்சங்களின் சரித்திரங்களும் சொல்லப்படுகின்றன. இப்புராணம் சிவஸ்தோத்திரமும், சிவபூஜாவிதியும் பெரும்பான்மை உரைக்கின்றது.

## 12. வராக புராணம்.

மானவகற்ப சம்பந்தமாய் வராகாவதார மஹிமையை ஸ்ரீவிஷ்ணுபகவான் பூமிதேவிக்குத் திருவாய்மலர்ந்தருளியது. இதன் தொகை இருபத்து நாலாயிரங் கிரந்தம். இது சிவபூஜாவிதிகளை லிங்கபுராணம் உரைத்தல்போல, விஷ்ணுபூஜாவிதிகளை

உண்டாக்குகின்றது. இது எம்பெருமானுக்கு திருவுள்ளமுகப்பான திவ்விய தேசங்களின் மஹிமையும், தீர்த்தங்களின் மஹிமையும் [illegible] பார்வதை கூறுகிறது. இதில் மதுரா மகாத்மியம் விசேஷமானது.

## 13. ஸ்காந்த புராணம்.

முருகக்கடவுளால் தற்புருஷகற்பத்தின் சம்பந்தமாய் ருத்திரமஹாத்மியமும், ருத்திர தருமங்களும் விளங்கும்படி செய்யப்பட்டது. இது லக்ஷம் கிரந்தமுள்ளது. இது சம்ஹிதையென்றும், காண்டமென்றும், மகாத்மியமென்றும் மூன்று வகையாய் பிரிக்கப்பட்டுள்ளது.

சூத சம்ஹிதை, சநத்குமார சம்ஹிதை, கபில சம்ஹிதை முதலிய சம்ஹிதைகளும், காசிகாண்டம், உத்கலகாண்டம், பிரமோத்தரகாண்டம், தேவகாண்டம், சிவரகசியகாண்டம், ஹிமவத்காண்ட முதலியனவும் அடங்கியிருக்கின்றன. இதில் காசிகாண்டம் மிகவும் பெரியது.

## 14. வாமன புராணம்.

இது சிவகற்ப சம்பந்தமாய் தருமார்த்த காமங்களை நன்கு விளக்குவது. கிரந்தத்தொகை பதினாயிரம்.

இதில் பகவானுடைய திருவிக்கிரமாவதாரவைபவம் விசேஷமாய்ச் சொல்லப்படுகிறது. லிங்கபூஜையின் மகிமையும், காசி, பதரிகாசிரமம் முதலிய க்ஷேத்திரமகாத்மியங்களும், ஸ்தாணு தீர்த்தத்தின் மகிமை விசேஷமாயும் கூறப்படுகின்றன. உமாமகேச்வரர்களுடைய திருக்கல்யாண வைபவமும், கார்த்திகேயருடைய திருவவதாரமும் செவ்வே உரைக்கின்றன. ஹரிஹரர்களிடத்தில் தாரதம்மியமின்றி சமமான பக்தி செய்யவேண்டுமென்று இப்புராணம் கற்பிக்கிறது.



## 15. கூர்ம புராணம்.

கூர்மரூபியான விஷ்ணு தருமார்த்த காமமோக்ஷங்களைப் பற்றி பாதலத்தில் இந்திரத்யும்நன் என்னும் அரசனுக்காகவும் ரிஷிகளுக்காகவும் திருவாய்மலர்ந்தருளியது. இது லக்ஷ்மி கற்பத்தைப்பற்றியது. கிரந்தத்தொகை பதினேழாயிரம். இதில் சிவன், துர்க்கை இவர்களின் பூஜையின் மகிமை விசேஷமாய் உரைக்கப்படுகிறது.

### பூர்வபாகம்.

இதில் சிருஷ்டி முதலியனவும், ஸ்ரீவிஷ்ணுபகவானுடைய அவதார விசேஷங்களும், சூரியசந்திர ராஜவம்ச சரித்திரங்களும், பூமண்டலத்தின் வர்ணனையும், மனுவந்தரங்களும் சொல்லப்படுகின்றன. இப்பாகத்திலேயே மகேச்வரின் விஷயமான ஸ்தோத்திரங்களும், பைரவரால் அந்தகாசுரன் தோல்வியடைந்த சரித்திரமும், சிவத்திலிருந்து மஹேச்வரி, சிவம், சதி, ஹிமவதி என்கிற சக்திகளுண்டான விவரம், சிவபெருமானுடைய திருவவதாரங்களும், காசி மகாத்மியமும் கூறப்படுகின்றன.

### உத்தரபாகம்.

இது ஈச்வரகீதை வியாசகீதையென இருவகைப்பிரிவுடையது. இவைமுறையே ஞானயோக கர்மயோகங்களை பிரதிபாதிக்கின்றன.

## 16. மச்சிய புராணம்.

இது மச்சிய ரூபியான திருமால் வேதங்கள் பிரவிர்த்திக்கும்பொருட்டு, மனுவுக்கு எழுகற்பங்களையும் பற்றி நரஸிம்மாவதார மகாத்மியத்தோடு திருவாய்மலர்ந்தருளியது. கிரந்தத்தொகை இருபதினாயிரம். இதில் விரதங்கள் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. சிருஷ்டி, பிதுர் வம்சங்கள், ராஜவம்சங்கள், வருணாசிரமதருமங்கள், அவற்றுள் கிரகஸ்தாசிரமத்தின் முக்கிய தருமங்கள், பூமண்டலாதி வர்ணனை, திரிபுரசம்ஹார

ரித்திரம், தாரகாசுர யுத்தம், கார்த்திகேயருடைய திருவவதாரம், உமாமகேச்வரர்களுடைய திருக்கல்யாண வைபவம், காமதகனம், விஷ்ணுவினுடைய அவதாரமஹிமைகள், பதிவிரதையான சாவித்ரியினுடைய சரித்திரம் இவைகள் சொல்லப்படுகின்றன. ராஜதர்மம், உலகநீதி, மணிசாஸ்திரம், சிற்ப சாஸ்திரம் இவைகளைப்பற்றி இப்புராணத்தில் அநேக அத்தியாயங்கள் கூறுகின்றன. இது சைவபுராணமென்று கூறப்படுகிறதாயினும் லிங்க கூர்ம புராணங்களைப்போல் ஒருதலைச்சார்புடையதன்று.


## 17. கருட புராணம்.

இது கருடகற்பத்தில் கருடனுக்கு விஷ்ணு உபதேசித்தது. இதன் தொகை பதினாயிரங்கிரந்தம். இதில் விரதாதிகளுடைய மகிமையும், சூரியபகவானுக்குரியனவாய ஸ்தலங்களின் மகாத்மியமும், சூரியன், சிவன், விஷ்ணு இவர்களைப்பற்றிய ஸ்தோத்திரங்களும் சொல்லப்படுகின்றன. மேலும் ஜோதிஷ சாஸ்திரம், ரேகைசாஸ்திரம், ரத்தினபரீக்ஷை, வைத்தியசாஸ்திரம் இவைகளின் சங்கிரஹமும் அடங்கியிருக்கின்றன. உத்தரபாகம் பிரேதகல்பமென பெயருடையது. அதில் அபரக்கிரியைகளும், அவற்றின் உபயோகமும் செவ்வே உணர்த்தப்பட்டிருக்கின்றன.

## 18. பிரமாண்ட புராணம்.

பிரமாண்ட மகாத்மியத்தைப்பற்றி பிரமதேவன் சொல்லியது பிரமாண்டபுராணம். இதில் வருங்கற்பங்களைப்பற்றி விஸ்தாரமாய்ச் சொல்லப்படும். இதன் கிரந்தத்தொகை பன்னீராயிரம். இது சிவபுராணத்திலுள்ள விஷயங்களை சிலவிடங்களில் சுருக்கியும் சிலவிடங்களில் பெருக்கியும் கூறுவதுமன்றி பராசக்தியினுடைய மகிமையை செவ்வேயுரைக்கின்றது.






ஸ்ரீலக்ஷ்மிஹயவதன பரப்பிரம்மணே நம:

# ஸ்ரீபாகவதமஹாபுராணம்.

### வரலாறு.

இதிஹாஸங்களுக்குள் ஸ்ரீமத்ராமாயணம்போல புராணங்களுக்குள் ஸ்ரீபாகவதம் சிரேஷ்டம். இது காயத்திரி ரூபமான ஹயக்கிரீவ பிரம்ஹ வித்தையை பிரதிபாதிக்கிறது. இப்புராணத்தின் மஹிமை பின்வரும் ஸ்காந்த காருட புராண வசனங்களால் நன்கு விளங்கும்.

ஸ்காந்தம்.

ஹயக்ரீவ பிரம்ஹ வித்யாயத்ர வ்ருத்ரவதஸ்ததா
காயத்ரியாசஸமாரம்பஸ் தத்வைபாகவதம் விது:

காருடம்.

காயத்ரி பாஷ்யரூபோஸௌ வேதார்த்தபரி ப்ரம்ஹித:
புராணாநாம் ஸாரரூபஸ் ஸாக்ஷாத் பாகவதோதித:

இப்புராணம் பன்னிரண்டு ஸ்கந்தங்களையுடையது. அவைகளுக்குள் நிகிலவேதாந்த தாத்பரிய பூமியான ஸர்வேசுவரன் தரும ஸம்ஸ்தாபநம் செய்தருளிய திருவவதாரங்களுக்குள் பரிபூர்ணதமமான ஸ்ரீகிருஷ்ணாவதாரவைபவத்தை பிரதிபாதிக்கிற தசமஸ்கந்தத்தை முதலில் எழுதுவாம்.

இப்புராணம் சந்திர குலோத்பவனான பரிக்ஷித்து மகாராஜனுக்கு சுகப்பிரம்மரிஷியினால் உபதேசிக்கப்பட்டது. இதின் அவசியம் பிரதம ஸ்கந்தத்தில் விவரிக்கப்படுகின்றது.

## திருமால் துதி.

சீர்பூத்த பரஞ்சுடராய்ச் சிந்தாகிக் கானவிடை
நீர்பூத்த தெளவிலக நிறைந்தொளிதன் பாற்றோன்ற
ஏர்பூத்த முத்தொழிலு மினிதியற்றித் தனிநின்ற
கார்பூத்த திருமேனிக் கடவுண்மல ரடிபணிவாம்.

## தசமஸ்கந்தம்.

## 1-ம் அத்தியாயம்.

---

## பூமிதேவிமுறையிடல் முதலியன.

---

ஓ முனிசிரேஷ்டரே! யது வம்சத்தில் அவதரித்த ஸ்ரீமந் நாராயணனுடைய ஆண்மைகளை அடியேனுக்குச் சொல்லியருளவேண்டும். உத்தமஸ்லோகனை கண்ணபிரானுடைய குணகீர்த்தனம் பண்ணுவதினின்றும் பசுஹிம்சை பண்ணுவானொருவன் தவிர மற்றெந்த புருஷன் விரக்தியடைவான். மகாரதர்களான பீஷ்மத்துரோணாதிகளால் காக்கப்பட்டு ஜயிக்கவரியதான கௌரவ சேனாசமுத்திரத்தை எந்தபகவானுடைய சகாயத்தால் எனது பாட்டன்மார் ஜயித்தனரோ, துரோணாசாரிய புத்திரனான அசுவத்தாமன் எனது மாதாவினுடைய கர்ப்பத்தில் அஸ்திரப்பிரயோகஞ்செய்தபோது அதனால் யாதொரு தீங்குமணுகாவண்ணம் காத்தருளிய சரணாகத வத்சலனாகிய பரமபுருஷனுடைய விபவாதிசயங்களை அடியேனுக்கு உரைத்தல்வேண்டும். தேவரீருடைய முகாரவிந்தத்தினின்று பெருகுகிற ஸ்ரீஹரியினுடைய கதைகளாகிற அமிர்தத்தை பானஞ்செய்கின்ற அடியேனை பசியானது பீடிக்கவில்லை. அடியேனுக்கு தாரகபோஷகபோக்கியங்களெல்லாம் அவன் கதைகளேயாகின்றன. இவ்வாறு பிரச்னம் செய்த பரிக்ஷித்து மகாராஜனை நோக்கி சுகப்பிரமரிஷி விளம்பலுற்றனர்.

மகாகர்வத்தையடைந்து அரசர்களென்று பெயர்வாய்ந்த அசுரர்களின் பாபமாகிற பாரத்தைத் தாங்கமாட்டாமல் பூமி



தேவி பசுரூபந்தரித்து துக்காக்ராந்தையாய் கண்ணீர் தாரைதாரையாய்ச் சொரிய, பிரமரிஷிகளால் நிறையப்பெற்றதும், தேவகந்தருவர்களாலும் அரம்பையர்களாலும் அடையப்பெற்றதுமான நான்முகன் கொலுக்கூடத்தை நணுகி, தனது வியாகுலத்தை முறையிட்டனள். இதற்கு பிரமதேவன் நம்மால் யாதொன்றுஞ்செய்யக்கூடியதில்லையென்றுசொல்லி, பூமிதேவியையும், ருத்ரப்பிரானையும், இந்திரதேவர்களையும் அழைத்துக்கொண்டு திருப்பாற்கடலையடைந்து, அங்கு அரவணையின்மீது அறிதுயிலமரும் பரந்தாமனைத் தம்முடைய ஹிருத்பகமலத்தில் எழுந்தருளப்பண்ணி, யமநியமாதிகளுடன் ஸமாதியிலிருந்து புருஷஸூக்தத்தினால் மானஸகமாகத் தியானித்திருந்தார். அப்போது பகவான் அசரீரியாக சிலவார்த்தைகளை அருளிச்செய்யக்கேட்டு அவற்றை தேவர்களுக்கு உரைப்பாராயினர். பரமபுருஷன் பூபாரநிவிர்த்திக்காக பூலோகத்தில் சஞ்சரிக்கின்றகாலபரியந்தம் உங்கள் அம்சங்களைக்கொண்டு யாதவ வம்சத்தில் ஜநித்திருக்கக்கடவீர்கள். வசுதேவருடைய கிருஹத்தில் பரமபுருஷன் அவதரிக்கப்போகிறார். அவருடைய ஆராதனநிமித்தம் தேவஸ்திரிகளெல்லாரும் பூமியில் பிறக்கக்கடவர்கள். ஆயிரம் பணாமண்டலங்களையுடைய திருவநந்தாழ்வான் அவருக்குத் தமையனாராக அவதரிக்கப்போகிறார். விஷ்ணுமாயையும் தேவகிதேவியாரின் கர்ப்பத்தை ஈர்த்து ரோகிணிதேவியாரிடம் வைத்தல் முதலிய சிலகாரியார்த்தம் யசோதைப்பிராட்டியிடம் பிறக்கப்போகின்றனள்.

இவ்வாறு தேவர்களுக்குச் சொல்லி பூமிதேவியை இனிய சொற்களால் தேற்றியனுப்பிவிட்டு சத்தியலோகம் சென்றனர்.

மதுராபட்டணம் யதுவம்சராஜாக்களுக்கு ராஜதானியாயிருந்தது. அந்தபட்டணத்தில் ஸ்ரீமந் நாராயணன் எப்போதும் சந்நிதியன். சூரராஜனுக்குப் புத்திரரான வசுதேவரென்பவர் குலசீலவயோவிருத்யாதிகளால் தமக்கு ஏற்றவளாய் சர்வலக்ஷணசம்பன்னையாய் விளங்கும் தேவகியென்னும் ராஜகன்னிகையை மணந்து தமது கிரகம் செல்வதற்கு ரதத்தின்மீதேறினர். அப்போது உக்கிரசேன மகாராஜனுடைய புதல்வனும்

அந்த தேவகியின் தமையனுமாகிய கம்ஸமகாராஜன் சுவர்ணமயமான அநேக ரதங்களுடைசூழ, அந்த வதூவரர்களிருக்கின்ற ரதத்தின்மீதேறி சாரத்தியம் செய்தனன்.

தேவகியின் தந்தையாகிய தேவகராஜன் தங்கச் சங்கிலிகள் பூண்ட நானூறு யானைகளையும், பதினாயிரம் புரவிகளையும், ஆயிரத்தெண்ணூறு ரதங்களையும், அதிகுமாரிகளான இருநூறு பரிசாரிகைகளையும் ஸ்திரிதனமாகக் கொடுத்தனர். அந்த மணாளமணாட்டிகள் புறப்படும் சமயத்தில் சங்கம், தூரியம், பேரி, மத்தளம் முதலான மங்களவாத்தியங்கள் முழங்கின. கம்சன் ரதத்தை நடத்திவருகையில் ஆகாசவாணி அவனைவிளித்து இப்போது நீ அழைத்துச் செல்கின்ற தேவகியின் எட்டாவது கர்ப்பம் உன்னைக் கொல்லப்போகின்றது என்று சொல்லிப்போந்தனள். மூர்க்கனும் பாபியுமான அந்த கம்சன் அந்த வார்த்தையைக்கேட்டவுடன் மனதிற் கோபமூண்டு தேவகியைக்கொல்ல யத்தனித்தவனாய் தனது உடைவாளைக் கையிலேந்தி அவளது கூந்தலைப் பற்றினன்.

அப்போது அங்கிருந்த மகாநுபாவரான வசுதேவர் எழுந்து அவன் கையைப் பிடித்துக்கொண்டு அவனுக்கு ஹிதஞ்சொல்ல ஆரம்பித்தார். ஹே கம்ச! உன் பாகுபலத்தால் போஜகுலத்துக்குக் கீர்த்தியையுண்டுபண்ணுகிற நீ உன் உடன் பிறந்தாளைக் கல்யாணகாலத்தில் எப்படி கொல்லத்துணிந்தாய்! மனிதனுக்கு ஜனனமுண்டான போதே மரணம் நிச்சயம். நடப்பவன் எவ்வாறு ஒருகாலால் நின்று மற்றொருகாலால் போகிறானோ, புற்புழுவானது எப்படி புல்லைத்தாவிச் செல்கிறதோ, அவைபோல கருமானுசாரியான தேகி மற்றொரு தேகத்தைப் பெற்று முன் தேகத்தை விட்டுவிடுகிறான். இவ்வாறு நிச்சயமில்லாத சரீரத்தையுடைய புருஷன் உலகத்தில் ஒருவனுக்குங் கெடுதி செய்யலாகாது. அப்படி செய்பவனுக்கு இகபரலோகங்களில் தான்செய்த தீவினையின்பயனை அனுபவித்தே தீரவேண்டும். இந்த தேவகி உனக்கு தங்கை. இளம்பிராயமுடையவள். உன்னைத்தவிர வேறு கதியறியாதவள். உன் பெண்ணுக்குச்



சமமானவள். மங்களமே உருவெடுத்து வந்ததுபோலிருக்கிற இவளை வதைசெய்வது மிகவும் தகாதகாரியம் என்றிவ்விதம் தருமங்களைச் சொல்லியும், குரூரனும், ராக்ஷஸ சுபாவத்தையுமுடையவனுமான அந்த கம்சன் அவர் வேண்டுகோளுக்கிணங்கவில்லை.

உலகத்தில் தருமாதரும சுவரூபமறிந்த ஒரு புத்திமான் தன் புத்திபலமுள்ளவரையில் இதரருக்கு நேரிடும் மரணத்தை நீக்கவேண்டும். ஆகையால் நம்மால் கூடியவரையில் இவளது ஆபத்தை ஒழிக்க வழி தேடவேண்டும்; இவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைகளைக் கொடுக்கிறேனென்று சொல்லியாவது இந்த தீனையை இப்போதிய ஆபத்தினின்று விடுவிப்போம். பிள்ளைகள் பிறப்பதற்குமுன் இவன்தான் சாகலாகாதா! வேறுவித மாறுபாடுதான் ஏன் ஆகக்கூடாது! தெய்வத்தின் செயல் எவருக்கும் தாண்டவரியது; நேரிட்ட காரியம் விலகிப்போம்; விலகியது மீளவும் கூடிக்கொள்ளும். பிராணிகளுக்கு ஒரு சரீரம் கிடைப்பதும் கிடைத்த சரீரம் போவதும் அவற்றின் அதிருஷ்ட ஹேது தவிர வேறுவிதமாய் எண்ணுவதற்கில்லை. இந்த விதமாய் தம்மனதுக்குள் ஆலோசித்து மகாபாபியான அந்த கம்சன், தம்மால் புகழத்தகாதவனாயினும் காரிய நிமித்தம் அவனை வெகுவிதமாய்க் கொண்டாடி சொல்லத் தொடங்கினார். தாம் சொல்லப்போகின்ற விஷயம் அதிக விசனத்தை உண்டுபண்ணுவதாயினும் அதை அவன் அறிந்தால் தம் வார்த்தைகளில் அவனுக்கு நம்பிக்கை உண்டாகாதென்று நினைத்து விசனத்தை உள்ளடக்கிக்கொண்டு, முறுவல் பூத்த முகத்துடன் அவனை விளித்து, ஓ ஸாதுவே, ஆகாசவாணி இவளுடைய பிள்ளைகளால் தான் உனக்கு பயமுண்டென்று சொல்லினள்; ஆகையால் இவளால் உனக்கு பயமில்லை. இவளிடத்தில் பிறக்கும் எட்டாவது பிள்ளையன்றோ உனக்குச்சத்துரு; ஆகையால் எட்டாவது பிள்ளையை நான் கொடுத்துவிடுகிறேன். எல்லா பிள்ளைகளும் உனக்கு விரோதிகளென்று நீ நினைத்தால் உனக்கு சங்கை உண்டாகாமல் எல்லா பிள்ளைகளையும் உன் வசம் ஒப்புவிக்கிறேன். அவைகளை உன்னிஷ்டப்பிரகாரம் செய்து

கொள்; என்று சொல்லி கம்சன் அந்த வார்த்தைகளின் ஸாரம்சத்தை கிரஹித்து தங்கையைக் கொலைசெய்யாது விடுத்தனன். வசுதேவர் சந்தோஷித்து அவனைப் புகழ்ந்து தமது மாளிகை சென்றனர். தேவகியும் வசுதேவரும் ரோகிணி சந்திரர்கள் போல அந்யோந்யம் பிரேமயுக்தர்களாய் சிலகாலம் வாழ்ந்து வருகையில், தெய்வ சங்கற்பத்தால் தேவகி கர்ப்பவதியாகி பத்துமாஸம் சென்றபின்னர் ஒரு ஆண்மகவைப் பயந்தனள். ஒவ்வொரு வருஷத்திலும் ஒன்றாக எட்டு குழந்தைகளையும் ஒரு பெண் குழந்தையையும்பெற்றாள். தான் முன்னே கம்சனிடத்தில் வாக்களித்தபடி முதலில் பிறந்த ஆண் குழந்தையை அவனிடத்தில் கொண்டுபோய்க் கொடுத்தார். ஸாதுக்களுக்கு எதுதான் ஸஹிக்கக்கூடாது! வித்வான்களுக்கு எதுதான் வேண்டும்! விஷயவிரக்தர்களுக்கு எதுதான் செய்யத்தகாதது! பரமாத்மாவை எப்போதும் தியானித்துக் கொண்டிருப்பவருக்கு எதுதான் விடத்தகாதது! சுகதுக்கங்களிரண்டையும் சமமாக பாவித்து பொய்யா விரதமேற்கொண்ட வசுதேவருடைய குணவிசேஷத்தைக்கண்டு கம்சன் மகிழ்ந்து இச்சிசுவால் எனக்கு மரணபயமின்று; எட்டாவது சிசுவால் தான் பயமென்று ஆகாசவாணி சொல்லியது. ஆகையால் இதை சுகமாக எடுத்துக்கொண்டுபோம் என்று சொன்னான். கம்சன் மனவுறுதியுடையவனன்றாகையால் வசுதேவர் அவன் வார்த்தையில் நம்பிக்கையில்லாமலே குழந்தையைத் திரும்ப எடுத்துக்கொண்டு தமது கிரகமேறச் சென்றார்.

இவ்வாறு கம்சன் பொறுத்திருப்பது தேவகாரிய விரோதமென்று நினைத்து, மூவுலகத்தும் பொருவிறந்த யாழ்வலராகிய நாரதமுனிவர், மாகத்தினின்று மகதியோடிழிந்து மதுராபுரியை யடைய, அதனையறிந்த கம்சன் அவருக்கு வந்தனை வழிபாடியற்றி அங்கிபோற் குலவுமோர் ஆதனத்திருத்தித் தானும் அவரனுமதியால் ஓரிருக்கையிலிருக்க, முனிவரும் பின்வருமாறு உரைக்கலுற்றனர். நந்தர் முதலான ஆயர்பாடியிலுள்ள கோபர்களும் அவர்கள் ஸ்திரீகளும், வசுதேவர் முதலான வ்ருஷ்ணி வம்சத்தினரும், தேவகி முதலிய யதுவம்சத்திய ஸ்திரீகளும் தேவர்கள்.



கம்சனது தாயாதிகளும், பந்துக்களும், தோழர்களும், மற்றும் அவனைச்சேர்ந்தவர்களும் லோகோபத்திரவம் செய்கிற அசுரர்கள். பூமிக்கு பாரமாயுள்ள ராக்ஷதர்களுடைய வதத்தில் தேவர்கள் பிரயத்தனம் செய்கிறார்கள் என்று நாரதபகவான் சொல்லிப்போந்த பின்னர், தேவகியின் கர்ப்பத்தில் பிறந்த குழந்தையை தன்னைக்கொல்லப்பிறந்த ஸ்ரீமந்நாராயணனம்சமாக நினைத்து தேவகியையும், வசுதேவரையும் தனது இல்லத்தின்கண் இருக்கச்செய்து பிறந்த ஒவ்வொரு குழந்தையையும் கொன்றனன். தான் பூர்வத்தில் தாரகாமயமென்கின்ற யுத்தத்தில் ஸ்ரீமகாவிஷ்ணுவினால் சம்ஹரிக்கப்பட்ட காலநேமியென்று நாரதமுனிவர் நவிலக்கேட்டமையால் யாதவாதிகளை ஹதம்செய்துகொண்டு யதுபோஜாந்தகருக்குப் பிரபுவான உக்கிரசேனனென்னும் தன் பிதாவையும் நிரவஹித்து சூரசேனதேசங்களில் தனிக்கோல்செலுத்தி வந்தனன்.

## 2-ம் அத்தியாயம்.

## பலராமாவதாரமும் தேவகிதேவியின் கர்ப்பத்தின் சிறப்பும்.

பின்னும் அக்கம்சன், பிரலம்பன், பகன், சாணூரன், திருணாவர்த்தன், மகாசனன், முஷ்டிகன், அரிஷ்டன், துவிவிதன், பூதனை, கேசி, தேனுகன், பாணன், பௌமன் முதலிய அசுரத்தன்மை வாய்ந்தவர்களுடன் கூடி மகததேசாதிபதியாகிய ஜராசந்தனைத் துணையாகக்கொண்டு யாதவருக்குத் தீங்கிழைத்த வண்ணமாயிருந்தனன். யாதவர்கள் இந்த உபத்திரவம் பொறுக்க முடியாமல் குரு, பாஞ்சாலம், கேகயம், ஸால்வம், விதர்ப்பம், நிஷதம், விதேகம், கோசலம் முதலிய தேசங்களில் குடிபுகுந்தார்கள்.

தேவகியினது ஆறுகுழந்தைகளும் கம்சனால் மறலிக்கிரையான பின்பு ஏழாவது கருவில் பகவதாஞ்ஞையால் திருவநந்

தாழ்வான் ஆவிர்ப்பவித்தார். பகவான் தம்மையே ரக்ஷகராக நம்பிய யாதவருக்கு க்ஷேமமுண்டாகும்பொருட்டு யோகமாயைக்கு ஆஞ்ஞாபிக்கிறார். தேவகியின் உதரத்தில் இருக்கின்ற கர்ப்பத்தை ஆகர்ஷித்து நந்தகோகுலத்திலிருக்கிற வசுதேவருடைய மற்றொரு பத்தினியாகிய ரோகிணிதேவியின் உதரத்தில் வைத்துவிடு; நான் பரிபூர்ணம்சமாய் தேவகியின் வயிற்றில் உதிக்கப்போகிறேன். நீ நந்தபத்தினியான யசோதையிடத்தில் பிறக்கப்போகின்றாய். ஸமஸ்தகாமங்களையும் அளிக்கவல்ல ஈசுவரருக்கெல்லாம் ஈசுவரியாயும், ஸகலாபீஷ்டங்களையும் கொடுக்கவல்லவளாயும் இருக்கிற உன்னை நானாவிதமான காணிக்கைகளாலும், நிவேதன திரவியங்களாலும் மனிதர் பூஜிக்கப்போகின்றனர். நீ துர்க்கை, பத்திரகாளி, விஜயை, வைஷ்ணவி, குமுதை, சண்டிகை, கிருஷ்ணை, மாதவி, கன்னி, மாயை, நாராயணி, ஈசானை, சாரதை, அம்பையென்கிற பெயர்களுடன் ஆலயப்பிரதிஷ்டைகள் செய்யப்பெறுகுவை. பன்னக சயனன் ஆணையால் தேவகியின் கர்ப்பம் ரோகிணியிடம் கொண்டுவைக்கப்பட்டவளவில் சூல் தானே கழிந்துவிட்டதென்று வதந்தி பிறந்துவிட்டது. அனந்தமான திருக்கல்யாண குணங்களையுடைய பகவான் அவனிமாதின் அரும்பொறை அகற்ற தம்முடைய பரிபூரண *ஸ்வரூபத்துடன் வசுதேவருடைய மனதில் பிரவேசித்தார். பகவானைத் தரித்திருந்தமையால் வசுதேவர் சூரியனைப்போல் விளங்கி ஒருவராலும் அணுகக்கூடாமல் ஒருவகையாலும் தம்மை அசைக்கக்கூடாவண்ணமாயிருந்தனர். பிறகு வேததீக்ஷாபுரஸ்ஸரமாக தமது தரும பத்தினியான தேவகியிடத்தில் அதைப்பிரசாதிக்க அவளும் அந்த ஸர்வலோக மங்களமான பரமாத்மஸ்வரூபத்தை கீழ்த்திசையானது ஜகதாநந்தகமான சந்திரனை பரிபூரண கலைகளுடன் தரிப்பது போல தரித்திருந்தனள். கர்ப்பத்தில் பரம புருஷனிருப்பதால் அவளது திருமேனியின் காந்தியையும் மிகவும் சிறப்புவாய்ந்த

*பகவதவதாரங்கள் அம்சாம்சம், அம்சம், ஆவேசம், கலை, பூர்ணம், பரிபூர்ணதமம் என்கிற ஆறுவகையினவென்று கார்க்கிய பாகவதம் கூறுகிறது.



நடையுடைபாவனைகளையும் கம்சன்கண்டு இவள் கர்ப்பகுஹரத்தில் வஸிப்பவன் ஸ்ரீமகாவிஷ்ணுவேயாகவேண்டும். அவனல்லால இத்தன்மைவாய்ந்த சிறப்புக்க[illegible]று என்று நிச்சயித்து இதற்கு என்னசெய்யத்தக்கது என்பதை யோசித்தான். உலகத்தில் புருஷனுக்கு காரியம் எவ்வளவு முக்கியமாயினும் தன்னுடைய பராக்கிரமத்தை அழித்துக் கொள்ளலாகாது. பெண்ணாய்ப் பிறந்து அதிலும் கர்ப்பிணியாயும் எனது தங்கையாயுமிருக்கின்ற இவளைக் கொன்றால் கீர்த்தி, ஐசுவரியம், வாழ்நாள் இவை அழிந்துவிடுவது நிச்சயம். அதிக குரூரமுள்ளவன் நடைபிணமன்றோ! அவனை லோகங்கள் விலக்கிவிடுகிறார்கள். அவன் மரித்த பிறகு 'அந்தமஸ்' என்கிற நரகத்தை அடைகிறான்.

கம்சன் இவ்விதம் ஆலோசித்து கர்ப்பஸ்திரியை கொலை செய்வதாகிய கொடுந்தொழிலை விடுத்து அவளிடத்தில் உதிக்கப்போகிற பகவான் தனக்குச்சத்துருவாகையால் அவர் பிறந்தவுடன் கொன்றுவிடுவோமென்று நிச்சயித்து இருக்கும்போதும், நிற்கும்போதும், படுக்கும்போதும், திரியும்போதும், உண்ணும்போதும், பருகும்போதும், பகரும்போதும், அந்த பகவானையே கருத்துட்கொண்டதால் அவனுக்கு உலகமெங்கும் பகவான்மயமாகவேயிருந்தது. பகவான் பரமபதத்தை விட்டு தேவகி கர்ப்பகுஹரத்தில் உதிக்கும் சங்கதியை அயன், அரன், முதலிய தேவர்களும், நாரதாதி மகரிஷிகளும் அறிந்து தத்தம் பரிவாரத்துடன் பெருங்கூட்டமாகத்திரண்டு அந்த பகவானை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தார்கள். சத்ய சங்கற்பனும், சத்தியத்தையே பிரதானமாயுடையவரும், பிரகிருதி புருஷ காலங்களை சத்தியமாகவுடையவரும், பஞ்ச பூதங்களுக்கு உற்பத்திஸ்தானமானவரும், பிரபஞ்சத்தில் உள்ளும் புறமும் வியாபித்திருப்பவரும், நிர்விகாரமான ஜீவஸ்வரூபத்திலும் நிர்விகாரமானவரும், சத்தியப்பிரவர்த்தகரும், சத்தியஸ்வரூபருமான தேவரீரை சரணமாக அடைகிறோம். இந்த பிரபஞ்சமாகிய விருக்ஷத்துக்கு பிரகிருதியே முக்கியமான ஆச்ரயமாகவும், சுக துக்கங்களிரண்டும் இதில் பழுத்த பழங்களாகவும், ஸத்வ, ரஜஸ், தமஸ் என்கிற முக்குணங்

களும் இதன் வேர்களாகவும், அறம் பொருள் இன்பம் வீடாகிய நான்கும் இதன் ரஸமாகவும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற ஐந்தும் இதன் விழுதுகளாகவும், பசி, தாகம், சோகம், மோகம், மூப்பு, மரணம் என்கிற ஆறும் இதன் சுபாவமாகவும், தோல், ரத்தம், மஜ்ஜை, மாம்ஸம், கொழுப்பு, சுக்கிலம், எலும்பு என்கிற ஏழும் இதன் பட்டைகளாகவும், கைகள், கால்கள், தலை, கழுத்து, மார்பு, வயிறு இவ்வெட்டும் இதன் கிளைகளாகவும், நவ துவாரங்கள் இதன் பொந்துகளாகவும், பிராணம், அபானம், வியானம், உதானம் சமானம், நாகம், கூர்மம், கிரகரம, தேவதத்தம், தனஞ்சயம் என்கிற தசப்பிராணன்களும் இலைகளாகவும், ஜீவாத்ம பரமாத்மாக்கள் இதில் வாசஞ்செய்யும் பக்ஷிகளாகவும் இருக்கின்றன. இப்பிரபஞ்சத்தின் ஆக்கல், அளித்தல் அழித்தலாகிய கிருத்யங்கள் தேவரீரிடத்திலேயே நடை பெறுகின்றன. தேவரீரினும் வேறு காரண வஸ்து இல்லையென்று ஞானவான்கள் தாம் அறிகிறார்கள். உலக சம்ரக்ஷணார்த்தமாக மத்ஸ்ய கூர்மாதி திவ்யாவதாரங்களை எடுக்கிறீர். துயரறு சுடரடி என்று மயர்வற மதி நலமருளப்பெற்ற பெரியோர்களால் கொண்டாடப்பட்ட தேவரீருடைய திருவடிகளாகிற ஓடத்தால் சமுசார சாகரத்தை கன்றின் குளம்படிபோல் தாண்டி விடுகிறார்கள். கலைகளைக்கற்றதனாலாய அனுபவத்தையுடையாராயினும் தேவரீருடைய சரண கமல பக்தி பண்ணாராயின் அவர் அதோகதியாய் விடுகின்றனர். தேவரீரிடத்தில் பக்தி பண்ணுகிறவர் தேவரீரால் காக்கப்படுகிறாராகையால் அவர்களுக்கு வரும் தீபயமும் தீயினிற்றூசாகுமென்பவாகின்றன. சுத்த சத்துவமயமாயும், மோக்ஷ சாதனமாயுள்ள திவ்விய மங்கள விக்கிரகத்தை தேவரீர் தரிக்கிறபடியால் ஜனங்கள் வேதம், வேதவிகித யாகாதிகிரியை, யோகம், தபசு, சமாதி இவைகளால் தேவரீருக்கு திருவாராதனம் செய்து கிருதார்த்தராகிறார்கள். ஓ சர்வேசனே, மீன், குதிரை, ஆமை, பன்றி, நரஸிம்ஹம், ஹம்சம், க்ஷத்திரியன், பிராமணன், தேவன் இந்த அவதாரங்களைச்செய்தருளிய தேவரீர் இப்போது பூபாரத்தை நிவர்த்தித்து எங்களை ரக்ஷிக்கவேண்டும் என்று பிராத்தித்தார்கள். அநந்தரம் பரமாத்மா அவதரிக்கும்படியான மகிமை வாய்ந்த தேவகி பிராட்



டியை நோக்கி ஓ அம்ம! ஜகத்காரணனும் பூர்ணனுமாயும் இருக்கிற பரம புருஷன் பரிபூர்ண அம்சத்தோடு உமது திருவுதரத்தில் அவதரித்திருக்கிறார். இனி சம்சயம் இல்லை; யாதவர்களுடைய துன்பங்கள் ஒழியப்போகின்றன என்று சொல்லி தேவர்களும் ரிஷிகளும் உறைவிடம் சென்றனர்.

## 3-ம் அத்தியாயம்.

## கண்ணன் திருவவதாரம்.

கேளாய் பரீக்ஷித்தே! ஒளிமணி வண்ணனான நம் கண்ணபிரான் அவதரித்த திருநாளின் பெருமையை என்னால் சொல்லத் திறமில்லை 'மங்களானாஞ்சமங்களம்' என்கிறபடி மங்களத்திற்கெல்லாம் மங்களமான அவன் அவதரித்த நாள் ஆவணியில் ரோகிணி நாள். அது நாட்களுக்கெல்லாம் மேலான நாள். ஆகையால் அதை ஜயந்தி என்கிறார்கள். நக்ஷத்திரம் அபிஜித்தென்றும், முகூர்த்தம் விஜய மென்றும் மொழிகின்றனர். நவக்கிரகங்கள் எல்லாம் உத்தமஸ்தானங்களில் இருந்தன. பகவான் அவதரித்திடுமளவில் நக்ஷத்திரங்கள் எல்லாம் வஜ்ரங்கள் போல பளபளாயமாய் பிரகாசித்தன. சகல திசைகளும் நிர்மலமாய் விளங்கின. சாகரமும் பூதரங்களும் சலித்தன. வாபீகூப தடாகாதிகள் எல்லாம் திவ்விய தீர்த்தங்கள் நிறையப்பெற்றன. அந்தணர் வேள்வியின் வன்னியும் தண்ணிய சிகையொடு ஜொலித்தது. மாருதமும் நறுமணமார்ந்து குளிர்ந்துலவியது. அம்பரத்தில் அமரர்கட்கு ஆமோதம் விளைக்கும் அமரதுந்துபி யறைந்தன. கின்னரரும் கந்தருவரும் பாடினர். ஸித்தசாரணர் ஸ்தோத்திரம் செய்தனர். வித்தியாதரரும் அரம்பையரும் ஆடினர். ரிஷிகளும் தேவர்களும் பூமழை பொழிந்தனர். ஸ்ரீஜனார்த்தனன் அவதரித்த அந்த நள்ளிருளில் மேகங்கள் எல்லாம் மெல்லென கர்ஜித்திருந்தன. குணதிசையில் பரிபூரண கலைகளுடன் பூரண சந்திரன் உதித்தாற்போல் தேவதாஸ்வரூபிணியான தேவகியிடத்தில் ஆவிர்ப்பவித்தருளின பகவானுடைய அப்போதலர்ந்த தாமரை

புஷ்பம் போன்ற திருநயனங்களையும், கோல நீள் கொடி மூக்கின
ழகையும், பவழம் போல சிவந்து அமுதமூறுகின்ற திருவதரத்
தையும், நான்கு திருத்தோள்களையும், திருவாழி திருச்சங்குகளு
டன் கூடிய திருக்கைகளையும், ஸ்ரீவத்ஸமென்னும் மறுவார்ந்த திரு
மார்பையும், கௌஸ்துப மணிவிளங்கும் திருக்கழுத்தையும், நவ
ரத்தின கசித கிரீட குண்டலங்களின் காந்தியால் சூழப்பட்ட
மைபோன்ற திருக்குழல்களையும், காளமேகம் போன்ற மார்பினி
டையில் கொடி மின்னல்கள் நிலைநின்று படர்ந்தாற்போலொளிர்
கின்ற திவ்யாபரணங்களையும், ரம்பாஸ்தம்பங்கள் போன்ற தி
ருத்தொடைகளையும், தண்டை சதங்கை முதலிய திவ்யாபா
ரணங்களாலலங்கரிக்கப்பட்டுள்ள அடியிணைகளையும் ஸேவித்துக்கரு
மாணிக்க மலைபோலாகி, திவ்விய பீதாம்பரமுடுத்து, திருத்து
ழாய் மாலையணிந்து, 'கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்து'
என்கிறபடி அநேக சூரியர்கள் ஏககாலத்தில் ஆவிர்ப்பவித்தது
போல் பிரகாசிக்கும் கார்முகில் வண்ணனைக் கண்ணாரக்கண்டு
இன்னதென்று கண்டறிய மாட்டாதவராய் கலங்குகின்றார். இந்த
திருமேனியை சேவிக்க சேவிக்க புதுமை புதுமையாய் காணப்ப
டுகிறதே, இதென்ன ஆச்சரியம் என்று வியப்புற்று, மெய் மறந்து
பரபரப்புடன் பிராமணர்களை உத்தேசித்து பதினாயிரம் பசுக்
களை மானசமாக தானம் செய்தார். ஓ ஸ்வாமி! மூவுலகத்தை
யும் ரக்ஷிப்பதற்காக உமது சங்கல்பத்தால் உமக்கே உரியதான
ஸத்வ குணாத்மகமான வெண்மையான திருமேனியையும், சிருஷ்
டிக்காக ரஜோகுணமிக்கதான சிகப்பு வர்ணமான திருமேனியை
யும், சம்ஹாரத்துக்காக தமோகுண வியாபகமான கருப்பு வர்
ணத்தையும் தரிக்கிறீர். தேவரீர் இங்கு அவதரித்திருப்பதைக்
கம்சன் அறிந்தால் தேவரீரைக்கொல்லுவதற்கு ஓடிவருவான்;
இதை தேவரீருக்கு விண்ணப்பம் செய்தேன் என்று வசுதேவர்
சொல்லவும் தேவகி தேவியார் பரமபுருஷனை நோக்கி ஓ ஸ்வாமி,
சகல ஜீவராசிகளுக்குள் அந்தர்யாமியாயிருந்து பிரளய காலத்
தில் சகலமும் நசிந்து தாமொருவரே மிகுகின்ற மகா வைபவத்
தையுடைய பரமபுருஷன் தேவரீரன்றோ! என்று இத்தியாதியாய்
ஸ்தோத்திரஞ் செய்து தியானத்துக்கே விஷயமாக வேண்டிய



இந்த பரமபுருஷ ஸ்வரூபத்தை மாம்ச நேத்திரங்களுக்கு விஷ
யமாகாவண்ணம் மறைத்தருள வேண்டும். தேவரீர் என்னிடம்
ஜனித்ததை இந்த பாபியான கம்சன் அறிய வேண்டாம். என்னு
டைய பயநிவிர்த்திக்காவது சற்றே மறைத்தருளவேண்டும். பிர
ளய காலத்தில் இந்த ஜகத்தை தமது திவ்விய சரீரத்தில் இடமு
டையதாயிருக்கும்படி தரிக்கின்ற தேவரீர் அடியேனுடைய
கர்ப்பத்தில் அவதரித்ததென்பது மிகுந்த ஆச்சரியமுடைத்து
என்றிவ்வாறு சொன்ன தேவகியின் வசனத்தைக்கேட்டு அவள்
கர்ப்பத்தில் உண்டானதற்கு சில காரணமிருப்பதாக அருளிச்
செய்கிறார். ஓ தேவகி! முன் ஜன்மத்தில் ஸ்வாயம்பு மனுவந்
தரத்தில் நீ பிருசினி என்னும் பெண்ணாகவும் இந்த வசுதேவர் சுத
பஸென்னும் பிரமரிஷியாகவும் உனக்கு நாதனாகவும் இருந்தார்.
நீங்கள் என்னிடத்தில் சில அபீஷ்டங்களைக்கோரினவர்களாய்
தேவமானத்தால் பன்னிராயிரம் வருஷம் உக்கிரமான தபம் புரிந்
தீர்கள். அப்போது நான் உங்களுக்கு இப்போதிய ரூபத்துடன்
பிரத்தியக்ஷமாயினேன். நீங்கள் அந்த ரூபத்தைப்போன்ற
ஒரு பிள்ளை வேண்டுமென்று கேட்டீர்கள். அவ்வண்ணமே
அந்த ஜந்மத்தில் பிருசினி கர்ப்பனென்ற பெயருடன் பிறந்
தேன். இரண்டாவது ஜன்மத்தில் நீங்களே கசியப பிரஜா
பதியும் அதிதியுமாயிருக்கும் போது நான் உபேந்திரனாய்
வந்தவதரித்தேன். மூன்றாவது இப்போது உங்களிடத்தில்
பிறந்தேன். இப்போதிய ஸ்வரூபத்தை நீங்கள் தரிசிக்காவிடின்
உங்களுக்கு பூர்வஜன்மஸ்மரணம் உண்டாகாது. புத்திரனென்
கிற பாவனையினாலும் பிரம்மமென்கிற பாவத்தாலும் அடிக்கடி
என்னை சிந்தித்து, அன்பு பாராட்டி, உத்தமகதியை அடையப்
போகிறீர்கள். நீங்கள் கம்சனிடத்தில் பயப்படுகிறபடியால்
என்னை ஆயர் பாடியில் யசோதையிடத்தில் கொண்டு விட்டு
அங்கிருக்கும் கன்னிகையை இங்கு கொண்டுவந்து விடுங்கள்.
கதவுகளெல்லாம் தாமாகவே திறக்குமென்று சொல்லி தம்
முரு மறைத்து மண்ணினிற்பிறக்கும் குழவிபோலிருக்க, வசு
தேவர் அம்மகவைக்கரத்தினிலேந்தி வெளியில் புறப்பட்டார்.
அப்போது வாசல்காப்போர் முதலியோர் மாயையால் அறி

விழுந்து கிடந்தனர். கொஞ்ச மழை பொழிந்ததால் 'சென்றால் குடையாம் இருந்தால் சிங்காதனமாம்' என்கிறபடி எம்பெருமானுக்கு சமயோசிதமான கைங்கரியங்களைச்செய்வதற்காகவே காத்துக்கொண்டிருக்கிற திருவனந்தாழ்வான் தம்முடைய பணாமண்டலங்களால் மழையைத்தகைந்து கொண்டு பின் சென்றார். வழியில் யமுனா நதி அதிக பிரவாகமுடையதாயிருந்தும் நாதனைக்கண்டு நாணமுற்றதொரு நங்கை போலொதுங்கிச்சென்று, ஸ்ரீராமபிரானுக்கு சமுத்திரம் வழி விட்டது போல் வழி விட்டது. இவ்வாறு பகவானை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போன வசுதேவர் ஆயர் பாடியில் யாவரும் மாயவனருளால் மயக்குற்றிருந்தமையால் யசோதையினிடத்தில் குழந்தையை விடுத்து அங்கு ஜனித்த தாரிகையைக் கைக்கொண்டெடுத்து தமது கிரகத்துக்கு வந்து விட்டார். யசோதையும் பிரஸவ சிரமத்தால் தான் பெற்ற பிள்ளை ஆணென்றும், பெண்ணென்றும் அறிந்தாளில்லை.

## 4-ம் அத்தியாயம்.

## கம்சனால் அடியுண்ட பெண் காளியாதல் முதலியன.

வசுதேவருக்கு மகவுதித்ததைக் காவலாளர் கம்சனுக்குரைத்தனர். இதனைக்கேட்ட கம்சன் படுக்கையை விட்டு உடனே எழுந்து, விரித்த தலையனாய் வழியில் தடுக்கி விழுந்து தேவகியிருக்குமிடத்துக்கு ஓடி வந்தான். அதனையறிந்த தேவகி தனது அம்போர் விழிகளில் அம்பொழுக, அதி தீனஸ்வரத்துடன் சொன்னதாவது:— ஹே அண்ணா, இக்குழந்தை உன் மருமகள். இதைக்கொல்லாதே; திருவிற்பொலிந்த மைந்தர் எழுவர் கொன்னே சிதைவுற்றனர். இக்குழவியோ பெண் பிள்ளை. இதுவொன்று எனக்கிருக்கட்டும். நான் உனக்கு தங்கையல்லவா? இப்படி நான் பரிதவிக்க நீ பார்க்கலாமா? நீ கொடுத்த பிச்சையாய்க்கொண்டு இதை வளர்த்துக்கொள்ளுகிறேன் என்னும் உன் வேண்டுகோளுக்கிணங்கேன் இதனையுங் கோறலே புரிவன் எனத்துணிந்து சொல்ல, பொறையுயிர்த்த சயனத்து அசுத்த



மார்ந்த குழலும் நனைவுற்ற சரீரமுமாயிருந்த அச்சிசுவை அந்த துஷ்டனுக்கெதிரில் கொணர்ந்தாள். அதனைக்கம்சன் அவள் கையிலிருந்து பிடுங்கி கால்களைப்பிடித்து ஓங்கி கற்பாறையின் மீது மோதினான். மகமாயுதித்த அம்மாயையும் அவன் கரத்தினின்றும் ககனத்திற்கிளம்பி, அவ்வுரு நீத்து மகிமை பொருந்திய காளியாகி, அஷ்ட புஜங்களுடன், வில், சூலம், அம்பு, தோல், கயிறு, கத்தி, சங்கு, சக்கரம், தடி இவைகளைத்தரித்து, தேன்வாருமலர்த்தெரியல் சூடி, நீல பீதாம்பரமுடுத்து, சந்தனாதிகளாலும் திவ்விய ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவளாய், சித்த சாரண கிந்நர கிம்புருஷாதி தேவகணங்களால் தோத்திரம் பண்ணப்பட்டவளாய் கம்சனைப்பார்த்து அடா மூட! உன்னைக்கொல்பவன் எங்கோ ஓரிடத்தில் பிறந்திருக்கிறான். என்னை ஏன் வீணாய் ஹிம்சித்தாய்! என்றிவ்வாறு சொல்லி தனது கணங்களுடன் தேவாலயங்களில் மிகவும் சிறப்புற்றிருந்தனள்.

பின்பு கம்சன் அதி ஆச்சரியமடைந்து, தேவகியையும் வசுதேவரையும் விடுதல் செய்து வணக்கமாய்ச்சொன்னதாவது:— ராக்ஷதன் குழந்தைகளைத்தின்பது போல் உங்களுடைய குழந்தைகளை நான் கொன்றேன். அத்தன்மைய மூர்க்கனான நான் பிழைத்திருந்தும் பிணத்துக்கு சமானம். யானொன்று நினைந்து உங்களுக்கு அபகாரமியற்ற தெய்வமொன்று நினைந்து எனக்கு வேறொருவனை ஏற்படுத்திவைத்தது. தம்மவர்பால் சற்றேனும் ஆர்வமின்றிக் கடுந்தொழிலியற்றினேனன்றோ? அவ்வண்ணமிழைத்தும் இறைவனாணையைக்கடக்கும் ஏணிலனாகினேன். ஜனன மரணாதிகள் தேகத்திற்கேயன்றி, ஆத்துமாவுக்கன்று. மண்ணினின்று சட்டி, பானை, குடம், கலசமென்பன வுண்டாகி அவை நசிக்கின்றனவேயன்றி மண்ணினத்துக்கு அழிவில்லை. பஞ்ச பூதங்களாலுண்டாய இந்த சரீரத்துக்கு உற்பத்தி நாசமான விகாரமேயல்லது நித்தியமான ஆத்துமாவுக்கு விகாரமென்பது கிடையாது. இதை அறியாதவனுக்கு தேகமே ஆத்மாவென்கிற அபேத ஞானம் பிறக்கிறது. இந்த பிரமையால் தேகத்துக்குண்டான நீசத்தன்மையெல்லாம் ஆத்மாவுக்கு இருப்ப

தாக நினைக்கிறான். அவ்விதம் நினைத்தலால் ஜனனமரண ரூபமான சமுசாரம் அவனை விட்டு நீங்குகிறதில்லை. சகலபிராணிகளும் தாங்கள் செய்த கருமத்தை அநுபவிக்கிறார்கள். ஆதலால் இவ்விதம் என்முறையே வரும்; சோகிக்கவேண்டாம்; பக்ஷிகளிடத்தில் பிரேமையுள்ள ஸாதுக்களாகிய நீங்களே, என் கொடுந் தொழிலைப் பொறுத்தருளுமின் என்று சொல்லி கண்ணீர் வடிகின்ற முகத்தனாய் தங்கை, மைத்துனன் இவர்களுடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டான். ஸாதுகளுக்கு கோபமுண்டாகவே மாட்டாது. அப்படி உண்டானாலும் நீடித்து நிற்காது என்கிற நியாயமாக வசுதேவரும் தேவகியும் மகா சாதுக்களானதால் மன்னித்துவிட்டதும் சிறிதுமின்றி கம்சனை குளிர்ந்த முகத்துடன் விடை கொடுத்தனுப்பினர். அன்றிரவு கழிந்தவுடன் யோகமாயை சொன்ன விஷயங்களை தன் மந்திரிகளுக்குச் சொல்லி அவர்களுடைய அபிப்பிராயப்படி பிறந்து பத்துநாளாகாதவைகளும் ஆனவைகளுமான குழந்தைகளைக்கொன்றுவிடும்படியும், தேவர்களை ஹிம்சிக்கும்படியும், ஆக்ஞாபித்தான். அப்போது மந்திரிகள் சொல்லுகிறார்கள். இத்தேவர்களுக்கு மூலம் மகாவிஷ்ணு; அவனும் எங்கே தருமமோ அங்கே எப்போதும் இருக்கிறான். அந்த தருமத்துக்கு மூலம் வேதங்களும், பசுக்களும், பிராமணரும், தபசுகளும், தக்ஷிணையுடன் கூடிய யாகங்களும். ஓ ராஜனே வேதங்களைச் செய்கின்ற பிராமணர்களையும், யாகஞ் செய்கின்றவர்களையும், தபசிகளையும், பால் சுரக்கிற பசுக்களையும், சகல விதத்திலும் ஹிம்சிப்போம். பிராமணரும், பசுக்களும், வேதங்களும், தபசும், சத்தியமும், பொறுமையும், புலனடக்கமும், சத்கருமசிரத்தையும், தயையும், சாந்தியும், யாகங்களும் மகாவிஷ்ணுவின் சரீரம். அந்த விஷ்ணுதான் சமஸ்த தேவருக்கும் நிர்வாஹகன். அயன் அரன் முதலியதேவர்கள் அவனிடத்தினின்றுதித்தவர். இப்படி கேடுகாலமாகிற கயிற்றால் கட்டுண்ட கம்சன் அம்மந்திரிகள் வார்த்தையை அங்கீகரித்ததும், அவர்களும் மூலைக்கு மூலை ஓடி சாதுக்களுக்கு தீங்கிழைத்தவண்ணமாயிருந்தனர். பெரியோர்கள் விஷயத்தில் செய்யும் அபராதம், ஆயுளையும், சம்பத்தையும், கீர்த்தியையும், தருமத்தையும், லோகாந்தரத்தையும், ஆசீர்வாதங்களையும், புருஷனது சகல க்ஷேமங்களையும் அழிக்கின்றது.

---



## 5-ம் அத்தியாயம்.

### நந்தகோபர் புத்திரோற்சவம் கொண்டாடல்.

நந்தகோபர் குழந்தை பிறந்தவுடன் வேதவித்துக்களான பிராமணர்களைக் கொண்டு ஸ்நானஞ்செய்து சாஸ்திரோக்தமாய் ஜாதகர்மம் செய்வித்தார். இரண்டு லக்ஷம் பசுக்களை தானம் செய்தார். பின்னும் பருவதாகாரமாய் எழு திலராசிகளைக் கொட்டி தானமும் செய்தார். வஸந்தாதிகாலத்தால் பூமி முதலியனவும், ஸ்நானத்தாலும் சௌசத்தாலும் சரீராதிகளும், சௌளாதி ஸம்ஸ்காரத்தால் சிசுக்களும், தவத்தால் இந்திரியங்களும், யாகாதி கிரியைகளால் பிராமணாதிகளும், தானத்தால் திரவியமும், சந்தோஷத்தால் மனமும், ஆத்மஞானத்தால் ஆத்மாவும் சுத்தியடைகின்றனவாகையால், நந்தகோபரும் முன் சொன்னவண்ணம் சுத்தி செய்து கொண்டார். அந்த உற்சவ காலத்தில் ஸ்வஸ்தி வாசனம் சொல்லிக்கொண்டும், சங்கீதங்கள் பாடிக்கொண்டும், பேரிகைகளும் துந்துபிகளும் அடிக்கடி முழக்கிக்கொண்டும் இருந்தார்கள். இடைச்சேரிகளெல்லாம் சிருங்காரமாய் அலங்கரிக்கப்பட்டன. இடையர்கள் சிலாக்கியமான வஸ்திரங்களாலும், ஆபரணங்களாலும் அலங்கரித்துக் கொண்டார்கள். இடைப்பெண்களும் சிறந்த வஸ்திர பூஷணாதிகளால் அலங்கரித்துக்கொண்டு தேவ பூஜைக்குரிய திரவியங்களை எடுத்துக்கொண்டு விரைவாய்ச்சென்றார்கள். அவர்கள் வீதியில் போகும்போது சாக்ஷாத் ஸ்ரீமகாலக்ஷ்மியே அந்த பகவானுடைய பேரழகைக் காணக் காமுற்று ஒரு சரீரம் போதாதென்று பலசரீரங்களெடுத்து வருகின்றனளோ வென்று ஐயுறும்படியான சிருங்காரத்தன்மை வாய்ந்தவர்களாயிருந்தனர். அவர்கள் கண்ணனைக்கண்டு 'நித்தியஸ்ரீர்நித்திய மங்களம்' என்று ஆசீர்வதித்து மஞ்சள் பொடிகளாலும், எண்ணெயாலும், தண்ணீராலும் பிரோக்ஷித்து மங்களம் பாடினார்கள். ஆயர்கள் திரவிய கௌரவம் பாராமல் அவர்கள் சேர்த்து வைத்திருந்த நெய், பால், தயிர்களை ஒருவர் மேல ஒருவர் தூவிக் கொண்டும், தாழிகளினின்று வெண்ணெயை வாரியிறைத்துக் கொண்டுமிருந்ததால்

ஆயர்பாடியெங்கும் அதிக கோலாஹலமாயிருந்தது. ஸகலபாக்கியசாலியான ரோஹிணீ தேவிக்கு திவ்யமான வஸ்திரங்களாலும், புஷ்ப மாலைகளாலும், ஆபரணங்களாலும், தகுந்த மரியாதை செய்ய, அவள் அவைகளைப்பெற்று அலங்கரித்துக் கொண்டு அந்த புத்ரோத்ஸவ மஹோத்ஸவத்துக்கு நிர்வாஹகையான மங்கள தேவதைபோல அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தாள். கண்ணன் ஆயர்பாடியில் எழுந்தருளிய பின்பு அது நீங்காத செல்வம் நிறைந்தது. 'குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்' என்கிற வண்ணமாய் பசுக்களெல்லாம் குடங்குடமாய் பாலைக்கறந்தன. ஸ்ரீமகாவிஷ்ணுவின் வாசத்தால் அது ஸ்ரீமகாலக்ஷ்மிக்கு கிரீடஸ்தானம் போல அதி ஆதரணீயமாயிருந்தது.

இவ்வாறு நந்தகோபர் புத்ரோத்ஸவத்தை மிகவும் சிறப்பாய்க்கொண்டாடிய பின்னர் கம்சனுக்கு கப்பம் கட்டுவதற்காக மதுராபுரிக்குச்சென்றார். வசுதேவர் தமது தோழராகிய நந்தரது வரவை கேள்வியுற்று அவரது விடுதிக்குச்சென்று பிரீதிபரவசராய் அவரைத்தழுவிக்கொண்டு இருவரும் சுகமாய் உட்கார்ந்தவுடன் க்ஷேமம் விசாரிக்கத்தொடங்கினார். வெகுநாள் வரையில் குழந்தையில்லாமலிருந்த உமக்கு புத்திரனுண்டானதைப்பற்றி எனக்கு மிகவும் சந்தோஷகரமாயிருக்கிறது. அதி மிருந்த பாக்ய முடைந்து, ஸம்ஸார சக்கரத்தில் அகப்பட்டுத் திரிகிற புருஷனுக்குக் கதியைத்தருகிற ஒரு புத்திரன் உண்டாவது புனர்ஜன்மமென்று தரும சாஸ்திரம் கூறுகின்றதன்றோ? தாம் எனக்கு தரிசனம் தந்தது விசேஷபாக்கியம். பிருந்தாவனத்தின் ஒரு பாகமாகிய பிருஹத்வனமானது செழித்து பசுக்களுக்கு அனுகூலமாயிருக்கிறதா? என் குழந்தை பலராமன் தன் தாயுடன் சுகமாயிருக்கிறானா? தருமார்த்த காமமாகிய புருஷார்த்தங்களெலாம் சுகங்கள் தனது பந்துக்களுக்காகவேதான். அப்படியிருக்க நான் இங்கிருந்து அவர்கள் அங்கு வருத்தப்பட்டுக் கொண்டிருந்தால் எவ்வித சம்பத்திருந்தும் என்ன பிரயோஜனம்! இவ்வாறு சொன்ன வசுதேவரை நோக்கி நந்தர் உபசார வார்த்தைகள் உரைக்கலுற்றார். தேவகியின் உதரத்தில் பிறந்த குழந்தைகள் அநேகம் கம்சனால் கொல்லப்பட்டனவன்றோ!



கடைசியில் பிறந்த பெண் குழந்தையும் உயிருடன் ஸ்வர்க்கம் சென்றது. இவை அதிர்ஷ்டத்தைப்பற்றியவை. நடந்த விஷயத்தைப்பற்றித் துன்பப்படுவதில் பயனின்று. லாபலோபங்களிரண்டையும் சமமாய் பாவித்து மனந்தேறியிருப்பது தான் நன்மை. இது உமக்குத் தெரியாத விஷயமன்று. என்று நந்தர் சொல்ல அவற்றை வசுதேவர் அங்கீகரித்து நந்தரை நோக்கி நீர் இனி இங்கு அதிகநாளிருக்கவேண்டாம். திருவாய்ப்பாடியில் உற்பாதங்கள் உண்டாகுமென்று எனக்குத் தோற்றுகின்றது என்று சொல்ல, இவர் பரமசாத்வீகரானமையால் இவர் வார்த்தை பொய்யாகாது என்று நினைத்து வசுதேவரிடத்தில் விடைபெற்று திருவாய்ப்பாடிக்குச்செல்ல புறப்பட்டார்.

---

## 6-ம் அத்தியாயம்.

---

## பூதனை வதம்.

---

என்ன உற்பாதம் நேரிடுமோ ஸ்ரீமந்நாராயணனே கதி; பயத்தைக்கொடுப்பவனும் அவனே. பயநாசம் செய்பவனும் அவனே. இதற்காக நாம் சிந்திப்பதில் பயனில்லையென்று நினைத்துக்கொண்டே திருவாய்ப்பாடி போய்ச்சேர்ந்தார்.

இது இவ்வண்ணமிருக்க, கம்சனால் ஏவப்பட்ட பூதனை என்னும் அரக்கி ஊர் ஊராய்த்திரிந்து சிசுக்களை ஹிம்சித்துக் கொண்டிருந்தாள். ஸ்ரீகிருஷ்ணநாம சங்கீர்த்தனம் செய்தல், அவனுடைய திவ்விய சரித்திரங்களைக் கேட்டல் முதலியவைகளை எவர்கள் செய்யவில்லையோ அவ்விடத்தில் தான் இத்தன்மைய துஷ்டஸ்வபாவமுடையார் தம் தொழிலைச் செய்கின்றனர். இந்த பூதனை தன் கோரமாகிய உரு மறைத்து, கேவலம் ஒரு அப்ஸரஸைப்போன்ற வனப்பு வாய்ந்த பெண்ணுருவெடுத்து, இந்திரவர்ணப்பட்டுடுத்து, சர்வாபரண பூஷிதையாய், பின்னல் அகத்தில் மல்லிகைப்பூச்சூடி, மந்தஹாஸ விலாசமும், கடைக்கணித்தல், மிரட்டி விழித்தல் முதலிய பார்வைகளால்

கண்டவர் சித்தத்தைக்கவர்ந்து குலுங்கக்குலுங்க சிருங்கார
லீலையுடன் கூடிய சுந்தரநடையுடன் கோகுலம் சேர்ந்து,
நந்தர் திருமாளிகையில் நீறு பூத்த நெருப்புப்போலிருக்கிற
அச்சுதனாகிய குழந்தையைக்கண்டாள். விளக்குப்பூச்சிபோல்
தனக்குக் கேடுதேடச்சென்ற அப்பூதனை கண்ணன் துயில்
கின்ற தொட்டிலின் அருகே சென்று தூங்குகின்ற சர்ப்பத்தை
கயிறென்று பாவித்து எடுப்பதுபோல் சாதாரண சிசுவென்று
எடுத்து தன் மடிமீது வைத்துக்கொண்டாள். யசோதையும்
ரோகிணியும் இதனை அறிந்து; உறையிலிட்ட கத்தி போல் உள்
ளே கெட்ட எண்ணங்கொண்டு வெளியில் நன்னடக்கை உள்ள
வள் போலிருக்கிற அவளுடைய அவயவசோபையிலும் அப
ரிமிதமான சோபையிலும் ஈடு பட்டு, அவளையே உற்றுப்பார்த்துக்
கொண்டு அவள் குழந்தையை எடுத்ததற்குக்காரணம் விசாரிக்
காமல் மயங்குற்று நின்றார்கள். இப்படி அவர்கள் பார்த்திருக்
கையில் தன்னுடைய இரண்டு கையாலும் பாலகனை எடுத்த
ணைத்து உச்சி மோந்து பயோதரமூட்டினள். அவள் மாயத்
தை அறிந்த மாயவனும் கோபம் கொண்டு அவ்வஞ்சனையாள்
கொங்கையை தமது திருக்கைகளால் அழுந்தப்பிடித்து அதின்
வழியாய் அவள் பஞ்சப்பிராணனையும் சேர்த்து உறிஞ்சி பானம்
செய்தார். அவர் பிடித்த பிடியில் தேகத்தின் சந்திபந்தங்கள்
தளர்ந்து, மர்மங்கள் பிளந்து, கண்கள் பிதுங்கி, வாய்திறந்து
கை கால்கள் விதிர்விதிர்த்து, விடு விடு போதும் போது
மென்று அலறி பெருமூச்செறிந்து கதறிக்கதறிப் பதறினாள்.
அவளுடைய பேரிரைச்சலால் குலபர்வதங்களோடு பூமியும்,
கிரஹங்களோடு ஆகாயமும் கிடுகிடென்று நடுங்கின. ரஸா
தலங்களும், திக்குகளும் பிரதித்தொனி செய்தன. இடி விழு
கின்றதோவென்கிற சங்கையால் பூமி எங்கும் பயங்கரமுண்டா
யிருந்தது. இவ்விதம் பிராணனிழப்புண்ட அந்தப்பூதனை
நிஜரூபமாகிய ராக்ஷஸ ரூபத்தை அடைந்தவளாய், திறந்த
வாயும் விரித்த தலையுமாய் பெரிய விருக்ஷம் போல கைகளையும்
கால்களையும் நீட்டிக்கொண்டு கீழே விழுந்தாள். அப்படி
விழுந்தபோது அந்த சரீரம் ஆறுயிரம் வில்லளவு தூரம் ஆக்கி



நசித்துக்கொண்டது. இடையிலகப்பட்ட மரங்களெல்லாம்
பொடிப்பொடியாயின. கலப்பைப்படைபோன்ற பயங்கரமான
கோரைப்பற்களையும், மலைமுழைபோன்ற மூக்கையும், விரிந்த
செம்பட்டை மயிரையும், இருண்ட கிணறுபோன்ற ஆழமான
கண்களையும், மணற்குன்று போன்ற பிருஷ்ட பாகங்களையும்,
அணைபோன்ற கை கால் தொடைகளையும், நீர் வற்றிய மடுப்
போன்ற வயிற்றையுமுடைய இந்த சரீரத்தைப்பார்த்து கோ
பர்களும் கோபிகைகளும் பயந்தார்கள். அப்போது அந்த
அரக்கியின் மீது சிறிதும் பயமின்றி துள்ளி விளையாடுகின்ற
அக்குழந்தையைக்கண்டு கோபிகைகள் மிகவும் பரபரப்புடன்
வாரி எடுத்து யசோதை ரோகிணிகளிடத்தில் கொடுத்து என்ன
தோஷம் நேரிட்டதோ, நீங்கள் இவ்வளவு அசட்டையாயிருக்க
லாமா, இந்த அருமைக்குழந்தை ஒரு நொடிப்பொழுதில்போகப்
பார்த்ததே என்று சொல்லி ஒவ்வொருத்தியும் அவ்வளவுக்குத்
தெரிந்தபடியெல்லாம் தோஷ பரிகாரம் செய்து, பகவானுடைய
கேசவாதி த்வாதச நாமங்களால் ரக்ஷை பண்ணி, குழந்
தையை தொட்டிலில் கண்டுயிலமரும்படி விடுத்தார்கள்.
இதற்குள் மதுரைக்குச்சென்றிருந்த நந்தர் முதலியவர்கள்
வந்து பூதனையின் தேகத்தைப்பார்த்து என்ன வசுதேவர்
சொன்னபடி உற்பாதம் உண்டாயிருக்கிறதே அவர் யோகீச்வர
ராகவேயிருக்கவேண்டும் என்று ஆச்சரியப்பட்டார். பின்பு
அந்த ஆயர்களெல்லாரும் அந்த பூதனையின் சரீரத்தை கோட
ரிகளைக்கொண்டு துண்டு துண்டாய் வெட்டி கட்டைகளைக்
கொண்டு கொளுத்திவிட்டார்கள். அதிலுண்டாகிய புகை அகில்
வாசனையுடன் கிளம்பியது. எங்ஙனேயெனில், ஸர்வகந்தஸ்வ
ரூபனான எம்பெருமான் அவளுடைய ஸ்தன்யத்தை பானம்
செய்ததால் விஷமாகிலும் நமக்கன்றோ கொடுத்தாளென்று அவ
ளுக்கு நற்கதியளித்தானென்றால் அத்தியந்த பிரேமபுரஸ்ஸர
மாய் அதி போக்யமான பாலமுதை அமுது செய்விக்கிற
யசோதாதிகள் கதிபெறச்சொல்லவேண்டுமோ! கண்ணனிடத்
தில் எப்போதும் புத்திரனென்கிற புத்தியுடைய அவர்களுக்கு
இந்த ஜனனமரணரூபமான ஸம்ஸாரம் மறுபடியும் உண்டாக

மாட்டாது. மதுரையிலிருந்து வந்தவரான நந்தர் நடந்த விருத்தாந்தங்களை எல்லாம் அறிந்து குழந்தையை வாரியணைத்து உச்சி மோந்து அவதாரோத்சவத்திலிருந்த ஆனந்தத்தினும் அதிக ஆனந்தபரிதராயினர். இந்த பூதனா மோக்ஷரூபமான கண்ணனுடைய அதி அற்புதமான திருவிளையாடலை சிரத்தையோடு கேட்பவன் கண்ணனிடத்தில் பக்தியை அடைகிறான். ஒருவனுக்கு ஞானம் முதலிய மற்றுமுள்ள குணங்களிருப்பினும் பகவத்பக்தியில்லாவிடில் அது பர்த்தாவினிடத்தில் பிரியமில்லாத ஸ்திரியின் ரூபலாவண்ய யௌவனாதிகள் போலாம்.

---

## 7-ம் அத்தியாயம்.

---

### சகடபங்கம்,
### திருணவர்த்தவதம், விராட்டு ரூபதரிசனம்.

---

முன்னவர் மன்னனாகிய பரீக்ஷித்து சுகப்பிரமரிஷியை நோக்கி பின்னும் கண்ணபிரானுடைய பால சேஷ்டிதங்களை அதிக ஆவலுடன் கேட்க, ரிஷி சொல்லலுற்றார். கண்ணனுக்கு கொஞ்சம் பருவம் நிரம்பியபின் கவிழ்ந்து கொள்ளத்தலைப்பட, உலக வழக்கப்படி அதை ஒரு உத்சவமாகக்கொண்டாட எத்தனிக்கையில் அவன் அவதரித்த ரோகிணி நக்ஷத்திரமும் கூடியதால் திருமஞ்சனமாட்டி அந்த உத்சவத்தை மிகவும் சம்பிரமமாக நடத்தினார்கள். அதி உதாரமான மனசுடையளான யசோதை குழந்தையை தொட்டிலில் விட்டு வந்தவர்களைத் தக்கவாறு உபசரித்துக் கொண்டிருந்தாள். இதற்குள் கண்ணன் சிறிதுபோது கண்ணயர்ந்தபின் பசியுண்டாக கால்களை உதறிக் கொண்டு வீலென்று அலறி அழுதான். அப்போது அத்தொட்டிலின் அருகிருந்த சகடத்தை குழந்தை தனது பல்லவமனையமெல்லியவடியால் அடர்ந்தடர்ந்துதைக்க, அது அச்சுமுறிந்து, ஏர்க்காலொடிந்து, நடுக்கட்டை பிளந்து, குடங்கவிழ்ந்து, ஒற்றையுருளையுயரக்கிளம்பியது. பரீக்ஷித்தே, அது அவ்வாறாயினதற்குக் காரணம் சொல்லுகிறேன் கேளும். பூதனா



விருத்தாந்தத்தை யறிந்த கம்சன், கண்ணன்தான் தனக்கு சத்துருவென்று நிச்சயித்தவனாய், கண்ணனைக்கொல்லுமாறு ஓரசுரனை ஏவ, அவனும் அச்சகடத்தில் ஆவேசித்திருந்தான். கண்ணன் சர்வஞ்ஞனாகையால் இதையறிந்து அவனை முடித்துவிட்டார். இதைக்கண்டு கோபர்களும் கோபிகைகளும் ஆச்சரியப்பட்டார்களேயன்றி காரணம் அறிந்தாரில்லை. குழந்தை பயந்ததென்கிற சங்கையால் வேதவிகிதமான மந்திரங்களால் தோஷமணுகாவண்ணம் ரக்ஷை பண்ணினார்கள். பொறாமை, பொய், டம்பம், கோபம், ஹிம்ஸை, அபிமானம் இவைகளை விட்ட சத்திய சீலருடைய ஆசீர்வசனங்கள் பயனற்றவை ஆகமாட்டாவென்று நினைத்து குழந்தையை ஸாமம், இருக்கு, யஜுஸ்ஸுகளால் அபிமந்திரிக்கப்பட்டு, துளசி முதலிய ஔஷதிகளோடு கூடிய தீர்த்தங்களால் அபிஷேகம் செய்வித்து, பின்பு ஹோமம் செய்து, பிராமணர்களை திரவிய வஸ்திராபரணங்களால் ஆராதித்து, நல்ல லக்ஷணங்கள் பொருந்திய பசுக்களை தானம் செய்தார். பின்னும் அறுவகை ரசத்துடன் கூடிய அன்னமளித்து, சந்தன குஸும தாம்பூலாதிகளால் ஆராதித்தார். பிராமணர்களும் கண்ணனை நீடூழிகாலம் வாழவேண்டுமென்று ஆசீர்வதித்தார்கள்.

யசோதை குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வருகையில், ஒருநாள் தன் மடியின்மீது வைத்துக்கொண்டு சீராட்டிக்கொண்டிருக்கையில், இருந்ததுபோலிருந்து குழந்தை கல்லாய் கனத்தது. இதென்ன இந்த பாலகன் தோன்றின நாள்முதல் ஒன்று போனால் ஒன்று ஏதாவது உற்பாதம் உண்டாகிக்கொண்டிருக்கிறதேயென்று சொல்லிக்கொண்டு குழந்தையை கீழேவிட்டு தன் காரியாந்தரத்திலிருந்தாள். இது இப்படியிருக்க, கம்சனால் ஏவப்பட்ட திருணாவர்த்தன் என்னும் ஒரு அசுரன் சுழல் காற்று ரூபமாய் ஆய்ப்பாடியெல்லாம் சூழ்ந்துகொண்டு அவ்வூரில் எல்லாருடைய கண்களிலும் மண்ணை வாரித்தூற்றி அதி பயங்கரமான சப்தத்துடன் கண்ணனைத் தூக்கிக்கொண்டு உயரக்கிளம்பினான். மண்ணை வாரித்தூற்றியதால் ஒரு முகூர்த்தகாலம் ஆய்ப்பாடியெல்

ரும் இருண்டு திரைப்போய்விட்டது. கொஞ்சம் தெளிந்த பிறகு குழந்தையை விட்ட விடத்தில் யசோதை பார்க்கக்காணாமல், ஐயோவென்றலறி வயிற்றிலடித்து பூமியில் விழுந்து நொந்து உள்முருகிக் கன்றையிழந்த பசுவைப்போல் கதறியழுதாள். இதையறிந்த கோபிகைகள் அனைவரும் யசோதையிடத்துக்கு வந்து அழுதார்கள். இது இப்படியிருக்க, குழந்தையை தூக்கிக்கொண்டுபோன திருணாவர்த்தன் குழந்தையின் பாரம் அதிகமாகிக்கொண்டு வந்ததால் தாங்கமாட்டாதவனாய் இதைப் போட்டுவிடுவோமென்று கீழே தள்ளப்பார்த்தான். அப்போது கண்ணன் அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு தொண்டையை இறுகப்பிடித்ததால் அரக்கனுடைய கண்கள் பிதுங்கி, பேரிரைச்சலுடன், பிராணனை விட்டவனாய் அங்கிருந்து குழந்தையுடன் கீழே ஒரு பெரிய பாறையின் மீது விழுந்தான். அதிக ஓசையுடன் விழுந்ததால் அதைக்கேட்ட கோபிகைகளெல்லாரும் ஓடிவந்து பார்க்கையில், அசுரனும் அவன் மீது விளையாடிக் கொண்டிருக்கும் கண்ணனையும் கண்டு, அதிக ஆச்சரியமுற்று, குழந்தை க்ஷேமமாயிருப்பதைப்பற்றி அதிக சந்தோஷமடைந்தார்கள்.

வீராய் பரிக்ஷித்தே! யசோதை ஒரு காலத்தில் சுடர்மணிச் சுட்டி நெற்றியிற்பிறழும் கண்ணனை மடியில் வைத்து தன்னுடைய ஸ்தன்னியபானம் செய்வித்துக்கொண்டிருக்கையில் "இருமுலையும் முறைமுறையாய் யேங்கியேங்கியிருந்துண்டே" என்கிறபடி ஒன்றைவிட்டொன்றாய் மாறிமாறி அமுது செய்யச்செய்ய பால் சுரந்தவண்ணமாயிருந்தது. அவள் அவனிடத்தில் அதிக பிரேமையாயிருந்ததால் சுரப்பு மாறவில்லை. முலையைவிட்டு தாய் முகத்தைப்பார்த்து புன்முறுவல் பூத்தான். அவளும் என்னடா என் கண்மணியே என்று கன்னத்தில் நெரித்து முத்தமிட்டு மறுபடியும் அக்குழந்தையின் மென்னகையை அனுபவிக்க லாலனம் செய்கையில், குழந்தையும் தூங்கக்கருதியவன்போல் கொட்டாவி கொண்டான். அப்போது அவனது திருவயிற்றில் ஈரேழுலகங்கள், மூச்சுடர், நாற்றிசை, ஐம்பூதம், ஆறு பருவம், எழுகடல், எட்டு குலபருவதம், நவப்ரஜாபதி,



தச இந்திரியங்கள், ஏகாதசருத்திரர்கள், துவாதசாதித்தர்கள், திரியோதச த்வீபங்கள் அடங்கிய சதுர்த்தசபுவனங்களையும், நந்தகோபர் முதலிய புருஷர்களையும் கோபிகைகளையும், தன்னையும், தன் மடியிலிருந்த கண்ணனையும் கண்டு திடுக்கிட்டு நடுக்க முற்று கண்ணை மூடிக்கொண்டாள். பிறகு கண்ணைத்திறந்து பார்க்கையில், குழந்தையும் முன்போலிருக்க, தொட்டிலில் விட்டு வீட்டுவேலையிற்சென்றாள். ஹே ராஜன், இந்த யசோதையின் பாக்கியமே பாக்கியம். யோகிகள் உட்கண்ணால் காண்பதை எல்லாம் இவள் இந்த வெளிக்கண்ணால் கண்டாள்.

## 8-ம் அத்தியாயம்.

### கண்ணனுடைய பால லீலைகள்.

மதுராபுரியில் வசுதேவருடைய வேண்டுகோளின்படி யதுகுலபுரோகிதரும் மகாதபஸ்வியுமாயிருக்கிற கர்க்காசாரியர் ஸ்ரீ ராம கிருஷ்ணர்களுக்கு ஜாதகர்மம் நாமகர்ணம் முதலிய சடங்குகளை நிறைவேற்ற கோகுலம் சென்றார். எழுந்தருளிய முனிவரை நந்தகோபர் ஸாக்ஷாத்விஷ்ணுவாகவே பாவித்து அர்க்யபாத்திய ஆசமனீயங்களால் உபசரித்து அதிக பரிசுத்தமான ஆஸனத்திலிருத்தி பின்வருமாறு உரைக்கலாயினர். ஹே பிராமணோத்தம! தேவரீர் இக்குடிலுக்கு எழுந்தருளியதனால் அடியேன் தந்நியனாயினேன். ஸகல வித்தையிலும் பரிபூரணராகிய தேவரீருக்கு அடியோங்கள் என்ன செய்ய விருக்கின்றது. தேவரீர் ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நிர்மித்து அதனால் உலகத்துக்கு பரமோபகாரம் செய்திருக்கிறீர். மேலும் பிரம்மவித்தையில் தேர்ந்தவராயிருக்கிறீர். தேவரீர் இவ்வளவு தூரம் எழுந்தருளியபடியால் நமது குழந்தைகளுக்கு ஜாதகர்மாதிஸம்ஸ்காரம் செய்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார். அதற்கு கர்க்காசாரியர் சொல்லுகிறார். உமது குழந்தைக்கு நான் ஸம்ஸ்காரம் செய்வித்தேனென்று கம்சன் அறிந்தால் யோகமாயையின் வார்த்தையின்படி தேவகியின் எட்டாவது பிள்ளை இங்கே வளருகிறதென்று ஒரு விகூ

மான சந்தேகம் அவனுக்குண்டாகி அக்குழந்தையைக் கொல்ல யத்தனிப்பான்;" என்று சொல்ல அதைக்கேட்டு நந்தர் அப்படியானால் ஏகாந்தமாய்ச் செய்யவேண்டிய ஸம்ஸ்காரத்தையாவது தம்மது திருக்கைகளால் நடத்திவிட்டு குழந்தைகளை ஆசீர்வதித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். அதை அங்கீகரித்து ரோஹிணியின் குழந்தைக்கு பலராமனென்றும் சங்கருஷணனென்றும் யசோதையின் குழந்தைக்கு கிருஷ்ணனென்றும் வசுதேவனென்றும் திருநாமம் சாற்றினார்.

'பொருவில் வெண்மையும் செம்மையும் பொன்மையும்
மரபிற்றந்தனன் மறையுகந்தொறும்
விரவுற்ற கலியில் விழிகவ
கருமையெய்திப்பு கண்ணனென்றாயினன்?'

உமது புத்திரனுக்கு குணத்துக்கும் செயலுக்கும் தக்கபடி திருநாமங்களும் ரூபங்களும் அனேகமாயிருக்கின்றன. ஆயர்களுக்கும் ஆயிரைகளுக்கும் ஆனந்தகரனாயிருக்கிற இவன் உங்களுக்கு மோக்ஷத்தைக் கொடுக்கப்போகிறான். இவனால் உங்களுக்கு நேரிடும் சகல ஆபத்துகளும் விலகப்போகின்றன. இந்த மகாபுருஷனாகிய கண்ணனிடத்தில் பிரீதியுடனிருப்பவர்களுக்கு சத்துருவென்பதே கிடையாது. இவன் குணங்களாலும், ஐசுவரியத்தாலும், கீர்த்தியாலும், பிரபுத்வத்தாலும் ஸ்ரீமந் நாராயணனுக்குச் சமானமானவன். இவனை பிராகிருத சிசுக்களைப்போல சாதாரணமாக எண்ணவேண்டாம்; என்று இந்த விதம் சொல்லி கர்க்காசாரியர் விடைபெற்றுக்கொண்டு மதுராபுரிக்கேகினார். பிறகு நந்தர் குழந்தைகளுடன் மகா சந்தோஷத்தையடைந்திருந்தார். ஹே பரீக்ஷித்தே! ராமகிருஷ்ணர்களுடைய சிலபாலலீலைகளைச் சொல்லுகிறேன் கேளும். கண்ணனும் பலராமனும் தமது பாதச்சதங்கைகளும் அரையில் கட்டிய சுவர்ண கிண்கிணிகளும் கலகலவென்று சப்திக்க, முழந்தாளாலூர்ந்து; வரக சாலையுட்புகுந்து, கோமயத்திற்குளைந்து, அதனை மெய்களிலும் மொய்குழலிலுந்திமிர்ந்து அன்னையர்களிடம் ஓடிவருவார்கள். அன்னைமார் கோமயத்தைத்துடைத்து அவர்களை எடுத்தணைத்



துப் பயோதரமூட்டுவார்கள். முளைத்ததும் முளையாததுமாய் சிறியபற்கள் தோன்றும்படி மிகசுந்தரமாய்ச் சிரிக்கின்ற அழகைக் கண்டு ஆய்ச்சியர்கள் ஆனந்தமுறுவார்கள். இந்த சிறுவர்கள் கன்றுகளின் வாலைப்பிடித்து இழுப்பார்கள்; அதற்கு அவைகள் மிரண்டோடுகையில் கோபிகைகளெல்லாம் பார்த்து சிரிப்பார்கள். சிங்கம் முதலிய துஷ்டமிருகங்கள், மயில் முதலிய பக்ஷிகள், ஸர்ப்பங்கள், ஜலம், நெருப்பு இவைகளுடன் மிகவும் கொண்டாட்டமாய் விளையாடுவார்கள். இவைகளைக்கண்டு தாய்மார்களான ரோஹிணி யசோதைகள் மிகவும் பயந்து இவர்களை மேய்ப்பதே தொழிலாக வீட்டுவேலையில் தோன்றாமல் அலைந்து பேர்வார்கள். கண்ணன் சுவரிட் காலத்துக்குள்ளேயே நன்றாய் நடக்கத் தெரிந்து இடைப்பிள்ளைகளுடன் கூடி இடைப்பெண்களெல்லாம் சிரித்தவண்ணமாயிருக்கும்படி, அளகங்கள் நயனங்களை மறைக்க, அற்புதமிகுந்த ஆனந்தத்துடன் குலவி, தளிரேய்ந்த தன்மையானாய், பலவிடத்தும் படர்ந்து பல கிரீடைகள் பயின்று கொண்டிருந்தனன். இவன் செய்கிற உபத்திரவம் பொறுக்கமுடியாத கோபிகைகள் யசோதையிடத்துக்கு வந்து பின் வருமாறு சொல்லலுற்றனர். யசோதா, உன் குழந்தை சில வீடுகளுக்குப்போய் கன்றுகளை அவிழ்த்து விடுகிறான். அங்குள்ளவர்கள் கூவென்ன அதைக் கேட்டுமறைந்து நின்று பால்வாய் திறந்து நகைக்கிறான். ஒருவர் கண்ணிலும்படாமல் உள்ளே சென்று அங்குள்ள தயிர் பால் முதலிய வஸ்துக்களை உறியினின்று கீழே இறக்கி மிக போக்கியமாய் அமுது செய்கிறான். யுக்தி சித்தமான திருட்டு வழிகளால் இப்படி உண்கிறதும் தவிர பூனைகளுக்கும் பகிர்ந்து கொடுக்கிறான். ஒரு வீட்டில் ஒன்றும் கிடையாவிட்டால் அந்த இல்லத்தவரைக் கோபித்து அங்குள்ள குழந்தைகளை அழுமூட்டி ஓடிப்போகிறான். கோபிகைகள் வீட்டுவேலையில் கவலையுற்றிருக்கும்போது அந்த சமயம் பார்த்து வீட்டுக்குள் நுழைந்து, இவன் உபத்திரவத்துக்கஞ்சி இருட்டறையில் கைக்கெட்டாதபடி உறியின் மீது வைத்திருக்கும் தயிர் பால் முதலியவைகளைத் தமது திருமேனியின் ஒளியாலும் திவ்விய ரத்தினாபரணச் சேர்க்கையாலும் விளங்

கச் செய்துகொண்டு, மனை உரல் முதலியவைகளையும் அடுக்கி அதன் மீது ஏறி அவை ஆகப்படாதபோது தடி முதலியவற்றைக் கொண்டு சட்டியில் ரந்திர முண்டாக்கி அவ்வழியே தன் வயிறு நிரம்புகிறவளையில் அமுது செய்கிறான். யாராவது கண்டித்தால் துடுக்குப் பேச்சுகள் பேசுகிறான். இப்படியெல்லாம் செய்து விட்டு சாதுவைப் போலிருக்கிறான்; என்று கோபிகைகள் சொல்ல இதெல்லாம் உண்மையாயிருக்குமோ என்று சந்தேகித்து சிரித்த முகத்தோடு இருந்தாளேயன்றி குழந்தையைக் கண்டிக்க விரும்பவில்லை. ஒருகாலத்தில் கோபிகைகள் ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு கண்ணனை எடுத்துக்கொண்டு யசோதையிடம் ஓர் தடவையாய் சொல்ல புறப்பட்டு வர, அந்த யசோதையிடத்திலும் ஒரு கண்ணனிருக்கக்கண்டு தாங்கள் கொண்டு வந்த கண்ணனைக் காணாமல் லஜ்ஜையோடு கூடியவர்களாய் தங்களுடைய கிரஹங்கட்குத் திரும்பி விட்டார்கள். ஒருநாள் பிள்ளைகளெல்லாரும் தெருவில் விளையாடிக் கொண்டிருக்கையில் கண்ணன் மண்ணை அள்ளி வாயில் போட்டுக்கொள்ள அதைக் கண்ட பிள்ளைகள் யசோதையிடம் கண்ணன் மண்ணைத் தின்றானென்று சொன்னார்கள். யசோதையும் பிள்ளையைக் கையில் பிடித்துக் கொண்டு அவனுடைய ஹிதத்தை விரும்பியவளாகையால் அவனை சிறிது கண்டித்து, பயத்தால் மிரண்ட பார்வையோடு கூடிய அவனைப் பார்த்து நீ ஏன் மண்ணைத் தின்றாய் என்று கேட்டாள். அதற்கு அம்மா நான் மண் தின்னவில்லை. இவர்கள் பொய் சொல்லுகிறார்கள், என் வாயைத் திறக்கிறேன் பார், என்று தனது கடவுட்டன்மையைக் காட்டக் கருதி செம்பவளந் திருவாயைச் சற்றே திறந்தனன்.

விண்கண்டாள் விண்விளக்கும் வெங்கதிருந்
தண்சுடரும் விளங்கக்கண்டாள்
மண்கண்டாள் மண்வளைத்த மாகடலும்
பேருயர்பால் வரையுங்கண்டாள்
தண்கொண்ட வெண்டோட்டுத் தளவநெடு
வனங்கண்டா டளையுங் கண்டாள்
பண்கொண்ட வண்டறற்றும் பசுந்துளவோ
னிவனெனவே பரவினளால்.



23

'பிரமனைக் கண்டாளண்ட கோளத்தின்
பெருமைகண்டா
ளிரவியைக் கண்டாள் வானதிதனைக்
கண்டாளெட்டு
வரையினைக் கண்டாளேழு சோதிதன்னைக்
கண்டாள்
கரியிருநான்குங் கண்டாள் கனகமாங்கிரியைக்
கண்டாள்.

'ஏறுநத் திசையின் வகுமென்மைக் கண்டாள்
வானிற்
றாரகைக் கண்டாடேவ தவத்தினர் குழாத்தைக்
கண்டாள்.
பாரினைக்கண்டாளாயர் பாடியிற்றன்னைக்
கண்டாள்
சிறுமகளைக் கண்டாள் சிறந்தன் கைக்கோல்
கண்டாள்.

என்கிறபடி சதுர்த்தசபுவனங்களையும் அதிலுள்ள வஸ்துக்களையும் கண்டாள். இதென்ன கனவோ, தெய்வத்தின் மாயையோ, இல்லையேல் எனது புத்தி மோசமோ எனது குழந்தையான இவனுக்கு சுபாவத்தில் ஒரு ஆத்மயோகமுண்டோ, அவ்விதமில்லாவிடின் நமது மனதுக்கும் புத்திக்கும் எட்டாத விஷயமாய்த் தோன்றுமோ, இவையெல்லாம் எதை ஆச்ரயித்து எதனால், எதனிடத்தில் நின்றும் தோற்றப்படுகிறதோ கண்டறியக்கூடாத அத்தஸ்வரூபத்தை வணங்குகிறேன். சகலைசுவரிய நாயகியாய் கோகுல நாதருடைய பத்தினியான நான் இதோ இருக்கிறேன்; இதோ என் பதியான நந்தர் இருக்கிறார்; இதோ என் அருமைச் செல்வமான கண்ணன் இருக்கிறான்; கோபர்களும் கோபிகைகளும் இதோ இருக்கின்றனர்; இதென்ன ஆச்சரியம், ஏன் நான் இப்படி மதிமயங்கி இருக்கிறேன். எவனுடைய மாயையால் இவ்விதமிருக்கின்றேனோ அவனே எனக்கு கதி என்று சொல்ல அதனையறிந்த பகவான் மீண்டும் அவளைத் தமது மாயைக்காளாக்கினமையால்

உடனே அவள் மதிமறந்து புத்திரவாஞ்சையால் கண்ணனை மடியில் மீது வைத்துக் கொண்டு லாலனம் செய்ய வாரம்பித்தாள். வேதங்களாலும், வேதாந்தங்களாலும் சாங்கிய யோகத்தால் பரமைகாந்திகளாலும், கொண்டாடப்பட்ட மஹிமையையுடைய ஸ்ரீவிஷ்ணு பகவானை அவள் பிள்ளையென்று நினைத்தாள். பரிக்ஷித்து மகாராஜன் சுகப்பிரம்மரிஷியை நோக்கி ஓ பிராமண சிரேஷ்டரே, நந்தகோபர் இத்தன்மையான பாக்கியம் உண்டாகும்படி என்னபுண்ணியம்செய்தார். எவளுடைய ஸ்தனத்தை ஸ்ரீமந்நாராயணன் பானம் செய்தாரோ அந்த மஹா பாக்கியவதியான அந்த யசோதை தான் என்ன செய்தாள். எதையானால் கவிகள் உலகத்தில் பாபத்தைப் போக்கடிக்கிறதாக அத்யாபி புகழ்கின்றார்களோ அந்தஎம்பெருமானுடைய பாலசேஷ்டிதங்களை தாய்தந்தையரான வசுதேவரும் தேவகியும் கூட அனுபவிக்காமல் இவர்கள் அனுபவித்ததற்கு செய்த சுகிருதந்தானென்ன இதை அடியேனுக் கருளிச் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

அப்போது சுகமுனிந்திரர் சொல்லுகிறார். அஷ்டவசுக்களில் தலைவரான துரோணரென்பவரையும் அவரது பத்தினியான தாராதேவியையும் பூமியில் வந்து பிறந்து கோரக்ஷணம் செய்யும்படி சதுர்முகன் கட்டளையிட அதை அவர்கள் சிரமேற்கொண்டு தேவசிரேஷ்டனாய் லோகநாதனாய்விளங்கும் ஹரியினிடத்தில் அறிவிலானும் துர்த்தசையைக் கடக்கக் கூடியதான பரமபக்தி உண்டாகவேண்டுமென்று அந்த பிரமதேவனைப் பிரார்த்திக்க, அவ்வண்ணமே உண்டாகக் கடவது என்று அவரும் அநுக்கிரஹிக்க, அவர்கள் பூமியில் நந்தகோபரும் யசோதையுமாய் பிறந்தார்கள். ஆகையால் தான் அவர்களுக்கு அந்த ஜனார்த்தனனிடத்தில் விசேஷமான பக்தி உண்டாயிற்று. சதுர்முகனுடைய சொல்லை நிலை நிறுத்தும் வண்ணம் பகவானும் அந்த நந்த யசோதைகளுக்கு தமது திவ்விய லீலைகளால் பிரீதியை உண்டு பண்ணினார்.



## 9-ம் அத்தியாயம்.

### யசோதைப்பிராட்டி கண்ணனை உரலிற்கட்டல்.

ஒரு நாள் நந்தபத்தினியான யசோதை கண்ணன் செய்த லீலைகளைப் பாட்டுகளாய்ப் பாடிக்கொண்டு, கையிற்பூட்டிய கங்கணங்கள் கலகலவென்றொலிக்க, அளகபந்தத்தினின்று மல்லிகை மலர்கள் கலைந்துதிர ததிமதனம் செய்து கொண்டிருந்தாள். அப்போது கண்ணன் ஓடிவந்து, அம்மா, எனக்கு பால் கொடுவென்று கேட்க, அதற்கு அவள் இசையாததால் தயிர் மத்தைப் பிடித்து தயிர் கடைவதை நிறுத்த, அவளும் குழந்தையை எடுத்தணைத்து உச்சிமோந்து பயோதர மூட்டினள். அப்போது இடையிடையில் அவன் செய்யும் புன்னகையைப்பார்த்து சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கையில், அடுப்பில் பால் பொங்கிவரக் கண்டு உடனே அவனை விட்டு விட்டு வேகமாய் ஓடினாள். கண்ணனும் கோபித்து, சிறிய கல்லால் தயிர் கடையும் தாழியை உடைத்து விட்டு, திருக்கால்களில் அணிந்துள்ள சிலம்பு அசையாமலும் ஒருவருக்கும் தெரியாமலும் பக்கத்து சிறுவீட்டில் புகுந்து அங்குள்ள வெண்ணெயை அமுது செய்து கொண்டிருந்தான். ஆயர் மாதும் காய்ந்த பாலை கீழே இறக்கிவிட்டு தயிர் கடையுமிடத்துக்குவர, தாழி உடைந்திருப்பதையும், தயிர் வெள்ளமாய் ஓடுவதையும் கண்டு, இது தனது பிள்ளையினுடைய காரியந்தானென்று எண்ணி அவனையும் அங்கு காணாமையால் சற்றே சிரித்து கையில் ஒரு கோலை எடுத்துக்கொண்டு அவனைத்தேடவாரம்பித்தாள். பக்கத்து சிறுவீட்டில் கவிழ்த்த உரலின் மீது நின்று யாராவது பார்க்கின்றார்களோ வென்று திரும்பித்திரும்பி பார்த்துக்கொண்டு வெண்ணெயை அமுது செய்து, பூனைகளுக்கும் வேண்டியமட்டும் கொடுத்துக்கொண்டு, இந்திர நீலச்சிலையில் சந்திரிகை படர்ந்தாற்போல அதி சுந்தரமான மந்தஹாசத்தோடு விளங்குகிற அவன் திருமுகத்தை யசோதை கண்டு அவனைப்பிடிக்க மெள்ள மெள்ள மறைந்து வந்தாள். இதற்குள் கண்ணனும்

கோல் கொண்டு வரும் அன்னையைப்பார்த்து உரலினின்றும் இறங்கி வேகமாய் ஓடினான்.

'அன்னை தனையடிக்க வந்தென்று ளென்றுண்டகப்
பட்டாதே முகுந்தனி லத்திலோட
மின்னிடையிற் கலையசையக் குழல்பெண்மாலை
வீழ்ந்திடகல் விரிசிகையின் மணிகளின்னப்
பொன்னின்மணிச் சிலம்பர்ற்ற வளைகளார்ப்பப்
புகரிப்கோடனையமுலை யாரமாட
வன்னமென நடக்குமின்னு ளோடியேயவ் வுச்சுதனைப்
பிடித்திடத்கா ணுகுங் காலை'

'மழைக்கருங்கண்ணினோக்கி மழையிருங்கூந்தறுழக்
குழைத்ததோர் வல்லிபென்னக்குழைந்த நுண்மருங்கு நோவப்
பழைத்த நான்மறையினோடு படுபொருளொருங்குதேர்ந்த
விழுத்தவர்தொடரவெட்டா விழுமியோத்தொடர்ந்து சென்றாள்.'

என்கிற வண்ணமாய் அவ்வாயர் மாதும் பின்னே சென்று அவனைத்துரத்தியும் அவனைப்பிடிக்கக்கூடவில்லை. பிரம்ஹநிஷ்டர்களான ஸநகஸநந்தனாதி மகா யோகிகளும் தமது மனதை ஒரு நிலையில் நிறுத்தி அனேக காலம் பிரயத்தனப்பட்டும் அந்த பிரம்ஹ சாக்ஷாத்காரத்தை எட்டாதபோது இந்த அபலை தனது சக்தியால் பிடிப்பதென்பதெங்ஙனம். யசோதையும் சோர்ந்து இனி நம்மாலாகாதென்று அசைவற்று நிற்க, இனி இவளை அதிகமாய் சிரமப்படுத்தலாகாதென்று கண்ணன் ஓடமாட்டாதவன் போல் நின்று அகப்பட்டுக் கொள்ள, அவளும் பிடித்துக்கொண்டாள். கண்ணன் தனது அஞ்சனமிட்டிய கண்ணை அசக்கி முகமெல்லாம் மையாகச்செய்து, பயப்படுகிறவன் போல் மிரண்ட கண்களுடன் மேல் நோக்கிப்பார்த்து அழ ஆரம்பித்தான். அந்நிலையைப்பார்த்து யசோதை ஆனந்த முற்றாள். குழந்தை பயந்ததால் கையிலிருந்த கோலை எறிந்துவிட்டு, ஆதி, அந்தம், உள், புறம்பு என்கிற பரிச்சேதமின்றி எங்கும் வியாபித்திருக்கின்ற பரம்பொருளை தனது பிள்ளையாக நினைத்து கயிற்றால் உரலில் கட்டத்தொடங்கினாள். கட்ட எடுத்த கயிறு இரண்டங்குலம்



குறைந்தது. அத்துடன் மற்றொரு கயிற்றை முடிந்தாள். அதுவும் அவ்வாறே குறைவுபட்டது. மற்றுமோர் கயிற்றை முடிந்தாள். அதுவும் அவ்வண்ணமே குறைவுபட்டது. தன் வீட்டிலுள்ள கயிறுகளை யெல்லாம் முடிந்தும் அவ்வாறே குறைவு படுவதைக்கண்டு மிகுந்த ஆச்சரியமடைந்து கோபிகைகளுடன் சொல்லிச் சிரித்தாள். தாயினது சிரமத்தைப்பார்த்து, தன்னிடத்தில் பிரீதிபண்ணுவார்க்கு தன்னுடைய நிரதிசய ஸௌலப்பிய குணவிசேஷத்தைக் காட்ட வேண்டிய சங்கற்பத்தையுடையனாகையால் தாயினுடைய கட்டுக்கு அகப்பட்டுக்கொண்டான்.

இதனால் பிரமனும், சிவனும், பெரிய பிராட்டியாரும் இந்த யசோதை பெற்ற பலத்தில் ஏகதேசமும் பெற்றாரில்லை யென்று சொல்லும்படியாயிருந்தது. அந்த எம்பெருமானுடைய திருவடிகளில் பண்ணும் பக்தி விசேஷமே அவன் அனுக்கிரஹத்துக்குக் காரணம்.

இவ்வாறு யசோதை கண்ணனை உரலிற்பிணித்து இனிச் செல்லுந்திறனுளதேற் செல்வுழிச் செல்லுகவென்ச் செப்பி தன் தொழிலிடம் புக்கனள். இவ்வாறு கயிற்றால் கட்டப்பட்டமை நோக்கி எம்பெருமானுக்கு தாமோதரனென்கிற திருநாமமுண்டாயிற்றென்று கூறுவதுண்டு. (தாம-கயிறு, உதரம்-வயிறு).

## 10-ம் அத்தியாயம்.

## யமளார்ச்சனபங்கம்.

குபேர குமாரர்கள் விருக்ஷரூபிகளாகும்படி சாபம் பெறுவானேன்? எதனால் தேவரிஷியான நாரதபகவான் கோபமடைந்தார்? இவைகளை எனக்கு சவிஸ்தாரமாகச் சொல்லவேண்டுமென்று அரசன் பிரார்த்திக்க முனிவர் சொல்லத்தொடங்கினார்: தாங்கள் குபேரனுடைய புத்திரர்களென்றும், சிவபெருமானுடைய தோழர்களென்றும் செருக்கடைந்து புலன் படிந்துங்

ணும் போகமே பெருக்கி ஒருவரையும் மதியாதிருந்தார்கள்.
இவர்கள் ஒரு கால விசேஷத்தில் கைலாசகிரியில் தேவகங்கை
யின் கரையிலுள்ளதோர் உத்தியானவனத்தில் கள்ளையும் சா
ராயத்தையும் குடித்து மதிமயங்கி கண் சுழலமிட போகார்கை
ளான சில ஸ்திரிகளுடன் கூடி உல்லாசமாய் திரிந்து பிறகு
அந்த நதியில் ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்தார்கள். அப்
போது நிர்நிமித்தமாய் ஸ்ரீநாரதபகவான் அங்கு எழுந்தருளும்
படியாயிற்று. அப்போது நிர்வாணமாயிருந்த அங்கனைமார
னைவரும் லஜ்ஜாபீடிதர்களாய், என்ன சாபம் நேரிடுமோ வென்
று பயங்கொண்டு உடனே கரைக்கு ஓடிவந்து வஸ்திரங்களை
தரித்துக்கொண்டார்கள். அந்த யக்ஷர்களிருவர்மாத்திரம் நிர்
வாணமாய் மரம் போல நின்றனர். மத்தியபானத்தால் மதிம
யங்கி இருக்கின்றனரென்றும், இதற்கு காரணம் தனமதமென்
றும் நாரதர் நினைத்து உலக ஹிதார்த்தம் அவர்களுக்கு ஒரு சா
பமளித்தார். அதாவது இவர்கள் லோகபாலனுக்குப் புத்திரர்க
ளாயிருந்தும் அவிவேகத்தில் மூழ்கி, அரையில் வஸ்திரமில்லாமல்
நிர்லஜ்ஜர்களாய் மரம்போலிருக்கின்றமையால், தேவமானத்தால்
நூறு வருஷம் விருக்ஷரூபிகளாயிருந்து எனது ஆசீர்வாதத்தால்
வசுதேவ புத்திரனை கண்ணனுடைய சந்நிதானத்தையடைந்து
தேவத்வத்தைப்பெற்று பகவத்பக்தர்கள் ஆகப்போகின்றனர்.
என்று சபித்துப்போனவுடனே அவர்கள் விருக்ஷங்களாய் விட்
டார்கள். ஸ்ரீகண்ணபிரான் பக்தவற்சலனாகையால் பாகவத
சிரேஷ்டராகிய நாரதருடைய வார்த்தையை யதார்த்தமாகச்
செய்ய, அவ்விருக்ஷங்களிடையில் தவழ்ந்து சென்றார். அப்
போது அவரைக்கட்டியிருந்த உரல் அம்மரங்களுக்கிடையிற்
சிக்குண்டது. பிடிப்புண்டதென்கிற வியாஜத்தால் உரலை முன்
னும் பின்னுமாய் இழுக்க அதற்காற்றாமல் அம்மரங்களிரண்
டும் வேரோடு பிடுங்குண்டு மளமளவென்று முறிந்து கிளையுங்
கப்பும் காயும் பூவுமாய் கீழே வீழ்ந்தன. அப்போது அந்த
விருக்ஷங்களிலிருந்து மகா தேஜஸ்விகளான இந்த சுரர்கள்
தோன்றி சர்வலோக சரண்யனை கிருஷ்ணபகவானுடைய
திருவடிகளில் சாஷ்டாங்கமாய் தண்டம் சமர்ப்பித்து அஞ்சலி



யஸ்தராய் தோத்திரம் செய்தார்கள். சர்வசக்தியுடையவரும்.
ஆதிபுருஷனுமான தேவரீரை நமஸ்கரிக்கிறோம். வியக்தமாயும்
அவியக்தமாயுமிருக்கிற இந்த பிரபஞ்சத்தை பரப்பிரம்ம ரூபி
யான தேவரீருடைய திவ்விய சரீரமாக அறிகின்றார்கள். தே
வரீர் ஒருவரே சகல பிராணிகளுடைய சரீரம், பிராணன், ம
னது, இந்திரியங்கள் இவைகளுக்கு நியாமகனாகின்றீர். ஞான
சக்தியாதி குணவிசிஷ்டனும், சர்வவியாபகனும், நிர்சரஹித
னும், சர்வநியந்தாவாயுமிருக்கிற தேவரீரே காலரூபியாயிருக்
கிறீர். தேவரீர் இந்திரியங்களாலறியக்கூடாமலிருக்கிறீர். ச
மஸ்தகல்யாண குணங்களையுடைய தேவரீருக்கு நமஸ்கா
ரம். தேவரீருடைய இந்த ஜனனம் பிரகிருதி சம்பந்தமற்ற
தென்று தேவரீர் செய்யும் அதிமானுஷ சேஷ்டிதங்களாலேயே
விளங்குகிறது. ஓ பரமகல்யாண மூர்த்தியே, தேவரீருக்கு
நமஸ்காரம். ஓ விச்வமங்களகரா. உமக்கு நமஸ்காரம். தேவ
ரீருடைய அத்தாணிச்சேவகராக எங்களை அபிமானித்தருள
வேண்டும். திரிகாலஞ்ஞரான நாரதமகரிஷியின் அநுக்கிர
ஹத்தால் தேவரீருடைய சேவைகிடைத்தது. அடியோங்களு
டைய வாக்கை உமது திவ்விய சரிதங்களைக்கேட்டலிலும், கை
களை உமது கைங்கரியத்திலும், சித்தத்தை உமது சரணகமலத்
தியானத்திலும், சிரஸை தேவரீருகந்தருளின திவ்விய தேசசே
வையிலும், கண்களை தேவரீருடைய திவ்விய மங்களவிக்கிரஹ
சேவையிலும் பாகவத சேவையிலுமாக பொருந்தும் வண்ணம்
அநுக்கிரஹிக்கவேண்டும்; என்று அவர்கள் பிரார்த்திக்க பக
வான் அவர்களைப்பார்த்து அருளிச்செய்ததாவது; பரமகாருணி
கரான நாரத மஹரிஷியானவர் சாபம் என்கிற வியாஜத்தால்
உங்களுக்கு அநுக்கிரகம் செய்தார். அவருடைய வாக்கை நி
றைவேற்றுவதற்காகவே உங்களுக்கு நாம் ஸேவைஸாதித்தோம்.
புருஷனுக்கு சமுஸாரபந்தமானது நம்முடைய பக்தர்களான
மகான்களுடைய தரிசன பரியந்தமேயாம். ஆகையால் இனி
உங்களுக்கு ஒரு குறைவுமில்லை. உங்களை நம்பரிபூரணகடாக்ஷத்
துக்கு இலக்காக்கினோம். உங்கள் இருப்பிடம் தேடிச்செல்லுங்
கள் என்று பகவான் அருளிச்செய்ய அவர்கள் அந்த ஸேவை

யை விட்டுப்போக மனமில்லாமல் அடிக்கடி பிரதக்ஷிணம் செய்து தண்டன் ஸமர்ப்பித்து அக்கண்ணனது காட்சியை மனதில் தியானம் செய்துகொண்டே தங்களுடைய நகரமான அளகாபுரியை நோக்கிச் சென்றனர்.

## 11-ம் அத்தியாயம்.

### வற்சாசுர பகாசுர வதம்.

கோபர்களும் கோபிகைகளும் திடீரென்று விழுந்த மரங்களின் ஓசையைக்கேட்டு இடி என்கிற பயத்தால் அங்கே ஓடினார்கள். அங்கு பூமியில் விழுந்து கிடக்கும் இரண்டு மருத மரங்களையும், கயிற்றால் கட்டுண்டு உரலை இழுக்கும் பாலகனையும், அவன் சிறிதுமின்றி நகையாடித்திகழ்வதையும் கண்டு அதற்கு காரணம் அறிந்திலராய்க் கலங்கி நின்றார்கள். அப்பொழுது அங்கிருந்த இடைப்பிள்ளைகளில் சிலர் இவர்களைப்பார்த்து இந்த கிருஷ்ணனால் இந்த மரங்கள் முறியுண்டன. அவைகளினின்றும் இரண்டு தேவபுருஷர்கள் தோன்றி கண்ணனை பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து அவனிடத்தில் விடைபெற்று வடதிசையை நோக்கிச்சென்றனர்; என்று சொல்ல அவர்களில் சிலர் அது நிச்சயமாயிருக்குமென்றே நம்பினார்கள். உடனே நந்தகோபர் கண்ணனை யாப்பினின்றும் நீக்கி, தம் மடியினில் வைத்து கட்புலனால் பருகுவான்போல் சிறிது பொழுது உற்று நோக்கி ஆற்றுமகிழ்ச்சியடைந்தனர். இவ்வாறே யசோதையும் ரோகிணியும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

கண்ணன் இதர பாலர்களைப்போல கோபிகைகள் சொன்னவண்ணமாய் சில விடத்தில் கூத்தாடியும், சில விடத்தில் பாட்டுப்பாடியும், அந்த கோபிகைகளால் ஏவப்பட்ட வேலைகளைச் செய்துகொண்டும், முக்காலி, மரப்பாச்சி, மணை, படி, முதலியவைகளைக்கொண்டு விளையாடியும், அவர்களுக்கு உல்லாசமாய் தோள் தட்டி குதித்தும் ஆனந்தத்தை உண்டுபண்



ணிக் கொண்டிருந்தான். இதனால் தனது தமருக்குத்தான் வசப்பட்டிருக்கிறேனென்பதை அறிவித்ததாயிற்று. ஒரு நாள் ஒரு பெண்பிள்ளை நாவல் பழம் கொண்டு வீதியில் விற்க வருகையில், தனது சிறிய கைகள் நிரம்ப நெல்லை அள்ளி எடுத்தோடிவந்து இதற்கு பழம் கொடுவென்று கேட்டான். அந்த செந்தாமரைக் கண்ணனுடைய மழலைச் சொல்லைக் கேட்டு, அவனுடைய நடையழகையும், அவனுடைய அவயவ சோபையையுங்கண்டு அப்புறம் அடியெடுத்து வைக்கமாட்டாமல் அவன் கைநிறைய பழம் தந்து தன் கூடையைப்பார்க்கையில் அந்தகூடை யெல்லாம் விலையுயர்ந்த ரத்தினங்களாயிருப்பதையறிந்து, இவன் மகா புருஷனாக இருக்க வேண்டுமென்று நிச்சயித்து, அவனை வாழ்த்திக்கொண்டு தன் இல்லம் நோக்கிச்சென்றனள். அந்த பழங்களெல்லாவற்றையும் அங்குள்ள எல்லாருக்கும் கொடுத்து மிகுந்த குதூகலத்துடன் விளையாடிக்கொண்டிருந்தான். நந்தகோபர் முதலானவர்கள் ஆயர்பாடியில் கண்ட பெரிய உற்பாதங்களால் பயந்து திகைப்பிடித்தவராய் ஆலோசிக்கத்தொடங்கினார்கள்.

சகடங்கமும், பூதனைவதையும் போல் நமது ஆயர்பாடிக்கு நாசநிமித்தமான பெரிய ஆபத்துகள் நேரிடுகின்றன. இனி நமக்கு இங்ஙனம் வசித்தல் தக்க தன்று. ஆகையால் இந்த இடத்தை விட்டு எங்கேயாவது போய்விடவேண்டும். பிருந்தாவனம் என்பது ஒரு காடு. அது மிகவும் செழித்து ஆயர்களுக்கும், ஆய்ச்சியர்களுக்கும், ஆநிரைகளுக்கும் வாஸயோக்கியமாய் பரிசுத்தமான மலைகளையும், புற்களையும், செடி கொடிகளையும் உடையது. ஆகையால் அங்கு போவதற்கு விரைவில் ஸன்னத்தராகுங்கள்; என்று சொல்ல எல்லோரும் ஒரேமனத்தினராய் நல்லதென்று சொல்லி தங்கள் தங்கள் குடும்பங்களுடன் சாமான்களை வண்டியிலேற்றிக்கொண்டு, புரோகிதர்களுடன் மங்கள வாத்தியம் முழங்க பிருந்தாவனத்தை நோக்கிச் சென்றனர். அக்கோவல மாதர், நீலமும், பொன்மையும், செம்மையுமான பல தானைகள் உடுத்து, எல்லா அணிகலனும் பூண்டு, அங்கத்தின்மீது குங்குமச்சாந்தணிந்து, தக்கோலம் கைக்கொண்டு

மிக்க குதூகலத்துடன் கண்ணனுடைய லீலைகளை பண்ணில் சேர்த்து பாடிக்கொண்டே சென்றனர். யசோதா ரோஹிணிகள் இருவரும் ராமகிருஷ்ணர்களுடன் ஒரு தேரின்மீதேறி, அந்த கோபிகைகள் பாடிக்கொண்டுவந்த பாட்டுகளை அதிக பிரீதியோடு கேட்டுக்கொண்டு வந்தார்கள். பின்பு எல்லோரும் பிருந்தாவனம் சேர்ந்து காலிகட்கும், தமக்கும் ஏற்றமாய் உறைவிடம் தேடிக்கொண்டனர். பிருந்தாவனத்தில் சென்று பால கிரீடைகளாலும், மழலைச்சொற்களாலும், கோபர்களுக்கும் கோபிகைகளுக்கும் சதாகாலமும் ஆனந்தத்தை உண்டு பண்ணும் ஸ்ரீகிருஷ்ணபலராமர்களுக்கு கொஞ்சம் வயது வர கன்று மேய்க்கத்தொடங்கினார்கள். கன்றுகளை யெல்லாம் ஒரு வழியில் மேயப்போக்கி, மற்றைய இடைப்பிள்ளைகளும் இவர்களும் ஒருங்கு சேர்ந்து விதம் விதமான விளையாடல்களைச் செய்து வந்தனர். சில விடத்தில் கவண்முதலியவற்றைக்கொண்டு எறிந்தும், சிலவிடத்தில் வேணுகானம் செய்துகொண்டும், இன்னும் அநேகவிதமாய் விளையாடிக்கொண்டும் பிருந்தாவன மெல்லாம் திரிந்துகொண்டிருந்தார்கள். இப்படியிருக்கையில் கம்சனால் ஏவப்பட்ட ஒரு அசுரன் கன்று உருவமெடுத்து ராமகிருஷ்ணர்களை வஞ்சிப்பதற்காக கன்றின் கூட்டத்தை அடைந்திருந்ததை கண்ணனறிந்து, பலராமனுக்கு அறிவித்து, அம்மாயக்கன்றின் கால்களையும், வாலையும் பிடித்து, கிறுகிறுவென்று சுழற்ற, அவ்வசுரன் பிராணனை இழந்தவனாய் கீழேவிழ அப்பிணத்தை அருகேயிருந்த ஒரு விளாமரத்தின்மீது வீசி எறிந்தார். அவ்வசுரனும் தன் சுயரூபத்தை யடைந்தவனாய் விளாங்கனிகளுடன் மறுபடியும் கீழே விழுந்தான். அவனைப்பார்த்த இடைப்பிள்ளைகள் மிகவும் ஆச்சரியம் கொண்டவர்களாய் கண்ணனைப் பல விதமாய்க் கொண்டாடினார்கள். தேவர்களும சத்துரு நாசம் உண்டாயதென்கிற சந்தோஷத்தால் பூமழை பொழிந்தார்கள்.

பின்னொரு நாள் கன்றுகளையோட்டித் தண்ணீர் குடிப்பித்து, தாங்களும் குடித்து வரும்போது மலையின் சிகரம் போல ஒரு கொக்கு நிற்கக் கண்டார்கள். கம்சனால் ஏவப்பட்ட பக



னென்பவன் இந்த கொக்கு உருவமெடுத்து, கண்ணனைக்கொல்லமர்ந்து தன் கூரிய மூக்கினால் அவனைப் பிடித்துக்கொண்டான். இதைக்கண்டு பலராமன் முதலிய பிள்ளைகள் பிராணனை இழந்த புலன்கள் போல் உணர்வற்றுப் போயினர். சர்வலோக நாயகனை இவன் சொரூபம் தெரியாமல் கேவலம் ஒரு இடைப்பிள்ளை யென்று மதித்து விழுங்க, கண்ணனும் தொண்டையிற் போனவாறே அக்கினிஜ்வாலையாய் தகிக்க, அதை அவன் சகிக்க மாட்டாமல், கண்ணனைக் கக்கி தனது மூக்கினால் மறுபடியும் குத்திக்கிழித்து உபத்திரவம் செய்ய யத்தனித்தான். இதை கண்ணனறிந்து, தமது இரண்டு திருக்கைகளாலும் இரண்டு வாயையும் பிடித்து கோரையைப்போல கிழித்து விட்டார். இதைப்பார்த்திருந்த தேவர்கள் அளவற்ற ஆனந்தமடைந்து படகம், சங்கம் முதலிய வாத்தியங்களை முழக்கி, மல்லிகை முதலிய மலர்களை தூவித் துதித்தனர். இங்கு நடந்தவிருத்தாந்தத்தை இடைப்பிள்ளைகள் நந்தாதிகளான கோபர்களுக்குச் சொல்ல அவர்களும் மிகவும் வியப்புற்றார்கள். மேலும் கர்க்காசாரியர் முன்பு உரைத்த விஷயங்கள் பொய்யாகாமல் சரியாய் நடந்து வருகின்றனவே யென்று சந்தோஷப்பட்டு, தங்களுக்கு நேரிடும் சங்கடங்களை பகவான் அப்போதைக்கப்போது பரிகரித்து விடுகிறதினால் பகவானுக்கு தங்கள்மீது பூர்ண கடாக்ஷம் இருப்பதாக நினைத்து ஸ்ரீராமகிருஷ்ணர்களுடைய லீலாரஸங்களை அநுபவித்துக்கொண்டு சமுசாரவேதனை சற்றேனுமின்றி உல்லாசமாய் அக்கோபர்கள் பொழுது போக்கி வந்தனர்.

## 12-ம் அத்தியாயம்.

### அகாசுரவதம்.

ஒரு நாள் கண்ணன் தன தோழருடன் வனபோஜனம் செய்ய நினைத்து அவருக்கு அதை தெரியப்படுத்த எல்லோரும் ததியன்னம் முதலிய திவ்வியான்னங்களை சிக்கங்களில் எடுத்

துக்கொண்டு அதிக கோலாஹலத்துடன் கன்றுகளை ஓட்டிக்கொண்டு கும்பலாய்ப் புறப்பட்டார்கள். தங்களுக்கு கண்ணனுடைய சேர்க்கை போக்கியமாயிருப்பது போல தங்கள் கன்றுகளுக்கும் கண்ணனுடைய கன்றுகளுடன் சேர்ந்திருப்பது இஷ்டமெனக்கருதி அவ்வாறு சேரவிட்டு உல்லாசமாய் எல்லோரும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். கண்ணன் கொஞ்சம் விலகிப்போனால் நான் முன்னே நான் முன்னே யென்று ஓடிப்போய் அவனைத் தொட்டு ஆலிங்கனம் செய்து சந்தோஷிப்பார்கள். அனேக ஜன்மங்களில் மகா பிரயாசத்துடன் தரிக்கப்பட்ட மனதை உடையவர்களான யோகிகளாலும் அடையக்கூடாததான அந்த பரமாத்மஸ்வரூபம் இவ்விடைப் பிள்ளைகளின் கண்களுக்கு விஷயமாகின்றதென்றால், இதினும் பாக்கியமுடையதென்பது ஏது!

பூதனை, பகன் என்பவர்களுக்குத் தம்பியான அகாசுரனென்பவன் கம்சனால் ஏவப்பட்டு கண்ணனைக் கொல்லுமாறு அவ்விடமடைந்து பெரிய மலைப்பாம்புருவமெடுத்து, பூமியில் கீழுதடும் மேகமண்டலத்தில் மேலுதடும், மலையின் கொடுமுடிகள் போன்ற கடைப்பற்களும், இருண்டு ஆழமான உள்வாயும், கண்டாபதம் போன்ற பெரிய நாவும், காட்டுத்தீபற்றி யெறிவது போல் ஜ்வலிக்கின்ற கண்களும், அக்கினியினின்றும் வீசுகின்ற பெருங்காற்று போன்ற பெருமூச்சும் உடையவனாய் மார்க்கத்தில் படுத்துக்கிடந்தான். அந்த கோவலச்சிறுவர்கள் இதைப் பார்த்து கண்ணனுடைய பலத்தால் பயமின்றி கன்றுகளுடன் அப்பாம்பினுள் நுழைந்தார்கள். இதை அசுரனென்றறிந்த கண்ணன் கோவலச்சிறுவர்களையும் கன்றுகளையும் மீட்பதற்கும் அவ்வசுரர்களைக் கொல்வதற்கும் திருவுள்ளங்கொண்டு, தாமும் அந்த பாம்பின் வாயிற் பிரவேசித்து தொண்டையில் சென்றவுடன் தமது பால சரீரத்தை மாற்றி பிரமாண்டமாய் வளர்ந்தருளினார். இவ்வாறு அசுரனுடைய தொண்டை அடைபட்டதனால் மூச்சு விடமாட்டாமல், திணறிப்போய், வயிறு பெருத்து, கண்கள் பிதுங்கி முதுகு கிழிந்து, பிராணனொழிந்தது. இறந்து போனவர் போலிருந்த தம் தோழர்களையும், கன்று



களையும் தமது கடாக்ஷத்தாலெழுப்பி அவர்களோடு தாமும் முன்போல பாலசரீரம் எடுத்துக்கொண்டு வெளியில் வந்தார். உடனே அந்த சர்ப்ப சரீரத்தினின்று ஒரு பெருஞ்சோதி கிளம்பி ஆகாயத்தில் சற்று நேரந்தங்கி அங்கிருந்து கண்ணனுடைய திருமேனியில் வந்து லயித்தது. அப்போது தேவர்கள் பூமழை பொழிந்தனர். அச்சரமாதர் நர்த்தனம் செய்தனர். கந்தருவர் பாடினர். வித்தியாதரர் வாத்தியமுழக்கினர். வேதியர் ஸ்தோத்திரம் செய்தனர். சாரணர் ஜயபேரி அறைந்தனர். இவ்வாறு எல்லோரும் நானாவிதமான உபசாரங்களால் பகவானை ஆராதித்தார்கள். அகாசுரனும் அந்த பரமாத்மாவினுடைய ஸ்பரிச விசேஷத்தால் பாபத்தைத் தொலைத்தவனாய் பகவத்சாம்யம் பெற்றான். ஒருகால் அவனுடைய பிரதிமையை மனசில் தரித்தவருக்கு பரம புருஷார்த்தம் சித்திக்குமாயின் அந்த பரமபுருஷனை அந்த அசுரனுடைய உள்ளே இருந்த பின்பு அவனுக்கு கதியுண்டாகச் சொல்ல வேண்டுமோ? என்று சுகப்பிரம்மரிஷி சொல்ல பரிக்ஷித்து மகாராஜன் கேட்டு, அந்தபரமபுருஷனிடத்தில் அந்தக்கரணத்தை ஒப்புவித்தவனாகையால் அப்பிரானுடைய திவ்விய சேஷ்டிதங்களையே மீளவும்சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்க ரிஷியும் சொல்லத் தொடங்கினார்.

## 13-ம் அத்தியாயம்.

## பிரமதேவன் சிறுவர்களையும் கன்றுகளையும் மறைத்தல்.

வாராய் பாகவதசிகாமணியான பரிக்ஷித்தே! நீ பகவானுடைய சரித்திரத்தை பலமுறை கேட்டிருந்தும் மறுபடியும் அதை புதியது போல் கேட்கின்றாய். இது விடபுருஷர்களுக்கு பெண்கள் பேச்சு க்ஷணந்தோறும் புதியது போலத் தோன்றும் வண்ணமாயிருக்கிறது. அப்புறம் கண்ணன் தமது தோழர்களை அக்கானகத்திலுள்ளதோர் மடுவின் கரைக்கு அழைத்துச் சென்றார். கன்றுகளை நீர் குடிப்பித்துக் கரையின்கண் மேயவிட்டு, சிக்கங்களை அவிழ்த்து [illegible] தனக்

கள் போல் பகவான் மத்தியிலும் இப்பிள்ளைகள் சுற்றியும் உட்கார்ந்து பரிஹாஸ வார்த்தைகளாடிக் கொண்டு புசித்தார்கள். கண்ணனும் தமது சாதுர்ய பாஷணத்தால் அவர்களை சிரிப்பித்து அதிக உல்லாசமாய் அமுது செய்தார். இவ்வாறிருக்கையில் கன்றுகள் மேய்ந்து கொண்டே வெகு தூரம்சென்றுவிட அவைகளைக்காணாமல் இடைப்பிள்ளைகள் பயத்தால் நடுங்கினார்கள். அதைப் பார்த்து கண்ணன் நீங்கள் பயப்படவேண்டாம், கன்றுகளைத் தேடிக்கொண்டு வருகிறேன் என்று சொல்லிப்புறப்பட்டார்.

பிரமதேவன் அம்மஹானுபாவனுடைய மற்றுமோர் மஹிமையைக்காண வேண்டுமென்கிற ஆசையால் கன்றுகளையொருபக்கமும் பிள்ளைகளை யொருபக்கமுமாக ஒளித்து வைத்தார். கன்றுகளைத் தேடிச் சென்ற கண்ணபிரான் அவைகளைக் காணாமல் திரும்பிவந்து பிள்ளைகளையும் காணாததால் இது பிரமதேவனுடைய காரியமென்றறிந்து, நாம் தனியே சென்றால் ஆயர்கட்கும் ஆய்ச்சிகட்கும் மிகவும் வருத்தமுண்டாகுமென்று நினைத்து, தம்முடைய சங்கற்பத்தால் வனப்பு, தோற்றம், வடிவு, தொழில், குணம், தொனி முதலிய எல்லாவற்றிலும் மாறுபாடின்றி கன்றுகளும் பிள்ளைகளும் தாமேயாகி 'ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்கிற வாக்யார்த்த உண்மை தோன்ற சர்வஸ்வரூபமாய் விளங்கினார். அந்திப்பொழுதில் எந்தெந்த கன்றுகளும் பிள்ளைகளும் எவ்வெவ்விடத்துக்குச் செல்லவேண்டுமோ அவ்வவ்விடத்துக்குச்சென்றார்கள். ஆயர் மாதர்களும் இவ்வாறு வந்த பரப்பிரமத்தைத் தம்பிள்ளைகளென்று மதித்து வாரியெடுத்து மடியில்வைத்து பரிவினால் சுரந்த முலைகளை மிக ஆர்வமுடனூட்டினார்கள். கண்ணனும் அந்தந்த காலத்துக்கேற்ற விளையாட்டுகளைச் செய்துகொண்டு ஆய்ச்சியர்களால் லாலனம் செய்யப்பட்டு வந்தார். பசுமாடுகள் மிகப்ரீதியுடன் கன்றுகளை ஊட்டக்கொடுத்து சந்தோஷித்திருந்தன. ஆயர்பாடியிலுள்ளாருக்கு கிருஷ்ணனிடத்தில் முன்பு உண்டான ப்ரீதி யவ்வளவு தம் குழந்தைகளிடத்தில் உண்டாய்விட்டது. இவ்வாறு கண்ணபிரான் கன்றுகள் பிள்ளைகள் என்கிற வியாஜத்தால் தம்மைத்



தாமே பரிபாலித்துக்கொண்டு ஒருநாள் பலராமனுடன் கூடக் கன்று மேய்ப்பதற்காக வனத்துக்குச் சென்றார். அங்கு வெகு தூரத்திலிருந்த பசுக்கள் தம் கன்றுகளைப்பார்த்து ஓடிவந்து ஆர்வமுடனிருந்ததையும், ஆயர்கள் தம்பிள்ளைகளிடத்திலிருந்த ப்ரீதியின் விசேஷத்தையும் பலராமர் கண்ணுற்று இத்தன்மையான பிரேமை ஆயர்கட்கும் ஆய்ச்சிகட்கும் நம் கண்ணனொருவனிடத்தில் தானே உண்டு. இதென்ன ஆச்சரியம். தத்தம் குழந்தைகளிடத்திலும் அத்தன்மையான அன்பு பெருகியுள்ளதே! இது நம் கண்ணன் செய்கையோ வென்று எண்ணி இப்பிள்ளைகளும் கன்றுகளும் சாக்ஷாத் அந்த பரமாத்மாவேயன்றி வேறல்லவென்று ஞான நேத்திரத்தால் கண்டறிந்ததுமன்றி கண்ணனிடத்திலின்றும் யதார்த்தத்தை தெரிந்து கொண்டார்.

பிரமதேவன் தமக்கு நொடிப் பொழுதாகிய அவ்வொரு வருஷமும் கண்ணன் சகலமான தோழர்களோடும் கன்றுகளோடும் கூடி விளையாடிக்கொண்டிருப்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டு காரணம் அறிந்திலராயினார். அந்தகாரமயமான ராத்திரியில் பனிமயக்கம் என்ன பயனுடைத்தாம்! பகற்காலத்தில் மின்மினிப்பூச்சி வெள்ளிச்சம் கொடுக்கக்கூடியதோ! அதுபோல மஹத்தாகிய பகவன்மாயையில் தண்ணியரான இந்த பிரமாதிகளின் தந்திரம் தலையெடுப்பதெங்ஙனம்!

இவ்வாறு பிரமதேவன் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையில், அங்குள்ள பிள்ளைகள் யாவரும் ஒரு கணப்பொழுதில் காளமேகம்போல கருத்து, பொன்பட்டாடையுடுத்து, நான்கு தோள்களுடன் திருவாழி திருச்சங்கு அரவிந்தமலர் இவைகளைத் தரித்து, கிரீடம், குண்டலம், ஹாரம், ஸ்ரீவற்சம், தோளணி, கங்கணம், அரைநூல்மாலை, தண்டை, சதங்கை முதலிய ஆபரணங்களாலங்கரிக்கப்பட்டவர்களாய்; திருத்துழாய் மாலையமாய், சிருஷ்டிக்கு யோக்கியமான ரஜோகுணம்போல் சிவந்த கடைக்கண் பார்வைகளால் தம் பக்தர்களின் அபீஷ்டத்தை யளிப்பார்போலும், பாலனயோக்கியமான சத்துவ குணம்போல் வெளுத்த மந்தஹாஸ விலாஸத்தால் அளித்தவைகளைக் காப்பவர்போலும்

விளங்கி, பிரம்மாமுதல் புல்லளவான சகல சராசரங்களும் தனித்தனியே ரூபந்தரித்து நிருத்தகீதாதிகளால் உபசரிக்க, அணிமாதி ஐசுவரியங்களும், மாயைமுதலிய சக்திகளும், மஹத்து முதலிய இருபத்து நான்கு தத்துவங்களும், காலம், ஸ்வபாவம், ஸம்ஸ்காரம், காமம், கருமம், குணம் இவைகளும் தனித்தனியே உருவெடுத்து ஸேவிக்க, சத்தியஞானானந்தைக ரஸமான திவ்வியமங்கள விக்கிரஹ யுக்தர்களாய், ஆத்ம ஞானிகளுக்கும் எட்டவொண்ணாத மஹத்துவமுடையவர்களாய் காணப்பட்டார்கள். இவ்வாறு பிரமதேவர் ஏககாலத்தில் அந்த பரப்பிரம்மத்தை சகலாத்ம ஸ்வரூபமாய் பார்த்து அதியாச்சரியத்தால் புலன்கள் கலங்கிப்போய் மோஹித்துக் கிடந்தார். உடனே பகவானும் மாயையால் அவற்றை மறைத்துவிட்டதால் அங்கு பிரமதேவர் பிருந்தாவனத்தையும் முன்போல தம் தோழர்களையும் கன்றுகளையும் தேடித்திரிகின்ற கண்ணனையும் கண்டு, உடனே தம் வாஹனத்திலின்றும் கீழே குதித்து அந்த சரண்யனுடைய பாதங்களில் தீர்க்க தண்டம் சமர்ப்பித்து ஆனந்தவாரிதியிலாழ்ந்து, அந்த முகுந்தனை ஆபாதசூடமாக அனுபவித்து தாம் பண்ணின அபசாரத்தை க்ஷமித்தருளவேண்டுமென்று தோத்திரம்செய்ய வாரம்பித்தார்.

## 14-ம் அத்தியாயம்.

## பிரமஸ்தோத்திரம்

ஓ பேரருளாளப் பெருமானே, ஞானயோகத்தில் பிரயாசத்தைவிட்டு மனோவாக்குக் காயங்களால் தேவரீரைச் சரணாகதி பண்ணி, தங்களுக்கு விஹிதமான வருணாசிரமாசாரத்தைக் கைவிடாமல் அதை ஆஞ்ஞாரூபமாக அநுஷ்டித்து, சாஸ்திரங்களால் சொல்லப்பட்ட தேவரீருடைய திவ்விய குணங்களையே தாரகமாக அனுபவிக்குமவர்களைப்போல அடியேன் இப்போது செய்யும் அச்சரணாகதி யென்னும் உபாயம் என்னைக்காவாதொழியுமோ! ஓ சர்வதந்திர சுவதந்திர! மோக்ஷப்பிரதமான பக்தியைவிட்டு கைவல்யார்த்தமான ஞானயோகத்தை யடைவ



தற்கு சிரமப்படுமவர்கள் அரிசியற்ற உமியைக் குத்தும் தன்மை வாய்ந்தவராவர். முன்பு இவ்வுலகத்தில் அனேக யோகிகள் பக்தியோகத்தால் மேலானதான உமது கதியை அடைந்திருக்கிறார்களன்றோ! ஒருவன் அனேககாலம் ஜீவித்திருந்து புவியில் தூள்களெண்ணித்தனனென்றும் ஆகாயத்தில் பனித்துளிகளெண்ணித்தனனென்றும் நக்ஷத்திரங்களெண்ணித்தனனென்றும் எண்ணிச் சொல்லவல்லமையுடையனாகிலும் அனந்த தேவரீருடைய திருக்கல்யாண குணங்களை அளவிடத் திறமுடையவனோ? பிராரப்த கருமத்தை அநுபவித்துக்கொண்டிருக்கையிலும் மனோவாக்குக் காயமென்கிற திரிகரணங்களாலும் உமது திருவடிகளையே சரணமாகப் பற்றி இருப்பவன் பரமபதத்தில் நித்திய சூரிகளோடொப்ப பிரமானந்தத்தை அநுபவிக்கிறானன்றோ? ஹே சர்வேசுவரா! அக்கினியில் பிறந்த ஜ்வாலைபோல் தேவரீரிடத்திலிருந்துண்டான அடியேனெவ்வளவு பொருள்! விவேக சூன்னியனாய் தேவரீருடைய மஹிமை இவ்வண்ணத்ததென்று அறியாமல் பிரமனென்கிற கர்வத்தால் விஷயா விஷயம் தெரியாமற் செய்த அடியேனுடைய அபராதத்தைப் பொறுத்து பரதந்திரனாகிய இவனைக் கைவிடலாகாதென்று அடியேனை ஆட்கொள்ளவேண்டும். அண்டமென்னும் பானையில் ஏழுசாணளவுள்ள சரீரம் படைத்தயான் எங்கே; அப்படிப் பலவண்டங்கள் பரமாணுக்கள்போல பறக்கும்படி கவாக்ஷம்போல அதிவிசாலமான மயிர்க்குழிகளுள்ள விராட்ஸ்வரூபியான தேவரீருடைய மஹிமை யெங்கே! கருவிலிருக்கும் சிசு காலை உதறும்போது தன்னை உதைக்கிறதென்று தாய் சீற்றமடையாள்போல, சராசரங்கள் முற்றும் கொண்ட தமது திரு உதரத்தில் அகப்பட்ட அடியேன் மீதினுங் கோபங்கொள்ளாது பொறுத்தருள வேண்டும். நான்முகனை நாராயணன் படைத்தான் என்பது பொய்யோ! தாயான யசோதைப் பிராட்டியின் மடியில் படுத்திருந்து சிரிப்பென்கிற வியாஜத்தால் உமது திருவுதரத்தில் சகல பிரபஞ்சத்தையும் காட்டியது கிடக்கட்டும். இப்பொழுது நேரே யானும் அனுபவித்தேனன்றோ? பழுதையைப் பழுதையென்றறியாத வரையில் பாம்பென்கிற பயமும் பழுதையென்றறிந்த பின்பு அந்த பயநிவிர்த்

திமுண்டாவது போல் பகவத்ஸ்வரூப மறியும் வரையில் தான் சமுசார பயமு முள்ளது. சமுசார பந்தமும் மோக்ஷமுமாகிய இரண்டும் அஞ்ஞான ஞானங்களா லுண்டாகின்றன. பரமாத்ம விசாரம் பண்ணுதல் சூரியனைக்கண்ட இருள்போல சமுசாரம் தானே அழிவுறுகிறது. தேவரீருடைய மஹிமை தேவரீருடைய திவ்யசரணாரவிந்த பக்தியடியாகப்பிறந்த அநுக்கிரஹத்தால் மாத்திரம் அறியத்தக்கது. தேவரீரை யாகங்கள் திருப்திசெய்வதினும் தங்களுடைய பாலமுதினால் அதிகமாய் திருப்திசெய்வித்த இந்த ஆநிரை ஆய்ச்சியர்களுடைய பாக்கியமே பாக்கியம். எங்கும் நிறைந்த பரம்பொருளாகிய இவ்வாழி வண்ணனைத் தோழமைகொண்ட அவ்வாயர்களுடைய பாக்கியமே பாக்கியம். ராகத்வேஷாதிகளான திருடர்களும், காராகிரஹமாகிற கிரஹமும், விஷய ஆசையென்கிற விலங்கும் தேவரீருடைய பக்தர்களாகிறவரையில் தான், என்றிவ்வாறு ஸ்ரீமந் நந்த நந்தன சுந்தரனை வந்தித்து பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து அவ்வுந்திமலர் பூத்தான் சத்தியலோகம் சென்றான். அந்த இடைப்பிள்ளைகள் கண்ணனைப் பிரிந்து ஒருவருஷ மிருந்தும் அதை அக்கண்ணனுடைய மாயையால் அரைக்ஷணமாக வெண்ணினார்கள். புள்ளாங்குழலை ஊதிக்கொண்டு அப்பிள்ளைகளுடனும் கன்றுகளுடனும் அந்திப்போதில் திருவாய்ப்பாடிக்குச் சென்றார். வாரீர் விப்ரோத்தமரே, திருவாய்ப்பாடி ஜனங்களுக்கு பிறர் மகனான கண்ணனிடத்தில் தம்முடைய குழந்தைகளிடத்தில் இருப்பதை விட பிரீதி அதிகமாயிருந்தது என்பதற்குக் காரணம் என்ன, இதைஉணர்த்தருள வேண்டுமென்று கேட்க மகரிஷி சொல்லுகிறார். உலகத்தில் சகலப் பிராணிகளுக்கும் தமதாத்மாவிடத்தில் தான் பிரீதி முக்கியமாயிருக்கும். பெண்டீர் பிள்ளைகளிடத்தில் அதற்குப் பிறகு தான். கண்ணன் சகலாத்மஸ்வரூபனாகையால் அவனிடத்தில் எல்லோருக்கும் பிரீதி அதிகமாயிருந்தது. கண்ணன் சரிதமாகிற அகாசுரன் வதையும், தோழருடன் வனபோஜனம் செய்ததையும் பிரமஸ் தோத்திரத்தையும் கேட்கிறவனும் சொல்லுகிறவனும் சகலபுருஷார்த்தங்களையும் அடைகிறான்.



## 15-ம் அத்தியாயம்

## தேநுகாஸுரவதம்

ஸ்ரீராமகிருஷ்ணர்களுக்கு இன்னும் கொஞ்சம் வயது வர மாடு மேய்க்கத் தொடங்கி வனத்தில் அனேகவிதமான விளையாடல்களைப் புரிந்து கொண்டு வந்தார்கள். ஒரு நாள் வனத்தில் விளையாடிக் கொண்டிருக்கையில், தேநுகன் என்கிற அசுரன் கழுதை உருவந்தரித்து தன் உறவினருடன் அவ்வனந் தருகிலுள்ள ஒரு பனங்காட்டில் இருப்பதாகவும் திசைகளெல்லாம் கமழும்படி அங்கு பரிமளமிருந்து மிக மதுரியத்தையுடைய பனங்கனி திரளாயிருந்தும் இதாருக்கும் உபயோகப்பட வொட்டாமல் அவ்வசுரனும் அவனினத்தினரும் தடைகின்றனரென்பதையும் சொல்லி அக்கனிகளிடத்தில் எங்களுக்கு அவா அதிகமாயிருக்கிறபடியினால் போவோம் புறப்படுங்கள் என்று கோவலச் சிறுவர்கள் ராமகிருஷ்ணர்களை அழைத்தார்கள். அவ்வனமே எல்லோரும் சென்றவுடன், பலராமன் பனைமரங்களை உலுக்கி பழங்கள் கீழே உதிரும்படி செய்தார். இதை யறிந்த கழுதை அரக்கன் ஓடிவந்து பலராமனை உதைத்து இரைச்சலுடன் ஓடி மறுபடியும் வந்து பின் கால்களை கோபத்தோடு பலராமனுக்கு நேரே உதறினான். உடனே பலராமன் அக்கழுதையின் கால்களைக் கரங்களிற் பற்றிக் கரகரவெனச் சுழற்றி ககனத்தில் எறியத் தானவன் பனைகளின் நுனியிற்பட்டுச் சிதறுண்டு பழங்களுடன் படியினை வீழ்ந்து பிராணனையிழக்க அதை ஒரு பெரிய மரத்தின் மேல் வீசி யெறிந்தார். அப்போது அந்த மரம் முறிந்து மற்றொரு மரத்தின் மேல் விழ அதுவும் அவ்வாறே மற்றொரு மரத்தின்மேல் விழ இவ்வாறு பலமரங்கள் முறிபுண்டன. வாராய் ராஜனே, எந்த பகவானிடத்தில் துணியிலுள்ள நூல் போல் இவ்வுலகமெல்லாம் குறுக்கும் நெடுக்குமாய் கோக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த பகவானுக்கு இது ஒரு அதிசயமல்ல. தம்முறவினனாகிய தேநுகன் உயிரிழந்த சேதியை மற்ற கழுதைகள் அறிந்து, கோபமாக கனைத்துக்கொண்டு ராமகிருஷ்-

ணர்களை நோக்கி ஓடிவந்து மேல் விழ, அவர்கள் அவைகளின்
பின்னங்கால்களைப்பற்றி கரகரவென்ச் சுழற்றி மரங்களின்மீது
வேடிக்கையாய் வீசி யெறிந்தார்கள். இதனால் அங்கு கர்த்த
பசவங்களும் பழங்களுமாக ஆய்விட்டன. பிறகு இடைப்
பிள்ளைகள் யாவரும் திருப்தியுமாய் அவ்வனத்தில் போதுமளவு
பழங்களைப் புசித்தார்கள். பசுக்களும் புல் மேய்ந்தன. அந்திப்
பொழுதாகவே எல்லோரும் மங்கைகளுடன் திருவாய்ப்பாடிக்
குச் சென்றார்கள். கோபிகைகள் கண்ணனுடைய பேரழகைக்
கண்களாரக் கண்டு [illegible]தலைக் கிறிப்பார்களாய் கூட்டம் கூட்
டமாய் வந்தார்கள். கண்ணனும் லஜ்ஜை சிரிப்பு விநயங்களுடன்
அவர்கள் சந்தோஷமுறும்படி கடைக்கணித்து திருமாளிகைக்
குள் எழுந்தருளினர்.

## 16-ம் அத்தியாயம்.

### காளியமர்த்தனம்.

இவ்வாறு பகவான் பிருந்தாவனமெங்கும் திரிந்து வரு
நாளில் ஒரு நாள் மூத்த நம்பியன்றி தாமொருவரே தோழர்க
ளுடன் காளிந்தி யென்னும் மடுவுக்கு எழுந்தருளினார். வெ
யிலில் அடிபட்டு தாகத்தால் பீடிக்கப்பட்ட ஆநிரையும் ஆய
ரும் காலவைஷம்யத்தால் மதிகெட்டு அம்மடுவின் நீரைக் கு
டிக்க உடனே அவர்கள் அனைவரும் மூர்ச்சையுற்று பிணம்
போல் கிடந்தார்கள். அதை பகவான் அறிந்து அவர்களை தம்
கருணை பொழியும் திருக்கண்களால் குளிரக்கடாக்ஷித்ததனால்
சகலரும் எழுந்து வியப்புற்றார்கள். பிறகு பகவான் காளிய
னென்னும் ஒரு பாம்பு அம்மடுவில் வசிப்பதனால் அம்மடு மனு
ஷ்ய பசு பக்ஷி முதலியவைகளுக்கு உபயோகமில்லாததையும்
அம்மடுவுக்கு நேராக ஆகாயத்தில் பறக்கின்ற பக்ஷி முதலியவை
அதன் கடுமை சகிக்காது விழுந்து பிராணனை யிழக்கின்றதை
யும் அவ்விஷநீர் அலையின் காற்றினால் ஸ்பரிசிக்கப்பட்ட இட
மெல்லாம் சாம்பலாய்ப் போவதையும் கண்ணனறிந்து அப்



பாம்பை அம்மடுவினின்று துரத்தத் திருவுள்ளம் பற்றினர்.
உடனே கலிங்கத்தை யிடையிலிறுக்க விசித்துப் பூரிப்புடன்
அங்குள்ள கதம்பமரத்தின் மீதேறித் தொங்குகின்ற தோயதம்
போல் அம்பரமுனையிற் றோன்றி திடமான மடுவிலட்டக் குதித்தி
டுகையிற் கலங்காத நீர்நிலையும் கலங்கியது. ஜலத்தின் கோஷத்
தைக்கேட்ட நாகராஜன் வேகமாய் வெகுளியுடன் வெளிக்கிளம்
பி ஓடிவந்தவன். அங்கு வாரியின் மேல் மகிழ்வோடு விளை
யாட்டயர்ந்திடும் மணிவண்ணனுடலை தன் போகங்களால் சூழப்
பிணித்து அதிசுகுமாரமான அவன் திருமேனி யெங்கும் இரத்
தம் சொரும்படி மருமஸ்தானங்களில் கடித்தான். அவ்வளவில்
அக்கரையிலிருந்த அண்டர்கள் அனைவரும் அக்கண்ணனிடத்
தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆத்மா, தேகம், பொருள், பெண்டிர்
போகம் இவைகளையுடையரானதுபற்றி மிகவும் நடுங்கி கண்
களினீர் சோரக் கலுழ்ந்து நின்றனர். கரையில் தங்கியிருந்த
பசுக்களும், எருதுகளும், இளங்கன்றுகளும், கண்ணனுக்குற்ற
இடுக்கணைப் பார்த்து பயமுற்று விசனமடைந்து ஓவென்று
வாய்விட்டுக் கதறி அலறிட்டன இதிப்படியிருக்கையில்
கோகுலத்தில் பூமிநடுங்கல், ஆகாயத்தினின்று கொள்ளிக்கட்டை
உதிர்தல், இடதுகண் துடித்தல் முதலிய உற்பாதங்கள் நேரிட்
டதை நந்தர் முதலிய கோபர்கள் அறிந்து மிகவும் நடுங்கி பல
ராமனில்லாமல் கண்ணன் தனியே காட்டுக்குச் சென்றனனே
என்ன ஆபத்து நேரிட்டதோவென்று இளையர், முதியர் அனை
வரும் ஓடிவந்து கண்ணனுடைய இருப்பைக்கண்டு நயனங்களி
னீர் வார, செயற்பாலதோராது, மதிகெட்டு பிரமித்து கீழே வி
ழுந்து மயங்கிக் கிடந்தார்கள். அங்கனைமாரனைவரும் யசோதை
யையணுகி அடியம்மா, அஞ்ஞயமா யழிந்துவிட்டோமே; யாம
னைவரும் தாமோதரனையன்றிக் கன்றிழந்த பசுப்போல் நஞ்சே
ரிக்கு எழுகிற்கிலேம். இந்நீரிடையே யிறங்கி யிறந்திடுவோம்.
அவனில்லாச்சேரி பகலவனில்லாப் பகலும், நிசாகரனில்லா நிசி
யும், குன்றையில்லாக் கோதனமுமன்றோ? எனக்கலுழ்ந்து நந்
தர் தொடக்கமான எல்லோரும் வயிறெரிந்து துரிதமாயோடி
அம்மடுவில் இழியப்புக கண்ணன் மஹிமையறிந்த மூத்தநம்பி

ஓடிவந்து அவர்களைத் தடுத்துவிட்டார். இவ்வாறு தமக்காக எல்லோரும் விசனப்படுவதைக் கண்ணன் தமது கருத்துட்கொண்டு பொன்னொளிபோலிலங்கி யெழுந்து, புயங்கனைப்புடைத்து, புயங்கத்தின் போகபாகத்தை விளையாட்டாய் விலக்கி, பின்பு அதனது வாலைப்பற்றிக் கரகரவெனச்சுழற்றி தமது இரண்டு திருக்கைகளாலும் அவனது தலையை யமுக்கி வணங்கி நடம்புரியலுற்றார். இவ்வாறு சுவாமி திருவடிகளைக்கொண்டு அவனது எல்லா படத்தையும் துவைத்ததனாலும், வட்டமாய்ச்சுற்றுதல் முதலியபிராந்திகதிகளினாலும், ஒரு பக்கத்திலிருந்து மற்றொருபக்கத்துக்குப் போவது முதலிய ரேசககதிகளினாலும், பாதத்தை முன்னிட்டு வைப்பதாகிய தண்ட பாதகதியினாலும், அந்த சர்ப்பராஜன் சக்தியற்று தலை நசுங்கி உதிரத்தைக் கக்கினான். மாணிக்கச் சோதியடர்ந்து செந்தாமரை போல் சிவந்த திருவடிகளால் குதித்துக் கூத்தாடுகின்ற அந்த பால கோபால மூர்த்தியின் பேரழகைக் கண்டு சேவிக்கவேண்டுமென்று கின்னர கிம்புருஷ சித்த வித்தியாதரர்கள், தேவஸ்திரிகள், மிருதங்கம் பணவம் தவட்டை முதலிய பல்லியம் முழக்கி, கீதங்கள் பாடி, தெய்வ மலர்தூவி துதித்தார்கள்.

இவ்வாறு நர்த்தனம் என்கிற வியாஜத்தால் மர்த்தனம் செய்யப்பட்ட நாகராஜனும் படங்கள் புடைபட்டதால் ரக்தத்தையும் விஷத்தையும் கக்கி மிகுந்த அவஸ்தைபட்டான். உடனே அவனுக்கு ரஜோகுணம் தலை சாய்ந்து சத்துவகுணம் தலையெடுத்து, இம்மஹா புருஷன் ஸ்ரீமந் நாராயணனாகத்தானிருக்கவேண்டுமென்றும் இவன் சரணல்லால் வேறு சரணில்லையென்றும் நினைத்து அந்த பகவானையே மனதினால் சரணம்புகுந்தான். இவ்வாறு நாகராஜன் தத்தளித்துக் கொண்டிருப்பதை யறிந்த அவனுடைய தேவிமார்கள் தலைவிரிகோலமாய்க் குழந்தைகளுடன் அங்கு ஓடிவந்து தம் புருஷனிருக்கும் இருப்பைக் கண்டு வயிறெறிந்து முகத்திலும் வாயிலும் அடித்துக்கொண்டு, கண்களில் தாரை தாரையாய் நீர் சொரிய தம்புருஷனை மீட்பதற்கு இதோ நிற்கிற இம்மகா புருஷனைத்தவிர வேறுகதியில்லையென்று நினைத்து, அம்முகுந்தனது பாதாரவிந்தங்களில் குழந்



34
THE REGISTRAR OF ... 1910 ... MADRAS

தைகளுடனே கூடவிழுந்து தஞ்சமென்றடைந்து அஞ்சலி ஹஸ்தராய் துஷ்டனாயினும் தம்புருஷனாதலால் அவனை விடுவிக்கவேண்டுமென்று தொழுதார்கள். ஹே புருஷோத்தம! தருமமார்க்கத்தை யறியவொட்டாமல் காப்பதற்காகச் செய்யும் தண்டனையும் தருமத்தோடு சேர்க்கடவதாகையால் எங்கள் நாதனை இந்த ஜீவனுடைய பாபமேதுவாலடைந்த ஸர்ப்பத்தன்மையை யொழித்து சுத்தஸ்வரூபியாக்குவதற்காக அந்தபாபத்தை சிக்ஷித்தீராகையால் இது உனது அநுக்கிரகமேயல்லது சினமாகாது. ஜன்மாந்தரங்களில் எங்கள்நாதன் என்ன தவம்புரிந்தனரோ இல்லையேல் தேவரீர் சந்தோஷத்தோடு நர்த்தனம் செய்யும்படி என்ன புண்ணியந்தான் செய்தாரோ! திருமகளென்கிற மாதரசும் வெகுகாலம் விரதம்பூண்டு போகங்களையெல்லாந் துறந்து ஆவலுறும்படியான தேவரீருடைய சரணாரவிந்த ரேணுஸ்பரிசம் நீசத்தன்மையுடைய இந்த சர்ப்பத்துக்குக் கிடைத்ததென்பது ஒரு ஆச்சரியம். தேவரீருடைய திவ்விய சரணாரவிந்தங்களின் தூளிலேசத்தைப்பெற்ற பெரியோர்கள் சுவர்க்கலோகத்தையும், சார்வபௌமபதத்தையும், பிரமலோகத்தையும், ரசாதி பத்தியத்தையும், யோகசித்திகளையும், ஜன்மாந்தரத்தையும் அபேக்ஷியார்கள். ஷாட்குண்ணிய பரிபூரணனாய், பிரகிருதி விலக்ஷணனாய், ஜீவவிலக்ஷணனாய், ஹேயகுண ரஹிதனாய், கல்யாணகுண யுக்தனாயிருக்கும் தேவரீருக்கு நமஸ்காரம். தேவரீருடைய ஸ்வரூப குணவிபூதிகளைப்பற்றி அவரவர் புத்திகௌசலத்துக்குத் தக்கபடி வாதம்செய்யும்படி அவரவர்களுக்கு இடம்கொடுப்பவராய், குணவிருத்தி வியாஜத்தால் பிராணிகளை பிரவிர்த்திக்கின்றமையால் வைஷம்ய மற்றவராயிருக்கும் தேவரீருக்கு வந்தனம் செய்கிறோம். ஒன்றுங்குறைவற்றிருக்கையால் மௌன விரதத்தை மேற்கொண்டிருப்பவரான சுவாமிக்கு நமஸ்காரம். பெண்பிள்ளைகள் இறந்தினும், பேதைகள் இறந்தினும், இளைத்தவர் இறந்தினும் பெரியோர்கள் இரங்கவேண்டுமன்றோ! தேவரீர் பொறுமையுடையவர்களுக்குள் சிறந்தவரன்றோ! சாத்துவிக ராஜஸ தாமஸமென்கிற ஜீவராசிகளும் தேவரீருக்கு சரீரபூதர்களன்றோ! அவ்வாறிருந்தும் தருமபரிபாலனர்த்தம் சாத்துவிகர்களை ரக்ஷிப்

பதும் மற்ற இரு திறத்தினரை சிக்ஷிப்பதும் அவசியமாயினும் இவர்கள் செருக்கழிந்து சாந்தராயினபின் அருளுவதற்கு அருகரன்றோ? முன்பு எங்கள் பர்த்தா தாமஸப் பிரகிருதியராயிருந்தாலும் இப்போது அது அடங்கியமையால் தேவரீருடைய அருளுக்குப் பாத்திரரென்று நினைக்கிறோம். பிரீதியானது சமனாயிருப்பவனிடத்திலும், த்வேஷமானது மேலாயிருப்பவனிடத்திலும் செய்யத்தக்கவையேயன்றி தாழ்ந்தவனிடத்தில் பண்ணத்தகுமோ? ஓ லோக நாதனே, தத்தம் மக்கள் தவறு செய்வாராயில் தந்தையர் பொறுக்கவேண்டாமோ? பிராணன் போகும்படியான நிலையிலிருக்கிற இந்த நாகன் விஷயத்தில் அநுக்கிரஹம் செய்யவேண்டும். பெண்மையுடையவெங்களுக்கு பர்த்தாவே பிராணனாகையால் பதிபிக்ஷை சாதித்தருளவேண்டும். பகவானே, அந்த பதிபிக்ஷை சாதித்தருளவேண்டும். தேவரீருடைய நியமனத்தை அநுஷ்டிக்கக் காத்திருக்கிறோம் என்றிவ்வாறு சொல்லி நாககன்னிகைகள் விண்ணப்பஞ்செய்ததை திருவுள்ளம்பற்றிய எம்பெருமான் காளியனைக் காலாலெடுத்தெறிந்துவிட்டார். காளியனும் மூர்ச்சை தெளிந்து எழுந்து கிஞ்சித்து தைரியமடைந்து கைகூப்பிக்கொண்டு இந்த விதம் விண்ணப்பஞ் செய்யலாயினன். ஓ எம்பெருமானே நாங்கள் கேவலம் தாமஸப்பிரகிருதிகளாய்ப் பிறந்தோமாகையால் மூர்க்கத்தன்மையும் தீராச்சினமும் எங்களிடம் குடிகொண்டிருக்கின்றன. சுபாவம், வீர்யம், தேஜஸ், உற்பத்தி, காரணம், வாசனை, ஆகிருதி, இவைகள் தேவரீர் சிருஷ்டித்தனவேயன்றி வேறில்லை. இவ்வாறு சர்வஜ்ஞனை உமது மாயவலைக்குள் சிக்கிய அனேக ஜாதிபிராணிகளொன்றாகிய நான் அந்த மாயையைக் கடப்பதெப்படி! ஓ சுவாமி! அடியேனுக்கு விஷமும் பலமும் அற்றுப்போய் பிராணனொன்றுதானிருக்கின்றது. அதைப்போக்காது தந்தருளவேண்டுகிறேன். இனி அடியேன் செய்யவேண்டுவதை நியமித்தருளவேண்டும் என்று பிரார்த்திக்க, சுவாமி கிருபைகூர்ந்து அருளிச்செய்ததாவது. இனி இவ்யமுனாநதியில் ஒருக்கணமும் இருக்கலாகாது. இத்தேசத்திலுள்ள பசுக்களும், பக்ஷிகளும், பிரஜைகளும் இம்மஹாநதி உபயோகிக்



கக்கூடியது. உன் புத்திரகளத்திராதிகளோடு உடனே சமுத்திரம் சேரக்கடவாய். உன் சென்னியில் எனது அடிச்சுவடிருப்பதாகக்கண்டு கருடன் உன்னை செகுத்திடான்; என்று இந்தப்பிரகாரம் அநுக்கிரஹிக்கப்பட்ட காளியன் அப்பரமபுருஷனுடைய திவ்விய ஆத்ம குணங்களையும், திவ்விய மங்கள விக்கிரஹத்தின் போக்கியாதிசயத்தையும் அநுபவித்து, தேவிமாருந்தானுமாய் பிரதக்ஷிண நமஸ்கார பூர்வமாக சந்தனம், குஸுமம், தாம்பூலம், திவ்வியாபரணம், திவ்விய பீதாம்பரம் முதலியவைகளால் அந்த பரமாத்ம ஸ்வரூபத்தையும் ஆராதித்து, தனது புத்திரமித்திர களத்திராதிகளுடன் சமுத்திர மத்தியிலிருக்கின்ற இரமணகமென்னும் த்வீபத்துக்குப் போய்விட்டான். சுத்த விஷமயமாயிருந்த யமுனையும் உடனே அமுதவெள்ளமாய் அனைவர்களுக்கும் போக்கியமாய்விட்டது.

பகவான் காளியனுக்கிட்ட கட்டளையை யாவனொருவன் காலைமாலை இரண்டு சந்தியிலும் ஸ்மரிக்கிறானோ அவனுக்கு சர்ப்பபயமில்லை. இந்த மடுவில் குளித்து தேவாதிகளை இந்நீர் கொண்டு தர்ப்பிக்கிறவனும், உபவாசத்துடனிருந்து அர்ச்சனை வந்தனைகளால் பஜிக்கின்றவனும் சர்வபாபத்தினின்றும் விலகுகிறான்.

---

## 17-ம் அத்தியாயம்.

---

### பலராமர் காட்டுத்தீயை பானம் பண்ணியது.

---

காளியன் போனபின்பு கரையேறிவந்த கண்ணனை, பிராணனைப்பெற்ற இந்திரியங்கள்போல, மதிமயங்கிப் படுத்துக்கிடந்த கோபகோபீசமூகங்கள் உடனே அறிவுற்றெழுந்து ஓடிவந்து கட்டியணைத்து ஆனந்த வாரிதியிலாழ்ந்தார்கள். நந்தகோபரும் யசோதா ரோகிணீபிராட்டிகளும் கண்ணனை உயிருடன்பெற்றோமாவென்று மனமகிழ்ந்தார்கள். பலராமன் கண்ணனுடைய

மகிமை தெரிந்தவராதல்பற்றி மந்தஹாசம் புரிந்தருளினார். அங்குள்ள விருக்ஷங்களும், பசுக்களும், எருதுகளும், கன்றுகளும் ஆனந்தமுற்றன. உடனே அஸ்தமிக்கவே அவ்விரவை அவ்வாயர்களுடன் அவ்விடத்திலேயே கழிக்க திருவுள்ளங்கொண்டு ஓரிடம் ஏற்படுத்தினார் அவ்வனத்தில் அவர்கள் படுத்துறங்குகையில் திடீரென்று ஒரு காட்டுத் தீயானது கிளம்பி அவர்களை நாற்புறமும் சூழ்ந்துகொண்டது. எல்லோரும் இதையறிந்து இவ்வாபத்தினின்று விடுவிப்பவர் கிருஷ்ண பலராமர்தானென்று அவர்களைப் பிரார்த்தித்தார்கள். பலராமர் அபாரசக்திவாணுணையால் அந்ததீயை உடனே பருகிவிட்டார்.

---

## 18-ம் அத்தியாயம்.

## பிரலம்பவதம்.

---

காலையிலெழுந்து எல்லோரும் ஆயர்பாடியடைந்து சந்தோஷத்தோடு இருந்தார்கள். பிறகு ஒருநாள் கோக்களும் கோவலச் சிறுவர்களும் அண்ணனும் தாமுமாய் பிருந்தாவனத்துக்குச் சென்றார்கள். அங்குசென்று மாடுகளை மேயவிட்டு பலவிதமான விளையாடல்களைப்புரிந்து கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க ராமகிருஷ்ணர்களிருவரையும் பிடித்துக்கொண்டுபோக வேண்டுமென்று பிரலம்பனென்கிற அசுரன் ஆயச் சிறுவன்போலுருக்கொண்டு அவ்விளையாடும் பிள்ளைகளில் ஒருவனாக நின்று சமயம் பார்த்துக்கொண்டிருப்பதை சர்வஞ்ஞனான பகவானறிந்தும் அவனைக்கொல்லுமாறு அவனை விளையாட்டுக்கு அங்கீகரித்தார். அப்போது அவர்கள் ஹரிணாக்கிரீடனம் (மான்போல் துள்ளிவிளையாடுதல்) என்கிற விளையாட்டை ஆடத்தொடங்கி யாவரும் இரண்டு கக்ஷியாகப்பிரிந்து கண்ணன் ஒரு கக்ஷிக்கு எஜமானனென்றும் பலராமன் மற்றொரு கக்ஷிக்கு எஜமானனென்றும், தோல்வியடைந்தவர் ஜயித்தவரைச் சுமந்துபோவது என்றும் ஏற்பாடு செய்து விளையாடிக்கொண்டே மாடுகளுடன் பாண்டீரகமென்னும் ஒரு



ஆலமரத்தடியில் போய்ச்சேர்ந்தார்கள். அவ்விளையாட்டில் பிரலம்பன் பலராமனைச் சுமக்கும்படி நேர்ந்தது. கண்ணனுடைய முன்னிலையில் தன்காரியம் பலிக்காதென்று நினைத்து தன் சுயரூபந்தரித்து பலராமனை வெகு தூரம் கொண்டோடிச்சென்றான். அசுரனுடைய கருத்தையறிந்த பலராமனும் அவன் தலையில் ஓங்கிக் குத்தினார். அந்த குத்தினால் அவ்வசுரன் கண்ணிரண்டும் பிதுங்கி கபாலமுடைந்து உதிரத்தைக் கக்கிக்கொண்டு புவிமிசைவீழ்ந்து பிராணனையிழந்தான். இவ்விதம் பிரலம்பனைக் கொன்றதால் கோபாலர்களெல்லாரும் சந்தோஷமுற்று பலராமனைப் புகழ்ந்தார்கள். தேவர்கள் பூ மழை பொழிந்தனர்.

---

## 19-ம் அத்தியாயம்.

## கண்ணன் காட்டுத்தீயை பருகினது.

---

பகவத் கடாக்ஷத்தைக் கடந்த சேதனகோடிகள் பள்ளமுடையான பொருளின்பங்களில் மண்டி அதனால்வரும் துன்பத்துக்கு இலக்காகி அனர்த்தப்படுதல்போல கண்ணனது காக்ஷியைவிட்டு அகன்ற மாடுகள் அற்பமான புல்மீது ஆசைகொண்டு வெகுதூரஞ்சென்று தாகத்தால் தவிக்கப்பட்டு கதறிக்கொண்டே ஒரு முஞ்சிக்காட்டில் புக்கன. கோவலர்கள் அனைவரும் அவைகளைத் தேடி வெகுதூரம் சென்றும் காணாது துயரமடைந்து திகைத்து நின்றார்கள். இதைக் கண்ணபிரான் பார்த்து கிருபையுடன் ஒரு மரத்தின்மீதேறி மாடுகளை அவ்வவற்றின் பெயர்களைச் சொல்லிக் கூப்பிட்டார். உடனே அவைகள் யாவும் ஒன்று கூடி அம்மே என்று கூவின. இது இன்னணமிருக்க காட்டுத்தீயானது பெருங்காற்றுடன் கூடி அவ்வனமுழுதும் அழியும்படியாய் திடீரென்று நாற்புறமும் சூழ்ந்துகொண்டது. இதை கோக்களும், கோவலர்களும் கண்டு பயந்து, யமபயத்தால் நலிவுற்ற ஜனங்கள் ஹரியையடைவதுபோல கண்ணனிடத்தில் முறையிட்டுக் கொண்டார்கள். இதைக்கேட்ட கண்ணபிரான் அவர்களைப்பார்த்து நீங்கள் பயப்படவேண்டாம். ஒரு கணப்பொழுது கண்ணை மூடிக்கொள்

ளுங்கள் என்று அருளிச்செய்தார். அவர்கள் அவ்வாறு செய்ய, அவ்வண்ட மூண்ட கண்டளும் அப்பெருந்தீயை அமுது செய்து அவர்களை அவ்வாபத்தினின்றும் விடுவித்தார். அவர்கள் கண்மூடியிருந்த அந்தக்ஷணமே முஞ்சிக்காட்டி லிருந்து பாண்டீரக விருக்ஷத்தின் கீழ் அவர்கள் வந்திருந்தார்கள். இவைகளையறிந்து கோவலர்கள் இது வரையில் போல இக்கண்ணனை மனுஷ்யனுக நினைக்கக்கூடாது. ஆதிமுதல்வனேயாக வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அந்திப்பொழுதாகவே கண்ணன் வேணுகானஞ்செய்து கொண்டு, மாடுகள் கோவலர்களுடன் திருவாய்ப்பாடிக்குச் சென்றார். கண்ணனைக்காணுத ஒருக்ஷணம் நூறுயுகம்போல தோற்றுகின்ற கோபிகைகள் அந்த சுந்தரனைக்கண்டபோதே சந்திர கிரணத்தை ரஸிக்கின்ற சகோரபக்ஷிகள்போல சந்தோஷசாகரத்தில் மூழ்கினார்கள்.

## 20-ம் அத்தியாயம்.

### கார்கால சரத்கால வர்ணனை.

மின்னல் இடிகளுடன் நீலமேகங்களால் மறைக்கப்பட்ட ஆகாயம் பிரகிருதியுடன் கூடிய பிரமம் பிரகாசமாயும் அப்பிரகாசமாயும் தோன்றுவதுபோலிருந்தது. காமியார்த்தமாக தபம் புரிந்தவர்கள் அத்தவத்தின் பலமாய் புஷ்டியான சரீரத்தை யடைவதுபோல் தாபத்தால் வறண்ட பூமியானது மழைக்குளிர்ச்சியால் சகல ஓஷதிகளுக்கும் உற்பத்தியோக்கியமாய் விளங்கிற்று. கலிகாலத்தில் பாஷண்டர்களால் தூஷிதமான வேதங்கள்போலி அந்தகாரத்தால் மறைக்கப்பட்ட சந்தியாகாலங்களில் நக்ஷத்திர கிரக தாராதிகளான திவ்விய தேஜஸ்கள் விளங்கவில்லை. பணத்தின் அருமைதெரியாத ஒருவன் தன்முன்னோர்கள் தேடிவைத்த பொருள்களை விஷயாவிஷய விவேக சூன்னியனுய் லோகமரியாதையைக்கடந்து செலவிடுவதுபோல வெள்ளமானது மிகுதிபட்டு சிறிய ஆறுகளுக்குள்ளடங்காமல் கரைபுரண்டது. நீரிலும் நிலத்திலும் வாழ்கின்ற ஜீவராசிகள் புதுமழைபொழிபுவே விலக்ஷணமான தேஜஸையடைந்தன. அது ஸ்ரீமுகா விஷ்ணுவின் பாதார



விந்தசேவையினுல் உண்டாகும் வைலக்ஷண்யத்தைப் போன்றது. காமவாசனை பொருந்தி பக்குவமற்ற யோகியினுடைய சித்தம் போல சமுத்திரமானது ஆறுகளுடன் கூடி வருஷாகால வாயுவினுல் அலைக்கப்பட்டு கலக்கமுற்றது. விஷ்ணுபக்தர்கள் எவ்வளவு விசனமடைந்தாலும் சலியாதிருத்தல்போல மழைத்தாரைகளால் அடிபடினும் மலைகள் சலிப்புறவில்லை. கலிமுதலான யுகங்களில் பிராமணர்களால் அப்யசிக்கப்படாத வேதங்கள் சந்தேகாஸ்பதமாவதுபோல அம்மாரிகாலத்தில் மார்க்கங்களெல்லாம் ஜனசஞ்சாரமில்லாமையால் புல் மூடியிருந்தன. புருஷனிடத்தில் காமினிகளான ஸ்திரீகள் தமக்கு பயனுண்டானபோது ஆசைவைத்து அல்லாதபோது உபேக்ஷிக்குந்தன்மையதுபோல மேகத்தினிடத்தில் மின்னல் க்ஷணகாலமிருந்து மறைந்தது. சப்தாதி ஹேயகுணங்களற்ற புருஷன் அக்குணங்களுக்குக் காரணமான பிரகிருதியுடன் சேர்ந்தபொழுது அக்குணங்கள் உற்றவனுகத்தோன்றுவதுபோல் வானவில்லானது கர்ஜனை ரூபமான சப்தத்தோடு கூடியது. சமுசாரத்தில் அடிபட்டவர்கள் விஷ்ணுபக்தர்களின் வரவால் வருத்தந்தீர்ந்து சந்தோஷிப்பதுபோல கோடையில் வருத்தமுற்றிருந்த மயில்கள் மேகங்களைக்கண்டு களிகூர்ந்தன. சார்வபௌமனுன அரசன் பிராமணர்களின் நியமனப்படி உசிதகாலங்களில் தானம் செய்வதுபோல் காற்றுகளால் ஏவப்பட்ட மேகங்கள் ஜலத்தை வருஷித்தன.

இவ்வாறு வருஷாகால முடிந்தபின் சரத்காலம் உண்டாயது. கண்ணனிடத்திலுள்ள பக்திவிசேஷத்தால் சங்கடங்கள் நிவர்த்தியாவதுபோல சரத்காலமானது மேகங்கள் நீங்கி, பூமியிலுள்ள சேறு உலர்ந்து தீர்த்தத்தினுடைய அழுக்கு அற்று விளங்கியது. மேகங்கள் மண்ணாசை பெண்ணாசை பொருளாசை என்கிற மூன்றையு மொழிந்த முனிவரைப்போல சுப்பிரமாய் விளங்கின. அறிவிலிகளான சமுசாரிகள் நாடோறும் தங்கள் வாழ்நாள் கழிகின்றமையை அறியாததுபோல சிறிய குட்டைகளிலுள்ள மீன்

மூடவியவைகள் நாளுக்குநாள் தண்ணீர் குறைவதை அறியவில்லை. காமக்குரோதாதிகளுக்கு வசப்பட்ட சமுசாரி வறுமையின் வருத்தத்தை உணராததுபோல குட்டைகளில் வசிக்கின்ற ஜலசரங்கள் சரத்கால சூரிய கிரணத்தாலுண்டான சந்தாபத்தை உணரவில்லை. ஞானிகள் யான் எனது என்கிற அகங்கார மமகாராதிகளை ஒழித்தல் போல பூமியும், ஓஷதிகளும், அதிக மழையினுண்டான சேற்றையும் அபக்குவத்தையும் ஒழித்தன. விஷயேந்திரங்களின் கவலைநீக்கவர்கள் சாந்தராயிருத்தல் போல சமுத்திரமானது அந்த சரத்காலத்தில் நிச்சலமாயிருந்தது.

தேகாபிமானமுடைய அஞ்ஞானிகளுக்கு ஞானோதயம் போலவும், திருவாய்ப்பாடி பெண்களுக்கு கண்ணனைக் காணுதல்போலவும், சரத்கால சூரியதாபத்தால் கசங்கிய பிராணிகள் சந்திரனைக்கண்டார்கள். சுத்த சத்துவத்துடன் கூடிய புத்திக்கு வேதாந்தார்த்தங்கள் உள்ளபடி தெரிவதுபோல் சரத்காலத்தின் நிர்மலமான ஆகாயத்தில் நக்ஷத்திர கிரகதாராகணங்கள் ஸ்வச்சமாய் பிரகாசித்தன. யதுவம்சாதிபனான கண்ணன் விருஷ்ணி குலத்தவருடன் கூடி பூமியில் விளங்குவதுபோல் சந்திரன் நக்ஷத்திரங்களால் சூழப்பட்டு ஆகாயத்தில் விளங்கினான். ஈசன் செயல்கள் எவையும் பலத்தோடு கூடியவைபோல் அந்த சரத்கால விசேஷத்தால் பசுபக்ஷிமிருகாதிகளும் மானுஷஸ்திரிகளும் தத்தம் துணைவர்களுடன் கூடி கர்ப்பவதியானார்கள். அரசனால் திருடர்கள் ஒழிந்து ஜனங்கள் பயமற்றிருத்தல்போல சூரியன் உதித்தபோது செந்தாமரைத் தடங்களில் மலர்கள் மலர்ந்தன.

அந்த சரத்காலத்தில் வழக்கமாய் நடத்தும் திருவிழாக்களினால் பூமியெங்கும் உல்லாசகரமாயிருந்தது. மழையினால் தடைப்பட்டிருந்த வர்த்தகர்கள், யதிகள், அரசர்கள் வெளிப்பட்டு தத்தம் காரியார்த்தம் சென்றனர். அது சித்தர்கள் தேகாவசானத்தில் பெறும்பயனைப் போன்றிருந்தது.

---



## 21-ம் அத்தியாயம்.

## கண்ணன் வேணுகானம் செய்தல்.

இவ்வாறு சரத்காலத்தில் தெண்ணீருள்ள தாமரைத்தடங்களின் பரிமளம் வீசுங்காற்றுள்ளதான மேய்புலத்துக்கு பசுபாலர்களுடன் கண்ணன் எழுந்தருளி மாடுகளை மேயவிட்டு குழலூதத் தொடங்கினார். சிரத்தில் மயிற்பீலியும், காதுகளில் கோங்குமலரும், அரையில் பீதகவாடையும், மார்பில் பைந்துழாய் மாலையும் அணிந்த திருக்கோலத்தைக் கண்டு, வனத்திலுள்ளார் மகிழ தம்முடைய திருவதரத்திலூறிய அமுதத்தைக் குழல்வழி மடுத்து ஊதினார். காமநோய் விளைப்பிக்கவல்ல இனிதான அக்குழலினொலியைச் சேரியிலிருந்த கோபியர் கேட்டு விரக வேதனையால் மனங்கலங்கி, கோடிமன்மத சுந்தராகாரனான அக்கண்ணனுடைய செயல்களையே ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். குழலுடன் கூடிய கண்ணன், பலராமன், இவர்களுடைய திருமுகங்காணப் பார்ப்பதிலும் கண்படைத்தார்க்கு வேறுபயன் நினைத்தற்பாற்றன்று. ஸ்தாவர ஜாதியில் பிறந்த ஒருபுல்லாங்குழல்செய்த பாக்கியந்தானென்ன! நம்மைப்போல் மாமி மாமன் கணவன் இவர்களுடைய நிர்ப்பந்தமின்றி அவன் நினைத்தபோதே அது அவன் கையாளும்படியாயிருக்கின்றதன்றோ? நாம் இதுகாறும் அனுபவித்த கண்ணன் வாயமுதத்தை இது முதன்மையாய்க் குடிக்கின்றதே! மேலும் ரதிசாம்ராஜ்யமான அதராமிருதத்தையும் குடித்து விடுகின்றதே! பிருந்தாவனத்தில் கண்ணனென்கிற கருமுகில் மயில்கள் மகிழ்ந்தாடும்படி குழலிசைத்துக்கொண்டு நடப்பதனால் இந்தவனம் ஒரு கூறுகப்பெற்ற மண்ணுலகம் விண்ணுலகத்திலும் சிறந்ததெனப் புகழடைந்தது. கண்ணனைக் காணவும், இனிதான குழலிசை கேட்கவும் பெற்ற மகாரசிகர்களான தேவஸ்திரிகள் மன்மத விகாரம் தலைமண்டையிட்டு தைரியமிழந்து, கற்பகமாலையணிந்த கருங்குழலவிழ்ந்து, அரையில் கட்டிய கூறைநெகிழ்ந்து மயங்கினர்.

பசுக்களும் பாலூட்டுங் கன்றுகளும் அவன் குழலின் அமுதத்தை நெறித்த செவிகளாலும் அவன் வடிவழகை மலர்ந்த கண்களாலும் உட்கொண்டு கண்களில் நீர்பெருகி நின்றன. மரக்கிளைகளில் தங்கியிருக்கும் பறவைகள் கண்ணனுடைய குழலோசையையும் அவனது திருமேனியழகையுமே சுவைப்பதன்றி, வேறு கனிமுதலியவற்றை விரும்பாமலிருந்தன. அது வேத முதலிய நூல்களிலோதிய கிரியைகளின் பலனை வேண்டாமல், கேவலம் பகவதனுக்கிரகத்தையே எதிர்நோக்கும் பரமைகாந்திகளைப் போன்றிருந்தது. கண்ணன் தமது பிரிய நாயகிகளுடன் சேர்ந்திருக்கையில் அந்நாயகிமார் காமாதிசயத்தால் அவனது புஷ்ப ஸமானசுகுமாரமான திருவடிகளை அவர்கள் குசங்களில் ஒற்றிக்கொண்டதால், அந்த உத்தம ஸ்திரிகளின் குசங்களிலுள்ள குங்குமக்குழம்புகள் அத்திருவடிகளில் பற்றி அவன் நடந்த பசும்புற்களில் அடியடியாய்ப் படிந்திருந்தன. அதை அவன்மேல் காமுற்ற அவ்வனத்திலுள்ள வேடமாதர் தமது முகத்திலும், மார்பிலும் ஒற்றிக்கொண்டு காதல்நோய் நீங்கி இன்பம்பெற்றனர். இவர்களன்றோ பாக்கியவதிகள்! என்றிவ்வண்ணம் கண்ணன் பெருமைகளைச் சொல்லிக்கொண்டு கோபியர் மகிழ்ந்திருந்தனர்.

---

## 22-வது அத்தியாயம்.

---

## கோபியர் வஸ்திராபஹரணம்.

---

மார்கழி மாதத்தில் நந்தகோபன் சேரியிலுள்ள சிறுமிகள்.

'மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப்போதுவீர் போதுமினோ நேரிழையீர்'

இத்தியாதிபாகச் சொன்னபடி அருணோதய காலத்தில் யமுனை நீரில் குளித்து மணலால் காத்தியாயனியம்மன் உருவமைத்து சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியம், அக்ஷதை, தாம்பூலம் முதலிய பூஜைக்குரிய வஸ்துக்களால் பூஜித்து



யாவராலும் செய்யவொண்ணாத காரியத்தை நினைத்தலால் முடிக்கவல்ல மகிமை பொருந்திய காத்தியாயனி தேவி! உன்னை வணங்கி வேண்டுகின்றோம். எங்கட்கு நந்தன்மகன் கண்ணன் மணவாளனாகும்படி நீ சங்கற்பிப்பாயாக என்று பிரார்த்தித்து அம்மாதம் முழுதும் உப்பும் காரமுமில்லாத போஜனஞ் செய்துகொண்டு காத்தியாயனி விரதமென்கிற இந்த நோன்பை நோற்றார்கள். நாடோறும் சிறு காலையில் எழுந்து ஒவ்வொருவர் பெயரையும் சொல்லி யெழுப்பிக்கொண்டு, மாயன் மாதவன், வைகுந்தன் என்று கண்ணன் திருநாமங்களையும், வஞ்சகப் பேயுயிர் மாய்த்தல் முதலிய அவன் சரிதங்கள் பலவற்றையும் பாடிக்கொண்டு யமுனையிற் குளித்து நோன்பு நோற்று வந்தனர். ஒருநாள் ஆற்றங்கரையில் அக்கன்னியர்கள் வழக்கப்படி தங்கள் உடைகளை வைத்துவிட்டுக் கண்ணனைப் பாடிக்கொண்டு ஆற்றிலிறங்கிக் களிப்புடன் குளிக்கப் புகுந்த காலத்தில், பகவானான கண்ணன் சிறுவர்களுடன் அவண் சென்று அவர்கட்குத் தெரியாமல் அவ்வாடைகளை எடுத்துக்கொண்டு கதம்ப மரத்தின் மேலேறி வீற்றிருந்து தன்னுடன் வந்த தோழருந் நாணுமாறு நகைத்துச் சொன்னதாவது. கன்னியர்களே, நான் சொல்வது விளையாட்டன்று; உண்மை சொல்லுகிறேன்; நானொருகாலும் பொய்யுரைக்கேன்; வேண்டுமானால் இவர்களைக் கேளுங்கள். ஒவ்வொருத்தியாகவாவது எல்லோருமாகவாவது இங்கே வந்து உங்களாடைகளைப் பெற்றுக்கொள்ளக் கடவீர்கள்; என்று உரக்கக் கட்டளையிடக்கேட்ட சிறுமிகள், நாணுடன் கண்ணனை நோக்கி இன்புற்றவர்களாகி, நாணத்தினொருவரை யொருவர் கீழ்க்கண்ணால் பார்த்து நகைத்துக் கொண்டு, கழுத்தளவு நீரிலமிழ்ந்து, குளிரால் நடுக்குற்று, நந்த கோபராஜன் செல்வக் குமாரனும், யாவருக்குமினிய திருமேனி யழகுடையவனும், புகழத்தக்க நன்னடத்தையுள்ளவனுமான கண்ணா, உன் பெருமையெல்லாம் யாமறிவோம்; உனக்கு இவ்வண்ணமான அபிப்பிராயந்தகாது; குளிரால் நடுங்கி வருந்துகின்றோம்; எல்லாமறிந்த நீ எங்களை அங்கு வரச்சொல்லாமல் எங்கள் ஆடைகளை யளித்து மானங் கெடாது காத்தருள்வாயாக; அப்படிச் செய்யாயாகில் அரசனுக்குத் தெரிவிப்போம்

என்று சொன்னார்கள். அதைக் கேட்ட கண்ணனும் சிறுமிகாள்! நீங்கள் நான் சொன்னபடி கேட்டு நடப்பது மெய்யாகில் இங்கு வந்தே யாடைகளை வாங்கிக்கொள்வீர்கள். இல்லாவிடின் நான் கொடுக்கேன். நீங்கள் செய்வதைச் செய்யுங்கள்; என்று சொல்ல கன்னிமாரும் குளிர் தாங்கமாட்டாமல் ரகஸ்யப்ரதேசத்தை இரண்டுகையாலும் மறைத்துக் கொண்டு கரையேறி வந்தார்கள். அதைபகவான் கண்டு அவர்களுடைய கபடமில்லாத நேயத்தால திருவுள்ளமுகந்து அடிமரத்தில் வஸ்திரங்களை வைத்துக்கொண்டு புன்னகையுடன் அவர்களை நோக்கி, நீங்கள் நோன்புக்குத் தொடங்கி ஆடையின்றி நீராடியதால் தேவதையை பரிஹஸித்தது போலாயிற்றே; அந்த அபராதம் தீருகைக்காக இரண்டு கைகளையுங் குவித்துக்கொண்டு தெரியாமல் செய்த பிழையை மன்னித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து உங்கள் துகிலை கைக்கொள்ளலாம் என்று நியமித்தார். அதைக்கேட்டு அப்பெண்களும் தங்களுக்கு தருமமுணர்த்தியதற்கு நன்றியுள்ளவர்களாகி ரகஸ்ய பாகத்தை ஒரு கையால் மறைத்துக் கொண்டே, ஒரு கையால் நமஸ்காரஞ் செய்தார்கள். அவர்களை நோக்கி திரும்பவும் இருகையுங் குறையின்றியிருக்க ஒரு கையால் பகவானைத் தொழுபவனுடைய கையை அக்கணமே அறுக்கவேண்டுமெனத் துணிக்க அடுப்பதாமென்று தார்மிக சித்தாந்தமாதலால் நீங்கள் முந்திய பாபத்தைத் தீர்க்கச் செய்த இது மற்றொரு பாபமாக உண்டாயிற்று. ஆதலால் இவ்விரண்டு பாபமும் நீங்கும்படியாக இருகையும் குவித்து நமஸ்காரஞ் செய்வீரேல் எனக்குப் ப்ரீதியுண்டாகிக் கூறைகளைக் கொடுப்பேன்; என்று பகவான் கருத்தறிந்தபடி மொழியக் கேட்டு அக்கன்னிகைகள் எவ்விதமாகிலும் நோன்புக்குக் குறைவு வாராமல் தாங்கள் விரும்பிய பயனைப் பெறுதலே பெரிதாகக்கருதிக் கண்ணனிட்ட கட்டளைப்படி இருகைகளாலும் நமஸ்காரஞ் செய்தார்கள். அதைக்கண்டு பகவான் அவர்களின் ஆடைகளை அளித்தான். இவ்வாறு தாங்கள் பகவானிடத்தில் கரவின்றி நேயம் வைத்துக் கட்டளைப்படி நடந்ததற்குக் கண்ணன் திருவுள்ள முகந்ததையறிந்த கன்னிமார், தங்கள் நாணங்கெட இத்தனை வஞ்சனஞ் செய்தானென்று கண்ணன் மேல் குற்றம் நினைக்



காமல் தம் கருத்துக் கிசைந்த கட்டழகனைக் காணப் பெற்றோமே யென்று, களிப்புற்று சடக்கென அவனை விட்டுச் செல்லமாட்டாமல் நின்றார்கள். கண்ணனும் நீங்கள் சர்வாந்தராத்மாவான என் மேல் வைத்துள்ள அன்பு யானறிவேன். அது நன்மையேயாகுக. எவ்விதத்தாலாவது என் மேல் நேசமுற்றவர்கட்கு ஒரு குற்றமு மணுகாது. நீங்கள் அநுஷ்டித்த விரதம் பலிக்கக்கடவது. நீங்கள் கோரியபடி இனிவரும் இரவுகள் தோறும் நம்முடன் கூடி சுகிக்கப் பெறுவீர்கள் என்று சொல்ல அவர்களும் மகிழ் மனத்தினராகிப் பிரிந்து போக மனம் வராமல் அவரது திவ்விய சரணாரவிந்தங்களைத் தியானித்துக் கொண்டே திருவாய்ப்பாடிக்குச் சென்றார்கள். பின்னர் கண்ணன் பலபத்திரரும் இடைப்பிள்ளைகளுஞ் சூழ்ந்து வர பிருந்தாவனத்துக்குத் தூரத்தில் சென்று உக்கிரமான வெயில் வேளையில் துளிர்த்துப் பழுத்துக், காய்த்துத் தழைத்துள்ள மரங்களினிடையில் நடந்து போய், யமுனையாற்றிலிறங்கிப் பசுக்களுக்குத் தண்ணீர் காட்டித் தாமும் பானம் செய்து ஆர்த்ரமான புலங்களில் மாடு மேய்த்துக் கொண்டிருக்கையில் தோழன்மாரெல்லாம் பசித்தவர்களாகி, ராமகிருஷ்ணர்களை நோக்கித் தமக்கு உணவளிக்க வேண்டினர்.

## 23-வது அத்தியாயம்.

## வேள்வி மங்கையர் போக்கியான்னம் சமர்ப்பித்தது.

கண்ணா, இதோ நாங்கள் பசியாற் களைத்திருக்கிறோம் நீயன்றி அதற்கு உபாயம் தேடுவார் ஒருவருமிலர்; என்று சொல்ல சர்வேசுவரனான கண்ணன் பக்தியுள்ளவளான ஒரு பிராமணஸ்திரிக்குக் கிருபை செய்ய நினைந்து, தோழர்காள், அதோ வேதம் வல்லவரான பிராமணர்கள் தேவர்களை யுத்தேசித்து ஆங்கிரச மென்கிற யாகஞ் செய்கின்றார்கள். நீங்கள் அங்கு சென்று நாங்கள் கேட்கிறோமென்று சொல்லி கொஞ்சம் பிரசாதம் வாங்கிக்கொண்டு வாருங்கள் என்று சொல்ல, அவர்களும்

அங்கு சென்று பிராமணர்களுக்குத் தண்டனிட்டுக் கைகுவித்து நின்று ஓ மகான்களே, இவ்விடத்துக்குக் கொஞ்சதூரத்திலே கண்ணனும் பலராமனும் காலி மேய்த்து பசியாற் களைத்தவர்களாகி உங்களிடத்திலன்னங் கேட்கவும், யாகத்தில் தீக்ஷை முதற்கொண்டு பசுவை ஆலம்பநம் செய்கிற வரையிலும் சோமபானத்துக்குப் பிறகும் அன்னமிடுவதால் தோஷமில்லையென்று சொல்லவும் சொன்னார்கள். நாங்கள் வந்தோம் அன்னமளிக்க வேண்டும் என்று வேண்டவும், அந்த பிராமணர்கள் அற்பவிஷயமான சுவர்க்காதிகளுக்காக மகாயக்ஞியங்களைச் செய்யும் சிற்றறிவினரும், தாம் பெரியோமென்று தாமே வியக்குபவரும், சர்வ கருமங்களையும் பகவானுக்கு அர்ப்பணஞ் செய்யாதவருமானதால் கண்ணனேவலர் தம்மிடம் வந்தவர்களை அவமதித்து யாதொன்றுமுரையாது இருந்து விட்டார்கள். வந்தவர்கள் காத்திருந்து பார்த்தும் ஒரு விடையுங் கிடையாமையால் திரும்பிப்போய் அங்கு நிகழ்ந்த வண்ணம் கண்ணனுக்குரைக்க, எம்பெருமானும் புன்னகை கொண்டு நல்லது நீங்கள் மறுபடி சென்று பிராமண ஸ்திரீகளிடம் போய் முன்போல் கேளுங்கள்; அவர்களையமின்றி அன்னம் கொடுப்பார்கள்; என்று சொல்ல அவர்களும் பத்நிசாலைக்குச் சென்று முன்னம் பிராமணரிடத்தில் கேட்டது போல் கேட்டார்கள். அவர்கள் மனங்களித்து உடனே பெருந்து பக்ஷ்யம், போஜ்யம், லேஹ்யம், சோஷ்யமென நால்வகையான உணவுகளையெடுத்துக்கொண்டு, தம்மை ஆப்தபந்துக்களான பர்த்தா, பிதா, முதலிய யாவர் வந்து மறுப்பினும் அத்தடைக்கு அடங்காமல், கடுக நடந்து சென்று கண்ணனைக் கண்டு இன்ப வெள்ளத்திலமிழ்ந்து (முடிச் சோதியாயுனது முகச் சோதி மலர்ந்ததுவோ) என்பது முதலாக அநுபவிக்கப்பட்ட அவன் திருமேனியழகை மனதில் இடையறாது தியானஞ் செய்து சகலமான தாபத்தையும் நீக்கிப் பேரின்ப முற்றிருந்தனர். இவ்வாறு அதிக பக்தியுடன் வந்த பிராமண பத்நிகளைக் கடாக்ஷித்து கண்ணன் கூறியதாவது: பதிவிரதா சிரோமணிகளே, நீங்கள் வந்ததனால் எனக்கு சந்தோஷமாயிற்று; உட்காருங்கள்; க்ஷேமமுண்டாகட்டும்; எம்மாலாகற்பாலது உண்டானால் சொல்வீர்களாக.



மெய்யான புருஷார்த்த மின்னதென்றுணர வல்லவர்கள் சகல பாவனைகளாலு மென்னையே பஜிப்பார்கள். 'தாயாய்த் தந்தையாய் மக்களாய், 'காயமுஞ் சீவனுமாய்', என்று சொல்லுகிறபடி எல்லாவற்றுக்கு முள்ளிருந்து இன்புறுத்தும் பரமாத்மாவினும் இனிய பொருளொன்று மில்லை யன்றோ! ஆதலால் நீங்கள் என்மேல் திடமான பக்தி வைத்திருந்து பயன் பெற்றீர்கள். தர்மசாரிணிகளான நீங்கள் யாகதீக்ஷிதர்களாகிய உங்கள் பர்த்தாக்களுடன் யாகத்தைப் பூர்த்தி செய்யுங்கள் என்று விடையளிக்க அந்த பிராமணிகளும், சுவாமி! உன் திருவடியன்றி மற்றறியாது வந்தடைந்த வெம்மை நீங்கிப் போகவிடாமலாட்கொள்ள வேண்டும். அல்லாது நீ கைவிடின் நாங்கள் இல்லம் புகப் போகினும் பர்த்தா முதலியவர்கள் புகவொட்டார்கள். ஆதலால் நாங்கள் 'அங்குற்றேனல்லே னிங்குற்றேனல்லேன்', என்கிறபடி ஒரு விடமுமின்றிக் கெடுவோம் என்று சொன்னார்கள். அதைக் கேட்ட கண்ணபிரானும் நீங்களஞ்ச வேண்டாம்; உங்களை யாவரும் விசேஷமாக அங்கீகரிப்பார்கள்; உங்களுள்ளம் எப்போதும் என்னை விட்டகலாது; அதனால் உங்களுக்கு இருவினைத்தளைகளும் நீங்கும் என்று அருளிச் செய்து விடை கொடுக்க பிராமணிகள் தமது இல்லம் சேர்ந்தனர். அவர்களின் சுற்றத்தார் யாருமவர்களைச் சீற்றங்கொண்டு ஏதேனுமுரைத்திலர். அவர்களிலொருத்தி மாத்திரம் தனது பர்த்தாவினால் சீறி வெருட்டப்பட்டவளாய் பாவபுண்ணிய சேஷமெல்லாந்தீர பேரின்ப வீடுபெற்றனள்.

மாதவனும் அந்த அந்நபானங்களைத் தமது தோழருக்குப் பகுத்தூத் தானுந் தமையனுமாய் அமுது செய்தருளி அந்தத்தோழருடன் வேறுபாடின்றிக் கலந்திருந்தார். பின்பு அந்த தீக்ஷித பிராமணர்கள் அங்கு நிகழ்ந்ததை நினைத்து பரிதபித்து பெண்டிருக்குள்ள அறிவு நமக்கில தாயிற்றே! சர்வ காரணனாய், சர்வ சேஷியாய், சர்வ நியந்தாவாய், சர்வபலப்ரதனான பரம புருஷன் மாயையால் மனித வேடம் பூண்டு வந்து அருள் செய்ய வரும் போதும் அவனை அணுகப் பெறாதகன்றோமே; நம்முடைய ஜீவனைப்பயன் இவ்வாறிருந்ததே. என் செய்ய வல்லோம். ஒரு

விதமான தானமுந் தவமும் வேள்வியு மில்லாமல் மடமையே வடி
வமாகக் கொண்டிருக்கும் மது பெண்டிர்களுக்கெவ்வாறு பகவா
னது திருக்கலியாண குணங்கள் புலப்பட்டனவோ அறிகிலேம்.
இவர்கள்பால் அவன் கிருபை இருந்தவாறு ஆச்சரியம் ஆச்சரி
யம். இவர்களுக்கும் பிறவித்தளை கழலப் பக்குவகாலம் வந்தது.
மழக்கு ஓதல், வேட்டல் முதலிய நல் வினைகளுளவாயினும், அபி
மானம், சிற்றின்ப வேட்கை முதலிய தூர்க்குணங்களால் அவை
யனைத்தும் பிறவி வளர்க்குங் கருவியாயின. சகலசம்பத்தும் அ
ளிக்கவல்ல சர்வலோக மாதாவாகிய ஸ்ரீதேவி அவன் திருமே
னியில் உறைய அவனுக்கு நம்மாலாகவேண்டிய வொன்றுளதோ.
எப்படியாகிலும் அவன் தானே நம்மை ஆட்கொள்ளவரினும் நாம
கலும்படி செய்வித்த நம்மூழ்வினையின் வலிமையை என்னென்று
சொல்லலாம். யாகமும், யாகத்திரவியமும், தத்தேவதையும்,
எஜமானனும், மற்றும் யாவும் இவை முதலிய வெல்லாம் விஷ்ணு
மயமென்றும் அவனே யதுகுலத்திலவதரித்தானென்றும் கேட்
டிருந்தும் நல்ல சமயத்தில் மறந்து மதி கெட்டோம் கெட்டோம்.
பகவானிடத்தில் மனம் செலுத்தாதவர்களுக்கு குடிப்பிறப்பு,
கல்வி, நோன்பு, பகுத்தறிவு, திறமை முதலிய உளவேனும்
அவை பாழ்த்தன. ஆதலாலினியாகிலும் நமக்கு நல்லறிவுண்டா
கும்படி அந்த பகவானே கருணை செய்ய வேண்டுமே யன்றி மற்
றொருவராலும் ஆகற்பாற்றில்லை. அவனே நம்முடைய அபசா
ரத்தை க்ஷமித்து அருள் கொடுப்பானாக என்று நினைந்து கண்
ணனைச் சரணம் புகக் கருதியும் கஞ்சனுக்கஞ்சி வாளாவிருந்தனர்.

## 24-ம் அத்தியாயம்.

## கோவர்த்தனபூஜை.

அந்தபிருந்தாவனத்தில் பலராமனுடன் கூடவசித்துக்கொண்
டிருக்கிற பகவான் கோபர்கள் இந்திரயாகமென்கிற ஒருயாகத்
தைச் செய்ய முயன்றதை யறிந்து நந்தகோபாதிகளான பெரிய
வர்களை நோக்கி அப்பா, இதென்ன செய்யப் பெருமுயற்சி ; இந்த



யாகம் என்ன பலனை நாடி எந்த தெய்வத்தை யுத்தேசித்து
என்ன வஸ்துவாற் செய்கிறது. இதைக் கேட்க விரும்புகிறேன்
எனக்குச் சொல்லவேண்டும். தானென்றும், பிறனென்றும் பேத
மின்றி யாவரையும் சமமாக பாவிக்கவல்ல பெரியோர்கட்குத்
தம்மவனென்றும் விரோதியென்றும் பிறனென்றும் தோற்றமில்
லாமையால் ஒளிக்கத்தக்கது ஒன்றுமிராது. பேதபுத்தியிருக்கி
னும் பிறனுக்குச் சொல்லலாகாதே யன்றி நும்மவனான வெனக்
குள்ளதைச் சொல்வதற்கடை யில்லையே. மேலும் புத்திபூர்வ
மாயும் அபுத்தி பூர்வமாயும் ஜனங்கள் கிருத்தியங்களைச் செய்
கின்றனர். அவ்விருவகையில் அறிவின்றிச் செய்பவை பலன்
கொடா. அறிந்து செய்பவையே தக்க பலனைக்கொடுக்கும். நீங்
களிப்போது தொடங்கும் செய்கை அவ்விருவகையிலெவ்வ
கைத்து. எனக்குத் தெளிவாக வுரைப்பீராக வென்று கேட்க
நந்தகோபர் சொல்லுகிறார். இந்திரன் பர்ச்சன்னியன் எனப்படு
வன். அவனதிசமானவை மேகங்கள். அந்த மேகங்கள் சர்வ
ஜந்துக்களையு முயிர்ப்பிக்கத்தக்க நீரைப் பொழிகின்றன. ஆதலா
லந்த மேகங்களுக்கு முதன்மூர்த்தியான இந்திரனுக்கு அவனால
ளிக்கப்பட்ட திரவியங்களைப் படைத்து நாமும் பிறரும் வருஷந்
தோறும் இந்திரயாகமென்றொன்று செய்வதுண்டு. இது நெடுநா
ளாயுள்ள வழக்கம். இப்படிச் செய்பவருக்கு சகலமான சுபங்
களையும் இந்திரனளிப்பான். எந்த காரணத்தாலேனும் இது செய்
யாமல் தவறினால் தீமை விளையுமென்பது திண்ணம் ; என்று
உரைக்கக்கேட்ட கண்ணன் இந்திரனுக்குச் சினமுண்டாகும்
வண்ணம் தந்தையை நோக்கி பின் வருமாறு உரைப்பாராயினர்.
சகல ஜந்துக்களும் பிறத்தல், இறத்தல், இன்ப துன்பங்களை அனு
பவித்தல் முதலிய யாவும் தொல் வினையினாலே யன்றி வேறு கா
ரணத்தாலில்லை. நல்வினை தீவினைகளுக்குப் பலனளிக்க ஒரு பிரபு
இருந்தும், அவன் வினைவழியாகவே கொடுப்பதன்றித் தன்னிச்
சைப்படி செய்கிறானல்லன். தத்தம் வினைவழியனவான ஜந்துக்
களுக்கு இந்திரனாலாகற்பாலதென்ன. இங்ஙனம் தேவர், அசுரர்
மனிதர் முதலிய பிராணிகளனைத்தும் தொல்வழி யென்னு
மூழின் வழியிற் செல்லும். ஆதலால் ஒவ்வொருவனும் தன் கருமத்

தைச் செய்து கருமத்தைப் பூஜிக்கக் கடவன். எவன் எதைக் கொண்டு பிழைக்கிறானோ அவனுக்கு அதுவே யன்றோ தெய்வம். அவ்வாறு பாவியாமல் மற்றொன்றைப் பூஜிக்கிறவன் கணவனை விட்டு ஜாரனைப் புணரும் காமினிபோலவன். பிராமணன் வேதமோதலாலும், க்ஷத்திரியன் குடிகளைக் காத்தலாலும், வைசியன் தொழிலாலும், சூத்திரன் பரிசரியையாலும் வாழவேண்டும். அவற்றில் பயிர், வியாபாரம், நிரைகாத்தல், வட்டி வாங்குதல் எனத்தொழில் நால் வகைத்து. நாம் பசுரக்ஷணைத் தொழிலுடையோம். ரஜோ குணத்தால் உற்பத்தியும் சத்துவகுணத்தால் ஸ்திதியும் தமோகுணத்தால் நாசமுமாகின்றன. அங்ஙனமே மேகங்கள் உண்டாகின்றன. அவற்றால் பிரஜைகள் ஜீவிக்கின்றன. இவ்விஷயத்தில் இந்திரன் செய்வதென்ன! அன்றியும் நமக்கு நாடு நகர் முதலியன வில்லை. நாம் வனத்திலும் மலையிலும் எப்போதும் வாஸஞ் செய்கிறோம். ஆதலால் நாம் பசுக்களுக்கும், பிராமணர்களுக்கும். மலைக்கும். பூஜை செய்யத் தொடங்கல் தகும்; இந்திரயாகத்துக்கென்று சேர்ந்த வஸ்துக்களைக்கொண்டு பாயஸம், அப்பம். முறுக்கு முதலிய போஜ்யங்கள் சமைத்து, வேதம் வல்ல பிராமணர்களால் சாந்திக பௌஷ்டிகங்களான ஹோமங்கள் செய்து, பசுக்களும் தக்ஷிணை தாம்பூலாதிகளும் தந்து, மற்றும் நீசசாதியருக்கும் போஜனமளித்து, நன்றாயலங்கரித்துக் கொண்டு, நல்ல போஜனஞ் செய்து, நன்மணமுள்ள சந்தனம் பூசி, நல்ல வஸ்திரமுடுத்து, பசுக்களையும் பிராமணர்களையும் அக்கினியையும் பர்வதத்தையும் பிரதக்ஷிணம் செய்ய வாருங்கள். இப்படிச் செய்வதே யென் சம்மதம். உங்களுக்கும் இஷ்டமாயிருந் திங்ஙனஞ் செய்வீராகில் இப்பூஜை கோபிராமண பர்வதங்களுக்கும் எனக்கும் பிரியமாகும் என்று ஸ்ரீகோபால மூர்த்தி சொல்லக்கேட்டு நந்தர் முதலியவர்கள் அவ்வசனம் நல்லதென்றெண்ணி அவ்வண்ணமேயாவுஞ் செய்யத்துணிந்து புண்யாகவாசனம் செய்வித்து முன் சேகரிக்கப்பட்டுள்ள பண்டங்களால் பிராமணர்களுக்குப் பூஜை செய்து பர்வதத்திற்கும் பலியிட்டுப் பசுக்களுக்கு யதேஷ்டமாகப் புல் முதலிய ஆகாரங் கொடுத்து அவைகளை முன்னிட்டுக் கொண்டு மலையை பிரதக்ஷிணம் செய்



தார்கள். வலிய காளைகள் பூட்டிய வண்டிகளிலேறி கண்ணன் பெருமைகளைப் பாடிக்கொண்டே கோபிகைகளும் பிரதக்ஷிணஞ் செய்து பிராமணர் செய்யும் ஆசீர்வாதத்தைப் பெற்றனர். அப்போது கண்ணன் மற்றொரு பெரு வடிவு கொண்டு நான் கோவர்த்தனமலை யென்று சொல்லி மலைக்கு படைக்கப்பட்டிருந்த அன்னராசியை உட்கொண்டார். இப்படித்தானே யுண்டபின் சேரியிலுள்ள ஜனங்களைக்கூடி இதோ பாருங்களிந்த மலை புருஷரூபங்கொண்டு நம்மைக்காக்கும்படி நின்று நாமிட்ட பலியையுண்டது. ஆதலால் இதனைச்சேர்ந்த வனத்தில் நிலையுள்ள நம்மை யாராகிலும் வருத்தினால் அவர்களை இந்த மலை இந்த ஆச்சரிய வடிவத்துடன் தண்டிக்கும். இப்பருவதத்துக்குப் பல நமஸ்காரங்கள் செய்வோமாக. அதனால் நமக்கும் நமது பசுக்களுக்கும் அதிக நன்மையுள்ளதாகும் என்று காட்ட, இடையர்கள் அவ்வண்ணமே நம்பிக்கையுடன் அந்த பூஜையை முடித்து கண்ணனுடன் சந்தோஷமாய்ச் சேரிக்கேகினர்.

---

## 25-ம் அத்தியாயம்.

---

## கோவர்த்தனோத்தாரணம்.

---

நந்தர் முதலிய கோபர்கள் இங்ஙனம் நடத்திச் சென்றவளவில் தன்னை சர்வலோகேசுவரனென மதித்து வியப்புற்றமையால் கண்ணன் பெருமையை மறந்திருக்கிற இந்திரன் அந்த பகவானுடைய கிருபைக்குப் பாத்திரர்களான இடையர்கள் தனக்குச் செய்யும் யாகத்தைச் செய்யாதொழிந்தனரென்று கடுஞ்சினங்கொண்டு *பிரளயகாலத்துக்குரிய சம்வர்த்தக மென்னு மேகக் கணத்தைக்கூவிக் கட்டளையிட்டதாவது. காட்டில் திரியும் இடையர் செல்வத்தால் செருக்கடைந்து, வீண் பேச்சுக்காரனும், அடக்கமில்லாதவனும், தனக்கெல்லாந் தெரியுமென்றெண்ணுபவனுமான கிருஷ்ணனென்னு மொரு மனிதன் சொல்லைக்கேட்டு அவன் எப்போதுந் தங்களைக்காக்க வல்லவனென்று நம்பி தேவனாகிய என்னை அலக்ஷியஞ் செய்தனரன்றோ! ஆதலால் நீங்கள்

இடைச்சேரியிருந்த விடம் தெரியாமற் போம்படி மழை பொழிந்து அழித்துப் போடுங்கள். உங்கள் பின்னே ஐராவதமேறித் தேவர் கூட்டத்தோடு யான் துணைவருவேன். இதைக்கேட்டு மேகக் கூட்டங்கள் கிளம்பிச் சென்று, நந்தன் சேரியை அழிக்கத் துணிந்து, யாவருக்குங் கண்சிதறும்படியான மின்னலுடனும் செவி சிதறும்படியான இடி முழக்கத்துடனும், தூண்களொத்த கல்மழை பெய்து எங்கும் பெருவெள்ளமாக்கின. அந்த அகாலப் பெருமழையில் அடிபட்டுக் குளிரால் வருந்திக் குற்றுயிராயிருந்த இடையர்களனைவரும் காலிகளுடன் கண்ணபிரானைச் சரணமடைந்து அடுத்தவர்களிடத்தன்பு மாறாத பெருமையுள்ள கண்ணா, கண்ணா, எங்களுக்குக் காவலுள்ள நீயிருக்கவும் இந்திரன் எங்கள் மேல் சீறிப் பெருமழை பொழிந்து அழிக்கிறான்; நாங்கள் இனி இத்துன்பத்துக் காற்றகில்லோம்; எங்களைக் கடுகக் காத்தருள்வாய் என்று விண்ணப்பஞ் செய்யக்கேட்டு அவர்களின் நிலையுங்கண்டு பகவான் தன்னுடைய அனுக்கிரகத்துக்குரியதான இச்சேரியை அகங்காரியான இந்திரனழிக்கப் பார்த்தால் அவனாலப்படி செய்ய முடியுமோ! அகங்காரிகளை அடக்கவும் சாதுக்களைக்காக்கவுமல்லவோ யான் அவதரித்திருப்பது. இந்திரன் அவமானப்பட்டு வெட்கி வந்து விழும்படி இச்சேரியோரை ரக்ஷிப்பேன் என்று சங்கற்பித்து சிறு குழந்தையானது நாய்க்குடையைக் கையில் தாங்குவது போல கோவர்த்தன மலையை ஒரு கையால் பெயர்த்துக் குடைபோல பிடித்துநின்றார். இவ்வாறுமலையை ஏந்திய ஸ்ரீயப்பதியானவர் கோபகணங்களை நோக்கி அம்மா, அப்பா, அன்பர்காள், எல்லாரும் பசுக்களுடனே இங்கே வந்து தங்கியிருக்கலாம். வேண்டுமளவு இடமுளது. எவ்வளவு காலம் மழை பெய்தினும் உங்களுக்கு ஒரு பாதகமுமில்லா வண்ணம் இம்மலையை நான் தாங்கிக்கொண்டு நிற்க வல்லேன். இம்மலை தலைமேல் விழுமோவென்று ஐயங்கொண்டு அஞ்சவேண்டாம் என்றருளிச்செய்ய அவர்களப்படியே குடையாகிய மலையின் கீழ்வந்து இனிதமர்ந்து கண்ணபிரான் திருவடிவழகைக் கண்ணாரக் காணுதலால் பசி, தாகம், பயம், குளிர், முதலிய எவ்வகைத் தீங்குமின்றி ஆனந்தபரராய் ஏழுநாள் இருந்தனர்கள். இவ்விதமாகக் கண்ணன் மகிமை



யைக் கண்டு தேவேந்திரன் தனது செருக்ககன்று, வியந்து நந்த கோகுலத்தை யழித்து விடக் கருதிய சங்கற்பத்தைத் தவிர்த்து முகிற்குழாங்களை இனிப்பொழியாதபடி தடுத்தான். அப்போது ஆகாயத்தில் மேகங்களில்லாமல் கதிரவன் விளங்க பயங்கரமான காற்று மழையு மொழிந்து விட்டதைக் கண்டு, மலை தாங்கி நின்ற மணிவண்ணன் இடையர்களை நோக்கி பெரியோர்களே, நேயர்களே, காற்று மழை ஒழிந்தது; இனி நீங்கள் அச்சமேது மின்றி புறப்பட்டுப்போகலாம். ஆறுகளிலும் நீர் வடிந்தது; என்று சொல்லவே அவர்களனைவரும் தத்தம் குடும்பத்துடனும் பசுக்களுடனும் பண்டங்களை வண்டியிலேற்றிக் கொண்டு மெல்லெனவ் அவ்விடத்தினின்று புரம் வந்து சேர்ந்தனர். சகல பிராணிகளும் ஆச்சரிய மடைய எம்பெருமான் அம்மலையை முன்னிருந்த விடத்தில் சேர்த்து விட்ட பிறகு கோபர்களும், கோபிகைகளும் அவரவர் செய்யத்தக்கபடி அவனை ஆலிங்கனம் முதலிய உபசாரணைகள் செய்து வாழ்த்தினர். நந்த கோபர், யசோதை, ரோகிணி பலபத்திரர் முதலானவர்கள் கண்ணனை ஆலிங்கனம் செய்துகொண்டு அவன்மீதுள்ள அன்பின் மிகுதியால் தம்முயிருக்குயிராயிருக்கும் அவனுக்கு என்ன தீங்கு வருமோ வென்றஞ்சி, மங்களாசாஸனமாகப் பல்லாண்டு பாடி வாழ்த்தினார்கள். விண்ணிலும் தேவர், கந்தருவர், கிந்நரர், சாத்தியர், முதலியவர்கள் பகவானைத் துதித்துக் கொண்டு பூமாரி பொழிந்து பல வாத்தியங்களை முழங்கி கீதங்கள் பாடி சந்தோஷங் கொண்டாடினார்கள். அப்போது கண்ணன் கோபர்களோடும் கோக்களோடும் பலராமருந்தானுமாகச் சேரிக்குச் செல்லக் கோபியர்கள் அங்ஙனம் ஆச்சரிய கரமான அவனது லீலா சரிதங்களைக் கேட்டு பெரு மகிழ்ச்சியுடன் கீதம் பாடினார்கள்.

## 26-வது அத்தியாயம்.

### ஆயர்கள் கண்ணன் மஹிமைகளை அறிதல்.

கண்ணன் பெருமை இவ்வகைத்தென்று இறுகாறும் அறிந்திலரான கோபாலர் நந்தர்பாற்சென்று ஓ ராஜனே, உமது குமார

ஞகிய கண்ணன் பெருமை மிக்கதாயிருக்கிறது. இன்னவன் நம்மிடைக்குலத்திற் பிறக்கத்தகுமா! ஏழு வயது பாலகன் அலக்ஷியமாக மலையைத்தாங்கினது ஒரு யானை தாமரைப்பூவை யெடுப்பது எவ்வளவு எளிதோ அவ்வளவெளிதாகவே புலப்பட்டது. கண்திறவாக் குழவியாயிருந்து பூதனை முலையுண்பது போலுயிருண்டது எவ்வளவு ஆச்சரியம். மூன்று மாதத்து குழந்தை அழுதுகொண்டு காலை யுதைக்க அதனால் பெரும் வண்டி புரண்டு விழுந்து ஒடிந்ததெப்படி. ஒரு வயது குழந்தையைச் சுழற்காற்று தூக்கிக்கொண்டு போனதும் அந்த காற்று வடிவாய் வந்த அசுரனைக் கழுத்திற் கையாற் பிடித்து நசுக்கிக்கொன்று குழந்தை க்ஷேமமாய்த் தரையில் வந்ததும் எங்காகிலுங் காணக்கூடுமா! வெண்ணெய்த் திருட்டை நிமித்தம் அன்னை அவனை உரலிற் பிணிக்க அதை யிழுத்துக்கொண்டு தவழ்ந்து சென்று இணைமருதிடைப்புக்கு அம்மரங்களைப் பெயர்த்து வீழ்த்தியது சாமானியமா! கன்று மேய்க்கும் பருவத்தில் கொல்ல வந்த கொக்கு வடிவான அசுரனைக் கைகளாற் கிழித்தெறிந்தது எவராலாகற் பாலதோ! கன்று வடிவம் பூண்டு கன்றினுட் புக்கிருந்த அசுரனைக் கொன்று விளங்கனிகளுதிர்த்தனன். கழுதை உருவான அசுரனை மடித்துப் பனங்காட்டை சீர்படுத்தினன். பிரலம்பன் என்கிற அசுரனைப் பலராமனால் மடிப்பித்தான். ஆயர்களையும், ஆநிரைகளையும் காட்டுத்தீயினின்றும் விடுவித்தான். காளியனென்னுங் கொடிய நாகத்தை ஓட்டி யமுனைமடுவை விஷதோஷ மில்லாதாக்கினன். இன்னுமிவன் செய்கைகள் நினைக்கில் பலவுள. அன்றியுமிவன் மீது இந்தச் சேரியார் அனைவர்க்கும் பசுக்கள் முதலிய வற்றுக்குமுள்ள அன்பு இவ்வளவென்று நினைக்கலரிது. இத்தகைய பெரியானெங்ஙனம் நங்குலத்திற் பிறந்தானென்பதாக யாங்கள் மிகவும் ஆச்சரியப்படுகிறோம், என்று சொல்ல நந்தரும் கோபர்காள், கேளுங்கள் இச்சிறுவனைப்பற்றி கர்க்காசாரியனென்கிற மஹாபிராமணர் பல விநோதங்கள் சொல்லி யிருக்கிறார், இவனுக்குக் காரணப் பெயர்கள் வாசுதேவன், நாராயணன், அச்சுதன், ஹரி முதலாகப் பலவுண்டென்றும், இவனால் ஆச்சரியகரமான அநேக காரியங்கள் நடத்தப்படுமென்றும், இந்த



மகானுபாவனால் நீங்களெல்லாரும் சகல இடர்களும் நீங்கி க்ஷேமமடைவீர்களென்றும் சொல்லியிருக்கிறார். ஆதலால் இவன் சாக்ஷாத் பரமபுருஷாவதாரமாயிருக்குமென்று எண்ணத்தக்கதாயிருப்பதுபற்றி இவனது சரித்திரங்களுக்கு வியக்கவேண்டுவதில்லை. இவனது சுபாவமான சங்கற்பம் இத்தன்மையானதுதான் என்று சொலக்கேட்டு கோகுலத்தாரெல்லோரும் முன்னிலு மதிகமாக அன்புள்ளவர்களாகி நந்தனையு மவன் மைந்தனையும் மிகக்கொண்டாடினார்கள்.

## 27-ம் அத்தியாயம்.

## கோவிந்த பட்டாபிஷேகம்.

கோவர்த்தனமலையைக் குடையாகத் தாங்கிக் கோக்களையும் கோபர்களையும் காத்தருளிய கண்ணபிரான் சந்நிதிக்கு காமதேனுவுடன் தேவேந்திரன் வந்து வெட்கித் தனியே நெருங்கி சூரிய காந்தி பொருந்திய கிரீடத்துடன் எம்பெருமான் திருவடியில் வணங்கி, தனக்கிருந்த ஐசுவரிய மதத்தை விட்டு, கண்டுங் கேட்டுமுள்ள பகவான் பெருமைகளை நினைந்து இந்தவிதம் விண்ணப்பம் செய்யலாயினன். பகவானே, ராஜஸதாமஸங்களில்லாமல் சுத்தசாத்துவிகமாய், மாறுந்தன்மையதாய், ஞானரூபமான உன் சுவரூபத்தில் திரிகுணக் கலப்பாலாகி மதிமயங்கச்செய்யும் அஞ்ஞானத் தொடர்ச்சி யெப்போதுங் கிடையாது. ஆகவே அஞ்ஞானத்தினாலுண்டாகி அஞ்ஞானத்தை விளைவிக்கும் லோப முதலிய தீயகுணங்கள் உன்னிடத்தெப்படி உளவாகும். எப்போது மில்லை. ஆகிலும் உலகில் நீதி செல்லும்படி சாதுக்களைக் காப்பதும் மூர்க்கரை தண்டிப்பதுமாகிய விவகாரம் நடத்துகின்றாய். சகல லோகத்துக்கும் தேவரீர் தந்தையும் குருவும் நாயகனுமாயிருக்கின்றமையால் லோகஹிதார்த்தம் லோகசுவாமி என்கிற அபிமானங் கொண்டவர்களுக்கு நன்மதி யுண்டாகும் வண்ணம் தேவரீர் இத்தன்மையான திவ்விய மங்கள விக்கிரஹத்தைப் பரிக்கிரஹித்து விஹரிக்கின்றது. ஆதலாலென்னைப்போன்

ற மதங்கொண்ட மூடர்களைத் திருத்தி யருள இத்திருவவதாரஞ் செய்த தேவரீருடைய பெருமையை மறந்து பிழை செய்து இப்போது பரிதபிக்கிற அடியேனது அபராதத்தைப் பொறுத்தருளி இனி எப்போதும் இவ்விதமான தீர்ப்புத்தி அடியேனுக்குண்டாகாதபடி அநுக்கிரஹத்துடன் கடாக்ஷித்தருள வேண்டும். தேவரீர் இப்புவியின்கண் அவதாரஞ் செய்தது பூமிக்குப் பெரும் பாரமாகிய துஷ்டர்களை அழிக்கவும் சரண்மடைந்தாரைக் காக்கவு மன்றோ! ஆகலால் அடியேன தேவரீரைச் சரணமாக அடைந்தேன். வேதங்களுக்கும் முற்றுமுணரா வொண்ணாப் பெருமையுடையவனாய், அனைத்துக்கு முள்ளிருப்பவனாய், யதுகுலத்தில் லீலாவதாரஞ்செய்து கண்ணனென்று திருநாமங் கொண்ட தேவரீருக்கு நமஸ்காரம். இடையர்கள் தேவரீருடைய கட்டளையா லென்னைக் குறித்துச் செய்யும் பூஜையைச் செய்யா தொழிந்தனரென்று கோபங் கொண்ட நான் கோகுல மெல்லாம் அழித்து விடக் கருதி இந்தக் காற்று மழையை யுண்டுபண்ணினேன். தேவரீருடைய அநுக்கிரஹத்தால் அந்த அகங்காரம் நீங்கி சர்வேசுவரனும் சர்வசக்தனும் சர்வாந்தராத்மாவுமான உன்னையே சரண்மடைந்தேன். என்றிப்படி விண்ணப்பஞ் செய்த சக்கிரனை நோக்கி பகவானும் புன்சிரிப்புடன் ஒரு வார்த்தை யருளிச்செய்தார். வாராய் புரந்தரனே! உனக்கு த்ரைலோக்கிய சிம்மாசனாதிபத்தியம் கொடுத்திருக்கும் என்னை மறந்த உனது கர்வத்தை யடக்கி உன்னை அனுக்கிரஹிக்க வேண்டித்தான் இந்த கோபஜனங்கள் உனக்குச் செய்ய வாரம்பித்த பூஜையை நான் மறுத்தேன். என்னை மதிக்காமல் தன்பால் வியப்புறும் பேதையைத் திருத்த நினைத்தேனாகில் உடனே அவன் செருக்கையழித்து விடுவேன். இனி நாம் கொடுத்திருக்கும் உன்னதிகாரத்திலிருந்து என் கட்டளைப்படி யுலகாளுகை செய்ய உன்னிடஞ் சேர்வாயாக என்று திருவாய் மலர்ந்தருளினார். பிறகு அருகிருந்த காமதேனுவானது பகவானைப் பார்த்து சத்யசங்கற்பனே தேவதேவா, சர்வேசுவரனான நீ இந்த திவ்யாவதாரஞ் செய்ததனால் நாங்களின்பம் பெற்றோம். சர்வநியந்தாவான நீ இவ்வுலகத்தில் சஜ்ஜனங்கள் செழிக்கவும் துஷ்டர்களழியவும் அவ



ரித்தாய் எங்குலத்துக்குன்னை இந்திரனாகக் கருதுகிறோம் இக் ர பட்டாபிஷேகஞ் செய்கிறோம் இதைத் திருவுள்ளம் பற்றி கோக்களையும், பிராமணர்களையும், தேவர்களையும், சாதுக்களையும் காத்தருள வேண்டும் என்று பிரார்த்தித்து தன்னுடைய லால் அபிஷேகஞ் செய்தது. இந்திரனும் சப்தரிஷிகளால் தவகங்கையினின்றும் ஐராவதத்தின்மீது திவ்விய தீர்த்தத் தக் கொண்டுவரச் செய்து அதைக் கண்ணபிரானுடைய திரு டியில் தானே அபிஷேகஞ் செய்து கோவிந்தனென்று திரு மஞ் சாற்றினான். அப்போதங்கே நாரதர் தும்புரு முதலா வரும், கந்தருவர், வித்தியாதரர், சித்தர், சாரணர் முதலிய எல் லாரும் மகிழ்வுற்று வந்து சகலபாபங்களை நீக்குந்தன்மையதான ஹரியின் புகழ்களைப் பாடிக்கொண்டு புஷ்பவருஷம் பொழிந் ர்கள். அப்ஸர ஸ்திரிகள் நர்த்தனம் செய்தார்கள். இவ்வா க உலகமெங்கும் மிகவும் கோலாஹலமாயிருந்தது. பசுக்கள் ன்னூரப் பால் பெருக்கித் தரையெங்கும் நனைத்தன. அக்கா த்தில் மரவகைகள் செழித்துத் தளிர்த்துப் பூத்து காய்த்துப் ழுத்தன. ஆறுகள் மடுக்கள் முதலிய ஜலாதாரங்களில் தண் ணீர் நிறைந்திருந்தது. பயிர் வகைகள் பாடின்றி விளைந்தன. லைகளில் நவமணிகள் கொழித்தன. இயற்கைப் பகையான கொ ய ஜந்துக்களும் பகையின்றிக் கூடித்திரிந்தன. இவ்வண்ணம் ீ கண்ணபிரானை கோகுலத்தில் இந்திரனாக அபிஷேகஞ்செய்து ட்டு விடை பெற்று தேவேந்திரன் தேவர் முதலானவர்களுடன் டித் தன்னிடஞ் சேர்ந்தான்.

---

## 28-ம் அத்தியாயம்.

---

## ஸ்ரீ கண்ணபிரான் வருணலோகத்துக் கேகுதல்.

---

ஏகாதசியன்று உபவாஸமிருந்த நந்தகோபர் துவாதசியிற்காலத்து முன்னமே அது ஸ்நாநத்துக்குத் தகாத அசுவேளை என்றுணராமல் விடிந்ததாக வெண்ணி ஸ்நாநஞ் செய்தற்காக யமுனையாற்றிலிறங்கின உடனே வருணனேவலாளி

யான ஓர்சூரன் அந்த நந்தனை வருணனருகிற் கொண்டு சேர்த் [illegible] நெடும்பொழுதாய் நந்தர் குளித்து மீளாமல் [illegible] மையால் கோபிகைகளில் பலர் கண்ணனும் ராமா [illegible] அதைக் கேட்டு தம்மவருக் கெல்லாம் அப [illegible] கோவிந்தன் தன் திருவுள்ளத்தில் [illegible] வருணலோகம் போயிருப்பதாக நினைந்து அங்கு தான் சென்றான். அந்த பகவானை வருணன் கண்டு பேரானந்தக் கடலிலாழ்ந்து மிகுந்த பூஜாத்திரவியங்களால் பூஜித்து, ஓ பரம காரணமூர்த்தி, உன் திருவடித் தாமரையைச் சேவித்தவர் பிராகிருத வழிக்கெட்டாத திவ்விய பதம் பெறுவர். அத்தகைய நின்னை இக்கண்களால் காணப்பெற்றதனால் அடியேனுடலும் நன்னிலை பெற்று நற்பயனடைந்தது. முக்குண மாயைக்குள்ளாகிப் பிறவிகளிலும் பிராணிகளைக் கவர்ந்துள்ள பிரகிருதிக்கெட்டாத பரமாத்மாவாகிய உனக்கு நமஸ்காரம் செய்கிறேன். உன் பெருமையறியப் பெறாத என் தூதன் இவ்வவதார விசேஷத்தினின் தந்தையாகிய நந்தகோபனை இங்கு கொண்டு வந்தான். இதைப் பொறுத்தருளுவாயாக, எப்படியேனும் இப்பெரியோனிங்கு வந்தமையால் அடியோங்கட்கெல்லாம் துர்லபமான உனது திருமேனியைக் கண்டு களிக்க நேர்ந்தது. யாங்களுன்னை யடுத்த ஜனங்களாகையால் எங்கள்மீது சீற்றஞ் செய்தால் உன் சீற்றத்தை மாற்றுவதற்கு வேறொரு விரகின்மையால் உன் திருவடிக்கீழ் விழுந்தே புகலாகக் கொண்டோம். ஆதலாலெமது பிழையை பொறுத்து குளிரக் கடாக்ஷிப்பது உன் கடமை. இதோ உன் தந்தையை அழைத்துக் கொண்டு போகலாம் என்று வேண்டிக்கொள்ள, கண்ணனும் தந்தையைக் கூட்டிக்கொண்டு வருணலோகத்தினின்று மீண்டு வந்து தம்மவருக்கெல்லாஞ் சந்தோஷமுண்டாக்கினார். நந்தரும் தான் போயிருந்த வருணலோகத்திற் கண்ட பெருமைகளையும், வருணாதிகளும் கண்ணன் திருவடிக் கீழ்க் காத்திருப்பதையும் நினைத்து நினைத்து ஆச்சரிய பரவசராய்த் தனது பந்து மித்திரர்களுக்கு அவற்றை யெல்லாம் விரித்துரைத்தார். அப்படிக் கண்ணன் விபவங்களைக் கேட்ட கோபாலர்கள் மனக்களிப்புடன் உம்பரை யெல்





லாமாளவல்லவனாயிருந்தும் (பத்துடையடியவர்க்கெளியவன் பிறர்களுக்கரிய வித்தகன்) என்றபடி அடியவர்க்கு சுலபனாயவர்கட்கு அபயவாக்களிக்கும் சத்திய சங்கற்பனான பகவான் நம்மருகிலிப்படி அவதரித்து விளையாடும்படியான பாக்கிய விசேஷம் பெற்ற நமக்கு இம்மையிலுங் குறைவில்லை மறுமையிலும் பேரின்ப மளித்தருளக் கடவன் என்று சாத்துவிகமான தைரியமும் நம்பிக்கையுமுண்டாகி இடையறாது அவன் திருவடிகளையே சரணமாகப் பற்றியிருந்தனர். அப்படித்தன்னையே நம்பியிருக்கும் இடையர்கள்மீது வாசுதேவன் கிருபை கூர்ந்து இவ்வுலகிலுள்ள ஜனங்கள் பற்பல கதிகளைக் கேள்வியுற்று அற்ப சுகங்களுக்காசை கொண்டு பொன்விலங்கு போன்ற போகியின்பப் பேறுகளையே நினைந்து நற்கதியைத் தவறி விடுகின்றார்கள். ஆதலாலிவர்கள் இப்போது எண்ணிய எண்ணமே நிலைபெற்று நிற்கத்தக்கதாகச் செய்யவேண்டும் என்று ஸங்கற்பித்து மஹா கிருபையால் நந்தகோபர் முதலியவர்க்கு, ஆதியும் அந்தமும் அளவுமில்லாததாய், ஞானாநந்தச் சுடராய், பிறவித் தொடர்ச்சியறக் கண்ட பரமைகாந்தி பாகவதர்களுக்கன்றியேனையோர் காணவும் புகவுங் கிட்டாததாய் விளங்குந் தனது நித்திய விபூதியைக் காட்டியருளினான். இவ்வண்ணம் பகவானால் பெறலரியக் காட்சி பெற்ற நந்த கோபாதிகள் ஆநந்தத்தையும் ஆச்சரியத்தையு மடைந்தவர்களாய் மெய் மறந்துக் கண்ணனைத் துதிப்பதே காரியமாக இருந்தார்கள்.

---

## 29-ம் அத்தியாயம்.

---

## கிண்ணன் கோபியருடன் கூடி விளையாடல்.

---

ஸ்ரீ பகவானும் முன்னால் கோபிகாவஸ்திராபஹரணகாலத்தில் அக்கன்னிகைகளுக்கு வாக்களித்தபடி மல்லிகை முல்லை மலர்கள் பூத்துப் பரிமளிக்கவும், சந்திரன் பூர்ண மண்டலமாய்ப் பிரகாசிக்கவும், இனியனவான அந்த சரத்திரவுகளில் தனது சங்கற்பரூபமான லீலா விநோதங்கள் செய்யத் திருவுள்ளங்

கொண்டு அழகிய வனத்திலிருந்து ஸ்திரிகள் மனதை இழுக்கும்படி இனிதாக இசை பாடினான். அந்த இசையைக் கேட்ட சேரியிலுள்ள பெண்களில் பால் கறந்துகொண்டும், பால் காய்ச்சிக் கொண்டும், அன்னம் சமைத்துக் கொண்டும், அலங்கரித்துக் கொண்டும், ஆடையுடுத்துங் கொண்டும், இன்னும் பற்பல தொழில்கள் செய்துகொண்டுமிருந்த ஒவ்வொருத்தியும் மன்மத தாபங்கொண்டு கண்ணனைப் பிரிந்து இருக்க மனமில்லாதவர்களாய் ஒருத்தியை ஒருத்தி பாராமலும் பேசாமலும் தங்கள் கைவேலையை அப்படியே துறந்து எல்லாரும் ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்துக்குத் துரிதப்பட்டுச் செல்லுகையில் மாமன், மாமி, பர்த்தா, சகோதரன் முதலான பந்துக்கள் யாவர் வந்து மறுக்கினும் அவர்கட் கடங்கி நிற்காமல் விரைந்து கண்ணனிருக்குமிடம் சேர்ந்தார்கள். மற்றும் சிலர் வீடுகளுக்குள் தடுக்கப்பட்டு நின்று பக்தியோக நிஷ்டை பெற்ற யோகிகள் போலக் கண்களை மூடிக் கொண்டு இடையறா நினைப்பினால் மனதுக்குள்ளே சர்வலோக வல்லவனாகிய அவன் திருவடி யழகைத் தரிசித்துக் களித்தனர். பின்னுஞ் சிலர் கண்ணனை யணுகப் பெறாமல் கட்டுண்டு இருந்தமையால் தாங்கற் கரிய காதல் நோயால் தாபமிகுந்து பிராகிருத தேகத்தை விட்டு உபாயங்கைவந்த முமுக்ஷுக்கள் போல அவனது நித்திய விபூதியைப் பெற்றனர். இங்ஙனம் ஸ்ரீ சுகப்பிரம்ம ரிஷி சொல்ல பரீக்ஷித்து மஹாராஜன் பிரச்னம் பண்ணுகிறான். சுவாமி, அந்த கோபிமார்கள் கண்ணனை ஜார புருஷனென்றே யல்லது பரமாத்மா வென்று நினைத்திலர். அவர்கட்கு பிராகிருத சரீரம் விடும்படியான யோக்கியதை எங்ஙனம் வந்தது என்று வினவ சுகரும் இவ்விஷயத்துக்கு சிசுபால விருத்தாந்தத்தில் முன்னமே நாம் சொல்லியது உத்தர மன்றோ; விருப்பு வெறுப்பற்ற பரமாத்மாவை காமம், கோபம், அச்சம், நேசம், உறவு பக்தி, என்பவைகளில் எந்த மூலமாயாகிலும் இடையறா பாவனை செய்யினும், வேற்றுமையின்றி யவன் பேறளிப்பனெனச் சொல்லி யிருக்கிறோம். அப்படி யிருக்க மற்றெந்த வஸ்துவிலும் பற்றற்று அவனையே தியானித்து அவன் பிரீதியையே விரும்புபவர்கள் பேறு பெ



றுதல் ஆச்சரியமன்று. கண்ணன் பூமியில் அவதாரஞ் செய்ததே பிராணிகள் வீடு பெறவன்றோ, பகவான் கிருபையால் ஸ்தாவர வஸ்துக்களும் முக்தி பெறுமென்றால் இவர்கள் முக்திபெறுதல் ஆச்சரியமா? என்றுசொல்லிப் பின்னுஞ் சுகர்சொல்லுகிறார். இவ்வாறு நள்ளிரவில் இல்லம்விட்டுத் தன்னருகில் வந்திருக்குந் தருணிகளைக்கண்டு பகவான் பாக்கியவதிகாள், உங்களுடைய வரவு நன்றாக; உங்களுக்கு என்னால் ஆகவேண்டியதான இஷ்டம் யாது, சேரிக்குள் தீங்குண்டாகவிருக்கிறதா; என்னகாரணத்தால் இரவில் இங்கு வந்தீர்கள்; அதைச் சொல்லலாம் இந்த நள்ளிரவில் பயங்கரமான ஜந்துக்கள் இங்கேதிரியும்; ஸ்திரிகள் இப்போதிருக்கலாகாது; சேரிக்குத் திரும்பிச் செல்லுங்கள்; உங்கள் தாய், தந்தை, மாமன், மாமியார், பர்த்தா, தோழி முதலியவர்கள் உங்களைக் காணாமல் இரவிலெங்குந் தேடி யலைவார்கள்; ஆதலால் நீங்களிங்கு நிற்க வொண்ணாது! போங்கள்; பூத்துப் பரிமளிக்கும் வனமெங்கும் பார்த்தீர்கள்; யமுனை யாற்று நீர்க்காற்று அனுபவித்தீர்கள்; துரிதமாகத்திரும்பிப்போய்க் கணவனுக்கு உபசாரம் செய்யுங்கள்; பிள்ளைகளுக்குப் பாலூட்டுங்கள்; கன்றுகளை யூட்டவிடுங்கள்; எல்லா பிராணிகளுக்கும் நேயரான என்மேல் காதலால் நீங்கள் வந்தீர்கள், குற்றமில்லை நன்றே, ஆகிலும் பெண்டிர்கள் கணவனுக்குப் பணிவிடை செய்தலினும் பெரிய தருமமொன்று மில்லை; அது தவறாமல் இல்லறத்திலிருந்து வாழ்தல் பிள்ளைகட்கும், பந்துகளுக்கும், சிறப்பாகும்; குலமகளானவளுக்கு தன் கணவன் துர்நடத்தையும், அருவருக்கத்தக்க ரூபமும், மூப்பும், பிணியும், மடமையும், வறுமையுமுள்ளவனாயினும் அவனைத் துறப்பது மகா தோஷமென்பார்கள். குலமகளுக்குப் பரபுருஷன் புணர்ச்சி என்பது மறுமைக்கும், இம்மையில் புகழுக்கும் பெருமைக்கும் விரோதமானது. அன்றியும் வெகு பிரயாசத்தாலாகத்தக்கது. எப்போதும் அச்சமே யுண்டுபண்ணும். அது கண்டவர் வெறுக்கத் தக்க அற்பச் செய்கை. ஆதலால் இத்தனை இழிவான தொழில் உங்கட்கு வேண்டாம். என் கதைகளையும், என் வசனங்களையும் கேட்பதும், என்னைத் தரிசிப்பதும், என்னை

நெஞ்சில் நினைப்பதும், என் நாமங்களையும் சரிதங்களையும் பேசு
வதுமெனக்கு எவ்வளவு இனிதாகுமோ அவ்வளவு இனிமை
நீங்கள் என்னருகிலிருப்பதில் இல்லை. ஆதலால் நீங்கள் வீடு
களுக்குச் சென்று மேற்சொல்லிய வண்ணமே என் மேல்
கருத்துடன் பக்தி செய்யுங்கள் என்று ஸ்ரீ கோபால மூர்த்தி
உரைத்த மாத்திரத்தில் கோபிகைகள் தாங்கள் எண்ணிய
எண்ணங் கெட்டு செயற்பாலது தோன்றாது கவலையடைந்து
பெருமூச்செறிந்து உதடுகள் சோஷிக்க நுனிக்காலால் நிலத்
தைக் கீறிக்கொண்டு மைகரைந்து மார்பிற் கண்ணீர் பெருகிச்
சற்றுநேரம் ஒன்றும் பேசத் தோன்றாமலிருந்து பின்னர் தங்க
ளுக்கு மிகப் பிரியனாயிருந்தும் செவி சுடப்பேசுகின்ற கண்
ணனுக்கு மறுமொழி யுரைக்கத் தொடங்கி ஆயாசத்தால்
குரல் தழுதழுத்தவர்களாய் விண்ணப்பம் செய்யலாயினர். மகாப்
பிரபு, கொலைக்கிணையான இச்சொல் நீ சொல்லலாமா, உன்னை
யன்றி ஒன்றும் வேண்டோமாகி உன் திருவடிகளைச் சார்ந்தி
எம்மைக் கைவிடலாகாது, பக்தி செய்யும் முமுக்ஷுக்களை
முகுந்தன் கை விடுவதுண்டோ. பதி, புத்ராதிகளோடு இல்ல
றத்தில் வாழ்வது ஸ்திரிகள் தர்மமென்று எங்களுக்கு உபதே
சித்த நீயன்றி உலகில் ஒரு பொருளும் சத்தைப்பெறாது. எங்க
ளுக்கின்பந்தரும் எல்லாப்பொருளும் நீயேயன்றி வேறில்லா
மையால் உன் பக்கலிருக்கும் எங்கட்கு கற்பழிவு ஒன்றும் கா
ணோம். அறிவுடையர் உன்னையே பற்றுவர். அறிவிலிகள் விரும்
பும் அற்பமான பயன்கள் எங்கட்கு வேண்டுவதில்லை. ஆகை
யால் நெடுங்காலமாயுன்மீது வைத்திருந்த ஆசை கெடாதபடி
நல்லருள் செய்வாயாக. எங்கள் மனதைக்கவர்ந்து கொண்டு
எங்களைத் திரும்பிப் போகச் சொல்லுகிறாய். மனதின் உதவியில்
லாமல் கால் நடக்க வல்லதோ! கை ஏதேனுஞ் செய்ய வல்ல
தோ! மற்ற எந்த அவயவந்தான் என்ன செய்ய வல்லதாம்!
ஒன்றுமில்லை. உனது புன்னகை யார்ந்த திருமுகத் துதித்த
இசையினால் மூட்டப் பட்டுள்ள காமத் தீயை உனது திருப்ப
வளவமுதப் பெருக்கால் ஆற்றுவாயாக. இல்லாவிடில் எங்கள்
சரீரத்தை விரகநோயாகிற நெருப்புக்கு வசமாக்கி உன்னைத்



தியானித்துக் கொண்டு ஸூக்ஷ்ம தேகத்தோடு உன் திருவடிக
ளிடமே வந்து சேருவோம். தாமரைக் கண்ணா, ஸ்ரீ தேவிக்குப்
போக்யமான உனது திருவடி வனத்தில் திரியுங்கால் தற்செய
லாக ஒரு நாள் தீண்டப் பெற்ற யாம் இனி மற்றையோர் எதி
ரில் நிற்க விரும்பவில்லை. ஸ்ரீ தேவியின் கடாக்ஷ லேசத்துக்
காக இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் தவஞ் செய்கிறார்
கள். அத்தகைய மகிமை வாய்ந்த திருமகள் நினது திருமார்
பில் நிலை பெற்றிருந்தும் அடியவர்கள் தொழும் உன் திருவடி
நீற்றையும், திருவடியிற் சாத்திய திருத்துளவத்தையும் இச்சிக்
கிறாளென்றால் ஏனையோர்க்கென்ன சொல்வது. அப்படியாங்
களும் திருவடிப்பொடியையே பெறக்கடவோம். உன் திருமுகத்
தைக்கண்டு காம நோயால் தபித்துப் புருஷோத்தமனான உனது
திருவடிக்கு வந்து சேரும்வண்ணம் இல்லந்துறந்து விட்டோம்.
சகல பாபங்களையும் ஒழிக்க வல்ல நீ எங்களிடத்தென்ன குற்ற
மிருக்கினும் அக்குற்றத்தை க்ஷமித்து உனக்கடிமையாக்கிக்
கொள்ளும் படியான திருவருள் செய்வாயாக. மூவுலகும் மோ
ஹிக்கத்தக்க உன் திருமேனி யழகைக்கண்டும், உன் கீதாமிரு
தத்தைக் கேட்டும் மான் முதலிய விலங்குப் பொதுக்களும் மரப்
பொதுக்களும் சிலிர்க்கின்றன வென்றால் பெண்மையுடைய எவ
ளாகிலும் உன்மேல் விருப்பமில்லாது கற்பைக்காத்துக் கொள்
ளுவளோ! இல்லை. பகவானாகிய நீ இச்சேரியிலுள்ளவர் இட
ரை நீக்குமாறு திருவுள்ள மிசைந்தன்றோ இங்கே திருவவதா
ரஞ் செய்தாய். ஆதலால் தீனரக்ஷகனான நீ காமநோயால்
தபிக்கிற எங்கள் மார்புகளிலும் சிரங்களிலும் திருக்கையமர்த்தி
யருளவேண்டும் என்று இவ்வாறு அந்த கோபிகைகள் விண்
ணப்பம் செய்யக்கேட்டும் மஹா பக்தியோக நிஷ்டர்களுக்கும்
பெறவரிய பரமாநந்த மூர்த்தியான கண்ணபிரான் புன்னகை
கொண்டு திருவருளால் அவர்கள் வேண்டுகோளுக் கிணங்கி
கலந்து அவர்களைக் களிப்பித்தார். இப்படி யவர்களுடன் கூடி
நக்ஷத்திர மத்தியில் பூர்ண சந்திரன் போல் விளங்குகின்ற பக
வான் அவர்களிடத்தில் காமுகர் செய்யும் பலவகைச் செயல்க
ளைச் செய்து கொண்டு ஒரு வனம் கடந்து மற்றொருவனம்

சேர்ந்து ஆற்று மணலில் தங்கி ஒவ்வொருத்திக்கும் வசப்பட்டிருப்பவன் போல அவ்வவர்களுக்கும் தோன்றும்படி அதி கம்பிரமான சிருங்கார சேஷ்டைகளால் அந்த கோபசுந்தரிகளுக்கு மன்மத வேதனையை அதிசயிக்கச் செய்து அவர்களோடு ஏகரசமாயிருந்தார். அம்மடவர்கள் அவன் பெருமை அத்தகைய தென்பதை மறந்து அவனவளும் கண்ணனுக்குப் பிரியப்பட்டதாகவும் தனக்கு மேற்பட்ட பாக்கியவதி யொருத்தியுமில்லை யென்பதாகவும் கொஞ்சமுள்ளத்தில் மதங்கொள்ளவே கண்ணன் அவர்களை அம்மதத்தையடக்கி ஆட்கொள்ளும் வண்ணம் கிருபை கொண்டு அங்கே யிருந்தபடியே யவர்களுக்குப் புலப்படா * தொளிந்து விட்டார்.

* பிரிதல் இன்பம் அதிகமாவதற்குக் காரணமாதலால், அவர்களுக்கு இன்பம் மிகும் பொருட்டு பிரிந்தானென அறிக. இதை குறள் நூலார் ஊடலுவகை யென்னும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார்.

## 30-ம் அத்தியாயம்.

## கோபியர்கள் கண்ணன் அடிபிடித்தல்.

பகவானிப்படி ஒளியவே அவனைக்காணாத கோபிகைகள் பிரிவாற்றாமையால் மால்யானையை யிழப்புண்ட பேடுகள் போல வருந்தி, பரிதபித்துக் கண்ணனது நடையழகு, சிரிப்பு, விலாசம், பார்வை, பேச்சு, விளையாட்டு, கிரீடை இவைகளை நினைத்து நினைத்து ஒவ்வொருத்தியும் நிரந்தரமான தியானத்தால் தன்மயமாகித் தன்னையே கண்ணனெனவெண்ணிக்கொண்டும் கண்ணனைக் காணப்பெறாத குறை தோன்றக் கலங்கி அவனை அடவி யெங்குந் தேடப்புக்கனராகி அங்குள்ள மரங்களைப் பார்த்து அரசே, ஆலே, குறிஞ்சியே, அசோகமே, புன்னையே, செண்பகமே என்று இன்னும் இவ்விதமான பல விருக்ஷங்களையும் விளித்து நந்தன் மகனான கண்ணன் எங்கள் மனங்களைப் பறித்துக்கொண்டு ஓடிப்போனான். அந்தக் கள்ளனிங்கு வரக்கண்டதுண்டோ என்றும், இதோ நமது கண்ணனுக்கு மிக வினியதாகப் பெற்ற திருத்துழாயிருக்கிறது. அதனைக் கேட்டால் அறிந்து சொல்ல வல்லதே என்று அதனை விளித்துக் கண்ணனைக் கண்டாயோ என்றும், பூங்கொடிகளைக் கண்டு மல்லிகையே, முல்லையே என்று விளித்து முன்போற் கேட்டும், பூமியை நோக்கி பூதேவியே நீமிக்கக் களித்திருக்கிறாய் போலும் உன்மேல் திருவடி யூன்றிக் கண்ணன் சென்றிருக்கலாம் எங்கே சென்றான் சொல் என்றும், மான்பேடைக் கண்டு ஒரு நாயகியுங் கண்ணனுங் கூடி இங்குவரக் கண்டீரோ வென்றும், இவ்வாறு பின்னும் பற்பல விதமாக வெறிச் செயல்கள் செய்தும் கண்ணன் புலப்படாமையால் இமைப் பொழுதும் கற்பகோடியாக வளர்வதால், காலம் செலுத்த வேறொரு வழி தோன்றாமல் கண்ணன் செயல்களை அனுசரித்து நடிக்கத் தொடங்கினர். ஒருத்தி பூதனையாயும் மற்றொருத்தி கண்ணனாயும் பாலுண்ணலாகிய விளையாட்டும் இவ்வாறே சகடமுதைத்தலும் இருவரிருவராகச் செய்தார்கள். ராமகிருஷ்ணர்களாக இருவர்களும் இடைப் பிள்ளைகளும் காலி மாடுகளுமாகப் பலர்களுமாய் மாடு மேய்த்தார்கள். ஒருத்தி பகாசுரனும் ஒருத்தி கண்ணனுமாய் நடித்தனர். ஒருத்தி தோழனாகவும் அவன் தோளில் கை வைத்துக் கொண்டு மற்றொருத்தி வேணுகானஞ் செய்யும் கண்ணனாகவும் காட்டினர்: இன்னும் சிலர் வேணுகானம் நன்றாயிருக்கிறதென்று புகழுந்தோழராக அபிநயித்தார்கள். ஒருத்தி கண்ணனாய் மற்றொருத்தி பிராண நாயகியாய்த் தோள் மேல் கைவைத்து நடந்துகொண்டு என் நடையழகைப் பாரென்று பேசிக் கொண்டாள். காற்று மழைக்கு அஞ்சவேண்டாம் மலையைக் குடையாகப் பிடிக்கிறேனென்று சொல்லிக் கொண்டு மேல் வஸ்திரத்தைக் குடைபோலொருத்தி தாங்கினாள். ஒருத்தி காளியனாகி மற்றொருத்தி கண்ணனாகி அவன் தலைமேல் மிதித்து இனி இங்கிராதோடிப்போ வென்றாள். இன்னும் பலவாறுகக் கண்ணன் செய்தருளிய வெண்ணெய்த் திருட்டு முதலிய லீலைகளை எல்லாம் அபிநயித்துக் கொண்டு தேடிச் செல்லுகையில் பகவானுடைய திருவடிச் சுவடுகள் புலப்படக் கண்டு இவை பதுமம், துவஜம், வஜ்ரம், அங்குச முதலிய ரேகைகள் வாய்ந்தி

ருப்பதால் நம் கண்ணனை அழகுளனத் தடையில்லை' என்று அவ்
வழியே நோக்கிப் போகும்போது இடையிடையே ஒரு ஸ்திரீ
யினடிகளும் புலப்படக்கண்டு மனநொந்து இவ்வடிகளைக் கண்
டீர்களா! கண்ணன் தோள் மேல் கை போட்டுக்கொண்டு
சென்றாள் போலத் தோன்றுகிறது. இவள் எம்பெருமான்
திருவுள்ளமுகக்கும்படியாய் அவனை நன்கு பூஜித்திருக்கலாம்.
இன்றேல் இந்தக் கண்ணன் நம்மையெல்லாம் விட்டகன்று
தனியே இவளைக் கூடிச் செல்லக் காரணமென்ன. சகல தே
வர்களுந் தலையில் தாங்க விரும்புமிந்தக் கண்ணன் திருவடித்
தாள்களிடையில் எம்மையெல்லாம் வஞ்சித்துத் தனியே அத
ரபானஞ்செய்யுமிவள் அடிச்சுவடுகளிருப்பதனால் நமக்குக் கலக்
கமுண்டாகிறது. இந்தப் புற்றரையில் அவள் அடிகள் காணப்
படவில்லை. இங்கே அவள் நடக்கமாட்டாததனால் கண்ணன்
அவளைத் தோள்மேலேற்றிக் கொண்டு போயிருக்கலாம். அத
னாலேதான் இந்த அடிகள் ஆழ்ந்திருக்கின்றன. இங்கே அவளை
இறக்கி அவளுக்காக மலர்கள் கொய்தளித்தான். இதெங்ஙன
மெனில் இவ்வடிகள் நுனிக்காலால் நிமிர்ந்து பூப்பறித்த வகை
யாகத் தெரிகின்றன. இங்கே அவள் தலையைச் சீவி மலர் சூட்
டிக் கொண்டு உட்கார்ந்திருந்தனள். எங்கும் நிறைந்தவனாய்த்
தன்னையன்றி மற்றொன்றால் ஆனந்திக்காதவனாய் சுவதந்தரனா
யிருந்தும் இங்கே நம்போலியர்க்கு வருத்தமுண்டாகும்படி
பெண்டிர்களின் கெடுநினைவையுணர்த்துவதற்காக அவளுடன்
புணர்ச்சி செய்தான். இவ்விதமாகக் கண்ணன் பின் செல்லப்
பெற்ற ஒருத்தி தவிர மற்ற கோபிமாரெல்லாரும் மனம் பதறிக்
கண்ணனைத் தேடித் தேடிக் கால்சைந்து வருந்தும் போது அங்
கே கண்ணனுடன் சென்ற அவள் இவ்வளவு கோபிமாரில் நா
னொருத்தியே கண்ணனுக் கேற்றவளாதலால் என்னைத் தனியே
அழைத்துக் கொண்டு வந்தானென்று தன்னைத்தானே மெச்சி
இனிச் செல்ல என்னால் முடியாது உன் மனமெங்கு போக
விரும்பினும் அங்கு என்னை நீயே யெடுத்துச் செல்ல வேண்டும்
என்று சொல்ல கண்ணன் என் தோளில் ஏறிக்கொள் என்று
ரைத்து காட்டி உடனே அவளுக்கும் புலப்படாமல் ஒளிந்த



னன். கண்ணன் ஒளித்திடவே தனியே நின்ற அவள் மற்
றோனைக்காட்டிலும் அதிகமாகக் கிலேசித்து காட்டில் அஞ்சி
நிற்க மற்ற கோபிகைகள் முன் சொல்லியபடி தேடிக்கொண்டே
அவளண்டை செல்ல அவளும் இவர்களுடன் கூடித் தான்
தனியே கண்ணனுடன் சென்றதும், அகங்காரங் கொண்டதும்,
கண்ணன் மறைந்ததும் சொல்லிப் புலம்பினள். பின்பு எல்
லாருங் கூடி நிலவுள்ள வரையில் தேடி இருள் வந்த பின் வழி
தெரியாமல் சென்ற வழியே திரும்பி அவனைக் காணப் பெறாமல்
தத்தம் வீடு வாயில்களையும் மறந்து கண்ணன் நினைப்பும், அ
வன் பேச்சும், அவன் நடக்கையும் அன்றி மற்றொன்றுமில்லா
மல் மீளவும் யமுனை மணலுக்கே வந்து சேர்ந்து எல்லாருங்
கூடி கண்ணபிரான் விஷயமான கீதங்கள் பாடத் தொடங்கினார்
கள்.

## 31-ம் அத்தியாயம்.

## கோபிகா கீதை.

கோகுலத்தில் ஸ்ரீதேவி நிலைபெற்றிருக்கும் [illegible]
வவதாரஞ்செய்தருளி இச்சேரியை அனைத்துலகி[illegible]
மாக்கிய கண்ணா, இச்சேரியராய் உம்மவர்களான [illegible] நம்மு
யிரையுன்மேல் வைத்துத் திசையெங்கு முன்னைத் தேடுகின்றனர்.
சரத்காலத்தில் மலர்ந்த தாமரையிதழ்போன்ற கண்ணா, எங்கள்
பிராணனையுன்பாலதாக்கி ஒளித்துகொண்டாயிது கொலையா
காதோ. காளியன் மடுவுக்கும் மலைப்பாம்பாகிய அசுரனுக்கும்
காற்று மழைக்கும் இடிநெருப்புக்கும் காளைவடிவான அசுரனு
க்கும் இன்னும்பல ஆபத்துகளுக்கும் தப்பி உயிர்த்திருக்கும்படி
யெங்களைக் காத்ததெல்லாம் பொய்யோ. எல்லாப்பிராணிகளுக்
கும் உள்ளுறையும் சர்வ சாக்ஷியான நீ பிரமாவின் வேண்டுகோ
ளால் பார்மீது யசோதை மகனென்னும்படி யவதரித்தருளினாய்.
உனக்கெங்கள் கருத்து தெரியாதா. எங்கள் வருத்தத்தை தீர்
க்கவேண்டாமோ. நினைத்தது முடிக்கவல்ல வீரனும் ஜாதி முத

லிய யாவற்றினும் இழிவான வெங்களுடனுங் கலந்தருளும் சுசீலகுண முள்ளவனுமான தாமரைக்கண்ணா, நீ அடியோங்களுக்கு அனுக்கிரகஞ் செய்யும்படி உனது அழகிய திருமுகத்தைக்காட்டி சரணம் புக்கவர் சமுசார பயத்தைத் தீர்த்து வரமளிக்கும் உனது தாமரை போன்ற திருக்கையை எங்கள் சிரத்தில் தாக்கியும், அடுத்தவர் தீவினையை அகற்றுவதும் காலிப்பின் செல்லுங் கோலங் கொண்டதும் ஸ்ரீ தேவிக்கு நிலயிடமும் காளியன் முடிமேல் நடிப்பதுமான உன் திருவடி மலரை எங்கள் மார்பின்மேற் பதித்தும், இனிய தொடருள்ள உன் திருவாக்கினாலும் உனது திருப்பவளச்சுவைத்தேனினாலும் உன்னடிமைகளான எங்கள் மோகதாகத்தைத் தீர்த்து சீக்கிரத்திலெங்களை ரக்ஷித்தருளவேண்டும்.

சகல தாபங்களையும் அவற்றுக்கு மூலமாகிய பாபங்களையும் தீர்க்கவல்லதாய், வான்மீகி முதலிய பெரியோர்களாற் புகழப்பட்டதாய், காதுக்கினியதாய், எவ்வளவு பேசினும் மிகுந்திருப்பதான உன் திருக்கதைகளைப்பாடுவோர் தான முதலிய தருமங்களுஞ்செய்துள்ளாரெனப்படுவார். உனது அழகிய மந்தஹாசமும், அன்பார்ந்தநோக்கமும், நினைக்க நினைக்க வினிதாகும் நடையுடை முதலிய விலாசங்களும், தனி நின்றுபேசு மொழிகளுமுன்னைக் காணப்பெறாத எங்கள் மனதைக்கலக்குகின்றன. நண்பனே, நீ பசுக்களையோட்டிச்செல்லும்போது தாமரைப்பூப்போன்ற உன் திருவடி வனத்திலுள்ள கல் புல் முதலியவற்றால் நோவுபடுங்கொலென்று எமது மனம் கலங்கும். அந்தக் கலக்கம் தீரும்படி மாலைப்பொழுதில் முடியவிழ்ந்து தொங்கும் குழல்களாலும், வேர்வையிற்படிந்த புழுதியாலும் அழகியதான உன் திருமுகத்தைக்காட்டக்கண்ட எங்கள் மனதில் காமநோயுண்டாம். அத்தன்மை காமநோயால் ஆற்றகில்லாது கணவன், கான்முளை, உடற்பிறப்பு, சுற்றத்தார் முதலிய யாவரையுந் துறந்து உன்கிதவலையிற் சிக்கிக்கொண்டு உன் திருவடிக்கீழ்விழுந்து காத்திருக்கு மெங்களை நள்ளிரவில் நடுக்காட்டில் திகைக்கவிட்டுச்சென்றனை. இப்படிக்கொடிதான கிருத்தியம் எந்தகாலத்திலும் எவ்விடத்திலும் எவனாலும் செய்யப்படுமோ! இங்ஙனம்



நீ மோசஞ்செய்தபிறகும் நீ தனிமையிற் பேசியபேச்சுகளையும் உன் முகத்தழகையும், ஸ்ரீதேவியுறையும் விசாலமான திருமார்பையும் உன் நோக்கினிமையையும் நெஞ்சினுட்கொண்டு உன்மேல் மோகத்தை மறக்ககில்லாது திரும்பவும் உனது திருவடியடிமை பெறவேண்டுமென்றே விரும்பி இனியுமுன் திருவருள் வரவுக்கே யெதிர்பார்த்திருக்கின்றோம்.

---

## 32-ம் அத்தியாயம்.

---

## கண்ணனைக்கோபியர் கூடல்.

---

இவ்வாறு பலவகையாக ஒவ்வொருத்தியும் பிதற்றியுங் கண்ணனைக்காணப்பெறாமல் காட்டில் நின்று திகைத்து கூக்குரலிட்டுப் புலம்பலுற்றனர்.

அந்த வேளையில் ஸ்ரீவாசுதேவன் நகை முகத்தனாகி, பீதாம்பரமுந் திருத்துழாய் மாலையும் விளங்க காமனுக்குங் காமனாகுந் தனது வடிவழகை அந்த கோபிகைகட்குக் காட்டியருளினான். இப்படி உயிர் நீங்கியவுடலுக்குத் திரும்பவுயிர் வந்தாப்போல் இனியேது கண்ணனை நாம் காணப்போகிறோமென்று கலங்கியிருந்த அவர்கள்முன் வந்து தோன்றிய அவனைக்கண்டு அனைவரும் ஒருங்கே முகமலர்ந்து எழுந்துநின்றார்கள். அவர்களிலொருத்தி தன்னிருகைகளையுங் குவித்துக்கண்ணன் கையைப்பிடித்தனள். ஒருத்தி அவனது திருக்கையை தன் தோள்மேல் சுமத்தினாள். ஒருத்தியிருகையாலும் தாம்பூலம் திருத்தி சமர்ப்பித்தாள். ஒருத்தி அவன் திருவடியைத் தன் முலைத்தடத்தில் அமர்த்தினாள். ஒருத்தி உதட்டைக் கடித்துக்கொண்டும் புருவத்தை நெறித்துக்கொண்டும் அவனை உற்றுற்று நோக்கினாள். ஒருத்தி அவன் திருமுகத்தை நோக்கிக் கண்களை வேறொரு விஷயத்திலுஞ் செலுத்தாமல் மனதுக்குள்ளே அம்முகவழகையிடைவிடாது தியானித்துக்கொண்டு பக்தியோக நிஷ்டர்களைப்போலிருந்தாள். ஒருத்தி அவன் திருமேனியை அந்தக்

ரணத்திலே ஆலிங்கனஞ்செய்துகொண்டு ஆனந்தபரவசையாயிருந்தாள். இவ்வாறே அவர்களெல்லோரும் கண்ணன் காக்ஷியால் விரகதாபந்தீர்ந்து பரமாத்ம தரிசனத்தால் தாபத்திரியந் தீர்ந்தயோகிகள்போல் சொல்லரிய சுகம்பெற்றனர். இப்படித் தாபம் நீங்கிய அந்தகோபிகைகளுடன்கூடிய பகவான் அவர்களைக்கூட்டிக்கொண்டு யமுனையாற்றின் மணலில் குளிர்ந்து மணங்கொண்டு மெல்லென வீசுங்காற்றை அநுபவிக்க நினைத்த உடனே அவர்கள் தங்கள் மேல்வஸ்திரங்களால் ஆஸனம் ஸமர்ப்பித்தார்கள். மஹாயோகிகள் ஹிருதய கமலத்திலிருக்கும் ஸர்வேசுவரனாகிய கண்ணன் அந்தபெண்களிட்ட மேலாடையாசனத்திலுட்கார்ந்து மகாலக்ஷ்மி வசிக்கும் திருவடிவழகைக் காட்டிக்கொண்டிருக்கும்போது கோபிகைகள் அந்த பகவானை தங்களுடைய சிருங்காரசெய்கையால் உபசரித்துக்கொண்டும், அவன் திருவடிகளை மடிமேல் வைத்து பிடித்துக்கொண்டும் கைகளைத் தடவிக்கொண்டு சிற்றூடல் கொண்டவர்களாய் சில சந்தேக வார்த்தைகளை கேட்டார்கள். மஹாப்பிரபு, உலகத்தில் ஒருவன் தன்னைச் சாருமவர்மேல் சார்புள்ளவனாகிறான். மற்றொருவன் தன்னைச் சாராதவனைச் சாருகிறான் ஒருவன் சார்ந்தோரையும் சாராதோரையும் சார்ந்திலன் இவற்றிலெது நன்று, எங்கட்குரைப்பாயாக என்று வினவ கண்ணன் அவர்கள் கருதி வினவியதற்கு விடையாக சகிகளே, சார்வாரைச் சார்தலென்பது கடன்போலாகிறது. அதுயிருவருக்கும் தனித்தனி தேவையான காரியம். ஒருவராலொருவருக்காகிறதாகமுடியும். அதில் சினேகத்தின் தன்மையிலதாம். தன்னைச்சாராதவர்களைச் சாருபவரோ தாய் தந்தையரைப்போல தயாகுணமுள்ளவர். இதில் பழிப்பற்ற தருமமும் நேசமுமுளதாகும். சார்ந்தாரையே சாராதவர் சாராதவரை சார்வதுளதா இல்லை இல்லை. அத்தன்மையரை தனக்குளவற்றினால் தணிவோரென்றும் பிறராற்குறை வேண்டாதாரென்றும், நன்றிகெட்டவரென்றும், குருதுரோகிகளென்றும் சொல்லலாம். உலகத்தில் பாடுபட்டுப் பொருள் தேடிய ஒருவன் அந்தப்பொருளைப் பறிகொடுத்தால், அவன் மற்றொன்றையும் நினையாமல் அப்பொருளையே நினைத்துக்கொ



ண்டிருப்பானன்றோ? அதுபோல் உலகத்திலுள்ளயாவும் என்னையே விரும்புமுங்கட்கு [illegible]ந்து நினைவுநீங்காமலிருக்க வேண்டி நான் உங்கள் கண்ணுக்குப் புலப்படாமலிருந்தேன்.

இப்படி நான் ஒளித்திருந்தது உங்களுக்கு நலத்துக்கு ஹேதுவென்று அறியுங்கள். அன்றியும் வீடு பொருள் சுற்றத்தார் பிள்ளை முதலியவையெல்லாம் வேண்டாமல் என்னைநேசித்துவந்த உங்கட்கு யானெத்தனை காலம் எவ்வளவு கைம்மாறு செய்தும் கடன் தீர்த்தவனாக மாட்டேன். ஆதலால் உங்களுடைய சுசீலகுணத்தால் நான் மேற்சொல்லியபடி உங்கள் விஷயத்தில் யான் செய்த குற்றம் குணமாகவே முடிகிறதென்று கொண்டு சினத்தைத்தணித்துக்கொள்வீர்களாக.

## 33-ம் அத்தியாயம்.

### ராஸக்கிரீடை.

இப்படிக்கண்ணபிரான் சொல்லக்கேட்ட கோபிகைகள் விரகதாபம் நீங்கி யின்பம்பெற்றனர். அவ்வாறு தன்னைநேசித்து அகலகில்லாதவராகிய கோபிகைகளுடன்கூடி ஸ்ரீகோபாலமூர்த்தி ராஸக்கிரீடை செய்யத்தொடங்கினார். இரண்டு கோபிகைகட்கிடையில் ஒவ்வொருகண்ணனாகப் பலவடிவங்கள் கொண்ட பரமபுருஷன் அவர்கள் கைகளைத் தன்கைகளாற் கோத்துக்கொண்டும், தோள்மேல் கைவைத்துக்கொண்டும், விசித்திரமான பாட்டுகள் பாடிக்கொண்டும், நாட்டியமாடிக்கொண்டும், ஒருவருக்கொருவர் பாட்டையும் ஆட்டத்தையும் வியந்து புகழ்ந்துகொண்டும், கன்னத்தோடு கன்னஞ்சேர்த்துத் தாம்பூலதாரணஞ்செய்துகொண்டும், இன்னும் பலவிதமான லீலாவிநோதங்கள் செய்தார்கள். மாணிக்கங்களுக்கும் தங்கத்துக்குமிடையிடையில் மரகதம் பதித்திருப்பதுபோல பல கோபிகைகளிடையில் பல கண்ணன் வடிவு தோன்றும் காக்ஷியைக்காண வி

ரும்பி தேவர் கந்தருவர் தேவஸ்த்ரீகைகள் முதலானவர்கள் ஆகாயத்தில் கூட்டங்கூட்டமாக வந்து குரவைகோத்த குழகனது மாயக்கூத்துகளைக்கண்டு கண்படைத்த பயன்பெற்றோமென்றுமகிழ்ந்து புகழ்ந்து பாடியும் ஆடியும் பூமாரிபொழிந்தும் வாத்தியங்களை முழக்கியும் விழவு கொண்டாடினார்கள். இவ்வாறு ஸ்ரீபகவான் தான் விருப்பு வெறுப்பற்றவனாயிருந்தும் சிறுபிள்ளை தன்னிழலோடு விளையாடுவதுபோல பலவடிவங்கொண்டு அத்தனை கோபிகைகளுடன் குரவை கோத்து தனது பற்பல சிருங்கார சேஷ்டைகளால் அவர்களைக் களிப்பித்து அவர்களது சேஷ்டைகள் தனக்குப்பரமபோக்யமாகக் கொள்பவன்போல் காட்டிக்கொண்டு அக்கோபிகைகளை மெய்மறந்துபோகும்படி செய்தான். இந்த அற்புதத்தைக்கண்ட விண்மாதர்களும் ஆச்சரியத்துக்கும் காமத்துக்கும் வசப்பட்டுநின்றனர். இப்படி ராஸக்கிரீடையில் சிரமங்கொண்ட ஒவ்வொருகோபிகை முகத்தையும் ஒவ்வொருவடிவமான கண்ணன் கிருபையுடன் பரிந்து வியர்வைதுடைத்து தனது சரித்திரங்களைப்பாடிக்கொண்டு வருமவர்களுடன் கூடிப்போய் யமுனையாற்றில் நீராடப்புக்கான்.

இவ்வாறு யமுனையிலிழிந்து, மதகஜமானது அங்கனைய பிடித்துப் பிடிகளுந்தானும் நீரில் விளையாடுவது போல கோபிகைகள் நகைத்துக்கொண்டு நாலுபக்கமும் நின்று தண்ணீர் இறைக்க அதனால் மகிழ்ந்து வரம்பற்ற விளையாட்டுகளெல்லாஞ் செய்து கரையேறி யமுனையாற்று ஓட்டிலுள்ள பொழில்களில் மதயானை போல சஞ்சரித்தான். இப்படியே அந்தநிலவுள்ள இரவுகளெல்லாம் கோபிகைகளைக் கூடி பகவான் கிரீடித்தான்.

இவ்வாறு சுகப்பிரமரிஷி சொன்ன கதையைக் கேட்டு அரசன் பிரச்னம் பண்ணுகிறான். தருமவரம்புகள் உண்டாக்கி உபதேசித்துக் காக்கும் பரம புருஷன் தரும மார்க்கத்துக்கு விரோதிகளான துஷ்டரை யடக்கி தருமத்தை நிலை நிறுத்துவதற்காக வன்றோ கண்ணனாக அவதரித்தான். அந்த கண்ணன் கொடிய தீவினையாகிய, பரஸ்திரீ ஸங்கமத்தை என்ன கருதி செய்



தானோ தெரிகிலேன். இந்த சந்தேகத்தை தீர்த்தருள வேண்டுமென்ன ரிஷியும் சொல்லலுற்றார். சாஸ்திரத்துக்குட்பட்டு நடக்க வேண்டிய உலகத்தாருக்கு தருமம் தவறுதலால் குற்றமுளதேயன்றி உலகத்துக்கு மேற்பட்ட பிரபுவுக்கு அது குற்றமாகாது. அக்கினி யெல்லாவற்றையும் எரிக்கினும் அதற்கு சுத்தி குறையுண்டோ. வல்லவன் செய்யுந் தொழிலை வலிவிலானை செய்யில் அழிவான். சிவன்விஷமுண்டானென்று பிறனவ்வாறுண்பானேல் அழியாதிருப்பானோ! அத்தகைய வலிய பெரியோர் சொல் தவறக்கூடாத சத்திய வாக்கியம். அதைக் கொண்டே யாவரும் நடக்கத்தகும். அப்படியேயவர்கள் நடப்பதுவும் உண்டு. அதற்கு மாறாக நடப்பதுமுண்டு. அவ்விரண்டினும் அவர்கட்கு புண்ணியமுமில்லை பாபமுமில்லை. இப்படியிருக்க சகலாந்தராத்மாவாய் சர்வேசுரனான ஸ்ரீஹரிக்கு தருமமும் தருமபிழையுமேது. அவனது திருவடியை யடுத்த யோகீசுரர்களுக்கே கருமத்தளை கழியுமென்றால் அவன் விஷயத்தில் சந்தேகிக்கவுங் காரணமுண்டாகுமோ. கோபிகைகளும் அவர்கள் பதிகளும் மற்றுள்ள பிராணிகளும் ஸர்வாந்தர்யாமியான அவனது சரீரமேயன்றோ. அன்னவன் 'பிறப்பில் பலபிறவிப் பெருமானை' என்கிறபடி உலகத்தாரை அனுக்கிரகிக்கவே லீலாவதாரஞ் செய்து பற்பல விளையாட்டாடினான். அந்த சேஷ்டைகளை கேட்பவர் மகா பக்தராவார்கள். இப்படி கோபிகைகள் கண்ணன் பக்கலிலிருந்தும் அவ்வவர் பதிகள் முதலானவர் கண்ணனுடைய திவ்விய ஸங்கற்ப மகிமையினால் அவர்கள் தங்கள் பக்கலிலிருந்ததாக நினைத்தாரேயன்றி அவர்கள் மேல் கோபங் கொண்டிலர். விடியற்காலமானவுடன் அந்தக் கோபிகைகள் கண்ணனை விட்டுப் போக மனமிசையாதாராயினும் கண்ணன் கட்டளைப்படி நடப்பதனால் நலமும் மீறி நடப்பதனால் கேடுமுளதாமென்று அடங்கித் தத்தமில்லஞ் சேர்ந்தனர். பகவான் இவ்வாறு கோபிகைகளுடன் குரவை கோத்த கதையை அன்பாய் கேட்கப் பெற்றவனும் சொல்லப் பெற்றவனும் நிலையான விஷ்ணுபக்தி பெற்று மனக்கிலேச மெல்லாம் நீங்கி இன்பமுறுவான்.

## 34-ம் அத்தியாயம்.

## பாம்புருக்கொண்ட வித்தியாதரன் சரிதையும் சங்கசூடவதமும்.

ஒரு நாள் நந்தன் சேரியிலுள்ள இடையர்கள் தெய்வம் தொழப்போக விரும்பி விடைகள் பூட்டிய வண்டிகளிலேறி அம்பிகை வனமென்னுமிடஞ்சேர்ந்து அங்குள்ள சரஸ்வதி நதியில் நீராடி உமாதேவியாரையும் சிவபெருமானையும் விசேஷமான பூஜாதிரவியங்களாற் பூஜித்து அந்த பூஜைக்கு அங்கமாகப் பிராமணர்களுக்கு மதுரமான அன்னம், வஸ்திரம், பசு, பொன் முதலியவை தேவார்ப்பணமாக தானஞ் செய்து தாங்கள் ஜலாகாரம் கொண்டு விரதப் பிழையில்லாமல் அன்றிரவு அந்நதிக்கரையில்தானே தங்கியிருந்தனர். அப்போது ஒரு பெரும் பாம்பு அதிக பசிகொண்டதாய் அங்கே வந்து படுத்திருந்த நந்தகோபரை விழுங்கிற்று. அப்போது நந்தகோபர் கண்ணா, கண்ணா உன்னையே அரணாக நம்பியிருக்குமென்னை இந்தப் பெரும்பாம்பு விழுங்குகிறது சீக்கிரம் நீ காக்க வேண்டும் என்று கதறக் கேட்ட இடையர்கள் சடிதியிலெழுந்து நந்தரிருக்கும் நிலையைக்கண்டு வருந்தி அந்த மகாசர்ப்பத்தைக் குறைக்கொள்ளிக் கட்டைகளால் அடிக்க அந்த அடிகளைப் பட்டுக்கொண்டும் அது நந்தனை விடாமல் விழுங்கிக் கொண்டிருந்தது. அப்போது ஸ்ரீகோபாலமூர்த்தி அவ்விட மெழுந்தருளி அப்பாம்பைத் தமது திருவடியால் உதைத்தார். அத்திருவடி தீண்டப் பட்டவளவில் அந்த சர்ப்பம் தன் பாபமெல்லாம் நீங்கி அந்த துஷ்டரூபத்தை விட்டு அழகிய வடிவங் கொண்டு வந்து பகவானை தொழுதேத்தி நிற்கக் கண்ணன், வாராய் சுந்தர புருஷனே, நீ யார் உனக்கேனிந்த இழிவான ரூபம் வந்திருந்ததென்று கேட்டருள, அந்த புருஷன் சொல்லுகிறான் சுவாமி, ஸர்வலோகேச்வரா, அடியேன் சுதரிசனென்னும் பெயருள்ள ஒரு கந்தருவன் அழகிலெனக்கு நிகரில்லையென வியந்து மதத்தினால் அங்கிரசுக்கள்



என்கிற முனிவர்களைப் பார்த்து அழகிலாரென்று அவமதித்தேன். அம்மகான்களை உல்லங்கனம் செய்த கொடுவினையால் இந்த தீயவடிவங் கிடைத்ததாயினும் பிறவித் துயருக்கஞ்சும் பெருந்தகையோர்க் கபயமளிக்கு முனது திருவடி தீண்டப் பெறும்வண்ணம் எனக்கு கிருபையாகவளித்த தாகின்றது. இதனால் என்னுடைய சகல பாபங்களும் விலகப்பெற்று நல்லின்பமுற்றேன். சங்கற்ப சக்தியால் சர்வ நிர்வாகஞ் செய்யும் பரமாத்மாவான உனது திருவடியருகில் வணங்கி தொழுது நின்று விடை பெற்று யான் முன்னிருந்த கந்தருவ லோகத்துக்குச் செல்ல விரும்புகிறேன். உனது திருநாமத்தை விருப்புமின்றியாவது வாயாலுரைத்தலினும் அதைக் கேட்டவனும் தொல்வினை யனைத்தினின்றும் விடுபடுவானன்றோ! அப்படி சகல பாவன மூர்த்தியான உனது திருவடி ஸ்பரிசங் கிடைத்த நான் பரம புருஷார்த்தம் பெற்றேன் என்று விண்ணப்பஞ் செய்து விடை பெற்றுச் சென்றான். இப்படி நந்தர் ஆபத்து நீங்கியதும் கந்தருவன் தன்னுருவம் பெற்றதுங்கண்ட சேரியரெல்லாங் கண்ணன் பெருமையைப் புகழ்ந்து பாடிக்கொண்டு தாங்கள் நாடிவந்த விரதத்தை முடித்துக்கொண்டுகோகுலஞ் சேர்ந்தார்கள். மற்றொரு நாள் சந்திரனும் நக்ஷத்திரங்களும் பிரகாசிக்கவும் மலர்மணங் கொண்டு காற்று வீசவும் இனிதாயிருக்குமிரவில் கண்ணனும் அண்ணனும் களித்துகீதம்பாடி கோபிகைகளுடன் வனத்தில் திரிந்து கொண்டிருக்குங் காலத்தில் சங்கசூடனென்னும் பெயருள்ளவனும் குபேரனுடைய பரிஜனமுமான ஒரு யக்ஷன் அவண் வந்து அந்த கோபிகைகளை எல்லாம் மடக்கிப் பசுமந்தை போலோட்டிக்கொண்டு சென்றான். அந்த கோபிகைகள் கதறிப் புலம்பக்கேட்ட ராமனும் கண்ணனும் பின் தொடர்ந்து வர அதைக்கண்ட அவன் அந்த ஸ்திரீகளை விட்டு விட்டு ஓடினான். அப்போது பலபத்திரர் அவர்களைக் காத்துக்கொண்டு நிற்கக் கண்ணன் சங்கசூடனை விடாமல் துரத்திக் கொண்டு போய் அவனைப்பிடித்து அவன் தலையைக் கைக்குத்தினால் மோதி அத்தலையிலிருந்த மணியைப் பறித்துக்கொண்டு வந்து பலபத்திரனுக்குக் கொடுத்தார்.

## 35-ம் அத்தியாயம்.

## கோபியர் பகலில் கண்ணன் பிரிவாற்றாமை.

பகலில் கண்ணன் காலிமேய்க்கச் செல்லுதலால் அவன் பின் மனஞ் செலுத்திய கோபிகைகள் தாங்கரிய பிரிவால் வருந்தி அவன் திவ்விய லீலைகளைப் பாடிக்கொண்டு நீண்ட போக்கரிதான அப்பகல் பொழுதைக் கவலைவருத்தத்துடனே போக்கினர். நந்தன் மகனும் நமக்கினியனுமாகிய நங்கண்ணனானவன் இடது தோளில் தாடை சாய்த்துப் புருவநெறிக்குந் திருப்பவளத்தில் வேய்ங்குழலைப் பொருத்தி அதன் துளைகளை ஸப்தஸ்வரங்களுக்கேற்ற அழகிய திருவிரல்களால் திறக்கும் மூடியும் இசைக்கின்றவிடத்தில் விண்ணில் விமானங்களில் உலவும் அரம்பை முதலியவர்கள் இவ்விசையைக் கேட்டு வெட்கி வேள் அம்புகளால் உள்ளம் புண்பட்டு உடை நெகிழ்வதும் அறிய இல்லாது மதிமயங்கி நிற்பார். திருமுகத்திற் சிறு நகையும் திருமார்பில் திருமகளுமிலங்கக் கண்ணன் குழலூதுவதைப் பார்க்கப் பெற்றால் அதினும் பெரிதான இன்பமில்லை. ஆதலால் அந்தக் காட்சியே சகலமான தாபங்களையுந் தீர்க்க வல்லது. காலிகளும், கானகத்திலுள்ள மான்களும் கண்ணன் இசைகேட்டு உடல் மறந்து மேய்ந்த புற்களை மெல்லாமலும் செவியாடாமலும் சித்திரத்திலெழுதிய ஜந்துக்கள் போலசைவற்று நிற்கின்றன. மயிற்பீலி, பூங்கொத்து, காவிக்கல், தளிர் ஆகிய இவற்றால் அலங்கார வேடம் பூண்டு ராமனுந் தானுந் தோழருடன் மாடுகளை விளித்து விளையாடுமிடத்து அவ்வழகைக் கண்ட நதிகளும், நம்மைப் போல் பிரிந்து செல்லமாட்டாமல் மெல்லெனச் செல்லுகின்றன. சர்வேஸ்வரனான பகவான் தனது திவ்விய சௌசீல்ய குணத்தால் இடையருடன் கலந்து காலி மேய்க்கப்புக்கு அந்தப் பசுக்களின் பெயர்களை குழலாலிசைத்துக் கூவுமிடத்து அவ்விசையின் பெருமையால் வனத்திலுள்ள மரம், செடி, கொடி முதலிய தளிர்க்கவும், பூக்கவும், காய்க்கவும், பழுக்கவும் காலவேற்றுமை வேண்டாமல் எம்பெருமானுக்கு உகப்பானவை யெல்



லாந் தம்மிடத்தில் தரித்துக்கொண்டு கைங்கர்ய பரர்களாகி நிற்கின்றன. தடங்களிலுள்ள ஹம்ஸம் ஸாரஸம் முதலிய நீர்ப்பறவைகளும் தம்முள்ளத்தையும் செவிகளையும் இசையின் வசமாக்கி வாயை மடக்கி மஹாயோகிகள் தியானஞ் செய்வதுபோல அசைவற்று நிற்கின்றன. மேகங்கள் திருமேனிக்கு வாட்டமில்லா வண்ணம் நிழலமைத்து சைத்யோபசாரமாகக் குளிர்ந்த மலர்கள் போன்ற துளிகளால் பரமபாகவதர்கள் போல நின்று ஆராதிக்கின்றன. இவ்விதமாக ஸகல சராசரங்களுக்கும் இனிதான லீலாவேஷ்ட சேஷ்டைகள் கொண்ட கண்ணன் மாலைப்பொழுதில் பசுக்களை ஓட்டிக்கொண்டு புழுதி படிந்த திருமேனியைக் காண்போமாகில் இந்த விரகதாபமெல்லாம் புஞ்சாய்ப்பறந்தோட பேரின்ப வெள்ளத்தமுதத்திலாழ்வோம் என்றிப்படி ஒருத்திக்கொருத்தி பேசிக்கொண்டு பகல் முழுவதும் போக்கிக் கண்ணன் வரவை நோக்கியிருந்தனர்.

## 36-ம் அத்தியாயம்.

## அரிஷ்டாசுரவதம் முதலியன.

இங்ஙனம் ஸ்ரீபகவான் வனத்தில் பகல் வேளையில் காலி மேய்த்து மாலையில் மீண்டு கோகுலத்துக் கெழுந்தருளிய ஒரு நாள் விருஷபவடிவங் கொண்ட அரிஷ்டன் என்னும் அசுரன் பூமியதிரும்படிக் கடுமையான நடை நடந்துகொண்டு கருகலக்க வல்ல கொடிய முக்காரம் போட்டு கொம்புநுனியால் மேடுகளை இடித்து ஆகாய மளாவிய தேகமும் முகில் தங்கிய மலை போன்ற கொண்டையும் ஆகாயத்தில் நெறித்து நிற்கின்ற வாலுமான உருவத்தால் யாவரையும் வெருட்டி ஓட்டிக்கொண்டு இடைச்சேரியில் வந்து சேர்ந்தான். அந்த மஹா விருஷபரூபத்தைக் கண்டவுடனே சேரியிலுள்ள ஜனங்களும், பசுக்களும் அதிக பயங்கொண்டு கண்டபடி ஓடுகிறவர்களும் கண்ணா, கண்ணா என்பார்களுமாய்க் கலங்கினபோது கருணைக்கடலாகிய கண்ணன் அவர்களை ரட்சிக்கக் கருதி அபயவாக்களித்து விருஷபாசுரனைப்பார்த்

ஆ துராத்மா, பிள்ளைகளையும், பசுக்களையும் விணே வெருட்டிப் பயனென்ன, உன்னைப்போன்ற துஷ்டர்களின் கொழுப்பை அடக்குந் தன்மையுள்ள பரமாத்மா நிற்கின்றேன் பார் இங்கே என்று கூவித் தோள்தட்டி தோழன் தோள்மேல் தனது நீண்டகையை வைத்துக்கொண்டு நிற்க அவ்வசுரனும் கண்டு தன் குளம்புகளால் நிலம்பொடிபட நடந்து முகில்கள் சிதறவாலை வீசிக்கண்ணைப் பாயும்படி சிவக்கவிழித்து, இடிபோல முழக்கிக்கொண்டு எதிரே ஓடி வந்தான். அப்போது கண்ணபிரான் அவனது கொம்புகளைப்பற்றிப் பதினெட்டடி தூரத்தில்போய் விழும்படி தெட்டித்தள்ள அவனும் உடம்பெல்லாம் வியர்க்க வருந்தியும், அதிக சினத்தால் தைரியங்கொண்டு பெருமூச்செறிந்து முக்காரம்போட்டுக்கொண்டு பாய்ந்தான். ஸ்ரீபகவான் அப்படிப்பாய்ந்த அசுரனைக் கொம்புகளில் பிடித்து திருவடியால் பாய்ந்து கீழே தள்ளி ஈரத்துணிபோல் கொம்புகளை முறுக்கித் திருப்பியிழுத்துப்பிடுங்கி அக்கொம்பினாலே மோத அவன் நிலத்தில் விழுந்து உதிரமும் மலமூத்திரங்களும் வெளிப்பட கால்களை உதைத்துக்கொண்டு கண்கள் சுழன்று மஹா அவஸ்தையுடன் உயிரை விட்டான். தேவர்கள் கண்ணன்மேல் பூமாரி பொழிந்து வாழ்த்தினர். இப்படி விருஷபாசுரவதஞ்செய்து பகவான் கோகுலமெல்லாங் களிக்கச்செய்தார்.

## கம்ஸன் அக்ரூரருக்குக் கட்டளையிடுதல்.

அரிஷ்டாசுரவதமான பின்பு கம்ஸனுக்கு நாரதமுனிவர் புலப்பட்டு தேவகியின் சிசுவென்று உன்னால் நினைக்கப்பட்டிருந்த பெண்குழந்தை யசோதையின் பெண், நந்தகோகுலத்தில் யசோதை பிள்ளை என வளருகின்ற கண்ணன் தேவகியின் பிள்ளை. வசுதேவன் தேவகியின் பிள்ளையான கண்ணனையும் ரோஹிணியின் பிள்ளையாகிய பலராமனையும் உனக்கு பயந்து கோகுலத்தில் ஒளித்துவைத்து வளர்க்கிறான். அந்தப்பிள்ளைகளாலே பூதனை, சகடன் முதலிய உனது ஜனங்கள் பலவும் மடிந்தனர், என்றுரைக்கக்கேட்ட கம்ஸன் வசுதேவன்மேல் கடுஞ்சினங்கொண்டு



அவனைக்கொல்லுவேனென்று கூரிய வாளுருவினான். அப்போது நாரதர் இந்த வசுதேவன் வலியில்லாப்பேதை; உன்னை என்ன செய்ய வல்லவன்? இவனைக்கொல்லாதே. அந்த பிள்ளைகள் தான் உனக்குக் கூற்று என விளம்பினர். இதைக்கேட்டு கம்சன் வசுதேவனை முடிக்கக் கருதாமல் நாரத பகவான் திரும்பிச் சென்றபின் கேசி என்னும் அசுரனை விளித்து நந்தன்சேரிக்குப் போய் ராமன், கிருஷ்ணன் என்கிற சிறுவர்களைக்கொன்றுவிட்டு வருவாயாக என்று அனுப்பினான். பின்னும் முஷ்டிகன், சாணூரன் முதலிய மல்லர்களையும் மந்திரிகளையும் வரவழைத்து வீரர்களே கேளுங்கள் வசுதேவன் பிள்ளைகளிருவர் நந்தகோபன் சேரியிலொளிந்திருக்கிறார்களாம். அவர்கள் என்னுயிருக்குக் கூற்றுவராம். அவர்கள் இங்கே வந்தவுடன் நீங்களிருவரும் அவர்களை மல்லயுத்தத்தில் கொல்லவேண்டும். மல்லர் போராடுமிடத்தைச் சுற்றிலும் கட்டில்கள் அமைக்கப்பட்டிருந்தால் அதின்மேலுட்கார்ந்து ஜனங்கள் விளையாட்டைப் பார்க்க அனுகூலமாகும். கன்னங்களில் மதநீர் பெருகிக்கொண்டிருக்கும் குவலயாபீடம் என்கிற யானையைத் துதிக்கையில் இருப்புலக்கையுடன் மற்போர்க்களத்து வாயிலில் நிற்கும்படி செய்தால் அந்தப்பயல்கள் அங்குற்றவளவில் அந்த யானையால் மடிக்கப்படுவார்கள் எனக் கேட்ட மகாமாத்ரன் மனங்கலங்கி தங்கள் உடன்பிறந்தாள் பிள்ளைகளான அச்சிறுவர்களைக்கொல்ல நான் எப்படி உடன்படலாம் என்று சொல்லியதைக் கேட்டு துர்மதியாகிய கம்ஸன் அங்குள்ள யாவருக்கும் தெரியும்படி சொல்லத்தொடங்கினான். நானிப்பால் சொல்லப்போகிற விஷயத்தை ஊற்றத்துடன் நீங்கள் அனைவரும் செவியுறவேண்டும். நான் தொன்று தொட்டு உறவினர்களாகிய இவர்கள் மேல் பகை ஏன் செலுத்துகிறேன். அந்தப்பகைக்குக் காரணமில்லாமல் போகுமா. அது இன்னதென்று நான் விளம்புகிறேன் கேளுங்கள். எனது தாயார் பருவம் நிறைந்த காலத்தில் ருதுஸ்நாநம் செய்த ஒரு நாள் அந்தப்புரத்தின் அருகில் இளந்தென்றலசையவும் நிலநீர்ப்பூக்களின் மகரந்தம் பருகிக்களித்த வண்டுகள் பாடவும், குயில்கள் கூவவும், மயில்கள் ஆடவும்; குளிர்ந்தநிழலுள்ள விருக்ஷங்கள் வரிசையா

ய்நிற்கவும் இளவேனிற் காலமிசைந்து சகலேந்திரியங்களுக்கும் களிப்பைக்கொடுக்கும் உத்தியான வனத்துக்குள் புகுந்து உலாவிக்கொண்டிருந்து அங்குள்ள சிறப்புகளால் காமத்துக்குள்ளாகி அப்போதே தனது பர்த்தாவுடன் புணரவேண்டுமென்கிற வேட்கையுண்டாகி இருந்தனள். அப்போது திரவினன் என்கிற பெயருள்ளவனும் எல்லாருடைய மனக்கருத்தை முணரத்தக்கவனுமான ஒரு கந்தருவன் அழகில் மிகுந்த என் மாதாவைக் கண்டு அவளது கருத்து அச்சமயமிருக்கும் திறமுமறிந்து தனது மாயையால் உக்கிரஸேனன் உருவங்கொண்டு, புன்னகையோடு பார்த்துக்கிட்ட வந்து இனியன உரைக்க அதைக்கேட்டு பதிவிரதையாகிய அன்னாள் அவனை உக்கிரஸேனனென்றே எண்ணி தானினைத்தபடியே முயற்சியின்றிக் காணப்பெறலாயிற்றென்று களித்து அவனுடன்கூடி போகந்துய்க்கும்போது சில குறிப்புகளால் வேற்றுவனென்றும் அவன் மாயையால் தன்னை மயக்கினனென்றும் உணர்ந்து தனது கற்புக்குக் கேடுவந்ததே இனி என் செய்வதென்று மனம் பதறி நீயாரடாபாவி என்னை மோசத்துக்குள்ளாக்கி இவ்வகைத்தான தீயவினை செய்தனை என்று கேட்க, கந்தருவனும் இனியசொற்களால் சொல்லியதாவது; நாம் கந்தருவகுலத்தவராகும் உன்னைப்போன்ற மானிடப்பெண்களுக்கு எம்மைப்போன்ற தேவஜாதி ஆடவருடன் போகம் நேரிடுவது ஏதோ புண்ணிய வசத்தால் தான்; உனக்கிந்த பாக்கியம் நேரிட்டிருக்க வீணே ஏன் வருந்துகிறாய் என்றான். அதற்கு அடா துஷ்டா, பஞ்சபூதங்கள் 5, சூரிய சந்திரர்கள் 2; இரவு பகல் 2; காலை மாலைச்சந்திகள் 2; திக்கு; காலம்; தருமம்; ஆகப்பதினான்கு சாக்ஷிகள் கடவுளால் அமைக்கப்பட்டிருக்க அந்தசாக்ஷிகளை மீறி மதயானை மடுவைக்கலக்குவதுபோல் மாயவேடங்கொண்டு என் கற்பைக்கெடுத்தது மன்றி எனக்குச்சமாதானமுஞ் சொல்லவருகிறாய் நாணங்கெட்டவனே, தேவஜாதி என்று வியந்து கொள்ளுமுனக்கு இந்த செய்கை எங்ஙனமடுக்கும். தேவஜாதியில் உன்னிலுங் கடையோன் இலையான் எனக்கேட்டு திரவினன் அந்தப் பதிவிரதை சாபங்கொடுப்பாளோ என்றஞ்சி நல்லாய், மானிடப்பெண்ணிடத்தில் தேவபுருஷர் புணர்வது



அநுலோமம் (குற்ற மில்லாதது). தேவப்பெண்ணிடத்தில், மனிதன் புணர்வது பிரதிலோமம் (குற்றமானது) என்பார்கள். ஆதலால் நான் அதிக குற்றஞ்செய்திலேன். என் புணர்ச்சி வீணாகாது. உனக்குச் சகல செல்வங்களும், புத்திநுட்பமும், மனவெழுச்சி முதலிய குணங்களுமுள்ள நல்ல புத்திரன் பிறப்பான் வருத்தமின்றிச் செல்லக்கடவை என்று விடை கொடுக்க, அவளும் கற்பழிந்ததினால் மனந்தபித்து கடுங்கோபத்துடன் வரம்பற்றவனாய், நன்னடையைக் கெடுப்பவனாய், மதங்கொண்டு தெய்வத்துக்கஞ்சாது தீவினைபுரிபவனான உனக்குப் பிறக்கும் பிள்ளை நற்குணமில்லாதவனும், ஆராய்ச்சியின்றிக்கொடுமைசெய்பவனும் ஆகுக; அவன்பால் தேவர், முனிவர், பிராமணர் முதலிய சாதுக்கள் நேயம்வைக்காதவர்களாகுக எனவே, கந்தருவன் சாபத்துக்கு வெகுண்டு அப்படியாகில் உம்மவர்களுக்கே பகைவனாகப்பிள்ளை பிறப்பானாக என்று சொல்லிக்கொண்டே சீக்கிரத்தில் மறைந்துபோனான். அவன் சென்றபின் எனது தாயார் அந்தப்புரம் சேர்ந்தாள். அவ்விடத்தில் நடந்த விஷயம் மற்றொருவருக்குந் தெரியாது. அதுமுதல் கர்ப்பிணியாயிருந்து என்னைப்பெற்றாள். இந்த ரகசியம் நாரத பகவான் சொல்ல நான் அறிந்தேன். இந்த காரணத்தால் நான் அன்று முதலாக எனக்குப் பந்துக்களாயுள்ளவர்களை துஷ்டர்களென்று கருதி நான் பகைக்கிறேன். அவர்களும் என்னைப்பகைக்கிறார்கள். இதெல்லாம் உங்களுக்குத் தெரிந்ததுதானே. மதிகேடனாகிய உக்கிரஸேனனையும், தேவகனையும், மோசக்காரனான வசுதேவனையும் மற்றுமிவர்களைச் சேர்ந்தவர்களையும் கொல்வதினால் கந்தருவனுக்குப் பிறந்த எனக்குத் தோஷமில்லை. ஆதலால் அந்த வசுதேவன் மக்களைக்கொல்லுங்களென்று உங்களுக்குக் கட்டளையிடுகிறேன். இப்படி அந்தச் சிறுவர்களைக் குவலயாபீடயானை கொல்லும்போது எல்லா ஜனங்களும் பார்க்கும்படி சகலதேச ஜனங்களையும் மல்லயுத்த வேடிக்கை பார்க்க வரவழைக்கவேண்டும். அப்போது, உக்கிரஸேனன், தேவகன், வசுதேவன், நந்தகோபன் இன்னும் அந்தப்பயல்கள்மேல் பக்ஷம்வைத்துள்ள பலரும் அவர்கள் மடிந்ததைக்கண்டு மனம்பதறிக்கதறி அவர்களுக்குப்

பரலோககிருத்யங்களைச்செய்து அவர்கள் போனவிடத்துக்குத் தாங்களும் செல்லட்டும். மஹாமாத்ரா, நீ வழியில் குவலயாபீடத்தைக் கொணர்ந்து அதனால் என் விரோதிகளான பயல்களைக் கொல்விக்கவேண்டும். சதுர்த்தசியன்று முறைப்படி தநுர்யாகம் தொடங்கவேண்டும். வரமளிக்கும் ருத்திரதேவனுக்கு வேள்விக்குதவத்தக்க நல்லபசுக்களைக்கொன்று பலியிடவேண்டும்; என்று கட்டளையிட்டுப் பிறகு யதுகுல ஸ்ரேஷ்டரான அக்ரூரரை யழைத்துத் தன்கையால் அவர் கையைப்பிடித்துக் கொண்டு அக்ரூரரே, இந்த குலத்தில் எனக்கு நல்லது நாடுபவன் உம்மையன்றி ஒருவருமில்லை. நீரிப்போது எனக்கு ஒரு மித்திர காரியஞ்செய்யவேண்டியிருக்கிறது. அதை அன்புடன் கேட்பீராக. இந்திரனானவன் உபேந்திர மூர்த்தி சகாயத்தால் காரியங்களைமுடித்துப் பயன் பெறுவதுபோலும், உம்மால் யான் வெற்றி பெற விரும்புகிறேன். இப்போது நீர் செய்யவேண்டியதே தெனில் இந்த ரதத்தின்மேலேறிப்போய் நந்தகோபன் சேரி சேர்ந்து அங்கு வளர்கின்ற ராமன், கிருஷ்ணன் என்கிற பிள்ளைகளை இங்கே தநுர்யாகமும், மதுரா புரியின் சிறப்பும் பார்த்துப்போகும்படி நான் அழைப்பதாகச்சொல்லி நமது யாகத்துக்குரிய காணிக்கைகள் எடுத்துக்கொண்டு, நந்தன் முதலிய பெயர்களையும் வரும்படி கட்டளையிட்டிருக்கிறதாகத் தெரிவித்து அந்தச்சிறுவர்களை இந்த ரதத்தின்மேலே ஏற்றிக்கொண்டு இவ்விடஞ்சேர்க்கவேண்டும். அவ்விருவரும் வசுதேவன் மக்களாம். விஷ்ணுவைத் துணையாகப்பற்றிய இந்திராதி தேவர்கள் முயற்சியால் வசுதேவன் மக்களெனத் தெரியாமலிருக்கும்படி அங்கேயொளிந்து வளர்கிறார்களாம். அவர்கள் வளர்ந்து என்னைக்கொல்வார்களாம், எனக்குக் கூற்றமாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறார்களாம். ஆதலால் நீர் சீக்கிரத்திற்போய் அந்தப்பயல்களை இவ்விடஞ்சேர்த்தால் உடனே இந்தக் குவலயாபீடத்தாலவர்கள் மடிவது திண்ணம். தவறினும் சாணூரன்முதலிய மல்லர்களால் அவர்களை மடிவிப்பேன். இங்ஙனம் அவ்விருவரையும் ஒழித்த பிறகு எனக்கு விரோதிகளாய் அந்தப்பயல்கள்மேல் பக்ஷம் வைத்துள்ள விருஷ்ணி, போஜன் முதலியவர் குலத்திற்பிறந்த கூட்டங்களை மடித்து கிழவ



னாகியும் அரசாசை விரும்பும் துஷ்டனான என் தந்தை உக்ரஸேனனையும் அவன் ப்ராதா தேவகனையும் நல்லவன்போலிருந்து கொண்டு கொடுமை செய்யும் வசுதேவனையும் இன்னமிவ்விதத் தோரான பலரையும் எளிதில் வாளால்வீசி முடித்துவிட்டுப் பகை என்னுஞ் சொல்லற்றுப்போகச்செய்து இப்பூமி முழுதும் என் வசமாக்கிக்கொண்டு என் குருவான ஜராசந்தன், ப்ரியமித்திரரான த்விவிதன், சம்பராசுரன், நரகாசுரன், பாணாசுரன் முதலியவர்கள் சகாயங்கொண்டு சகல தேசங்களிலும் தேவர்கள் பக்ஷத்தைச் சார்ந்தவர் யாரேனுமிருந்தால் அவர்களையும் வேரறுத்துவிட்டுச் சுகமாயரசாளவேண்டுகிறேன் என்றுரைக்கக் கேட்ட அக்ரூரர் அரசனே, நீரிப்போது உமக்கு அபாயம் வராமலும் எதிரிகள் அழியும்படிக்கும் செய்யக்கருதியது நன்றாகவேயிருக்கிறது. ஆனால் மனிதன் விரும்பியபடி பலன்பெறுவதும், தவறிப்போவதும் உள்ளது. அது ஆண்டவன் சங்கற்பம் என்றறிபவனுக்குப் பயன் கைகூடிவரினும் அதிக மகிழ்ச்சிக்கிடமில்லை. எப்போதும் நன்மை நாடுபவன் நல்வினைசெய்யவேண்டும். ஆகிலும் நீரிட்ட கட்டளைப்படி நான்செய்யத்தடையில்லை. அவ்வாறே போக முயல்கின்றேன். என்று சொல்லி விடைபெற்று அக்ரூரர் சென்றார். கம்ஸனுமிவ்விதமாக அக்ரூரரையும் அமைச்சர்களையும் ஆக்ஞாபித்து தன்னில்லம்புக்கான்.

## 37-ம் அத்தியாயம்.

### கேசிவதமும் வியோமாசுரவதமும்.

கம்ஸனாலேவப்பட்ட கேசி என்னும் அசுரன் பூமியைத் தாளாக்கவல்ல குளம்புகளும், விண்ணில் தேவவிமானங்களைச் சிதறடிக்கும் பிடரி மயிர்களும், யாவருக்கும் அச்சமுண்டு பண்ணும் கனைப்பும், விசாலமான கண்களும், குகைபோல் திறந்த பெரியவாயும், நீண்ட கழுத்தும், நீலமலைபோன்ற தேகமும் வாய்ந்தகுதிரை வடிவமாகி கம்ஸனுக்கு நலம் செய்பவனாய் பயங்கரமான வேகத்துடன் நந்தன் சேரி யதிரும்படி வந்து நுழைந்தான். கண்ணனைத்

தேடிக்கொண்டு உக்கிரவடிவாய்ச் சிங்க முழக்கம்போற் கனைத்து வரும் அந்தக் கேசியைப் பார்த்துக் கண்ணன் கூவியவளவில் அவன் எதிர்த்து விரைந்து சென்று முன்கால்களாற் புடைத்தான். கண்ணன் அவ்வடி தன்மீது தாக்காமல் வீணே போகச்செய்து அந்த கால்களைப்பிடித்து முறுக்கி அலக்ஷியமாக நூறுவில்லளவு தூரத்தில்போய் விழும்படி வீசிவிட்டுச் சுகமாய் நின்றார். அசுரனும் போய் விழுந்துக் களைப்பாறி திரும்பவுஞ் சீறி எழுந்து வாயைத்திறந்து விரைவாய் பகவான்மேற் பாய்ந்தான். அப்போது சுவாமியும் நகைத்துக்கொண்டே தமது முன்கையை அவன் வாய்க்குள் புகுத்த அந்த கை தாக்கிய வளவில் அவன் பற்களெல்லா முதிர்ந்தன. அந்தக்கை அவனுடல் கொள்ளாவகை பெருத்ததனால் உள்ளே பிராணவாயு நடமாட்டத்துக்கு இடமில்லாமல் தாங்கரிய வேதனையடைந்து உடல்வியர்த்துக் கால்களை உதைத்துக்கொண்டு கண்பிதுங்கி நிலத்தில் வீழ்ந்திறந்தான். கண்ணனும் வெடித்த வெள்ளரிப்பழம்போன்ற அவனுடலினின்று கையை வாங்கிக்கொண்டார். அப்போது தேவர் முதலியோர் புஷ்ப வருஷம் பொழிந்து கண்ணபிரானைத் துதித்தார்கள். பின்பு பரமபக்தரான நாரத பகவான் கோகுலத்தில் பகவான்பக்கல் வந்து தனிமையில் விளித்துச் சகல பிராணிகளுக்கும் ஆத்மாவாய் எல்லாம் விளக்குவிக்கும் ஜோதியாய் ஒருவரு மறியவொண்ணாது உள்ளுறையும் சாக்ஷியாய் ஒப்புமுயர்வுமில்லாமல் விளங்கும நீ உனது சங்கற்பத்தினால் முக்குணமாயைக் குள்ளாகி அறிவின்றிப் பேதமுடைந்து கிடக்கும் ஜீவகோடிகள் மேல் கிருபைகூர்ந்து உலகம் படைத்துக் காத்து அழித்துவருகிறாய். இப்படிச் செய்வதில் சாது பிரகிருதிகளுக்கும், தீயவர்கட்கும் இருவினைப் பயனால் வியவகாரங்கள் நடக்கின்றன. இப்படி நடக்கும் நீயே இப்போது பூமிக்குப் பாரமாயான துஷ்டர்களையழிக்க அவதரித்து பலரையோரை முடித்து வருவது அறிவேன். இப்போதும் கொடிய குதிரையுருவமான இந்த அசுரனைக் கொன்றதனால் உலகம் நல்ல பாக்கியம் பெற்றது: பரமபுருஷா, உனது திவ்விய லீலையினாலே, நாளையின் அன்றைக்கு சாணூரன் முஷ்டிகன் முதலிய மல்லர்களும் குவலயா



பீடகஜமும் கம்ஸனும் இறப்பதைக் காண்பேன், அதன்பின் பஞ்சசனன், யவனன், முரன், நரகன் முதலியவர்களை மடித்தலும் பலகன்னிகைகளை மணம்புரிதலும், நிருகசக்கிரவர்த்திக்கு நற்கதிதருதலும், ஸியமந்தகமணியைக்கொண்டு வருதலும், சத்தியபாமையுடன் இந்திர லோகஞ்சென்று இந்திரனைத் தோற்பித்துப் பாரிஜாத விருக்ஷத்தைத் துவாரகாபுரிக்குக் கொணர்தலும், பிராமணன்கேட்டுக்கொண்டபடி அவன்பிள்ளையைப்பரமபதத்தினின்று வருவித்தளித்தலும், பௌண்டரனை வதைசெய்தலும், காசிநகரை எரித்தலும், தந்தவக்ரன் வதையும், சிசுபாலனை வேள்வியில் முடித்தலும், துவாரகையில் நீ செய்யும் பல அற்புத லீலைகளும், பாண்டவர்கட்குப் பாகனும், தூதனும், நாதனுமாயிருந்து செய்யுங் கிரீடைகளும் கண்டு களிப்பேன். நிர்மலஞானாநந்தரூபமாய், ஆதிமத்தியாந்தரகிதமாய், வேண்டுவதொன்றுமில்லாதபடி பூர்ணகாமமாய், திவ்விய தேஜோரூபமாய், முக்குணமாயையால் படைப்பு முதலியன...த்தியும் அதிற்பற்றிலாதாய், தான் அனைத்துக்கும் ஆதாரமாய், தனக்கோராதாரமுமில்லாததாய், இப்போதொரு விளையாட்டாய் மானிட வடிவங்கொண்டிருக்கும் உனது திவ்விய ஸ்வரூபத்தையன்றி வேறுபற்று காண்கிலேன் என்று ஸ்ரீகண்ணபிரானைக் கண்டுகளிப்புற்று மகாபாகவதரான நாரதர் விடைகொண்டு சென்றார்.

ஒருநாள் காலிமேய்க்கும் இடைப்பிள்ளைகள் ஒருவிதமான ஒளிவிளையாட்டாடத் தொடங்கினார்கள். எங்ஙனமெனில் சிலர் ஆடுகளாகவும், சிலர் ஆடுகாப்பவர்களாகவும், சிலர் ஆடுதிருடுங் கள்ளர்களாகவும் வேடம்பூண்டு கள்ளர்கள் ஆடுகளையொளிப்பதும் காப்பவர் அவைகளைத் தேடிப்பிடித்து வருதலுமாக விளையாடினார்கள். அப்போது மஹாமாயாவியான மயாசுரன் மகன் வியோமன் என்பவன் அங்குவந்து கள்ளராகிய பிள்ளைகளின் கூட்டத்தினுள்ளே புகுந்து ஆடுகளாகியபிள்ளைகளை ஒவ்வொன்றாகப் பிடித்துக்கொண்டுபோய் ஒருமலை முழைஞ்சில் ஒளித்து அதன்வழியைப் பெருங்கல்லால் மூடிவிட்டான். அந்த

னைபிள்ளைகளில், நான்கோ ஐந்தோ நின்றனவேயன்றி மற்றெல்லாங் காணப்படாதொழிந்தன. ஸஜ்ஜன ரக்ஷகனான கண்ணன் அந்த வியோமாசுரன் செய்கையைக்கண்டு அவனை ஒரு சிங்கமானது ஓநாயைப்பிடித்தாற்போல் பிடித்தவளவில் அவன் தன்னியற்கையான பெருவடிவத்தைக்கொண்டு தன்னைவிடுவித்துக்கொள்ள முயன்றும் அவனால் முடியவில்லை. ஸ்ரீ ஹரி அவனைக் கைகளால் அழுந்தப்பிடித்துக் கீழேதள்ளி பசுவைக்கொல்வதுபோலக் கொன்றார். பின்னர் வழியடைக்கக்கல்லைப்பெயர்த்துத் தள்ளி இடையரை வெளிப்படுத்தி அவர்களாலும் தேவர்களாலும் புகழப்பட்டு கோகுலத்தில் பிரவேசித்தார்.

## 38-ம் அத்தியாயம்.

## அக்ரூரர் கோகுலத்துக்கு எழுந்தருளியது.

அக்ரூரரும் கம்ஸனைவிட்டு அன்றிரவு மதுரையிலிருந்து நந்தகோகுலத்துக்குச் செல்ல ரதமேறினார். தாமரைக்கண்ணன் மீது பரமபக்தியுண்டாகவே யானென்ன நல்வினை செய்தேனோ எவ்வகைத் தவம் புரிந்துளேனோ சற்பாத்திரத்திலென்ன தானஞ் செய்தேனோ இன்று ஸ்ரீ கேசவநம்பியைக்காண அத்தகை பாக்கியமெனக்குக் கிடைத்தது. ஐம்புலன்கள் வாய்த்தலே பெரும்பேறாக நினைத்திருக்குஞ் சிறியேன் பகவானைத் தரிசிக்க விரும்புதல் சூத்திரன் வேதமோத விரும்புவதுபோல மிகத்தகுதியற்றதாயினும் ஆற்றுவெள்ளத்திற் பட்டுச்செல்லும் பண்டங்களில் ஏதுவேனும் எப்போதேனும் கரைசேர்வதும் உளதாகையால் அநாதிகர்மவசமான காலவேகத்தினுட்பட்டவென் போன்ற பிராணியும் ஒருகால் பிறவிக்கடற்கரைச்சேரவும் பெறலாகும். இன்றெனது தீவினைப்பயன் அழிந்து இந்தஜன்மம் பயன்பெற்றது. ஆகவே பரமயோகிகள் தியானிக்க வரிதான பகவானது திருவடிமலரைக்கண்டு கைதொழப்பெறுவேன். மஹா



யோகிகளின் மனவிருளை விலக்குந் திருவுகிர் ஒளியுள்ளதும், பிரம ருத்திராதி தேவர்களாலும் பரமைகாந்திகளாலும் ஸ்ரீதேவியாராலும் பூஜிக்கப்படுவதும், தோழருடன் கூடிக் காலிப் பின் நடப்பதும், இடைச்சியர் மார்பிலணிவதுமான எம்பெருமான் திருவடி எனக்குக் காணக்கிடைக்கும்படி என்னை இங்ஙனமனுப்பிய கம்ஸன் எனக்குப் பரமோபகாரியல்லனோ! மேலும் இதோ நான் செல்லும்வழியிலிந்த மிருகங்கள் எனக்குப் பிரதக்ஷிணமாய்ப் போகின்றன. ஆதலால் இன்று நான் அழகிய கபோலமும், நாசியும், புன்னகையும், தாமரைக்கண்ணோக்கமும், தொங்குங் கருள்குழலுமுள்ள ஸ்ரீமுகுந்தன் திருமுகத்தைக் காண்பேனென்பதில் ஐயமில்லை. [illegible]கடாக்ஷத்தினால் யாதொரு பற்றுமின்றி காரியகாரணரூபமான பிரபஞ்சத்தையியற்றி அஞ்ஞான வேற்றுமை மருள்களில்லாமல் நிர்மலமான சங்கற்ப சக்தியொளியால் கிருபைகூர்ந்து கோகுலம் முதலிய இடங்களில் விளையாட்டான தொழில்கள் நடத்துபவன்போல் அபிநயித்துக்கொண்டு சகல தோஷங்களையுந் தீர்க்குந் தனது திருவவதார குணசேஷ்டைகளால் ஜனங்கள் உயிர்க்கவும் செழிக்கவும் துலங்கவும் செய்து தருமமார்க்க ரக்ஷணாதிகாரிகளான தேவர்களுக்குந் தன்மேல் அன்புற்ற ஏழைகளுக்கும் சகலதுன்பமும் நீங்கவும், சகலவின்பங்களும் பெருகவும் செய்யும் பரமபுருஷனைக் காணுதல் அன்றிக் கண்படைத்தார்க்கு கண்விழவு ஒன்றுமில்லை. அத்தன்மையநேத்திரோத்சவமின்று எனக்காகும். திருமகள் நிலையிடமான அந்தபகவானைக் காணக்கிடைத்தலால் இன்று நற்போது விடிந்தது. பரமபுருஷனது திவ்விய லீலாவதார விசேஷ ரூபமான ராமபலபத்திரர்களை இப்படிக் காணப்பெற்றுக் களித்துத் தேரினின்றிறங்கி பரமபுருஷார்த்தம் சித்திப்பதற்காக மகாயோகிகள் தியானிக்கத்தக்கதான அவர்களின் திருவடிக்கமலங்களுக்குப் பலநமஸ்காரங்கள் செய்து அவர்கள் தோழர்களான கோபகுமாரர்களையும் நமஸ்கரிப்பேன். இப்படிக் கண்ணன் திருவடிக்கீழ் விழுந்து நமஸ்கரிக்குமென்னை அந்தபகவான் துஷ்டனான கம்ஸனேவலால் வந்தவனென்று என்னை உபேக்ஷைசெய்யாமல் புன்னகையோடுகூடி யருள்நோக்கால் களிப்

புற எனது பிறவித்துயர் தொலையவேண்டும். பாகவதர்களுக்கும் இந்திரபட்டம் முதலான செல்வம் வேண்டுபவர்களுக்கும், காதல் நோயால் வருந்துங் கோபியருக்கும் அச்சமற வரமளிக்குந் திருக்கையால் என்சிரத்தைப்பற்றி என்னைத்தழுவும்போது நான் இந்ததேகம் சகலமான குற்றங்களும் விலகி நல்லபயன் பெற்றதென்று மகிழ்வேன். இவ்வண்ணமான பேறுபெற்றிலேனுஇல் இது வீண்பிறப்பாமன்றோ! அந்தபகவானுக்கு ஒருவன் பிரீதிக்குடையவனென்றும் ஒருவன்பகைக்குடையவனென்றும் ஒருவனிரண்டுக்கு முரிமையிலாதவனென்றுங் கிடையாது. சகலலோகமும் அவனது வடிவமேயாகிலும் தொண்டரானவர் விரும்பியவற்றைக் கற்பகத்தருப்போலளிப்பான் மூத்தபிரானும் நமஸ்கரித்துக் கைகுவித்து நிற்குமென்னைத் தழுவிக் கைபிடித்துள்ளே அழைத்துக்கொண்டுபோய் ஆதரிக்கப்பெறுவேன் என்றிங்ஙனம் நினைத்துக்கொண்டே அக்குரூரர் ரதத்திற்சென்று மாலைப்பொழுதில் கோகுலங்கிட்டினார். அங்குதாமரை, யவம், அங்குசம் முதலியரேகைகளுள்ளனவாய் பூதேவியின் பாக்கிய ரூபங்களாயிருக்குங்கண்ணபிரான் அடிச்சுவடுகளைக் கண்ணுற்று ஆநந்தத்திற்கும் பக்திக்கும் வசப்பட்டு ரதம்விட்டிறங்கி அந்தப்புழுதிமேற்புரண்டு தன்னுடலம் பரிசுத்தமாயிற்றென்று மகிழ்ந்தனர். யாவரேனும் இவ்வண்ணம் கபடலேசமுமில்லாமல் பகவானது சுவடுகளைக்கண்டும், சரிதங்களைக்கேட்டும், குணவடிவமுதலியன நினைந்தும் தேகம் சிலிர்க்கவும், ஆனந்தக் கண்ணீர் பெருக குரல் தழ தழக்கவும், பரவசமாய்த் தொண்டு செய்தால் அவரே பயன் பெற்றவராவார். இப்படி அக்குரூரர் புழுதியிற்புரண்டு புண்ணியமூர்த்தியாகி எழுந்து கண்ணபிரான் எங்கிருக்கிறானென்று சிறுவர்களைக்கேட்டு அவர்களால் மாட்டுத்தொழுவத்திலிருப்பதறிந்து சிறிது மாலை வெளிச்சமுள்ள சமயத்தில் பசுகறந்துகொண்டிருக்கும் ராமகிருஷ்ணர்களைக்கண்டார். கருநிற வாடையும், பொன்னிறவாடையும், சரத்காலத்தாமரைபோன்றதிருக்கண்களும், பாலப்பருவமும், வெண்ணிறமுங் கருநிறமும், நீண்ட தோள்களும், அழகிய திருமுகங்களும், இளங்களிறன்ன நடையும், அந்நிலத்துக் கணியாக த்வஜ, வஜ்ர, பத்மரேகைகள் பதிங்



குந்திருவடிகளும், மந்தஹாஸமிஞ்சுந்திருவருள்நோக்கமும் நிகரில்லாவின்பமீனும் விளையாட்டும், திவ்வியபரிமளக்கலவையும், ஸ்ரீதேவியும் வியந்து நீங்காதுறையு மீடற்ற அழகிய திருமேனியும், திசையெங்கும் பிரகாசிக்கும்படி, பூமியைக்காத்தருளுகைக்காகத்திருவவதாரஞ் செய்தருளியிருக்கும் அந்த மூத்த பிரானையும் கண்ணபிரானையும் கண்டவுடனே பக்தி பரவசமாகி விசாக் தேரடி அவர்கள் திருவடிகளில் தண்டம்போல் வீழ்ந்தார். இப்படி உடம்பு நெறப்பிக்கும். ஆனந்தப்பெருக்காலாய நீர் செறிவாற் கலங்குறுங் கண்ணினராய், புளகஞ்சிலிர்த்த மேனியராய்த் தன்னை இன்னானெனத்தோன்றாதவராய்ப் பலமுறை தண்டனிட்டுக்கொண்டிருந்தார்.

அவ்விதய மனத்தரைத் திருவுளங்கொண்ட பகவானும் தமது திருக்கையால் அக்குரூரரை அன்பாராவுள்ளவாற்சல்லிய விசேஷந்தோன்றும்படி தழுவினார். பலதேவரும் அப்படியே தழுவி தம்பியுந்தானுமாயவர்கைகளைக் கோத்துக்கொண்டு திருமாளிகைக்குள் அழைத்துப்போனார். பின்பு ஆஸனமளித்து மதுபர்க்கமுதலியவற்றால் இளைப்பாற்றி ஆதரவுடன் க்ஷேமம் விசாரித்துக்கொண்டே அறுசுவை அடிசிலுண்பித்து பரிமள சந்தனம்பூசி நறுமலர் மாலை சூட்டிக் கற்பூர தாம்பூலங்கொடுத்து உபசரித்தார். பின்பு நந்தகோபர் அக்குரூரரே, இறைச்சிக்கடைக்காரன் வீடிருக்கும் ஆடுகள்போல இரக்கமற்ற கம்சன் கீழ்க்குடிகளாகிய நீங்கள் எவ்வாறு அங்கு காலம் போக்குகிறீர்களோ! தன்னுயிர்க்கு என்ன மோசம் வருமோ என்றஞ்சிய அந்த கம்சன் என்னுங்கொடியவன், தன்னுடன் பிறந்தவள் பதைத்துக்கதற அவள் பிள்ளைகளைக் கொன்றானன்றோ. அவனுடைய கீழிருப்பவர்கட்கு நலமெப்படியிருக்கும் என்று சொன்னார். அக்குரூரரும் வழிகடந்துவந்த சிரமம் தோன்றாமல் சுகமாகக் கட்டிலின்மேல் உட்கார்ந்தார்.

## 39-ம் அத்தியாயம்.

### ராமகிருஷ்ணர்கள் மதுரைக்கெழுந்தருளல்.

வழியில் வரும்போது விரும்பியவாறெல்லாம் எம்பெருமானுடைய திருவருளைப்பெற்ற அக்ரூரர் மாலைக்களித்தினிதிருக்கும்போது பகவான் அவர்பக்கலுட்கார்ந்து ஐயா, கம்சனிடமிருந்து வந்தீரோ நல்வரவா உங்கட்கு நன்றாகுக. நமது ஞாதிகள் பந்துக்களெல்லாம் பிணிமுதலிய துன்பங்களின்றிச் சுகமாயிருக்கிறார்களா, ஐயா நங்குலத்துக்குப் பிணிபோன்று கம்சன் வாழ்ந்திருக்க அவன் கீழடங்கியிருக்கும் நம்மவர்க்கு க்ஷேமமெப்படியுளதாம். அதையேன் கேட்கவேண்டும். அந்தோ நல்லோராகிய நமது தாய் தந்தையர்க்கு நம்மாலதிகத்துன்பம் நேரிட்டது. தெய்வவசத்தால் இப்போது நமக்கு பந்துக்களைக்காணவும் அவர் இடரை மாற்றவும் காலம்வந்ததென நினைக்கிறேன். நீர் இவண்வந்த காரணமென்னதென்றுரைப்பீராக என்று கேட்டார். அதற்கு அக்ரூரர் கம்சனிடம் நாரதர் வந்துணர்த்தியதும், அவன் வசுதேவனைக் கொல்லத்தொடங்கியதும், நாரதரால் தன்வரலாறறிந்து சற்றும் விரோதமே தனக்குத் தக்கதென்று பந்துக்களை யொழிக்கத் துணிந்தமையும், தநுர் யாகம் பார்க்கும் வியாஜத்தால் இங்குள்ளாரை வரவழைக்கக்கருதித் தன்னையனுப்பியதுமான விஷயங்களை யெல்லாம் விவரமாக விண்ணப்பஞ்செய்தார். கண்ணனும் மூத்தநம்பியாரும் அதைக்கேட்டு நகைத்து நந்தகோபருக்கு அறிவிக்க அவரும் அரசனாணைப்படி தநுர்யாகத்துக்குச் செல்லவேண்டியிருப்பதால் சேரியிலுள்ள ஆடவர் அனைவரும் தயிர் பால் முதலிய காணிக்கைப்பண்டங்கள் சேகரித்துக்கொண்டு நாளை மதுரை நகரஞ் சேரும்படி வண்டிகள் சித்தப்படுத்தி பிரயாணஞ்செய்யவேண்டும் என்று கிராமாதிகாரியால் சேரியெங்குந் தெரிவித்தார். அப்போது கோபிகைகள் இந்த செய்தியறிந்து அதனால் மனதில் வேக்காடுண்டாகி வெப்பமுள்ள மூச்சுகளால் முகங்கள்வாடி ஆடைகள் வளைகள் முதலானவை நழுவி விழும்படி தேகமிளைத்தவர் சிலரும், இவ்வுல



கத்தையே மறந்து போகும்படியான கவலைகொண்டு அசைவற்றுக்கிடந்தவர் சிலரும், கண்ணனுடைய அழகிய மந்தஹாசம், இனிய நோக்கம், இன்சொல், நடை, உடை, அவனுடைய திவ்யலீலைகள் முதலானவற்றை இடையறாது நினைந்து பிரிவாற்றகிலார் பலருமாக யாவருங்கூடி பிரிந்திருக்கக்கூடாதவராய் தேவனே, நீ பிராணிகளை சிநேகவலையுட்புகுவித்துப் பயனொன்றுமின்றியே வீணாகப்பிரித்து விடுகிறாய். அருளில்லாமல் நீ இவ்விதம் செய்வது அறியாப்பிள்ளை ஆட்டம் போலிருக்கின்றது. எங்களுக்கு அழகிய கண்ணன் திருமுகத்தைக்காட்டி பின்பறுகராவண்ணமே சீக்கிரத்திலொளிக்கக் கருதுந்தெய்வமே, உன் செயலெப்படி நன்றாகும். அந்தோ, நந்தன் மகன் நாமெல்லோரும் தன்மேல் இவ்வளவு காதல்கொண்டு வீடு பிள்ளை முதலிய யாவும் வேண்டாது துறந்து தன்னருளையேவேண்டி காத்திருக்கும் நம்மைவிட்டுச்செல்லத் துணிந்தனன். இவ்விரவு சென்றவுடன் மதுராபுரத்துப் பெண்டிர்களுக்கு நற்போது விடிந்து கண்ணன் திருமுகத்தைக்கண்டு களிக்கும்படியான நல்வினைப்பயன் கிட்டியது. அந்த நகரத்துப் பெண்களின் கடைக்கண்ணோக்கம், மந்தஹாசம், மதுரவசனம் முதலிய வலைகளிற்பட்ட கண்ணன் கிராமத்துப் பெண்களாகிய நம்மைத்திரும்பி கண்ணாலாவது பார்ப்பானென்பது நிச்சயமில்லை. இப்போதிங்கிருந்து மதுராபுரிக்குச்செல்லும் வழியிலும் அந்த நகரத்திலுமிருக்கும் அனைவரும் திரிலோக சுந்தரமாகிய ஸ்ரீ வல்லபன் திருவடிவைக் கண்டு நேத்திரோத்சவமடைவார்கள். இத்தனையன்பரான ஜனங்களிடத்தைவிட்டு இந்தக்கண்ணனை தூரதேசத்துக்குக்கொண்டுபோக வந்திருக்கும் இவனை குரூரனெனத்தகுமன்றி அக்ரூரனென்னும் பெயரிவனுக்குப் பொருந்தாது. அவன் வந்தழைத்தவுடனே இங்குள்ள கொழுத்த இடையர்களும் பிரயாணஞ்செய்ய முயற்சி செய்கின்றனர். வயது சென்றவர்களுந் தடை செய்திலர். தெய்வமும் இப்போது நமக்கு விரோதமே நினைக்கிறது. அரை நொடிப்பொழுதும் பிரியவொண்ணாத முகுந்தனைப்பிரிய நேரிட்டதனால் வாழ்வாசையொழிந்து வருந்து மனத்தரான நம்மை யாரென்னசெய்து விடலாம். ஆத

லால் நாமனைவருங்கூடிக் கண்ணனைப்போகவொட்டாமல் தடுத்து நிறுத்திவிடப்பார்ப்போம். மாலையில் மாடுகளின் பின்னால்வரும் அழகைக்காணுதலாலும் இரவில் ராஸக்கிரீடையிலும் ஆநந்தம்பெற்ற நாம் அவ்வானந்தத்துக்கு அநேக மடங்கதிகமான துன்பமநுபவித்துக்கெடும்படி கண்ணனைப்பிரிந்து கணப்பொழுதேனும் எங்ஙனமிருப்போம். என்றிப்படி கோபிகைகள் இனிக்கண்ணன் பிரிவு நேரிடுமேயென்று பயங்கவலையாலொருத்தியோடொருத்தி பேசிக்கொண்டு தாங்கரிய துயரத்தால் கோவிந்தா, தாமோதரா, மாதவா என்பது முதலான பகவந்நாமங்களைச் சொல்லிப் பெருங்குரலுடன் புலம்பினார்கள். இவ்வாறவர்கள் புலம்பிக்கொண்டிருக்கப் பொழுதுவிடிந்தது. காலைக்கருமங்களை முடித்து அக்ரூரர் ரதத்தைச்செலுத்த இடையர்களெல்லாரும் தயிர் பால் முதலான காணிக்கைகளை திரளாகவெடுத்துக்கொண்டு வண்டிகளின் மேலேறிப்பின் செல்லக் கோபிகைகள் கண்ணனது அன்புள்ள நோக்கால் ஆசையதிகரித்தவர்களாகிப்பின் சென்றார்கள். சீக்கிரத்தில் திரும்பிவருவேன் நில்லுங்கள் கவலைப்படவேண்டாம் என்று இன்சொல் சொல்லும்படி பகவான்விட்ட தூதருடைய வாக்கியங்கேட்டும் இனியிப்போது பின்றொடர்ந்து பயனில்லை கண்ணனை இத்தருணம் திருப்பமுடியாது அவனுரைத்தவை பிழையாதிருக்கட்டும் என நினைந்துகொண்டு தமது மனங்களை கண்ணனோடனுப்பி ரதத்தின் கொடிமரமும் ரதஞ்செல்லுதலாலெழும்பும் புழுதியும், கண்களுக்குப் புலப்படுமளவும் அவ்வழியைப் பார்த்திருந்து வீடுகளுக்குத் திரும்பிச்சென்று அவனது திவ்விய சரிதங்களைப் புகழ்ந்து பாடிக்கொண்டே நாள் கழித்து வந்தார்கள். பகவானும் அக்ரூரபலபத்திரர்களுடன் வாயு வேகமாக ஓடுங்குதிரைகள் பூண்ட தேர்மேலேறி பரிசுத்தமான யமுனையென்னும் நதிக்கரை சேர்ந்தார்கள். அங்கே மூத்தபிரானுந் தானும் நீர் பருகி மறுபடியும் தேரிலேறியுட்கார்ந்தார்கள். அக்ரூரர் ஆற்றிலிறங்கி வேதமந்திரங்கள் ஜபித்துக்கொண்டு ஸ்நானஞ்செய்யும்போது அவ்விருவரும் அந்நீரிலிருக்கக்கண்டு ரதத்திலிருப்பவர்களிங்கேயிருப்பதேதென்று நிமிர்ந்து பார்க்கத் தேரில் முன்



போலிருப்பக்கண்டு கண்டது பொய்த்தோற்றமென்று திரும்பவும் நீரில் மூழ்கினார். வெள்ளிமலைபோன்ற சேஷசயனத்தில் நீலமேகம்போன்ற திருமேனியின் திவ்விய சௌந்தரிய விசேஷந்தோன்றவீற்றிருந்து தேவாசுரகந்தருவர்கள்வந்து வணங்கிக்கைகுவித்துக்காத்துநிற்க, அவர்களை அருளார்ந்த நோக்கத்தால் அனுக்கிரஹித்து மகிழச்செய்துகொண்டு, பஞ்சாயுதந்தரித்து, ஸ்ரீவத்ஸகௌஸ்துபங்களிலங்கும்திருமார்பினின்று இறையும் அகலாத பெரிய பிராட்டியாரின் மூர்த்தி அம்சங்களான புஷ்டி, வாணி, கீர்த்தி, காந்தி, துஷ்டி, இலா, ஊர்ஜை, வித்தை, அவித்தை, சக்தி, மாயையென்னும் வடிவங்களுடனும்கூடி சகலமான புருஷார்த்தங்களையும் அவரவர்க்குத் தக்கபடி அளிப்பவரான பரமபுருஷனை அந்நீரினுட்கண்டு தேகம் பரவசமாகி மயிர் சிலிர்த்துக் கண்ணீர்ப்பெருகப் பரமபக்தியுடன் தலைவணங்கிக்கைகுவித்து வாயாரத்தோத்திரம் செய்யவாரம்பித்தார்.

## 40-ம் அத்தியாயம்.

## அக்ரூர ஸ்தோத்திரம்.

சகலத்துக்கும் முதற்காரணமான நாராயணா, நான் உன்னை வணங்குகிறேன். பஞ்ச பூதங்களும், அகங்காரமும், மகத்தும், பிரகிருதியும், தத்தந்தேவதைகளோடுகூடிய ஏகாதசேந்திரியங்களும், ஐம்புலன்களும் ஆகிய பிரபஞ்சத்திலுள்ள தத்துவங்களனைத்தும் உனக்குச் சரீரமானவை. பிரமன் முதல் ஸ்தாவரமளவான நாமரூபங்களுள்ள ஜீவன்கள் முக்குணவேறுபாடுள்ள பிரகிருதிக்குள்ளடங்கி இயற்கையான அறிவு குன்றப்பெற்றிருப்பதால் பிரகிருதிக்குப்புறம்பாய் சுத்த ஸத்துவநிலையான உன் ஸ்வரூபத்தை அறியக்கூடாமலிருக்கின்றன. பஞ்சபூதங்களுக்கும் அவற்றின் விகாரமான சரீரங்களுக்கும் அவற்றையாளும் ஜீவகோடிகளுக்கும் பரமாத்துவாய், யாவர்க்கு முணரவரிய உன்னை அநேக ஜன்மங்களில் நல்வினை செய்து உனது கிருபை

யால் நற்கதிக்குரிமை பெற்றவர்களாயுள்ள சில நல்லோர் பக்தி ரூபமான தியானவிசேஷத்தால் பஜிக்கப்பெறுவார்கள். சிலர் பல தெய்வங்களுக்கு ஆராதன ரூபமாக வேதங்களில் விதிக்கப்பட்டுள்ள யாகங்களினால் அந்தந்த தேவதைகளுக்கும் அந்தராத்மாவான உன்னையே பஜிக்கிறார்கள். சிலர் சகலமான நித்திய நைமித்திக கருமங்களையும் உனக்கர்ப்பணஞ்செய்து, அவற்றின் பயனை வேண்டாமல் ஞானச்சுடர் மூர்த்தியான உன்னை ஞானயோகத்தால் பூஜிக்கிறார்கள். மற்றுஞ்சிலர் ஸ்ரீபாஞ்சராத்திர சாஸ்திரவிதிப்படி சக்கிராங்கிதர்களாய் வாசுதேவரூபியும் வியூகரூபியுமான உன்னிடத்திலடைக்கலம் புகுந்து கிருதார்த்தராகிறார்கள். மற்றுஞ்சிலர் ருத்திராகமத்தில் உபதேசிக்கப்பட்டுள்ளவைகளில் ஊற்றங்கொண்டு, சிவபக்தி செய்கிறார்கள். இன்னும் அநேகர் அநேக தேவதைகளைத் தொழுகிறார்கள். ஆயினும் பலமலைகளிலுண்டாய் ஓடும் பல நதிகளுக்கும் சமுத்திரமே சேரிடமாவதுபோல் எந்த தெய்வத்தைத் தொழுபவர்களுக்கும் சர்வாந்தர்யாமியான நீயே உள்ளபடியான தெய்வமென்பது திண்ணம். முக்குணமாயைக்குள்ளாகி உழலும் சேதனர்களுக்கு அவ்வவ்வினைப் பயனளிக்கும் அவைகளிற்பற்றிலாதவனாய் சர்வசாக்ஷியாயிருக்கும் உன்னைச்சரணடைகிறேன். இந்த முக்குணப்பெருக்கானது ஜீவாத்துமாக்களை கருமமூலமான தேகமேதானென்றும் தேகத்தைச்சேர்ந்தவைகளுக்குத் தானுடையவனென்றும் கொள்ளுகிற அஞ்ஞானமென்னுஞ் சேற்றில் அழுத்திவிடுகின்றது. அவ்வாறு அடியேனுக்கு நேரிடாவண்ணம் அருள்செய்வாயாக. அக்கினிதேவன் நினது திருமுகமென்றும், பூமி திருவடியென்றும், சூரியன் திருக்கண்ணென்றும், ஆகாயம் திருநாபியென்றும், திசைகள் திருச்செவியென்றும், தேவலோகம் திருமுடியென்றும், திக்குப்பாலகர் திருக்கைகளென்றும், சமுத்திரம் திருவுதரமென்றும், காற்று மூச்சென்றும், ராப்பகல்கள் இமைப்பென்றும், பிரமன் குறியென்றும், மழை வீரியமென்றும் சொல்லப்படுமாயினும் அதனால் உனது திவ்விய ஸ்வரூபத்துக்கு அளவு சொன்னதாக மாட்டாது. அத்திப்பழத்துக்குள் அநேகசிறுஜந்துக்களும், கடலில் கணக்கில்லாத ஆலைகளும்



அடங்கியிருப்பனபோல் உனது திவ்விய ரூபத்தில் சகலமான சராசரங்களும் அடங்கியிருக்கின்றன. இப்படி யெல்லாவற்றுக்கும் முதற்காரணமாய், எல்லாவற்றின் உள்ளுறையும் ஜோதியாய், யாவருக்குமுணரவரியனாய், ஒருபற்றுமிலானாய், லோகாநுக்ரஹார்த்தமான அவதார விசேஷங்கள் அனேகஞ் செய்தருளி, அற்புதசேஷ்டிதங்களைக் காட்டி அவைகளால் பலருக்குப் பக்தி உண்டாகும்படி கிருபைசெய்கிறாய். அதனால் அநேக பிராணிகள் கடைத்தேறுகிறார்கள். மீன்வடிவா யூழிக்கடலிலுலாவினோனும், மதுகைடபாசுரர்களை சங்கரித்தவனும், பரிமுகத்தோனும், மந்தர மலையைத்தாங்கப் பெரிய ஆமைவடிவங் கொண்டவனும், ஏனமாய் நிலங்கீண்டவனும், நல்லோர் அச்சங்கெடும்படி நரசிங்கவுருவானவனும், திரிவிக்கிரமரூபியாய் பூமியை அளந்தவனும், பிருகுவம்சத்தில் ராமனெனத்தோன்றி துஷ்டக்ஷத்திரியர்களை மடித்தவனும், ராவணன் முதலிய தீயவரக்கரை முடித்த ரகுராமசந்திர ரூபியானவனும், வசுதேவர்களுக்குப் பிள்ளைகளாக பலராமன் கிருஷ்ணனென அவதரித்தவனும், அசுரர்களை அழிப்பதற்காகப் புத்தவடிவங் கொண்டவனும், வேதவிரோதிகளான தீயர்களை யொழிக்கக் கற்கியென்றினிப் பிறப்பவனுமான உனக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். நிலையற்றதாகிய தேகத்திலும் அதைச்சார்ந்தவைகளிலும் நானென்றும் எனதென்றும் தப்பான எண்ணங்கொண்டு இன்பம் போற்றோன்றி துன்பமாக முடியும் சமுசார போகங்களில் மனஞ்செலுத்தித்திரியும் அடியேன் ஹிதமின்னதென்றறியேன். சர்வாந்தர்யாமியான உன்னைவிட்டு துஷ்டவிஷயங்களைப் பேறாக நினைத்துழலும்படி இருவினைவழியிலிழுக்குங்கொடிய இந்திரியங்களுடன் கூடியமனத்தை யடக்கி கருமயோகாதி வழியில் செல்ல அடியேனுக்கு ஞானசக்திகளில்லை. அப்படியிருந்தும் இன்னதென்றுணரலரிதான பாக்கியத்தால் உன்கிருபைக்குப் பாத்திரனாகி உனது திருவருள் நோக்குக்கிலக்கான இந்தவேளையில் திருவுள்ளத்துக்கு இசையாதன தவிர்ந்து திருவுள்ளமுகக்கும் வழிநின்று ஆத்மஸ்வரூபம் உள்ளளவுமகலாத உன்னை அடுத்த என்னைக்கைவிடாது காப்பாயென்று துணிந்தேன். கைவிடில் உய்யுமாறென்று

மில்லாததால் நீ அடியேன் வேண்டுகோளைத் திருவுள்ளம்பற்றி இனியென்னைப்பற்றத்தக்க உபாயமெல்லாம் நீயேயாய் அனாதியான என்சிறையைக் கழித்தருள்வாயாக. உன்கிருபையால் சிறிதுமெய்யுணர்வுண்டாகிய இச்சமயத்தில் இவ்வறிவு நிலைக்குமோ தவறுமோவென்றஞ்சி உன் திருவடியே சரணமாகப்பற்றினை அடியேன் இனி ஓருபாயமொன்றுந் தேடாமலும், உன் திருவுள்ளங் கலங்காவண்ணம் நன்னெறியில் நிற்கவும் நன்மதியளித்துக்காக்க நினது கடமையெனத்துணிந்து உன் திருவடியே சகலவிதமான அரணாக எண்ணியிருக்கும் நிலைவைத்தருள்வாயென்று சமஸ்தாபராதத்துக்கும் க்ஷாமணமாக அநந்தமான தண்டன் சமர்ப்பிக்கிறேன்.

---

## 41-ம் அத்தியாயம்.

---

## மதுரா பிரவேசம் மாலாகாராநுக்கிரகம்.

---

இங்ஙனம் அக்குரூரரால் துதிக்கப்பட்ட கண்ணபிரான் நாத்நடி வேஷத்தைக் கலைத்து விடுவதுபோல் அக்குரூரருக்குக் காட்டிய அந்த திவ்விய ரூபத்தை உடனே மாற்றிவிட அக்குரூரரும் ஆச்சரியப்பட்டுக்கொண்டு ஸ்நானம் முதலிய கிரியைகள் முடித்துக் கரைசேர்ந்து ரதத்தின்மேல் வீற்றிருக்கும் மூர்த்திகளிருவரையுந் தரிசித்தார். அப்போது பகவான் அக்குரூரரே உம்மைப்பார்த்தால் ஏதோ ஒரு புதுமை கண்டிருப்பதாய்த் தோன்றுகிறது. அதென்ன புதுமை அது விண்ணிலா, மண்ணிலா, நீரிலா, எங்குளது சொல்லும் என்றுகேட்க அக்குரூரர் பரமபுருஷா, விண்ணிலும், மண்ணிலும், நீரிலும், மற்றெதிலும் என்னென்ன புதுமைகளுளவோ அவையெல்லாம் உனது திருமேனிக்குள்ளிட்டன. அத்தகைய நீ அடியேனுக்குக் காக்ஷியளித்தருளுமிடத்தில் அடியேன் காணாதபுதுமை யாதுளது உனது தரிசனத்துக்குமேல் இனிவேறொரு ஆச்சரியமில்லையென்று சொன்னார். பின்பு ரதத்தைச்செலுத்தி மதுராபுரத்



தின் புறத்திலுள்ள ஒருத்தியானம் போய்ச்சேர்ந்தார்கள். அதற்கு முன்னமே நந்தகோபாதிகள் அவ்விடஞ்சேர்ந்து ரதம் வருவதை எதிர்நோக்கியிருந்தார்கள். அப்போது பகவானை நந்தகோபாதிகளும் தாமும் சந்தித்தபின் அக்குரூரர்கையைத்தன் கையாற் பிடித்துக்கொண்டு நீர் தேர் கடவி நகர் சேரும். நாங்கள் இன்றிரவு இங்கு தங்கிக்காலையில் நகரங்காணவருவோம் என்று விடைகொடுக்க அவரும் உங்களை விடப்பிரிந்து நான்செல்ல மனம் வரவில்லை. ஆண்டவனே! உன்தொண்டனை அடியேனை கைவிடாது காத்தருளவேண்டும். மூத்தபிரானும் நந்தகோபாதிகளும் அடியேன் குடிலுக்கெழுந்தருளி உன் திருவடி நீற்றால் பரிசுத்தமாக்கி உன் திருவடி விளக்கப் பெறும்படி யடியேனுக்கருள் செய்யவேண்டும். இந்தத்திருவடியை விளக்கப்பெற்றதனால் பலிசக்கிரவர்த்தி புகழுஞ் செல்வத்துக்குந் தக்கவனானான். சகரன்மக்கள் நற்கதியுற்றார்கள். அத்தன்மைய மகிமைவாய்ந்த திருவடியை பிரிந்துபோக மனம் வரவில்லை. ஆகலால் தேவர்க்குந் தேவனும் சகலலோகேச்வரனும் திவ்வியதிருநாமங்களுடையவனும், யதுகுலசிரோமணியாய் விளங்கும் ஸ்ரீமந்நாராயணா, அடியேன் விண்ணப்பஞ்செய்வதில் என்ன அபசாரமிருக்கினும் பொறுத்தருள் செய்து அடியேன் விருப்பத்தைபூர்த்திசெய்யவேண்டும் என்று பிரார்த்திக்க பகவானும்நல்லதப்படியே உமதில்லத்துக்கு வருவோம். ஆனால் யதுகுலத்துக்கெல்லாம் விரோதியான கம்சனை சம்ஹரித்துப்பின்பு நம்மவருக்கெல்லாஞ் சந்தோஷகரமான காரியஞ் செய்வேன் என்று சொல்லியனுப்ப அக்குரூரர் தனித்துப்போக மனமில்லாதவராயினும் பகவானிட்ட கட்டளையை மறுக்கவொண்ணாமையால் மதுராபுரஞ் சேர்ந்து தாம்போய் வந்த செய்தியைக் கம்சனிடத்திற் சொல்லிவிட்டுத் தமதில்லஞ் சேர்ந்தார். மறுநாள் கண்ணன் பலராம நந்தகோபாதிகளுடன் கூடி ஸ்படிகத்தால் கோபுரவாயிலும், தங்கத்தகடுகளால் கதவும், செம்பு பித்தளைகளால் களஞ்சியங்களும், கொட்டாரங்களும், ஆழ்ந்த அகழிகளும், அழகிய தோட்டந்தோப்புகளும், தங்கக் குறடுகளும், உலாவு [illegible]களும், கச்சேரிகளும், கூடங்களும், நவரத்தினங்க

கள் பதித்த திண்ணைகள் வளைவுகள் பலகணிகள் மேடைகள் முதலான இடங்களில் கிளி, புறா, மயில் முதலிய பக்ஷிகள் விளையாடிக்கூவும்படியான கிரகங்களும், நீர் தெளிக்கப்பட்டுள்ள தெருக்களும் நாற்சந்திகளும், அங்குபுஷ்பங்களுடன் கூட்டிறைக்கப்படும் அக்ஷதைகளும், பூர்ண கும்பங்களும், சந்தன மெழுக்குகளும், பூமாலைகளும், தீபங்களும் கோலங்களும், வாழைக்குலை பாக்குக்குலைகள் கூடிய கம்பங்களும், கொடிமரங்களும் உள்ளதாய் மிக அழகியதான நகரத்தினுள் பிரவேசிக்கும்போது தோழருடன்கூடிய அந்தவசுதேவகுமாரர்களைப்பார்க்க விரும்பிய நகரத்துஸ்திரீகளில் சிலர் ஆடையுடைகள் தாறுமாறுகத் தரித்துக்கொண்டும், சிலர் ஒற்றைக்காதிலும் ஒற்றைக்கையிலும் ஒற்றைக்காலிலும் பூண்களணிந்தும், சிலர் ஒற்றைக்கண்ணில் மையில்லாமலும், சிலர் உண்ணும் உணவு பாதியில் தள்ளிவிட்டும், இன்னுமிவ்வாறு பலர் குறை குறையாய் செய் தொழிலை மறந்தும் ஓடிவந்து ஆவலுடன் பார்த்தார்கள். அவர்கள் மனமெல்லாம் ஸ்ரீகண்ணபிரானது திருமேனியழகிலும்; புன்னகையிலும், குளிர்ந்த பார்வையிலும் சிக்கி அவனுடனே போயின. இப்படியந்தயுவதிகளனைவரும் கண்ணனைக் காமுற்றுநோக்கி சர்வாந்தர்யாமியான அவனது அன்புள்ள கடாக்ஷம் தங்கள் மேல்வரப்பெற்று சகலதாபமுந்தீரக்கண்டனர். அவர்கள் மேல் மெத்தைகளில்நின்று இவர்கள்மேல் நறுமலர்களைப் பொழிந்தார்கள். ப்ராம்மணர்களான தத்வஞானிகள் பரமபுருஷனான கண்ணனுக்குப் பற்பல காணிக்கைகளை சமர்ப்பித்து அருமையான அவன் கடாக்ஷத்தால் களிப்பெய்தி இந்தபகவானது இனிதான பாலியலீலைகளைக் காணப்பெற்ற இடைச்சிறுவர்க்குச் சமானமான பாக்கியம் பெற்றவர் யாருமில்லையென்று வியந்தனர். இவ்வாறு ராஜமார்க்கத்தில் செல்லும் கண்ணன் வஸ்திரங்களை அழுக்கெடுத்துச் சாயம்போடும் ஒரு வண்ணானைக்கண்டு எங்களுக்கு உடுத்துக்கொள்ள நல்லவஸ்திரங்கள் கொடுத்தால் உனக்கு மிகுந்த நன்மை உண்டாகும் கொடு என்று கேட்க அரசன் வீட்டு வஸ்திரம் வெளுக்கிறவன் தானென்று மதங்கொண்டு அந்தவண்ணான் அடா இடைப்பயலே காட்டில் மாடுமேய்க்கும் நீங்



கள் இவ்விதமான வஸ்திரங்களைக் கனவிலேனும் கண்டிருப்பீர்களோ! இந்தவஸ்திரங்களில்லாமல் உங்களுக்கு ஒருகாரியமும் தோன்றவில்லையோ உயிர்த்திருக்க விரும்பினால் இனியிப்படி பேசாமலோடிப்போங்கள் மகாராஜாவுக்குத் தெரிந்தால் உயிருக்குமோசம் வரும் என்று கோபித்துச் சொன்னான். உடனே கண்ணன் அவன் தலையைப்புடைத்துக் கீழேதள்ள அவனுடன் வந்த வண்ணார்கள் தங்கள் துணிமூட்டைகளைப் போட்டுவிட்டோடிப்போனார்கள். அந்தமூட்டைகளிலுள்ள நல்லவஸ்திரங்களையெடுத்து இடையர்களுக்குங் கொடுத்து மூத்தபிரானுந்தானு முடுத்துக்கொண்டார்கள். பிறகு அங்குவந்த நெசவாளியொருவன் அவர்களுக்கு வஸ்திரங்களாற் சிறப்பான அலங்காரஞ் செய்தான். அலங்கரிக்கப்பட்ட அந்தகண்ணனும் பலராமனும் வீதியில் நடந்தது காராளைக்குட்டியும் வெள்ளானைக்குட்டியும் கூடிநடப்பது போன்றிருந்தது. அப்படி அலங்காரஞ் செய்த நெய்வோனுக்கு இம்மையில் சகலமான இஷ்டசம்பத்தும் மறுமையில் தன் திருவடியுங் கிடைக்கும்படி கண்ணபிரான் கடாக்ஷஞ் செய்தருளினார். அப்புறஞ்சென்று சுதாமா எனப்பெயருள்ள ஒரு பூத்தொடுப்பவனில்லம் புக அவனெழுந்து அவ்விரண்டுமூர்த்திகளையும் பக்தியோடு வணங்கி நமஸ்கரித்து சகலோபசாரங்களும் செய்து பூலோகத்தைக் காத்தருள அவதரித்தமூர்த்திகளிருவரும் இங்கெழுந்தருளினமையால் அடியேனுக்கு சகலாநிஷ்டமும் நீங்கி சகல இஷ்டமும் உண்டாயின. யாவரிடத்தும் வேற்றுமையின்றி கிருபை செய்யும் நீங்கள் பக்தர்களிடத்தில் விசேஷகிருபை செய்தல் பக்ஷபாதமாகாது. ஆகையால் தாஸனை அடியேன் என்னகைங்கரியஞ் செய்யவேண்டுமோ அதை நியமிக்கவேண்டும். அடியேனிடத்தில் அருள்புரிந்து அடியேனால் சமர்ப்பிக்கப்படும் இம்மலர்த் தொடைகளை அங்கீகரிக்கவேண்டும் என்று சொன்னான். அப்புஷ்பத்தைவாங்கி எல்லோரும் அலங்காரஞ்செய்துகொண்டு அவனுக்கு சகலசம்பத்தும் சந்ததிப்பெருக்கமு முண்டாகவும் அவன்வேண்டியபடி தம்பித்து மாறாதபக்தியிருக்கவும் வரமளித்து மூத்தபிரானுடன் கூடிச் சென்றார்.

## 42-ம் அத்தியாயம்.

### கூனியைச் சுந்தரியாக்கியதும் வில்லை யொடித்ததும்.

ராஜமார்க்கத்தில் செல்லுங் கண்ணன் உடலிற் கூன்வளைந்தவளும் அழகிய முகமுள்ளவளுமான ஒரு யுவமடந்தை ஒரு கிண்ணத்தில் கலவைச்சந்தனங் கொண்டுபோகக்கண்டு சுந்தரி, நீயார்? இந்தச்சந்தனம் யாருக்குக் கொண்டுபோகிறாய் இதில் எங்கட்குக்கொஞ்சம் கொடுப்பாயாகில் உடனே உனக்கு நன்மையுண்டாகும் என்னக்கேட்க அந்தப்பெண் சுந்தராங்கா, அடியேன் கம்சன் வீட்டில் வேலைசெய்பவள் என்பெயர் திரிவக்கிரை என்பது. சந்தனம் அரைக்குந் தொழிலிலுள்ள என்னைக் கம்சன் மிக மெச்சுவதுண்டு பரிமளமும் வர்ணமுமுள்ள இச்சாந்து உங்கள் திருமேனியில் பூசப்பெற்றாலன்றிப் பயன்பெறாது என்று சொல்லிக் கண்ணன் பலபத்திரர்களுடைய அழகிய மிருதுவான திருமேனி, கடாக்ஷம், இன்சொல், புன்னகை முதலியவைகளால் பரவசப்பட்டு அவர்களுக்குச் சந்தனத்தைப் பூசினாள். பொன்னிறமான அந்தச்சந்தனத்தால் அவர்கள் திருமேனி பூசப்பட்டவளவில் அத்திருமேனிகளின் அழகினால் அந்தப்பூச்சுக்கு விசேஷகாந்தியுண்டாயிற்று. பின்பு கண்ணபிரான் அந்தக்கூனிக்கு அருள்செய்யக்கருதி அவளது கால்நுனிகளைத் தம்திருவடிகளால் அழுத்திக்கொண்டு இரண்டுகைவிரல்களால் மோவாயடியைத்தாங்கி அவளது உடலை நிமிர்த்துத்தூக்கி நிறுத்தினர். அப்போது அவள் முன்னுலிருந்த கூன் கோணலெல்லாம் நீங்கி தேகம் ஒழுங்காக நிமிர்ந்ததுமன்றி ஒவ்வொரு அங்கத்திலும் சிறப்பான அழகும் ஒளியுமுண்டாகி ஸ்திரீரத்தினமென்னும்படி விளங்கப் பெற்றாள். அவ்வளவில் கண்ணனைப்பிரிந்துபோகவொட்டாத காமத்துக்குள்ளாகி அவனுடைய திருப்பரிவட்டத்தைப்பிடித்துக்கொண்டு என்வீட்டுக்கெழுந்தருள்வாயாக. உன்னைப்பிரிந்துபோக வென்னால் முடியாது என்மனதை வலித்துக்கொண்டபடியால் என்மேலருள் புரியவசியம் என்று கூறி



நகைப்புடன் வேண்டப்பரமனும் தம்முடன் வந்த ஆயர்கள் முகங்களையும் பார்த்துக்கொண்டே நகைத்து பெண்ணே, நல்லது வந்தகாரியத்தை முடித்துக்கொண்டு உன் வீட்டுக்கு வருவேன். மறுதேசத்திலிருந்து பழக்கமில்லாத புதுவிடத்தில் வந்திருக்கும் எனக்கு சகல சிரமத்தையுந் தீர்க்க உன்னையன்றி வேறு சார்பில்லை தவறாது உன்னிடத்துக்கே வர விரும்புகிறேன் என்று சொல்லியனுப்பிவிட்டார். பின்பு அவர்கள் கடைத்தெருவில் போகும்போது அங்குள்ளார் பற்பல காணிக்கைகள் தாம்பூலம், மாலை, சந்தனம் முதலியவைகளால் உபசரித்தார்கள். அங்குள்ள மடந்தைகள் உடை நெகிழ்வது முதலானதுந் தெரியாமல் உடல் மறந்து நின்றனர். அங்கிருந்து தநுஸ் இருக்குமிடம் எது என்று ஜனங்களை விசாரித்துக்கொண்டேபோய் பல்காவலாளிகளாற் காக்கப்பட்டதாய், இந்திரகோதண்டம் போன்றதாய், பூஜிக்கப்பட்டதாய் விளங்கும் பெரியவில்லைக் கண்டு அருகிற் செல்லவொட்டாமல் காவலாளிகள் மறுப்பதை யவமதித்துக்கிட்டி, வலியகையிலெடுத்து இடதுகையில் தாங்கி நாணேற்றியிழுத்து அங்குள்ள யாவருங்காண யானை கரும்பை முறிப்பதுபோல அலக்ஷியமாய் நடுவிலொடித்தார். அதனாலுண்டான முழக்கம் திக்குதிக்கு பூமி ஆகாசமெங்கும் பரவியது. அஃதறிந்து கம்சன் மிக அஞ்சினன். அந்தவில்லிற்குக் காவற்காரராயிருந்தவர்கள் கடுஞ்சினங் கொண்டு திரண்டு கண்ணனை அடிக்கவும் பிடிக்கவும் கட்டவு முயன்று சூழ அந்தக்கொடியவர்களை மூத்தபிரானும் கண்ணனும் முறிக்கப்பட்ட வில் துண்டிரண்டையும் கைகளிற் கொண்டு நன்றாகப் புடைத்து முடித்ததுமன்றிக் கம்சனேவலால் வந்த சேனையையும் மடித்து அங்கு நின்றும் புறப்பட்டு நகரத்தின் சம்பத்துக்களைப் பார்த்துக்கொண்டு சென்றனர். அவர்களது அழகையும் குணங்களையும் வலிவையும்கண்ட ஜனங்கள் அவர்கள் பகவானுடைய மூர்த்திகளேயன்றி சாமானிய மனிதரல்லர் என்று நினைத்தார்கள். இவ்வண்ணம் பகல் முழுதும் புரத்தைச்சுற்றியுலாவி இடையர்களுடன் வண்டிகள் விட்டிருக்கும் மிடஞ்சேர்ந்து பாலடிசிலுண்டு இரவில் இனிது சயனித்திருந்தார்கள். கம்

சன் வசுதேவகுமாரர்கள் விளையாட்டாக வில்லை முறித்துக் காவலர்களையும் படைகளையும் கொன்றதறிந்து ஒன்றுந் தோன்றாமல் தான் விழிப்பிலுங் கனவிலுங் கண்டுள்ள அபசகுனங்களையும் நினைந்து அஞ்சிக்கலங்கி துயில்கொள்ளாது துன்புற்றிருந்தனன். அவன்கண்ட அபசகுனங்களாவன:—ஜலம் கண்ணாடி முதலியவற்றில் தோன்றும் தனது பிரதிபிம்பம் தலையற்றதாய்ப் புலப்படுதல், ஒரு காரணமுமின்றி சந்திரன் நக்ஷத்திரங்கள் ஒன்றே இரண்டாகப் புலப்படுதல், தன்னிழலில் சந்துகள் தோன்றல், தன்மூச்சொலி தனக்குக் கேளாமை, மரங்கள் பொன்னிறமாகத் தோன்றல், தன்னடிச்சுவடு தனக்குப் புலப்படாமை ஆகியவை விழிப்புவேளையிலும், இறந்தவர்களோடு தான்கூடியிருக்கக்காணல், கழுதையூர்தல், தாமரைத்தோடுண்ணல், அரளிமாலை முதலியன சூடி ஒருவனாய்த் தெற்கேசெல்லுதல், எண்ணெயிட்டுக்கொள்ளல், உடையிழந்திருக்கை இவை முதலானவை கனவிலும் நேரிட்டிருப்பதாலும் கம்ஸனுக்கு மரணபயமுண்டாகி அது வரவர அதிகமாயிற்று. அன்றிரவு சென்று சூரியன் உதயமானவுடன் கம்சன் மல்லர் போராட்டம் நடப்பிக்கத் தொடங்கினமையால் அந்தந்தப் பணியாளர் போர்க்களத்தைக் கட்டளைப்படி ஒழுங்குபடுத்தி அலங்காரஞ் செய்தார்கள். அநேக வாத்தியங்கள் முழங்கின. கட்டில்கள் அணிவகுத்துப் போடப்பட்டன. அவைகளில் நாட்டாரும் நகரத்தாருமான பிராமண க்ஷத்திரியர் நெருக்கமின்றி அமர்ந்தார்கள். ராஜாக்கள் தக்க ஆஸநங்களிலுட்கார்ந்தார்கள். கம்ஸன் மந்திரிகள் சூழ்ந்து நிற்க ராஜாஸனத்தில் வந்து உட்கார்ந்தான். அவன் மனதில் மிகுந்த விசனம் நிலைத்திருந்தது. அப்போது உடை அணிமுதலியவற்றால் அலங்கரிக்கப்பெற்று பெருமுழக்கமாகத் தோள்களைத் தட்டிக்கொண்டு சாணூரன், முஷ்டிகன், கூடன், சலன், தோஸலன் என்னும் மல்லர்கள் முன்சென்று களத்திலுட்கார்ந்தார்கள். நந்தகோபன் முதலியவர்களும் அரசனுக்குக் காணிக்கை செலுத்திவிட்டு ஒரு கட்டிலில் உட்கார்ந்தார்கள்.

---



## 43-ம் அத்தியாயம்.

## குவலயாபீடவதம்.

அந்த வாத்தியகோஷங் கேட்டபிறகு இதுவரையில் பலவாறாக அவதாரமகிமை தெரிந்தும் வசுதேவரைச் சிறைப்படுத்தியேயிருப்பதாலும் நம்மைக்கொல்ல முயலுதலாலும் இனி இக்கொடிய கம்சனை மாமனென்று பாராட்டாமல் மடித்தலே தகுமென்றெண்ணிய கண்ணனும் மூத்தோனும் களம்பார்க்க வரும் வழியில் பாகனாலேவப்பட்ட குவலயாபீடமென்னும்யானை தடையாக நிற்கக்கண்டு கண்ணன் மேகமுழக்கம்போல் கம்பீரமானகுரலுடன் பாகனை நோக்கி அடா பாகா! எங்களுக்கு வழிவிடாவிடில் யானையுடன் உன்னையும் கூற்றின்பாற் செலுத்துவேன் என்று உரைக்கப் பாகன் கடுங்கோபத்துடன் கொலையானையை பகவான்மேல் விழுந்தடிக்கும்படி யேவ அதுவும் கண்ணனுக்கெதிரில் ஓடித் துதிக்கையாற் பற்றியது. பகவான் துதிக்கையிலிருந்து வழுவி அதையுதைத்துவிட்டுக் கால்சந்தில் ஒளிந்தார். அவர் கண்ணுக்கு புலப்படாமையால் அது மோப்பினுணர்ந்து மறுபடியும் துதிக்கையாற் பிடிக்க பார்த்தது. அவர் பிடிபடாமல் வெளியேவந்து வாலைப்பிடித்து வலிய இழுத்து கருடன் பாம்பை இழுப்பதுபோல விளையாட்டாகவே இருபத்தைந்து வில்லளவுதூரம் ஓட்டங்காட்டி இடமும் வலமுமாக அலைக்கழித்துவிட்டு எதிரில் வந்து கையால் புடைத்தார். அது தன்னைத்துரத்திக்கொண்டு வரும்படியாக ஓடிக்கொண்டே அகப்படுவதுபோல காட்டியும் ஓடியும் அது தானே சோர்ந்துவிழுமளவும் விளையாடினார். அப்படி விழுந்த யானை தன்முன்னே கண்ணன் விழுந்திருக்கிறதாகக்கண்டு தந்தங்களாற்குத்த அக்குத்து நிலத்திற் பாய்ந்தது. இதனால் யானைக்கதிக கோபமுண்டாகிக் கண்ணன்மேற்பாய்ந்தது. அது ஓடிவரும்போதே கண்ணனெதிரேகித் தன்கையால் துதிக்கையைப்பிடித்து வலித்துக் கீழேதள்ளி மேலே சிங்கம்போலேறி அழுத்தி தந்தத்தைப் பிடுங்கி அதனால் யானையையும் யானைக்காரர்களையும் அடித்து மடித்துவிட்டு தந்

த்தைத் தோள்மேற் சாத்திக்கொண்டு தமையனுடனும் இடையர்களுடனும் களத்துக்குள் பிரவேசித்தார். அப்படி கண்ணன் வரக்கண்ட மல்லர்கள் இடிவிழுந்தாற்போலஞ்சினர். மடந்தையர் மதனனென மோகித்தனர். துஷ்ட ராஜாக்களடங்கினர். தீர்த்தந்தையர் அன்புகூர்ந்தனர். கம்சன் கூற்றென நினைத்தான். தத்துவஞானிகள் பரமபக்தி செய்தனர். முற்றதெரியாத ஜனங்கள் சாமனியசூரனெனவும், அன்புள்ளவர் நல்ல பிரபுவெனவும், இடையர் தம்மவனெனவும் கொண்டாடினார்கள். குவலயாபீடயானையை மடித்து நோகாமல் வந்த அவ்விருவரையும் கண்ட கம்சன் இயற்கையாய்த் தீரனாயிருந்தும் அப்போது மிகவும் நடுங்கினான். கூத்தாட்டவையில்வரும் வேஷதாரிகள்போல அவ்விருவரும் மற்களத்தில் அழகிய வேஷம்பூண்டுவந்து அங்குள்ளவர் மனங்களையிழுத்தனர். அப்போது மஞ்சங்களிலுட்கார்ந்திருந்த காட்டார் நகரத்தாரெல்லாம் இவர்கள் பகவானுடைய திவ்விய மூர்த்திகளொவ்வொன்றையுடையுளதோ என்று மிகுந்த ஆவலுடன் கண்களால் திருமேனியைக்கண்டு தணியாக்காதலுடன் அதிக போக்கியமான அந்த திவ்விய சுவரூபத்தைக்கண்டு ஐம்பொறிகளாலும் நுகர்வார்போல வேறொருவிஷயமும் மனதுக்குத் தோன்றாமல் தங்களுக்குள்ளே அந்த பகவான் வசுதேவனில்லத்தில் தேவகி திருவயிற்றிற்றோன்றி நந்தகோகுலத்தில் யசோதைமகனென ஒளிந்து வளர்ந்ததும், பூதனைமுதலிய துஷ்டர்களை முடித்ததும், கன்று மேய்த்ததும், காலி மேய்த்ததும், பிரமன் இந்திரன் முதலியவர்களின் கருவத்தை அடக்கியதும், கோவர்த்தனத்தைக் குடையாகத் தாங்கியதும், குழலூதியதும், குரவை கோத்ததும் முதலாகக் கேள்விப்பட்டிருந்த திவ்விய லீலைகளையெல்லாம் பேசிக்கொண்டு மகிழ்ந்திருந்தார்கள். இப்படி ஜனங்கள் பேசிக்கொண்டிருக்குங்காலத்தில், போர் தொடக்கக்குறியான வாத்தியம் முழங்கச் சாணூரனென்னும் மல்லன் கண்ணனையும் பலதேவனையும் விளித்து நந்தன்குமாரர்களே, நீங்கள் வலியவர்கள், மல்லயுத்தம் செய்யவல்லீர்களெனக் கேள்வியாலுணர்ந்த நமது மகாராஜன் மல்லயுத்தங் காணவேட்கையாலுங்களையும் மெங்களையும் வரவழைத்தார். இடையர்கள் காலிமேய்த்துக்கொண்



டே மற்போரில்பழகுவது பிரசித்தமானது. ஆதலால் நம்மரசன் மகிழும்படி மல்ல யுத்தஞ்செய்வோம் வாருங்கள். அரசன்சகல தேவருடைய அம்சங்களையுங் கொண்டிருப்பதாக சாஸ்திரங்களோதுகின்றனவாதலால் அரசன் உகக்கும்படி நடந்தால் சகல தேவரையும் உகப்பித்ததாகும் எனக்கேட்டு, கண்ணன் நீசொன்னது மெய்தான் யாவரும் அரசனுக்குப்பிரியமானபடி நடக்க வேண்டியதென்பதில் ஆக்ஷேபமில்லை. ஆகிலும் சிறுவயதினராகிய எங்களுக்கிடானவர்களுடன் போர்புரிவது நியாயம். அங்ஙனமன்றி வலிமிக்கவரும் வலியில்லாதவரும் போர்புரிந்தால் அதைப்பார்த்துக்கொண்டிருக்கும் ஜனங்களுக்கே தோஷமுளதென்றால் தகாத போர்புரிபவர்களுக்குச் சொல்லவேண்டுமோ என விளம்பியதைக்கேட்டச்சாணூரன் அப்பா, நீயும் பலராமனும் சிறுவரும் வலியற்றவருமன்று அதிக பலவான்கள் ஆயிரம் கஜங்களுக்கும் இளைக்காத குவலயாபீடத்தை அலக்ஷியமாக பாகனுடன் கூட மடித்துவிட்டு நோகாது வந்ததனையே வலிந்த வேஷங் காட்டுகிறாய் ஆதலால் என்னுடன் நீயும் முஷ்டிகனோடு மூத்தோனும் போர்செய்ய யாதொரு தடையுமின்றி தக்கவராயிருக்கிறீர்கள்.

---

## 44-ம் அத்தியாயம்.

---

### கம்ஸவதம்.

---

இவ்வண்ணம் தனது சங்கற்பப்படி இணங்கிவந்த சாணூரனுடன் கண்ணனும் முஷ்டிகனோடு பலபத்திரரும் எதிர்த்துப் போர்தொடங்கித் தோள்களையுந் தொடைகளையுந் தட்டிக்கொண்டு ஒருவரையொருவர் பிடித்தும் விட்டும் இடமும் வலமுமாக உலாவியும், ஒவ்வொருவர் கைகளையுங் கால்களையும் கோத்திழுத்தும், ஒருவரையொருவர் வெல்லவேண்டுமென்கிற எண்ணத்தோடு உன்னுகையை உள்ளங்கையாலும், முழந்தாளை முழந்தாள

னும், தலையைத் தலையாலும், மார்பை மார்பாலும், முட்டிப்புடைத்தனர். கையைப்பிடித்தொருவரை யொருவர் சுற்றியிழுத்தும், வெட்டித்தள்ளியும், கைகளாற் பிசைத்தும், இழுத்துத்தள்ளியும், ஒருவர்க்கொருவர் கதிர்முகமாகவே பின்னிட்டும், பின் திரும்பிநடந்தும், கீழே தள்ளித் தூக்கியும், சுழற்றிப்பிணைப்பை நீக்கியும், கீழே அழுத்தியும், இன்னும் பற்பல செய்கைகள் பலமுறை செய்தும் எதிரி உடல் நலியச்செய்தனர். இவ்வாறிவ்விருவரும் ஒருவரையொருவர் வெல்லவும் கொல்லவும் விரும்பிப் போராடும்போது அங்குகூடிப்பார்த்திருந்த பெண்டிர்கள் வலியவர்களுக்கும் சிறுவர்களுக்கும் போர்விளைக்கலாகாதென்று இந்த அரசன் அப்படி போர்விட்டுப் பார்த்துக்கொண்டிருப்பதைச் சம்மதித்து இச்சபையிலுள்ளார் தாமும் பார்க்கிறார்களிவரு பெரும் பாபமாம். வச்சிரம் போன்ற தேகமுள்ள சாணூரமுஷ்டிகர்களுக்கும், புஷ்பம்போன்ற மேனியுடைய இச்சிறுவர்கட்கும் போரியலுமா என்று சிலரும், சபையில் அதருமம் நடக்கத்தெரிந்த ஒருவன் தாக்ஷிணியத்தால் சொல்லாது வாளாவிருக்கினும் அதருமத்தைத் தருமமென்று பேசினும் கொடிய நிலைக்குள்ளாவானாதலால் சபைக்குள் புகாமலிருப்பதே நலமென்னலாமெனச் சிலரும், சத்துருவின் நாலுபக்கங்களிலும் சுழலாநின்ற கண்ணன் திருமுகம் வேர்வையரும்பியிருப்பதும், பலராமன் கண்கள் கலங்கிச்சிவந்திருப்பதும் பார்த்தீர்களோ என்று சிலரும், இந்தமகாத்துமா ஆநிரை மேய்த்துக்கொண்டு மெல்லிய திருவடிகளால் நடக்கப்பெற்ற பிருந்தாவனத்து நிலங்கள் நிகரற்றபுண்ணிய பூமிகளென்று சிலரும், பால்கறக்கும்போதும், உரலிலிட்டுக் குத்தும்போதும், தயிர் கடையும்போதும், வீடு வாசல் மெழுகும் போதும், ஊசலாடும்போதும், அழுங்குழவிகளைச் சமாதானப்படுத்தும்போதும், நீர்தெளிக்கும்போதும், இந்தமகாத்துமாவின் சரிதங்களையே பாடிக்கொண்டிருக்கப்பெற்ற சேரித்தையலார் என்னவகைத் தவஞ்செய்தாளரோ எனச்சிலரும் பேசிக்கொண்டிருக்கும்போது சங்கற்பத்தால் சகலமும் நடத்தும் பகவான் பகைவனை முடிக்க நினைத்தார். அப்போதந்தப் பெண்டிர்கள் பேசுவதைத் தேவகியும் வசுதேவரும் கேட்டு மகன்மேலாசையினால் மதி



மை மறந்து வருந்தியிருந்தார்கள். அப்போது சாணூரனுங் கண்ணனும் எவ்விதமான மல்ல யுத்தஞ் செய்தனரோ அவ்விதமாக முஷ்டிகனும் பலபத்திரனும் செய்தார்கள். இடிவிழுந்தாற்போல் நிகராய் கண்ணனது திருமேனி தாக்குவதால் தாக்குண்டவனுடைய சாணூரன் உடல் நலிந்துமெலிந்தான். அப்படி மெலிந்தும் அவன் கோபவேகத்துடன் பருந்து போலோடிவந்து பகவான் திருமார்பிலறைந்தான். பகவான் அதற்கு சிறிதுஞ் சலிக்காமல் அவன் கையிரண்டையுஞ் சேர்த்துப்பிடித்திழுத்துச் சுழற்றி நிலத்தின்மேல் விழுந்து நொறுங்கும்படி மோதினார். அதனால் அவன் கேசங்களும் பூஷணமுங் கலைந்து உயிர்போய் விழுந்தான். இங்ஙனநிகழ, முஷ்டிகன் பலபத்திரனைக் கைப்பிடியாற் குத்திய குத்துக்குக் கலங்காது அவருள்ளங்கையாலடிக்க, அவ்வடி தாங்கமாட்டாமல் வாயாலுதிரத்தைக்கக்கிக்கொண்டு பெருங்காற்றால் பெருமரம் வீழ்வதுபோல உயிர் நீங்கி விழுந்தான். பின்பு கூடனென்பவனெதிர்த்துவர அவனையும் பலராமன் விளையாட்டுப்போல இடக்கைக்குத்தால் முடித்தார். அப்படியே சலனும் தோசலனும் கண்ணன் பாதங்களாலுதைக்கப்பட்டு தலையற்று விழுந்தனர். இப்படி மல்லர் ஐவரும் மடிந்துவிழக்கண்டு மற்ற மல்லர்களனைவரும் தம்முயிரைக்காக்கவேண்டி நெடுந்தூரமோடினார்கள். பலபத்திரனுங்கண்ணனும் தோழராகிய இடையர்களைக் கூட்டிக்கொண்டு வாத்தியமுழக்கங்களுக்கிணங்க தாளம்போடுவது போல சிலம்பை ஒலிப்பித்துக்கொண்டு ஆடினார்கள். இவ்விதமிவர்களின் செயலைக்கண்டு ஜனங்களெல்லாம் களிக்கக்கண்டு கம்சன் முழங்கும் பறைகளை நிறுத்தி துஷ்டப்பயல்களான வசுதேவன் பிள்ளைகளைத் துரத்தியடியுங்கள்; இடையர் பொருளையெல்லாம் பறித்துக்கொள்ளுங்கள்; நந்தகோபனைச் சிறைப்படுத்துங்கள்; துர்ப்புத்தியான வசுதேவனைக் கொல்லவேண்டும், என் பிதாவாயினும் என் விரோதிகள்மேல் பற்றுள்ள, உக்கிரசேனனையும் அடிக்கவேண்டும் என்றிப்படி பிதற்றிக்கொண்டேயிருக்க பகவான் கோபித்து, வேகமாயெழும்பி அவனிருந்த கட்டில்மேலேறினார். அப்போது யமன்போல் தன்னருகில் வந்த கண்ணனைப் பார்த்து சடிதியிலெழுந்து கத்தியுந் தோலுங் கை

க்கொண்டான். இப்படிச் சுத்தியையுமீசர் இலக்கு நோக்கும்
கம்சனைப்பார்த்து சர்வலோகாதாரரும் சர்வநியந்தாவான பக
வான் பாம்பைக் கருடன் பிடிப்பது போல அவன் தலையினைப்
பிடித்துத் தூக்கிப்ப டியிலிருந்து களத்தில் விழும்படி தள்ளி
அவன்மேல் இடி விழுந்தாப்போல தானுமே விழ அவனுயிர் மாய்
ந்தான். இப்படி கம்சனிறந்ததைக்கண்டு சகல ஜனங்களும்
ஆ ஆ வென்று கூவினர். அந்த கம்சனானவன் நெடுநாட்களுக்கு
முன்னே ஸ்ரீஹரியால் தனக்கு மரணம் வருமென்றுணர்ந்து அ
ஞ்சி, உண்டி, உடை, கொடை, துயில் முதலிய எத்தொழில்
செய்யும்போதும் தவறாமல் பகவானையே நினைந்து கொண்டிரு
ந்து முடிவில் ஸ்ரீஹரியின் திருமேனி தன்மேல் தாக்கப்பெற்ற
தால் அந்தக்கண்ணபிரான் சாரூப்யமே பெற்றான். கங்கன்,
நியக்குரோதன் முதலிய கம்சன் தம்பிகளெண்மரும் கோபித்து
அண்ணன் பகையைத் தீர்க்கக்கருதி எதிர்த்தோடிவர அவர்களை
க்கண்ட பலராமன் சிங்கம் பசுக்களைக் கொல்லும் விதமாக ஓர்
உழலையைக் கையிற்பிடித்து ஒருமிக்கப்புடைத்து முடித்தார்.
பின்பு தேவர்கள் பிரமா முதலிய பகவானுடைய லீலாபரிஜன
ங்கள் வாத்திய முழக்கம், பாட்டு, ஆட்டம், புஷ்ப வருஷமுதலிய
உபசாரணைகள் செய்தனர். கம்சனும் அவன் தம்பிமார்களுமிற
ந்து கிடக்கக்கண்டு அவர்களின் மனைவிகள் எங்களையினிதாகா
த்த பிரபு இப்போது நீயிறந்தமையால் நாங்கள் உயிரிருந்தும்
இறந்ததற்கு மேலான ஆபத்தையடைந்தோம். நீயில்லாமை
யால் எங்களுறு மாய்ந்ததுபோல இந்நகரத்தின் சிறப்புங்கெட்
டது. தம்மவருக்கெல்லாந் தீங்குசெய்து எவன் சுகப்படுவான்.
ஆதலால் பற்று ஜனங்களைப்பகைத்த நீகெட்டு எங்களையுமிப்படி
துன்பப்படுவித்தாய். பந்துக்களைப்பகைத்ததன்றியும் யாவும்
அமைத்தளித்தழிக்கும் பகவானையும் பகைத்தனை. பகவானுக்கு
விரோதியான எவனுக்கு நன்றுளதாகும். எப்படியோ நீயிறந்
தாய். நாங்களிருந்து வருந்துவோம். என்று புலம்ப பகவான்
அவர்களை இனிய சத்திய வசனங்களால் தேற்றி இறந்தவர்களு
க்குச் செய்யவேண்டிய கருமங்களை நடப்பித்து பலராமனுடன்
சென்று தாய்தந்தையர்களை விடுவித்து அவர்களுக்கு வந்தனஞ்



செய்து நிற்க, அவர்களும் பகவானது மூர்த்திகளான குமாரர்க
ளைக்கண்டு சகலமான அச்சமும் நீங்கி ஆர்வமிகுந்து தழுவிக்கு
லாவினர்.

## 45-ம் அத்தியாயம்.

## ராமகிருஷ்ணர்களுடைய உபாயனமும் வித்தியாப்பியாஸமும்.

தாய்தந்தையர் தன் சுரூபத்தை யுள்ளபடியறிந்தால்
தான் ஸங்கற்பித்திருக்கும் மற்ற லீலாவிசேஷத்துக்கு ஒவ்வா
தென்று யாவரையு மயக்குந்தனது மாயையை அவர்கள்மேல்
செலுத்தி அம்மா, அப்பா என்றன்புடன் விளித்து எங்கள்மீது
நீங்கள் எப்போதும் விருப்பமுற்றிருந்தும் இந்த வயது வருமள
வும் எங்களால் நீங்களடையவேண்டிய இன்பம் உங்களுக்குண்
டாகப் பெற்றிலோம். எங்கள் பாக்கியக் குறைவாலிந்நாள்
வரையிலும் உங்களண்டையிருக்கவும் பெற்றிலோம். மனிதன்
சகலமான புருஷார்த்தங்களையும் பெறுவதற்குக் காரணமான
தனது தேகத்தைப்பெற்றுவளர்த்த தாய்தந்தையர்க்கு நூறு
வருஷம் பணிவிடை செய்யினுங் கைம்மாறுசாது. தாய்தந்தையர்
விஷயத்தில் தன்னுடலையும் பொருளையும் உபயோகிக்கச் செய்
யாத பாபியாயிருக்குமொருவன் இறந்தால் அவனைக் கிங்கர
மர்கள் வலியப்பிடித்து அவன் மாமிசத்தை அவனே புசிக்கும்
படி தண்டிப்பார்கள். தாயையும், தந்தையையும், தமையனையும்,
கற்புடைய மனைவியையும், சிசுவான பிள்ளைகளையும், குருமாரை
யும், பிராம்மணரையும், அடைக்கலம் புகுந்தவனையும், தன்னியல்
புக்கேற்க ரக்ஷிக்காத மனிதன் நடைப்பிணமெனப்படுவான்.
இதுவரையில் நாங்கள் கம்சனுக்கஞ்சி ஒளிந்து உங்களை உபச
ரிக்காமல் காலத்தை வீணாய்ச் செலுத்தினோம். ஆனால் இந்தப்
பிழையெங்களால் நேரிட்டதில்லை. விரோதியான கம்சனால் நாங்
களும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்ததையறிந்திருக்கும் நீங்

கள் எங்கள்மீது கிருபையே செய்யற்பாலது. இவ்விதமாக மா
யாமனிதனான புகவானுரைத்ததைக்கேட்டு தேவகீ வசுதேவர்கள்
மெய்க்குற்றவர்களாய் அவர்களை மடிமேலேற்றித்தழுவி மிகுந்த
மகிழ்ச்சியடைந்து கண்ணீர் சொரிந்து, ஆர்வத்தாற் பிணிக்கப்ப
ட்டவர்களாய், நெடும்போது பேசவாயெழாமல் மோகத்திலாழ்
ந்தார்கள். [illegible] இவ்வாறு தாய்தந்தையர்க்கினியனபேசிக்
களிப்பித்து பின்பு தாயாரின் தந்தையாகிய உக்கிரசேனனை
யதுகுலத்தார்க்கரசனாக்கிச் சொன்னதாவது:—தாதா, நாங்க
ளெல்லாம் உமக்குப் பணிவிடை செய்யக் காத்திருக்கிறோம்.
எங்களாலாகவேண்டியவற்றுக்கு உத்திரவு செய்யலாம் யயாதி
சாபத்தினால் யதுகுலத்தார் சிம்மாசனத்துக்கு உரியரல்லாரா
யினும் உமக்கு நான் இட்டவேலையைச் செய்யக் காத்திருப்ப
தால் தேவர் முதலியவர்களும் உமக்குத் திறைகொடுப்பாரென்
பதற் கையமில்லை. பூலோகத் தரசர்களைப்பற்றிச் சொல்லவா
னேன் என்றுரைத்துப் பின்பு வாயு தேவனைக்கூவி இந்திரனு
டைய சுதர்மை யென்னும் சபாமண்டபத்தை உக்கிரசேனராஜ
னுக்குக் கொணர்ந்துகொடு என்று நியமிக்க, அவனும் இந்திரனு
க்குக் கண்ணபிரான் கட்டளையைத் தெரிவித்து அனுமதிகொண்
டு அந்தச்சபையைப் பூமிக்குக்கொண்டுவந்து உக்கிரசேனனுக்கு
ஒப்புவித்தான். பின்பு ஸ்ரீவாசுதேவன் கம்சனுக்கஞ்சிச் சிதறி
மறுதேசங்கள் போய் வருந்தியிருந்த பந்துக்களான யது, விரு
ஷ்ணி, அந்தக, மது, தசார்ஹ, குகுர என்னும் சந்ததியாரை
முன்போலத்தத்தம் இல்லங்களுக்குவந்து சேரும்படி வருவித்து
அவரவர்களுக்குத் தேவையான உதவி செய்து சுகமாயிருக்கும்
படி செய்தார். இவ்வண்ணம் நகர் நாடுகளிலுள்ள யாவரும்
கண்ணனது கிருபாகடாக்ஷத்துக்குப் பாத்திரர்களாய் நாடோறு
ங்கண்ணன் திருமுகத்தை தரிசித்துக் கொண்டிருக்கப்பெற்று
எவ்வகைத்துயரமுமன்றி யின்பம் பெருகி வாழ்ந்தார்கள். ஆங்
குள்ள முதியவர்களும் தருணர்போல தேகதிடம் பெற்றனர்.
ராமகிருஷ்ணரிருவரும் நந்தகோபன் தங்கியிருக்குமிடஞ் சேர்
ந்து ஐயா தாய்தந்தையர் தமது தேகத்திலும் பிள்ளைகளை அதி
கமாக நேசிப்பது இயல்பன்றோ ; நீங்களூட்டி வளர்க்க வளர்ந்



தோம். பெற்ற தாய்தந்தையர் வளர்க்கத்திறமில்லாமல் கைவிட்
ட பிள்ளைகளை அன்புகூர்ந்து வளர்த்தவர்களே அந்தப்பிள்ளை
களுக்கு தாய்தந்தையராவார். ஆகிலும் நீங்கள் வந்து நெடுநா
ளானபடியால் இப்போது கோகுலத்துக்குச் செல்லவேண்டு
மென் பிரார்த்திக்கிறோம். இங்கே கம்சனால் வருத்தப்பட்டுச்
சிர்குலைந்திருக்கும் பந்துக்கள் முதலான ஜனங்களையெல்லாம்
நல்லநிலையில் நிறுத்தி நாங்கள் சிலநாளிங்கிருந்து அவ்விடம்
வருவோம் என்று இனிது சொல்லி, பரிஜனங்களுடன் கூடிய
நந்தகோபற்கு வஸ்திரம் ஆபரணம் தனம் முதலியன அன்போடு
கொடுத்து உபசரிக்க, நந்தகோபரும் அவர்களைத்தழுவிக்கொ
ண்டு நேசபாசத்தால் தளர்ந்து பிரிந்து போக மனம் இசையா
விடினும் மறுத்துரைக்கவில்லாமல் கண்ணீர்மல்கக் கண்ணனை த்தி
ரும்பிப்பார்த்துக்கொண்டே கோகுலம் நோக்கிப் பிரயாணப்பட்
டுச் சென்றார். பின்னர் வசுதேவர் பிள்ளைகளுக்கு உபநயநஞ்
செய்து தம்புரோகிதரான கர்க்காசாரியர் முதலின பிராமண
களை அநேகவஸ்திர பூஷணாதிகளால் உபசரித்து அவர்களுக்கு
பொற்பூண்கள் பூட்டி பட்டால்போர்க்கப்பட்ட கறவைப்பசுக்
களை தக்ஷிணையுடன் கொடுத்தார். மேலும் கண்ணன் திருவவ
தாரகாலத்தில் மனோதத்தம் செய்யப்பட்டிருந்த பசுக்களையும்
அப்போது சாக்ஷாத்தாகத் தானஞ்செய்தார். பின்பு சகல வித்
தைகளுக்கும் பிறப்பிடமாயும் இயல்பாகவே சகல ஞானமும் சக்
தியுமுள்ளவர்களாயுமிருக்குமந்த இரண்டு மூர்த்[illegible]களும் தம[illegible]
பெருமையை எல்லாரு மறியாவிதமாக மானிடவடிவ [illegible]கள்
கொண்டவர்களாய், உபநயநச்சடங்குசெய்யப்பட்டு, யதுகுலத்
துக்கு குருவான கர்க்கரிடத்தில் காயத்திரி உபதேசம் பெற்று உ
லகநீதிப்படி குருகுலவாஸஞ்செய்து வேதாதிசாஸ்திரங்களோத
வேண்டுமென்று நினைத்து காசிநாட்டில் அவந்திநகர்வாசியான
சாந்தீபினி என்னும் மகாப்பிராமண சிரேஷ்டரிடமணுகி அவருக்
குக்கபடமின்றிப் பணிவிடைசெய்து காத்திருந்தார்கள். அந்த
சாந்தீபினியென்பவர் இவர்களுடைய பரிசுத்தமான கருத்தையும்
தம்மிடத்தில் காத்திருப்பதையுங்கண்டு மகிழ்ந்து ஆறங்கங்களு
டன் கர்மகாண்ட ரூபமான வேதங்களையும், உபநிஷத்துக்களையும்,

அஸ்திரமந்திரங்களுடன் கூடிய தனுர்வேதத்தையும், தர்மசாஸ்திரம், நீதிசாஸ்திரம், தர்க்கசாஸ்திரம், ஆறுவகை அரசநீதி முதலியனவாய அறுபத்து நான்குகலைகளையும் அறுபத்துநான்கு நாளில் குறைவறக்கற்றுக்கொடுத்தார். இவர்களு மதிகரித்துக்கொண்டவர்களாய் குருதக்ஷிணை கொடுக்கவிரும்பி அந்த உபாத்யாயர்பக்கல்சென்று சுவாமி, எங்களால் என்ன குருதக்ஷிணை பெற்றுக்கொள்ளத் திருவுள்ளமுண்டோ அதனை நாவாயினும் ஐயுறாமல் நியமிக்கவேண்டும். நியமனத்துக்கு மாற்றமின்றி நடந்துகொள்ளுவோமென்று உறுதியான பிரதிஞ்ஞை செய்கிறோமென்று வினவ, சாந்தீபினியும் மனிதப்பிறவியில் காணலரிதான இவர்களின் ஞானம், சக்தி, விநயம், தயை, வாத்ஸல்யம் முதலிய குணங்களை கண்டுவியந்து மனையாளுடன் ஆலோசித்துச்சொன்னதாவது. முன்னம்பிரபாசதீர்த்தத்தில் எனது பிள்ளை கடலில் விழுந்திறந்துபோனான். அந்தப் பிள்ளையைப் பிழைப்பித்துத்தரவேண்டும். அதுதான் குருதக்ஷிணை என்று விரும்புகிறேன் என்றார். அதற்கவர்களும் அங்ஙனமாகுகவென்று சொல்லி ரதமேறிப் பிரபாசதீர்த்தத்துக்குப்போய்க் கரையிலுட்கார்ந்திருக்கக் கணப்பொழுதில் சமுத்திரராஜன் அவர்கள் பெருமையறிந்து அவர்களுக்கு காணிக்கை கொண்டுவந்து கண்டான். அந்த சமுத்திரராஜனை நோக்கி பகவான் நீ முன்னால் எங்கள் குருவின்மகனைப் பெரிய அலையாலிழுத்துக்கொன்றுவிட்டாயாம். அந்தப்பிள்ளையை இப்போதெங்கள் குருவுக்குக் கொடுக்கவேண்டும் என்றுரைத்தார். அதற்கு சமுத்திரராஜன் ஆண்டவனே, அந்தப்பிள்ளையை நான் விழுங்கவில்லை. நீர்க்குள் சங்கவடிவான பஞ்சஜனனென்கிற அசுரனிருக்கிறான். அவன் விழுங்கினான். அவ்வசுரனைக்கொன்று பிள்ளையைக் கைக்கொள்ளலாமெனவே கண்ணனும் நீரிற்புகுந்து அவனைக்கொன்று அவன் வயிற்றைக்கிழித்துப்பார்த்து அங்கு குருபுத்திரனில்லாமையால் அவனுடலிலுண்டாயிருந்த சங்கத்தை யெடுத்துக்கொண்டு வெளியேவந்து தேரேறி யமனது பட்டணத்துக்குச்சென்று அதை ஊதினார். அதனொலிகேட்ட தர்மராஜன் வந்து அவர்களைக்கண்டு வணங்கி பூசித்து சர்வப்பிராணிகளுக்கும் அந்தராத்துமாவாய் பகவானது லீலாமூர்த்திகளான



உங்கட்கு நான் என்ன செய்யவேண்டும் என்று பிரார்த்தித்துச் சொல்ல, தர்மராஜனே, எங்கள் குருவின் மகன் தனது கருமமூலமாக இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறான். அவனை எங்கட்டளையால் கொண்டுவா என்றவுடன் அவன் அந்தப்பிள்ளையைக் கொணர்ந்து கொடுத்தான். அந்தப்பிள்ளையை எடுத்துக்கொண்டுவந்து குருவுக்கு சமர்ப்பித்து இன்னும் வேண்டுவன என்னவாயினும் கேட்பீராக என்றனர். சாந்தீபினி இதற்கு சந்தோஷித்து நீங்கள் குருதக்ஷிணை நன்களித்தீர்கள். இவ்வளவு அருமையான காரியம் யாரால் செய்யக்கூடும். உங்களால் குருவென்று அபிமானிக்கப்பட்ட எனக்கு வேண்டத்தக்கது ஒன்றுமில்லை. ஆதலால் நீங்கள் இல்லஞ்சேரலாம். உங்கள் கீர்த்தியைப் புகழ்பவருக்கு ஒரு துன்பமுமணுகாது என்று விடைகொடுக்க முகுந்தனும் முனிவரு மிரதமூர்ந்து இருவரும் தம்புரஞ்சேர்ந்தார்கள். அவர்களைக்கண்ட அந்நகரத்தவர் இழந்த பொருளைக்கண்டாற்போல் இன்பமுற்றனர்.

## 46-ம் அத்தியாயம்.

## கோகுலத்துக்கு உத்தவரை அனுப்புதல்.

விருஷ்ணிவம்சத்தில் சிரேஷ்டரும், சகலகாரியங்களையும் நிர்வகிக்கத்தக்கமதிநுட்பமுடையவரும், தமக்கினிய தோழரும், வியாழபகவானுக்கு சிஷ்யருமான உத்தவரென்பவரை விளித்து கண்ணபிரான் ஒரு நாள் அவர்கையைத் தன்கையாற்பிடித்துக்கொண்டு சொன்னதாவது உத்தவரே, நீர் கோகுலத்துக்குப் போய் என் தாய் தந்தையருக்கு என்பிரிவாலாய துன்பந்தீரும்படி யினிது வார்த்தைகளைச் சொல்லும். மேலும் என்மேல் மனஞ்செலுத்தி என்னையே தம்முயிரெனக்கருதி என்னையன்றி யாதொரு சுற்றமும் இம்மை மறுமை யின்பமும் விரும்பாது என்விரகத்தால் வாட்டங்கொண்டு மோகித்திருக்குங் கோபிகைகள் திரும்ப என்னைக்காணலாகுமென்ற ஆசையினால் எப்படியோ உயிரை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கு

நான் சீக்கிரம்வருகிறேனாகச் சொல்லும் என்று பகவான் நியமிக்க,
உத்தவரும் அந்த நியமனத்தைச் சிரமேற் பூண்டு ரதமேறிப்
பழங்களில் மேய்ந்து திரும்பிவரும் காலிகளின் குளம்புகளா
லெழும்பிய புழுதியால் ஒளி மறைந்து குதிரைகள் மறைக்கப்படும்
படியான சாயங்காலத்தில் நந்தகோகுலத்தருகிற் சென்று ஒரு
பசுவின் விஷயத்திற் சண்டையிடுங் கொழுத்திருக்கும் மிடபங்க
ளாலும் கன்றின்மேல் ஆவல்கொண்டு அடங்காத மடிகளைச்
சுமந்துகொண்டு ஓடிவரும் கறவைகளாலும், இங்கு மங்கும் துள்
ளுகிற இளங்கன்றுகளாலும், குழலோசைகளாலும், பால்கறக்
கும் ஓசைகளாலும், கண்ணனுடைய திவ்விய லீலைகளைப்பாடிக்
கொண்டிருக்கும் கோபிகைகளாலும் கோபர்களாலும் அலங்
கரிக்கப்பட்டதாய், எங்கும் பூத்துப் பரிமளிக்கும் மரம், கொடி,
செடிகளும், நீர்ப்புட்கள் நிறைந்த தாமரைமடுக்களும் நிறைந்
துள்ள கோகுலத்துட் பிரவேசித்தார். அப்பொழுது நந்தகோபர்
கண்ணனுக்கு மித்திரரும் பரிஜனமுமான உத்தவர் வந்தது
கண்டு அன்போடெதிர்கொண்டு தழுவி அவரை பகவானாகவே
கருதி பூஜித்து இனிய அடிசிலுண்பித்து அழகிய ஆசனத்தி
லிருத்திப் பாதம்பிடித்து சிரமமாற்றிக் கேட்கலுற்றார். ஐயா,
என் சிநேகிதரான வசுதேவர் சிறைநீங்கிப் பிள்ளை பெண்டிர்
களுடனும், பந்துக்களுடனும் கூடிச்சுகமே யிருக்கிறாரா. தரு
மம் தவராத நல்லோர்களான யதுகுலத்தாருக் கெப்போதும் வி
ரோதியாயிருந்த கம்சனும், அவனைச் சேர்ந்தவர்களும் மடிந்தது
நல்லகாலம். இங்குள்ள மங்களையும், தாயான யசோதையையும்,
தோழன்மார்களையும், இடைச் சேரியையும், காலிகளையும், வன
த்தையும், மலையையும் கண்ணன் எப்போதேனும் நினைப்பதுண்
டோ." அவனே கதியென்றிருந்த இங்குள்ளாரைக் காண நினைத்து
[illegible]லொருகால் வந்தால் அழகிய புன் முறுவலும் குளிர்நோக்
குமுள்ள இனிதான அவன் முகத்தை நாம் காணப்பெறு
வோம். காட்டுத்தீ, காற்றுமழை முதலான அபாயங்களுக்குத்
தப்பி நாங்களுயிர்த்திருப்பது கண்ணன் திருவருளன்றி வேறில்
லை. இப்போது கண்ணனைப் பிரிந்து அவனது திறல்களையும் அழ
கையும் இசையையும், மொழியையும் நினைந்துக் கொண்டிருக்கு



ம் எங்கட்குச்செயற்பாலதாய் ஒரு தொழிலும் புலப்படுவதில்
லை. அவன் நடந்தமையால் அழகுபெற்றிருக்கும் இவ்விடங்களில்
ஒவ்வொன்றையுங் காணும்போது எங்கள் மனம் அவனிடத்தி
லேயே லயிக்கிறது. கண்ணனும் ராமனும் தேவர்களின் வேண்
டுகோளால் அவர்களின் காரியங்களைச் சீராக்க வேண்டி அவதரி
த்து இங்கேயிருக்கிறார்களென்று கர்க்காசாரியார் சொன்னது
சத்தியமென்று நினைக்கிறேன். ஒரு சிங்கமானது பசுக்களைக்
கொல்வது போல அலக்ஷியமாகவே ஆயிரம்யானைக்குச்சரியான
குவலயாபீட கஜத்தையும், பாகனையும், மல்லர்களையும், கம்சனை
யும் முடித்தான். மூன்று பனையளவினதும் மிகவலியதுமான
வில்லை ஒரு கையினாலெடுத்து யானை கரும்பை முறிப்பதுபோல்
முறித்தான். ஏழுநாள் மலையை ஒரு கையினாலே தாங்கி நின்
றான். பிரலம்பன் முதலிய வலிய அசுரர்கள் ஒவ்வொருவரும் தே
வர் திகைக்கும் வல்லவல்லவர்; அவர்களை விளையாட்டுப்போல மடித்
து நல்லவர்கட்கு இன்பமுண்டாக்கினான். என்று இன்னும் பல
விதமான கண்ணன் சரிதைகளை நினைந்து மனந்தளர்ந்து கண்ணீர்
வடிய முழுதும் பேசமாட்டாதவராகி நிற்க, யசோதையும் அவ்வ
சனங்களைக்கேட்டு நெஞ்சுளைக்க் கொங்கைசுரந்து கண்ணீர் பெ
ருகி நின்றாள். அவ்விருவருக்கும் பகவான் விஷயத்திலிருந்து
ள்ள பேரன்பைக்கண்டு உத்தவர் வியந்து மகிழ்ந்து இந்த கண்
ணனும் ராமனும் சகலகாரண காரணமாய், ஜீவபிரகிருதிகளுக்கு
அந்தர்யாமியாய் முக்குணங்களில் பற்றிலாததாய் இருக்கும்
தன் ஸ்வரூபத்தை யுணர வல்ல நல்லறிவைத் தந்து முத்தியளி
க்கும் பரம புருஷனுடைய மூர்த்திகளே யன்றி உலகத்து மானி
டரல்லர். அத்தகைய சர்வேச்வரனான கண்ணபிரானிடத்தில் கப
டலேசமின்றி இத்தனை யுருக்கமான அன்புவைத்துள்ள நீங்கள்
சகல பிராணிகளுக்குங் கொண்டாடத்தக்க புகழ் பெற்றிருக்கிறீ
ர்கள். ஒருவன் மரணகாலத்தில் கணப்பொழுது கபடமில்லா
மல் கண்ணனிடத்தில் மனதை நிறுத்தினனாகில் அவன் பிறவித்
துன்பத்தை யொழித்து சூரியனுக்கு மேலிட்ட ஒளி பொருந்தி
மோக்ஷம் பெறுவான். அந்த பரமாத்துமாமீது இப்படி யிடை
யறாத பேரன்பு கொண்டிருக்கும் உங்களிருவருக்கும் இனிச்செ
ய்ய வேண்டியது மொன்றுண்டோ இல்லை. இல்லை! எல்லாப்

பிராணிகளின் மனநிலையை எப்போதும் உணருபவனும், எங்கும் நிறைந்தவனுமான கண்ணபிரான் கொஞ்சகாலத்தில் கோகுலத்துக்கு வருவதாகச் சொன்ன வாக்கு பொய்யாகாது. சீக்கிரத்தில் இங்கு வந்து உங்களை ஆநந்திப்பதில் சந்தேகமில்லை. நீங்கள் வருந்தாதிருங்கள். சகலருக்கும் ஒரே சரண்யனான அப்பரமபுருஷனுக்கு அன்புக்குரியவனென்றும் பகைவனென்றுஞ் சொல்லும்படி ஒருவனுமில்லை. அவன் ஒருவனை மதிப்பதும் இகழ்வதும் இல்லை. அவனுக்கிணையாருமில்லை. அவனுக்குத் தாயுந்தந்தையும் மனைவியும் பிள்ளை முதலானவர்களும் சரீரமும் பிறப்பும் தொழிலுமில்லையாதாயினும் உலகத்தாரை ரக்ஷிக்கும்பொருட்டு முக்குணங்களாலாய படைப்பு முதலியவற்றை சங்கற்பத்தாலியற்றி விருப்பமின்றியே விளையாடுகிறான். இந்த பகவான் உங்களுக்கு மாத்திரம் புத்திரனென்று நினைக்கலாகாது. சகலருக்கும் தாய் தந்தை மக்கள் முதலான அன்புக்குரிய எல்லாமும் அவனே. முக்காலங்களிலும் ஐம்பொறிகட்கும் இலக்காயுள்ள சிறிதும் பெரிதுமான சராசரங்களனைத்தும் அவனுக்குப் புறம்பாகப் பேசவுரியதன்று" என்றிப்படி உத்தவரும் நந்தகோபரும் பேசிக்கொண்டிருக்கவே பொழுது விடியுங்காலம் வந்தது. கோபிகைகள் துயிலெழுந்து விளக்குகளைத் தூண்டி வீடுவாசல்களை மெழுகிக் கோலமிட்டுத் தயிர் கடைந்தார்கள். அவர்கள் அழகிய தங்கள் மேனிகளும் ஆடையணிகளும் திருவிளக்கு பிரகாசத்தில் இலகித்து விளங்கக் கண்ணன் புகழைப்பாடிக் கொண்டு கடையும்போது அவ்வொலி[illegible]யெழுந்த சப்தமான விசு[illegible]யமான திவ்விய கானங்களைக்கேட்டலால் சகலப்பிராணிகளுக்குந் திசைகளும் [illegible]. சூரியனுதயமானவுடன் கோகுலத்தில் சுவர்ணரதம் நிற்பதைக்கண்ட அங்குள்ளோரெல்லாரும் ஈதென்னவென்று பேசிக்கொள்ள கோபிகைகள் கம்சன் காரியமுடிக்கவந்த அக்குரூரர் திரும்பவும் வந்தார். முன்னம் கண்ணனைக் கொண்டுபோய் கம்சன் காரியம் முடித்தாயிற்றே. இன்னும் நம்மிடமென்ன முடியவேண்டுமென்று வந்தார் என்று பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது உத்தவர் காலை அநுஷ்டானம் முடித்து வெளியே வந்தார்.

---

76



## 47-ம் அத்தியாயம்.

### பிரமர கீதையும் உத்தவர் கோபியரைப் புகழ்தலும்.

ஞானேந்திரிய ஜயமுடைய முகாரவிந்தமும், தாமரைப் போன்ற கண்களும், பிரகாசம்பொருந்திய குண்டலங்களணிந்த காதுகளும், ஹாரகேயூராதிபூஷணாலங்கிருத வக்ஷஸ்தலமும், நீண்ட கைகளும் பொன்னிறவாடையுமுள்ளவராய் கண்ணன் பரிஜனமாயிருக்கும் உத்தவரைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். இவர் யாவர் எங்கிருந்து வந்தவர், யாரைச்சேர்ந்தவர். இவரைப் பார்த்தால் நடையுடை பூஷணங்களில் கண்ணனைப் போன்றிருக்கின்றது. என்று எல்லாரும் அவருக்கு அருகில்வந்து அவர் கண்ணபிரானது தூதரெனத்தெரிந்து தக்கபடி உபசரித்து ஆஸநத்திலுட்காரவைத்து நாண் நிறைந்த புன்னகையுடன் இனிது நோக்கிச் சொன்னதாவது: ஐயா, நீர் கண்ணனைச்சேர்ந்தவரென்றும் தாய் தந்தையர்க்கு இதமாகும்படி அந்தப்பிரபு அனுப்ப இங்குவந்தீர் என்றும் தெரியவந்தது. எப்படிப்பட்ட ஞானிகளுக்கும் சுற்றத்தார் நேயத்தொடர்பு துறக்கலரிதாம். ஆதலால் அந்த கண்ணன் தாய் தந்தையர்க்காகவே தம்மை யனுப்பியிருக்கலாமேயன்றி மற்றவரைப்பற்றி அவருக்காக வேண்டியதென்ன வண்டுகள் தேனுள்ளளவும் பூக்களிற் சுற்றுவதுபோல மனிதர்கள் ஒரு பிரயோஜனத்திற்காகப் பிறரிடத்தில் நேயம்பாராட்டினவை அந்தப்பயனையடைந்த உடனே அந்த நேயம் நீங்கவும் கூடும். வேசையர் தம்மை விரும்பிவரும் ஆடவர் கைப்பொருள் முழுதும் அழிந்தபின் அவரைத் துறப்பதும், ருத்துவிக்குகள் தக்ஷிணை கொடுத்து விட்ட எஜமானனையும், பறவைகள் கனியற்ற மரத்தையும், விருந்தினர் உண்டுவிட்ட வீட்டையும், மிருகங்கள் காட்டுத் தீ மண்டின காட்டையும், பரபுருஷன் ஆலிங்கனஞ்செய்[illegible]ந்தான பரஸ்திரீயையும் விட்டுவிடுவதும் உலகியற்கை என்று கோபியர்கள் சொல்லிக்கொண்டு மனம், வாக்கு, உடல் என்கிற மூன்றும் கோவிந்தன் விஷயமன்றி வேற

ந்த காரியத்திலும் செல்லாதிருப்பவர்களாதலால் கண்ணன்
தூதராகிய உத்தவரெதிரில் நினைந்து நினைந்து [illegible]ன்
[illegible]ப்பாடுபவர்களும் அழுபவர்களுமாய் நாணந் துறந்
து அவரைச் சூழ்ந்தார்கள். அவர்களிலொருத்தி மாதவனையே
நினைத்துக்கொண்டு ஒருவண்டை நோக்கி அது கண்ணனனுப்பி
ய தூதனென்று கற்பித்து வண்டே! நீ உன்னைப்போல நன்றி
கெட்ட கண்ணன் தூதனாகின்றனை; நீ உன்னுடையமுகவுறுப்பால்
என்பாதத்தைத்தொடவேண்டாம். என் ஸபத்நிகளின் மார்பிலு
ள்ள குங்குமந் தோய்ந்த அவர் மாலையின் மதுவுண்டதனால் உன்
முகத்திலும் அந்த குங்குமச்சாயம் பற்றியிருக்கிறது. அந்தச்சாய
மென்பாதத்திற் படவேண்டாம். பூவிலுள்ள மதுவையுண்டு பூவை
த்துறந்தோடும் உன்னைப்போன்ற அவன் மெய்மறப்பிக்கவல்ல
தன்னுடைய இதழ் அமுதை ஒருகால் சுவைப்பித்து அதனோடே நம்
மைவிட்டகன்றான். அவன் நாமத்தைப் புகழ்ந்தால் எல்ல நன்
மையும் பெறலாமென்று அறிஞர் சொல்வதும் அவனை விட்ட
கலகில்லாது திருமகள் காத்திருப்பதும் ஆச்சரியப்படத்தக்க தா
கின்றன. எம்முன்னர் வந்து அந்தயாதுகுலத்திறைவன் பெரு
மையை யேன் அதிகமாகப் பாடுகிறாய். அவனைவிட்டிருந்து அலை
கிற வெமக்கு அவன்பெருமை தெரியாததன்று. ஆதலால் புதிதா
க அவன் வலையிற்சிக்குவன னும் நங்கைமாருக்கு முன்னிற் செ
ன்று பாடினையேல் அவர்கள் மெச்சி உன்னை ஆதரிப்பார். அவ
னுக்காக உலகத்துள்ள மற்றனைத்தும் வேண்டாது அவனையே
பெருஞ்சார்பாகப் பற்றிய வெம்மை இரக்கமின்றி அகன்று சென்
ற அவனுக்குத் தூதுபூண்டுவந்து என்ன சமாதானஞ் செய்யலா
மென்று எங்கள்மேற் சிரம்வைக்கிறாய். பேர்தும் உன்னைத்தூத
னுப்பிய அவன் திறமும் நீ தூதுசெய்யுந் திறமும் தெரியவந்தன.
என்பாதத்தை விட்டு விலகு. உலகத்தில் வேடனைப்போலும் காதுவன்
னற்குரிய மிருகத்தையே பதிவிருந்து கொல்வான். இவ்வின் அவ்
வாறுமில்லாமல் உண்ண உதவாத குரங்கரசனை ஒளிந்துகொ
ன்றான். தன்மேல் மாலுற்று வந்த பெண்ணை மூக்கறுப்பித்தான்.
பலிசக்கிரவர்த்திகையில் பூதானம் வாங்கிக்கொண்டு அவனைப்
பாதலத்தில் தள்ளினான். ஆ. ஆ. அந்தக்கண்ணனை நன்குணரா



து [illegible]துப்படுந்துன்பம் போதும். அவன்பால்மிக அச்சப்ப
டவேண்டியிருக்கிறது. ஆகிலும் அவன் கதையைப் புகழ்ந்து
சொல்லா உயிராற்றகில்லாமையால் பாடிக்கொண்டிருக்கிறோம். வே
டனவன் இனிதாகப் பாடி மான்களை இழுத்து மடிப்பதுபோ
ல் அந்த கண்ணன் மாயக்குழலினிசையாலும் வஞ்சமொழிகளா
லும் எம்மைக்கா முறுவித்து இந்த பாடுபடச் செய்தான்.
அதுதவிர வேறேதாகிலும் முண்டானால் பேசுவாயாக. ஓடிப்
போய்த்திரும்பவும் வந்தனை. திரும்பவும் கண்ணனனுப்பவந்தா
யோ. நன்றுனக்கு என்ன வேண்டும். எம்மைக்கண்ணனிடத்துக்
குக்கூட்டிச்செல்லவேண்டுமோ; அங்கே திருமகளெனவொ
ருத்தி என்னும் பிரியாதிருக்கின்றாளன்றோ. அவளுக்கென்ன
சொல்லுவாய். மதுராபுரத்திலிப்போது கண்ணன் சுகமாகயிருக்
கிறாரா. தாய்தந்தையரையுந் தோழர் முதலானவரையும் நினைக்கி
றாரா. எப்போதேனும் அடிமைகளாகிய எங்கள் சிரத்தின்மேல்
நறுமணமுள்ள தமது திருக்கையை ஒருகால் சேர்த்தருள்வா
ரா என்று பலரும் பலவாறாகப் பேசியதைக்கேட்ட உத்தவர்
அந்த கோபிகைகளுக்கு ஆறுதலாகக் கண்ணன் தன்னிடம் சொ
ல்லியனுப்பிய வார்த்தைகளை எடுத்துரைக்கத் தொடங்கினார்.
கோபிகாமணிகாள், பலஜன்மங்களில் செய்துள்ள தியானம்
விரதம், தவம், வேள்வி, ஜபம், ஓதல், புலனடக்கம், முதலியபல
நல்வினைகளால் கிடைக்கிறதாயிருக்கிறதும் எப்படிப்பட்ட முனி
வரும் எவ்வளவோ பாடுபட்டும் இன்னும் கிடையாமலிருப்பதும்
நிகரற்றதுமான பக்தியினால் ஸ்ரீவாசுதேவமூர்த்தியின்பால் உங்க
ள் மனதை நிறுத்தி வீடு, கணவன், மக்கள், முதலியவர்களிடத்
தில் பாசத்தை விட்டு நிரந்தரம் அவனையே நினைத்துக்கொண்டி
ருக்கும் உங்களுக்கு நிகராவார் மற்றொருமில்லை. இவ்விதமான நீங்
கள் கண்ணனை விட்டுப்பிரிந்திருக்கினும் சர்வாந்தர்யாமியான அவ
ன் உங்களை விட்டகன்றிலன். உங்களுக்குண்டாகிய விரகமென்
பது எனக்குப்பெரிய புருஷார்த்தமாயிற்று. இப்படி பரமைகாந்தி
னிகளான உங்கள் தரிசனம் எனக்குக்கிடைக்கும்படியாகயிருந்
தது. உங்கள் பிரிவைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம்.
ஸ்ரீபகவான் உங்களுக்குத் தெரிவிக்கும்படி என்னிடத்தில் சொ

ல்லிய சொற்களைச் சொல்லுகிறேன் கேளுங்கள் என்[illegible]டக்கவா
ஙின்ட வாக்கியங்களை அவர்கட்குச் சொல்ல ஆரம்பித்தார்.
சகலமான சராசர வஸ்துக்களிலும் பஞ்சபூதங்களிருப்பனபோ
ல மனம், பிராணன், அறிவு, பொறிகள், முக்குணங்களென்னு
மிவைகளுக்கு ஆதாரமான நான் சகலபிராணிகளிடத்திலு மெப்
போதுமகலாதிருக்குந் தன்மையனானதால் நீங்கள் முற்றுமெ
ன்னை விட்டுப்பிரிந்திருப்பதாக எண்ணமுடியாது. யாவற்றுக்
கும் உபாதானகாரணமான வென்னில் நிமித்த காரணமான
வென்னால் எனது சங்கற்பசக்தியினால் பஞ்சபூதங்கள் முதலிய
வற்றுருவாகித் தோன்றும் சரீரங்களைப் படைத்து அளித்தழிக்கி
றேன். இயற்கையில் முக்குணப்பற்றிலாதாய், ஞானசொரூபமாய்,
சரீரத்துக்கு வேறாய், சுத்தமான ஜீவாத்துமாவானது பிரகிரு
தியின் அவஸ்தைகளான துயில், கனவு, விழிப்புகளில் [illegible]
தொழில்களாலின்பதுன்பங்களை யனுபவிப்பதாகத் தோன்றுகி
றது. கனவு நீங்கி விழிப்புக்கொண்டவன் கனவில் கண்டவற்றை
நிலையற்றனவாக மனதிலெண்ணுவதுபோல் விழிப்பிலுள்ள வற்
றையும் நிலையற்றன வென்றெண்ணி மனதைப் பொறிகளின் வழி
கண்டபடி செல்லவிடாமல் அடக்கினால் அஞ்ஞானமற்று ஞான
[illegible]ளைப்பெறுவரென்பதில் ஐயமில்லை. பலவழிகளிற் செல்லும்
ஆறுகள் கடலொன்றையே சேர்வதுபோ[illegible]தமோதல், வேள்
விமுதலிய கருமங்கள் செய்தல், அவற்றின் பலனை விரும்பாது பக
வானுக்கர்ப்பித்தல், ஆத்துமாவின் தன்மையும் பிரகிருதியின்
தன்மையுமுணர்தல், பொறியடக்கல், வாய்மை, யாகிய இவையெ
ல்லாம் மனதையடக்குவதால் பயன்பெறும். அப்படியடக்கியா
ளத்தக்க மனதை மற்றவிஷயங்களினின்று திருப்பி எப்போதும்
என்னிடத்திற் செலுத்துவதே பேற்றுக்குத்தக்க விரகாதலின்
புண்ணியவசத்தாலென்மேல் மனம் வைத்த நீங்கள் அம்மனம்
மீண்டும் புறமேகாவண்ணம் என்பால் நிறுத்துவதற்காக நானுங்
கள் கண்கட்குப்புலப்படாமலிருக்கிறேன். உலகத்தில் [illegible]
கிட்ட இருந்தால் அவனிடத்தில் மனம் அதிகமாகப்பற்றியிராது.
அவன் பிரிந்திருந்தால் மற்றயிந்திரியங்களின் தொழிலொன்று
மில்லாமையால் மனமொன்றே அவன்மேல் செலுத்த உரியதா



மையால் அது நீங்காது அவன்பக்கல் நிற்கும். அப்படியே கோ
குலத்தில் ராசக்கிரீடைக்கு வரமுடியாமல் இல்லங்களில் த
டைபட்ட தையலார் பலரும் மனதை என்மேல் செலுத்தி
அப்போதே என்பக்கல் சேர்ந்தனர். ஆதலால் என்பிரிவு நன்றெ
ன்றுணருங்கள் என்று மிகப்பிரியமுள்ள கண்ணன் சொல்லிய
னுப்பிய வார்த்தையைக் கேட்டு அதனால் நினைவுவந்து தெளிவு
கொண்டார்கள். மறுபடியும் உத்தவனை நோக்கி யதுகுல
த்தாருக்குத் துன்பமுண்டாக்கிக் கொண்டிருந்த கம்சனும்
அவனைச்சார்ந்த துஷ்டர்களும் மடிந்ததால் இன்பம்பெற்று அன்
பரால் சூழப்பட்ட கண்ணன் [illegible] மதுராபுரத்திலினிதிருத்தலும்
நல்ல பாக்கிய விசேஷம். எங்களிடத்தில் கண்ணன் வைத்திரு
ந்த நேசத்தையெல்லாம் இப்போது அந்நகரத்துப் பெண்டிர்கள்
பெற்று மகிழ்கிறார்களா. போக விசேஷங்களெல்லாமுணர்ந்த
கண்ணன் நகரத்துமடந்தைகள் மயக்குகளிற் சிக்கி அவர்களை
பிரியகில்லாது நேசங்கொண்டிராமற் போவரோ! அப்படிப்ப
ட்ட அழகிய பெண்டிர்களின் நடுவில் எப்போதேனும் ஊர்க்க
தைகள் நேரிட்டபோது ஏதேனும் எங்களைக் கண்ணன் நினைப்
பதுண்டா அந்தசரத்காலராத்திரிகளில் நாணலும், ஆம்பலும்
முல்லையும் பூத்து, சந்திரிகையும் கூடி எங்கும் வெள்ளென ஒளி
வீசும் பிருந்தாவனத்தில் சிலம்பொலிக்க அவன் கதைகளைப்
பாடிக்களிக்குமெங்களுடன் குரவை கோத்தாடியதை நினைப்ப
துண்டா. அவன் பிரிவினால் வேக்காடுகொண்ட எங்களுக்குத்த
ணிவும் உயிர்ப்புமுண்டாக்கவல்ல தம் திருமேனியைக் காட்ட
வும் தீண்டும்படிசெய்யவும் அருள் செய்ய இங்கெழுந்தருளு
வரோ. ஏதேது. பகைவரைவென்று அரசாட்சி பெற்று நகரத்து
நாரீமணிகளை மணந்து பந்துக்களுடன் கூடியிருக்குமவன் என்
னவேண்டி இங்குவருவான். திருமகள் கணவனும் எல்லாமுடை
யனும் நிறைந்தவனுமான அவனுக்கு நாட்டாராலாவது நகரத்தா
ராலாவது ஆகவேண்டிய காரியமென்ன ஒன்றுமில்லை. பிங்களை
யென்பவள் பரபுருஷனை விரும்பாதொழிதலே பெருஞ்சுகம் என்
றுரைத்தனள். அது நியாயமானதே. ஆகிலும் நமது மனம் கண்
ணனைவிட்டிருக்காமல் வருந்துகின்றது. திருமகளும் அகலகில்

லாது உ[illegible]யுமிடமான கண்ணன் இனிப்பு மொழியை மறந்திரு
க்கையாரால் முடியும். ஆறு, மலை, காடு, மாடு, குழலோசை, கண்
ணன் திருவடிச்சுவடுகள் இவையெல்லாம் எங்களை மறந்திருக்க
வொட்டாமல் நினைப்பூட்டுகின்றன. சகல துன்பங்களையுந்
தீர்க்க வல்ல திருமாலே! கண்ணா! கோகுலநாதா! இந்தச்
சேரியின் துன்பந்தீர உன் திருமுகத்தைக்காட்டியருள்வாயாக
என்று சொல்லிக்கொண்டு அந்தகோபிகைகள் பரமபாகவத
ரான உத்தவரை பகவானென்றே எண்ணி விசேஷமாகப் பூஜி
த்தார்கள். இப்படியவர்களாற் பூஜிக்கப்பட்ட உத்தவர் அவர்
கட்கு இனிதாகக் கண்ணனது சரிதைகளைப்பாடிக்கொண்டு அங்
குள்ள காடு மலை ஆறு முதலியவிடங்களிற் கண்ணன் விளையாடி
யவற்றைக்கேட்டுக் களித்து சிலமாதங்கள் வரையில் கோகுலத்தி
ல் தங்கியிருந்தார். அவர் அங்கிருந்த நாள்களெல்லாம் அங்கு
ள்ளார்க்குக்கண்ணன் வார்த்தை கேட்டால் கணப்பொழுதாக
வே கழிந்தன. அப்போது உத்தவர் தம்மனதில் அந்தக்கோபி
கைகளுக் கண்ணன் மேலுள்ள ஆர்வத்தை நினைத்து நினைத்து
வியப்புற்று ஆ! ஆ! இடைச்சிகளாகப்பிறந்து மடமைபூண்டுள்ள
இவர்கள் உள்ளத்தில் எப்படிப்பட்ட யோகிகளுக்கும் கடின
மான விஷ்ணுபக்தி இப்படி குடிகொண்டிருப்பது அவனுடைய
திருவருள் மகிமையே யன்றி வேறுகாரணமென்ன நினைக்கலா
கும். இப்படியவன் கிருபைக்கிலக்காய் உலகிலுள்ளயாவும் மற
ந்து நிரந்தரமான ஆர்வத்தோடு அவனை நினைந்திருக்கப்பெற்ற
பாக்கியவதிகளான இவர்களின் பிறவி நற்பிறவி எனத்தகும். இவ
ர்கள் பாததூளிபடப்பெற்ற இச்செடிகொடிகளுக்கெல்லாந் தண்
டன்ஸமர்ப்பிக்கிறேன். இவர்களின் திருவடி தீண்டப்பெறுவார்
க்குத் திரும்பவும் பிறவித்துயருண்டோ! இல்லை. இல்லை. என்றி
ன்னும் பலவிதங்களில் அவர்களது பெருமையைப் புகழ்ந்து
சிலமாதங்கள் சென்றபிறகு அவர்களிடத்திலும் நந்தகோபர்
யசோதை முதலியவர்களிடத்திலும் விடைபெற்று மதுரா[illegible]
கமனங்கொண்டு ரதமேறினர். அப்போது நந்தர் முதலியவர்கள்
உமது நல்லருளால் எங்கட்கு சகலாரிஷ்டங்களும் நீங்கி சகலாபீ
ஷ்டங்களு மளிக்கவற்றன கண்ணபிரான் ஆர்வம் எப்போதும்



நினைத்திருக்கவேண்டும் என்று சொல்லி விடை கொடுக்க
உத்தவர் அவர்களது கோபக்தியைக்கண்டு மதுரை சேர்ந்து
கோகுலத்தாரளித்த பரிசெல்லாம் அரசனுக்கும் பலராமனுக்
கும் கண்ணனுங்கொடுத்து அங்கே நிகழ்ந்த யாவற்றையுங் கண்
ணனுக்கு விண்ணப்பஞ்செய்தார்.

## 48-ம் அத்தியாயம்.

## கண்ணன் ஸைரந்திரிக்கு இன்பங்கொடுத்தல் முதலியன.

பின்பு கண்ணபிரான் முன்னால் கூன் நிமிரப்பெற்ற திரிவக்
கிரையென்னும் தருணிக்கு வரமளித்திருந்தபடி உத்தவருடன்
அவளில்லஞ்சேர்ந்தார். அதுகண்டு அவளும் கண்ணன் வரவு
க்கு எதிர்நோக்கி நெடுநாளாய் முத்துப்பந்தலிட்டு சயனாஸநங்
களாலுந் தோரணங்களாலுமலங்கரிக்கப்பட்டு நறும்புகைகளால்
கமழ்விக்கப்பட்டிருந்த தனதில்லம் பயன் பெற்றதெனக் களித்
தெழுந்து தோழிகளுந்தானுமாகக் கண்ணனுக்கும் உத்தவருக்
கும் தகுந்த பூஜைகள் செய்து ஆஸநங்களிலுட்காரும்படி வேண்
டினாள். அப்போது கண்ணன் வீற்றிருந்த திவ்யாஸனத்தரு
கில் உத்தவர் தரையிலுட்கார்ந்தார். பின்பு பகவான் சயனக்கிரு
கத்துக்குச்செல்ல அவளும் திவ்யாபரண வஸ்திர சந்தன புஷ்
பங்களணிந்து கண்ணனருகில் வர மானிடபாவனை செய்யும்
அந்தபகவானும் அவளைக்கிட்ட இழுத்துப் பற்பல போகலீலை
களியற்றினர். பின்பு அறிவிலியாகிய அவள் தன்பாலன்பார்ந்
துவந்த பரமபுருஷனை நோக்கி இன்னுஞ்சிலநாள் தன்னிடத்தி
லிருந்து காமசுகந்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள சிற்றின்
பத்திலே ஆழ்ந்திருக்குமவளுக்கு விரும்பிய இன்பத்தை அளி
த்து. பின்னர் அங்கு நின்றும் உத்தவருடன் தம்மில்லஞ்சேர்ந்
தார். ஒரு நாள் அக்குரூரர் வீட்டுக்கு பலபத்திரனையும், உத்
தவரையுங்கூட்டிக்கொண்டு செல்ல அக்குரூரர்கண்டு மிகுந்த
பக்தியுடனெழுந்து இருவரையும் வணங்கிப் பூஜித்து ஆஸனங்
களிலிருக்கச்செய்து பாவியான கம்சன் மடிந்தான். நீங்கள் அவ

தரிக்கப்பெற்ற இந்த குலம் துயரகன்று பர்வுபெற்றது. நீங்கள் அனைத்துக்கும் ஆத்துமாவானபடியால் உலகமெல்லாமுங்கள் வடிவமே. உங்களையன்றி காரியகாரணவஸ்து வென்றுமில்லை. ஜீவாத்துமா, பிரகிருதி, காலமென்பவையும், மூக்குணங்களுமுனது வடிவமாதலால் அவைகளால் படைக்கப்பட்டயாவும் உனது சரீரம். அவற்றுள் நீ புகுந்து பலவித செய்கைகளை நடத்துகிறுயாகிலும் அவற்றாலாகிய பலன்களான இன்பதுன்பங்கள் உன்னைப்பற்றுவதில்லை. இவ்வாறு உலகங்களைப் படைத்தளித்தழித்தலும் பற்பல அவதாரங்களும் உலகத்தினர் உய்யுமாறு அளிப்பதேயன்றி வேறொரு அவசியத்தால் நீ செய்வதில்லை. நீ சுகதுக்கங்களை யநுபவிப்பதாக நினைப்பவர் பகுத்தறிவிலாதவர். உனது கட்டளையாகிய வேதாதி சாஸ்திரங்களும் அவற்றாலுபதேசிக்கப்பட்ட சன்மார்க்கத்துக்கும் இடர் நேரிட்டால் அப்போது நீ அதை நிவர்த்திக்கும்படி திருவவதாரஞ்செய்தருளுவாய். சர்வேசவரா அப்படிப்பட்ட நீ இப்போது வசுதேவரில்லத்தில் திருவவதரித்து பூமிக்குப்பாரமான துஷ்டராஜர்கள் முதலியவர்களை அநேக சேனைகளுடன் மடிவித்துச் சாதுக்களையும் தருமமார்க்கத்தையும் ரக்ஷித்தருள சங்கற்பித்திருக்கிறாய். அதனாலிந்த யதுகுலம் புகழ்பெற்றது. இப்படிப்பட்ட நீயெழுந்தருளினமையாயிலிந்த குடில் நல்ல பயனடைந்தது. உன் திருவடி நீரால் சகல பாதகங்களுந் தீருமென்று மகிமை பொருந்திய யோகிகளும் அதை சிரசில் தாங்குவார்களன்றோ. அந்தத் திருவடி தாக்கப்பெறுதலினும் பெறும்பேறென்றுளதோ. இன்னம் அருள்செய்து இங்கு வந்தருளின உனக்கு அடியேன் செயற்பாலதொன்றுமில்லை. ஆயினும் உனதருளாலுயிர்த்திருக்கும்படியேனும் நீ யருள்புரிந்து எனக்களித்திருக்கு மனைத்தும் உனதடிமைக்குரியனவாகத் திருவுள்ளம்பற்றி இம்மையிலாண்டு மறுமையில் பிறவிக்கடற்கரை சேர்த்தருளவேண்டும். என்று விண்ணப்பஞ்செய்யும் அக்குரூரர் பக்திக்கு உகந்து அவரை வணங்கி உலகியற்கையாலவரை நோக்கி ஐயா, நீர் எங்களுக்குச் சிற்றப்பா. பெரியவர். அறிவு மிக்கவர். நம்மிடத்தன்புடையவர், ஆதலாலெனக்காகச் சிறிது சிரமம் பாராட்டாமல் அஸ்தி



னாபுரிக்குப் போய்வரவேண்டுகின்றேன். நமது அத்தையாகிய குந்தியின் பர்த்தாவான பாண்டுராஜன் வனத்திலிறந்ததனால் அவர் பிள்ளைகளைவரும் தாயும் அஸ்தினாபுரஞ்சேர்ந்து திருதராஷ்டிரமகாராஜன் ஆதரணையால் வளருகிறார்களாம். அவ்வரசன் அவர்கள்மீது கபடமில்லாமல் பக்ஷம்வைத்துக் காப்பாற்றுகிறாரா? அவர்களின் நிலைமை எவ்வாறிருக்கிறது. இதையெல்லாம் தெரியவேண்டியவராவும் நன்றாகத்தெரிந்து கொண்டுவந்து சிறியோங்களிடத்தில் அநுக்கிரகஞ் செய்தருளவேண்டும் என்று சொல்லியனுப்பினார்.

## 49 ம் அத்தியாயம்.

### அக்குரூரனை ஹஸ்தினாபுரத்துக்கு அனுப்பியது.

ஸ்ரீவாசுதேவனாக்ஞைப்படி அக்குரூரரும் ஹஸ்தினைக்குச் சென்று. அங்கே திருதராஷ்டிரன் அவன்மக்கள், யுதிஷ்டிரன் முதலிய பாண்டவர்கள், பீஷ்மன், பாக்லீகன், துரோணன், அவன்பிள்ளை அசுவத்தாமன், கர்ணன், இன்னமுள்ள யாவரையுங் கண்டு அவர்களாலுபசரிக்கப்பட்டு அங்கே அரசன் நடக்கையை நன்கறிய வேண்டிச்சில மாதங்கள் வஸித்திருக்க குந்திதேவியும் விதுரனும் அவ்வரசன் பிள்ளைகள் பாண்டு புத்திரர்மேல் காரணமின்றிப் பகைத்து நஞ்சிடுதல் முதலிய கொடுவினைகள் செய்யத்தொடங்க அவற்றிற்கரசனுஞ் சிறிதிடங்கொடுத்திருப்பது தெரிந்து கொண்டார். அப்போதொருநாள் குந்திதேவி தனக்குடன்பிறந்தான் முறையாகிய அக்குரூரரிடத்தில் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து தானுந்தன் பிள்ளைகளும் சத்துருக்களின் வசத்திலிருந்து தவிப்பதைச் சொல்லி முடிவில் கோவிந்தா, கண்ணா, சர்வரக்ஷகா, தீனபந்தோ என்பது முதலிய திருநாமங்களால் விளித்து உன்னையல்லது ஒரு சரணறியேன். ஏழைகளாகிய என்பிள்ளைகளைக் காத்தருள்வாய் என்று புலம்பினாள்.

அப்போது அக்குரூரரும், விதுரரும் அந்தப்பாண்டவர்கள் தேவர்களின் அமிசங்களாற் பிறந்திருப்பது முதலிய நியா

ங்களை உணர்த்தி அவனுக்காறுதல் சொல்லினர். பின்பொருநாள் அக்குரூரர் தாம் மதுரைக்குத் திரும்பிப்போகக் கருதிக் குருராஜனருகிற் சென்று மகாராஜனே, நான் சொல்வதைக் கேட்டு ஆலோசித்துத் தக்கவாறு செய்யவேண்டுகிறேன். நீர் அரசாளுதற்கியலாதவராயிருந்தும் தம்பியின் சகாயத்தால் சிம்மாசனத்தில் நிலைகொண்டீர். இப்போது அந்தப்பாண்டு மரணமடைந்தமையால் அவர் பிள்ளைகள் உமது பிள்ளைகளுடன் கூடி வளருகிறார்கள். ஆகலால் அந்த பிள்ளைகளிடத்திலும் உமது பிள்ளைகளிடத்திலும் நீர் வேற்றுமையின்றி அன்புவைத்து நடக்கத்தகும். அப்படிச்செய்தால் இன்பமும் புகழும் இம்மையிலுண்டு. மறுமையில் நற்கதியுண்டாகும். அவ்வாறன்றி துஷ்டர்களான உம்மவர் வசனத்துக்குள்ளாகி அதர்மத்துக்கிடங்கொடுப்பீரேல் இம்மையில் துன்பமும் அபகீர்த்தியும் மறுமையில் நரகமும் எய்துமெனத்தடையில்லை. எவனும் பிள்ளை பெண்டு முதலியவர்களுடன் முழுதுங் கூடிவாழ்வானென்பது நிலையில்லை. தேகமே நில்லாதென்றால் மற்றவற்றுக்குச் சொல்லவேண்டுமோ-ஒவ்வொருவனும் தன் தன் கருமவழியால் தனியே பிறந்திறக்கின்றானே யல்லது மற்றதெல்லாம் நடுவில் வந்து நீங்கும். தான்செய்த நல்வினை தீவினை மாத்திரந் தொடரும். ஆதலால் மறுமைக்குத் துணையாக தருமத்தையே கைக்கொண்டு நடக்கவேண்டும். தீவினைவழியிலொருவன் பொருள் தேடிவைத்தால் அப்பொருளை எடுத்துக் கொள்ள அவனுடைய பிள்ளைகள் முதலான அநேகர் கிடைப்பார்களன்றி அவன்பெறற் குரிய தீவினைப்பயனில் சிறிது கூறேனும் பெறுவாரல்லர். அறிவிலானாகிய ஒருவன் பிள்ளை பெண்டுகளுக்காக அதருமவழியில் பொருள் தேடினால் அதனால் இச்சித்திருந்த சுகம் கிடையாமலே தன்னுயிரையும் பொருளையுந் தம்மவரையும் இழப்புண்டு தீவினையைத்தான் சுமந்து பெருந்துன்பத்துக்கிலக்காகத் தொலைவான். அரசனே! நீர் தருமவழுவின்றி நடுநிலைமையோடிருந்து காலஞ்செலுத்துவீராக என்ற அக்குரூரர் மொழிகளை அரசன் கேட்டு நன்று நன்று நீர் சொல்பவற்றைக்கேட்கும்போது இன்பமீன்றலால் எத்தனைகாலம் கேட்டுக்கொண்டிருந்தாலும் பின்னுங்கேட்க விருப்பமே



உண்டாகிறது. ஆயினும் பிரகிருதி சம்பந்தத்தால் பிள்ளைமோகங்கொண்ட அறிவிலேனுக்கு துஷ்டப்பிள்ளை புத்தியைத் திருப்பவும் அவனிடத்தில் பக்ஷம்பாராட்டாதொழியவும் அசாத்தியமாயிருக்கிறது. யானென்செய்க. தெய்வச்செயலை மாற்றவல்லவர் யாவர். மேலும் பூமியின் பொறையைத் தீர்க்கக் கண்ணன் யதுகுலத்தில் அவதரித்திருக்கிறபடியால் அவன்திருவுள்ளக் கருத்தின்படியாவும் நடக்குமன்றி வேறாகாது என்று சொல்வதைக்கேட்டு அக்குரூரர் விடைபெற்றுத் திரும்பிக்கண்ணனுக்கும் மூத்தபிரானுக்கும் தான்போனவிடத்தில் நிகழ்ந்தவையெல்லாம் உரைத்தனர்.

## 50-ம் அத்தியாயம்.

### ஜராசந்தயுத்தம் யவன கதை முதலியன.

கம்சன் மடிந்தபின்பு அவன் மனைவிகளான அஸ்தி, பிராப்தி என்பவர்கள் தங்கள் பிதாவான ஜராசந்தனென்கிற மகதநாட்டரசனிடம்போய் தங்களுக்கு நேரிட்ட கஷ்டதிசையின் வரலாற்றை விவரமாகச் சொன்னார்கள். அதைக்கேட்டு அவன் அதிக சோகமும் கோபமுமுண்டாகி உலகில் யாதவப்பூண்டேயில்லாமற் போம்படி செய்வேனென்று இருபத்து மூன்று அக்ஷௌகிணி கணக்குள்ள பெரும்படையைக்கூட்டிக்கொண்டு மதுராபுரத்தை நான்கு புறத்திலும் வளைத்துக்கொண்டு நிரப்பந்தித்தான். கடல் கரைபுரண்டு வந்தாற்போலிருக்கும் அந்தச் சேனையையும் அதனால் வளைக்கப்பட்ட தமது நகரத்தையும் அஞ்சிக்கலங்குந் தம்மவரையும் கண்ணன் கண்டு அந்த இடத்துக்குங் காலத்துக்கு மேற்கத் தானவதரித்த காரியத்தை முடிக்க நினைத்து இப்போது மகதராஜனால் திரட்டப்பட்டு வந்த இந்தக்கூட்டம் நிலத்துக்குப் பாரமாயிருப்பதனால் இதை யொழித்துப்போடுவேன். இன்னுமிப் படிப் படைகளைக் கூட்டிவரும்படி இந்த ஜராசந்தனைக் கொல்லாமல் விடுவேன். இப்படி பூபாரத்தைத்

தீர்ப்பதற்கன்றோ நானவதரித்திருக்கிறேன். ஆதலால் இவ்வாறே இவன் திரும்பத் திரும்பப் படைகளைச் சேர்த்து வரவர அவற்றை மடித்துப் பூமியின் பாரத்தைத் தீர்க்கவும், தருமத்தையும் நல்லோர்களையும் காக்கவும், அதருமத்தையும் தீயோரையும் போக்கவும் வேண்டுமென்று சங்கற்பிக்குமளவில் கதிரவன்போல் ஒளி பொருந்திய இரண்டு தேர்கள், சகலமான படைக்கலமும் நிறைந்துள்ளவையாய், நல்ல தேர்ப்பாகர்களால் செலுத்தப்பட்டு விண்ணினின்றிறங்கிக் கண்ணன் அருகில் வந்து நின்றன. அவைகளைக் கண்டவுடன் அண்ணனை நோக்கி அண்ணா, உம்மால் காத்தற்குரிய நம்மவர்க்கு இப்போது நேரிட்ட துயரத்தைப் பாரும். இதோ திவ்வியமான தேரும் ஆயுதங்களும் வந்திருக்கின்றன. நம்மவர்க்கிடர் நீங்க எதிரி சேனைகளைக் கொல்லவேண்டும். இதற்காகவே நாமவதரித்திருக்கிறோமாகையால் இந்த இருபத்துமூன்று அக்ஷௌகிணி சேனையை மடிப்பீராக. என்றிப்படி இருவரும் பேசிக்கொண்டு கவசம்பூண்டு தேரேறிப்படைக்கலங்களுடனும் அற்பமான சேனையுடனும் நகரத்துக்கு வெளியில்வந்து பிறகு கண்ணபிரான் தாருகன் செலுத்து ரதத்து வீற்றிருந்து சங்கத்தை முழக்க எதிரிப்படைகளுடைய இருதயங்களில் பயநடுக்கமுண்டாயிற்று. அவ்விருவரையும் கண்ட மகதராஜன் கண்ணனை விளித்து, அடா அற்பனே! பந்துவைக்கொன்ற துஷ்டா, நீகவசம் பூண்டு சண்டை முனையில் நிற்கினும் சிறுபயலான உன்னுடன் போர்புரிய நாணி உன்னை உயிரோடு விடுவேன் என்றும், அடா ராமா, நீ நிலையாக நின்று யுத்தஞ்செய்யுந்திறமையும் சோராமையுமுடையவனாகில் என்னம்புகளால் அறுப்புண்ட உடலைத்துறந்து சுவர்க்கலோகமாவது செல்லலாம். ஆதலால் தைரியத்துடன் போரிலெதிர்த்து நில் பார்ப்போம். என்று விளம்பினன். அதற்கு அவனை நோக்கி ஸ்ரீ பகவான் அடா மாகதா, உலகில் வல்லவர்கள் வாயால் பிதற்றாமலே வீரத்தைக் காட்டுவார். நீ வாயால் வீண் பேச்சு பேசுகிறாய். காலம் நெருங்கிய உனது பேச்சு எமக்கேற்காது என்றார். பின்னர் ஜராசந்தன் அவ்விருவரையும் எதிர்த்து சூரியனையும் அக்கினியையும் மணற்காற்றுமூடியதுபோல தன் சேனைக்கூட்டங்களால் வளைத்துக்கொண்டான்.



அப்போது அப்போரைப் பார்க்க மேன்மித்தைகளிலும் கோபுரங்களிலும் நின்ற புரமாதர்கள் புட்கொடியும் பனைக்கொடியுமுள்ள அவ்விருவருடைய ரதங்களும் புலப்படாமையினால் சோகித்து மோகித்தார்கள். அப்போது பகவான் எதிரிசேனைகளின் அம்புகளால் தமது சேனை வருத்தப்படக் கண்டு தனது சாரங்கமென்னும் வில்லை வளைத்து டங்காரஞ்செய்து துணைக்கற்ற அம்புகளைத்தொடுத்தெய்து சதுரங்கசேனையை அழிக்கத்தொடங்கினார். தலையுடைந்த யானைகளும், அறுத்தறுந்த குதிரைகளும், கொடிமரமும் பாகனும் இழந்த தேர்களும், தலைகளும் கால்களும் கழுத்துமறுப்புண்ட காலாட்களுமாய்ச் சேனைகள் சிதறுண்டன. மனிதர், குதிரைகள், யானைகள் வெட்டுண்டதனால் ரத்தவெள்ளம் பெருகிற்று. கைகள் பாம்புகளெனவும், தலைகள் ஆமைகளெனவும், யானைகள் தீவுகளெனவும், குதிரைகள் முதலைகளெனவும் நினைக்கும்படி விழுந்துகிடந்தன. இவ்விதம் கண்ணபிரான் ஒருபக்கல் போர்செய்யும்போது மற்றொருபக்கல் மூத்தபிரான் உலக்கையாற் புடைத்து எதிரிசேனைகளையெல்லாம் மடித்தார். இவ்வளவு சேனைகளுமடிந்து போகும்படி செய்தது அவ்விருவருடைய அற்பவிளையாட்டேயன்றி வேறில்லை. சங்கற்பத்தினாலேயே சகலமும் உண்டாக்கிக் காத்து முடிக்கும் பகவான் இந்தசேனையை வெல்வது ஒரு அற்புதமன்றாயினும் மானிட வடிவங்கொண்டிருப்பதால் இந்த வெற்றியை புகழலாகிறது. பின்பு ஜராசந்தன் தனது சேனைகளையும் ரதத்தையும் இழந்து குற்றுயிருடன் வெற்றாளாய் நிற்க அற்பமிருகத்தைப் பிடிக்குஞ் சிங்கம்போல் ராமன் அவனைக் கைப்பிடியாகப் பிடித்து வருணபாசங்களால் கட்ட கண்ணபிரான் அவனாலின்னமனேக சேனைகள் வந்து மடியவேண்டுமெனக்கருதி அவனைக் கட்டவேண்டாம் விட்டுவிடு என்று சொல்ல அவ்வாறே விட்டுவிட்டார். அதனால் அவன் வெட்கி அரசாட்சி வேண்டாமென்று வெறுத்துத் தவஞ்செய்யும்படி கானகத்துக்கேக விரும்புங்கால் அவன் மித்திரரான அரசர்கள் பலரும் கூடி உலகநீதியையொத்து வாய்மைபொருந்திய வாக்கியங்களால் அவனுக்காறுதலாகச்சொன்னார்கள். இப்போது ஏதோ சிறிது தீவினைப்பயனாக யதுக்களால் தோல்வியடைந்

தாய். இனிஜயம் உண்டாகாதா! எதிரிகளை வெல்வதாகாதா! இதற்காக ஓடிப்போனால் எதிரிகளுக்கென்னும் அலக்ஷியமாகும். அவர்களை வென்று புகழ்ச்சிபெறுவேனாகில் இந்த இகழ்ச்சி நிற்குமா? இக்காரியத்தைக் கைவிடலாகாது என்று சொல்லக்கேட்டு அவனும் படையெல்லாம் பறிகொடுத்ததனால் வருந்திய மனத்தோடு மகதநாடு சேர்ந்தான். கண்ணனுங் கடலினும் பெரிதாகிய பகைவன் படையைக்கடந்து தம்படைக்குச் சேதமின்றி காத்துக்கொண்டு விண்ணோர் பூமாரி பொழியவும் மதுரைப்புரத்தார் எதிர்கொண்டு வந்து மகிழ்ந்து புகழ்ந்து பாடவும், சகலவாத்தியங்களு முழங்கவும், புரமெங்கும் நீர்தெளித்து புஷ்பங்கள் பரப்பித்தோரணங்களுயர்த்தி அன்போடு ஜனங்கள் கண்குளிர்ந்து நோக்கவும், புஷ்பம் அக்ஷதை முதலிய இறைத்து பெரியோர்கள் வாழ்த்தவும் நகரம் புகுந்தார். இப்படியேமகதராஜன் அக்ஷோகிணி சேனைகளுடன் பதினேழுதரம் மதுரையின்மேல் தண்டெடுத்து வந்தான். கண்ணன் கிருபைக்கிலக்கான யதுக்களால் படைகளிழந்து தோற்று உயிரோடு ஓடுவதேயன்றி வெற்றிகிடையாதிருந்தும் விடாமுயற்சியுடன் பதினெட்டாந்தரமும் படையெடுத்து வந்தான். இதனிடையில் நாரதமகாமுனிவருடைய தூண்டுதலால் காலனென்னும் யவனதேசத்தரசன் யதுக்கள் தன்னைப்போல் வலியரெனக்கேள்விப்பட்டு மூன்றுகோடி மிலேச்சரைக்கூட்டிக்கொண்டு வந்து மதுராபுரியைவளைத்துக்கொண்டு அட்டகாசஞ்செய்தான். அதுகண்டு கண்ணனும் அண்ணனும் யோசித்தார்கள். யதுக்களுக்கு வந்த ஆபத்தை யென்சொல்ல! யவனன் வந்து நம்மைப் போருக்கழைக்கிறான். நாளையோ, அன்றையோ, மாகதன்வருவான். இவனோடு நாம் போர் செய்து கொண்டிருக்குஞ்சமயத்தில் மாகதன் நம்மவர்களைக்கொல்வான். அல்லது தன் வீட்டுக்குப் பிடித்துக்கொண்டுபோவான். ஆதலால் மானிடர் விண்ணவர் முதலிய யாவரும் புகவரிதானவோரிடந்தேடி அங்கே நம்மவரைக்குடியேற்ற வேண்டும். பின்பு யவனனை மடிக்கலாம் என்று ஆலோசித்து கடல் நடுவில் பன்னிரண்டு காதம் பரப்புள்ளதாய் எங்கும் நவமணிகளிழைக்கப்பட்டதாய் சகலசாமான்களாலும் நிறைந்ததாய் விசுவகர்மாவின் சிற்பத்தி



முழுதும் விளக்குவிப்பதான நகரமொன்று செய்வித்தார். இந்திரன் கண்ணனுக்காக சுதர்மையென்னுந் தனது சபாமண்டபத்தையும், பாரிஜாதமென்னும் தருவையும் அந்நகரிற் சேர்த்தனன். அந்நகரத்தில் வருணன் ஒற்றைக்காது கறுப்பும் மற்றதேகமெல்லாம் வெளுப்புமான ஆயிரம் குதிரைகளைக் கொணர்ந்து கண்ணனுக்கு சமர்ப்பித்தான். நவநிதிகளுக்குடையவனான குபேரன் ஸ்ரீ வாசுதேவனுக்கு எட்டு நிதிகளை சமர்ப்பித்தான். மற்றுள்ள விண்ணவர்களும் அந்தப் பரமபுருஷனருளால் தாம் தாம் பெற்றுள்ள பெருமைகட்கேற்கப் பரிசுகளிட்டு வணங்கினார்கள். அந்தநகரத்தில் கண்ணன் தனது சங்கற்பசக்தியினால் யாதவர்கள் முதலிய யாவரையும் ஒருவருக்குந் தெரியாவண்ணஞ் சேர்ப்பித்தார். பின்பு மூத்தபிரான் மாத்திரம் மதுரையிலிருக்கவும் தான் புறத்திலோடவும் இருவருமாக ஆலோசனை செய்து கொண்டு கண்ணன் கையிலோராயுதமுமின்றி அழகியவனமாலை மார்பிலணிந்துகொண்டு மதுரைக்கு வெளியில் புறப்பட்டார்.

---

## 51-ம் அத்தியாயம்.

---

### முசுகுந்தன் முகுந்தனைக் காண்டல் முதலியன:—

---

இப்படி மதுரைக்கு வெளியி லெழுந்தருளும்போது பூர்ணசந்திரனுதயமானாற்போற் கண்கள் குளிரக் காணத்தக்க மரகதமலைபோன்ற திருமேனியும், (பச்சை மாமலை போல்மேனி) பீதகவாடையும், ஸ்ரீவற்ச மென்னுமறுவும், கழுத்தில்கௌஸ்துவமும், பருத்து நீண்ட நான்கு திருத்தோள்களும், அப்போதலர்ந்த தாமரை புஷ்பம் போன்ற திருக்கண்களும், கண்ணாடிபோன்ற கபோலங்களும், வெள்ளிய சிறு நகைப்பும் ஒளியிறைக்கு மகரக்குழைகளு முள்ளதாய் அழகுநிறைந்த திருமுகமுள்ள அந்த ஸ்ரீவாசுதேவனைக் கண்ட யவனன் நாரதமுனிவர் சொன்ன அடையாளங்களெல்லா மிவனிடத்திற் காணப்படுகின்றன ஆதலால்

இவனே வாசுதேவன்; இவன் ஆயுத மொன்று மில்லாமல் காலால் நடந்து செல்வதால் நானுமிப்படியே சென்று இவனுடன் சண்டை செய்வேன் என்று நிச்சயித்துக்கொண்டு கண்ணபிரான் பின்னே தொடர்ந்து சென்றான். அப்போது மகாயோகிகளுக்கும் எட்டாத நீயிப்படி பயந்தோடல் தகாது என்று சொல்லிக்கொண்டு பின்தொடர்ந்தோடி வருமவனை பகவான் ஒவ்வொரு அடியிலும் கையிலகப்படுவது போலக்காட்டிக்கொண்டே நெடுந்தூர மிழுத்துக்கொண்டு போய் ஒரு மலைமுழைஞ்சில் நுழைந்தார். பகவானைப் பின்தொடர்ந்த புண்ணியத்தால் தீவினைகள் அழியப்பெற்ற யவநன் இனி நல்ல ஜன்மங்கிடைக்க அநுகூலகாலமெய்தியதால் அம்முழைஞ்சினுள் தானும் புகுந்து அங்கொரு மனிதன் படுத்துத்தூங்குதலைக்கண்டு இவன் என்னை இத்தனை தூரமிழுத்துவந்து நல்லவன் போற் படுத்திருக்கிறான் கண்டாய்! என்று அம்மனிதனைக் கண்ணனென்றெண்ணிக் காலால் தாக்கினான். நெடுங்காலமாய் உறங்கிக்கொண்டிருந்த அம்மனிதன் யவநன் கால்தாக்கால் விழித்தெழுந்து திசைகளைப்பார்க்கிறபோது அருகில் அவன் நிற்பது கண்டான். அப்போது கால் தாக்கலால் சினங்கொண்ட அம்மனிதன் பார்வை பட்ட உடனே யவநன் சரீரத்தில் தீயுண்டாகி அதனால் கொளுத்தப்பட்டான். இப்படி சுகபகவானுரைக்கக்கேட்ட பரீக்ஷித்தரசன் அங்குதூங்கிய மனிதன் யாவன்? அந்த குகையில் அவன் நெடுநாளாய் ஏன் தூங்கினான்? தன் கண்ணோக்கத்தால் யவநனை யெரித்துவிட்ட அவனது சக்தி எவ்வகைத்து என்று கேட்க சுகமுனிவர் சொல்லலுற்றார். அவன் இக்ஷ்வாகுகுலத்தில் மாந்தாதா என்னும் சக்கிரவர்த்தியின் மைந்தன்; முசுகுந்தனென்னும் பெயருடையவன்; நன்னடக்கையிருந்த அவ்வரசனை அணுகி ஒருகால் அசுரரால் வாதைப்பட்ட இந்திராதி தேவர் தங்களுக்கு அசுரரால் அச்சமில்லாதிருக்கும் வண்ணம் காத்துக்கொண்டிருக்க வேண்டி விண்ணுலகத்துக் கழைத்துப்போக முசுகுந்தனும் அவ்வாறே விண்ணவர்க்கரணாய் நெடுங்கால மிருந்தான். பின்பு தேவர்கள் தங்கள் சேனைக்கு முருகனைத் தலைவனாகப்பெற்று முசுகுந்தனை நோக்கி



சொல்லலுற்றார்கள். அரசனே, நெடுங்காலமாய் எங்களுக்காக நீர் மண்ணுலகிலுள்ள சுற்றத்தாரையும் இன்பங்களையு மிழந்து இங்கே தனியாய் வந்து பிரயாசைப்பட்டீர். இனி அந்தப்பிரயாசம் உமக்கு வேண்டாம். ஆகிலும் நீர் உம்மிடத்துக்குப் போனால் அங்கு உமது பெண்டிர், மக்கள், மந்திரர், அடிமைகள் முதலியவரைக்காணப்பெறமாட்டீர். அவ்வனைவரும் பகவான் மூர்த்தியாகிய காலத்தின் வலியால் கழிந்து போயினர். காலத்துக்கு மேற்பட்ட வலியதொன்றுமில்லை. காலபக்குவமாகிக் கெடாதபண்டங் கிடையாதன்றோ. ஆகலால் நீர் உமக்குவேண்டிய இஷ்டத்தைக் கேட்டுக்கொள்ளும் கொடுப்போம். ஆனால்மோக்ஷம் வேண்டுமென்பீரேல் அது எம்மாலளிக்கற்பாலதன்று. மோக்ஷமளிக்கவல்லவன் நாராயணனொருவனேயன்றி யெங்களால் மோக்ஷமளிக்கவியலாது. அதன்றிவேறே யென்ன வேண்டுகிறீரோ அதைத்தருவோம், என்று சொல்லக்கேட்ட முசுகுந்தன் மோக்ஷமளிக்கவில்லாத உங்களிடத்திலித்தனை காலங்காத்திருந்த எனது உடம்பின் சிரமந்தீர இடையூறின்றி நெடுங்காலந் தூங்க நீங்கள் வரங்கொடுத்தாலமையும். மற்றொரு வரம் நீங்கள் கொடுக்கவும் நான் பெற்றுக்கொள்ளவும் தகாது. இம்மட்டிலென்னைவிட்டது பரமோபகாரம் என்று விண்ணுலகம் விட்டுவந்து முன் சொல்லியமலை முழைஞ்சிற்புக்கு சுகமாக நித்திரை செய்து கொண்டிருந்தான். இப்படி யவநன் முசுகுந்தன் நோக்கத்தால் நீறாய்ப்போனபின்பு அவன் கண்ணுக்குப் புலப்படாமலிருந்த கண்ணபிரான் அந்த முசுகுந்தனுக்குக் காக்ஷியளித்தார். அப்போது நிகரற்றதாய், யாவரையும் மயங்குவிப்பதான திருமேனி யழகும், திருவாபரணங்களின்னெழிலும், சிங்கவேறனைய நடையழகும் காட்டி யருளக்கண்ட முசுகுந்தன் இத்தனை இனியவடிவமு முளதோ என்று வியப்புற்று அந்த பகவானது திருவொளியாற் கண்கூச நெஞ்சிலஞ்சி மெல்லெனக் கேட்கலுற்றான். ஐயா நீர் கல்லு முள்ளு நிறைந்த இந்த மலைவழியில் தாமரைப்போன்ற இந்தப் பாதங்களாலெங்கனம் நடந்து வந்தீர். இப்படி வருவதற்குக்காரணமென்ன? நீர் எல்லாத் தேஜஸிலும் மேலிட்ட அக்கினியா, சந்திரனா, சூரியனா,

அல்லது தேவேந்திரனோ, இன்னும் வேறே தேவனோ, என்றும் உலகிலெங்குங் காணவரிதான உமது பிரகாசத்தைப்பார்க்கில் உம்மைத் திரிமூர்த்திகளுக்குள் முதலான (முதலாவதாகிய மூவர் அம்மூவருள்ளுமுதலாவான் மூரிநீர் வண்ணன் (என்கிறபடி) புருஷோத்தமனென்றே எண்ணவேண்டியிருக்கிறது. ஆதலால் உமது குலம், கோத்திரம், பிறப்பு, தொழில், என்பவற்றைச் சொல்ல மனமிருந்தால் சொல்லுவீராக. எனக்குத்தெரிந்து கொள்ள விருப்பமிருப்பதால் கேட்கிறேன். இப்படி யென்னை வினவுறுவீரேல் நீ யாரென்பீரேல் சொல்வேன், செவியுறவேண்டும். நான் க்ஷத்திரிய ஜாதி; இக்ஷ்வாகு சந்ததியிற் பிறந்தவன் யுவநாசுவன் புத்திரனாகிய மாந்தாதாவின் மகன் என்பெயர் முசுகுந்தனென்பார். நெடுங்காலந்துயிலின்றியிருந்ததனால் அலுத்து இக்காட்டில் இப்படி இடையூறின்றித் தூங்கிக்கொண்டிருக்கு மென்னை யெவனோ ஒருவன் காலால் புடைத்தெழுப்பினான். நானெழுந்து பார்க்குமளவில் அவன் எனது தீக்ஷ்ணயாலெரிக்கப்பட்டு நீறாய்ப் போனான். உடனே நீர் புலப்பட்டீர். உமது வடிவழகை எவ்வளவு காலம் பார்க்கினுந் திருப்தியுண்டாகாது. ஆயினும் உமது ஒளி கண் கூசும்படி விளங்குகின்றதால் உற்றுப்பார்க்கத் திறமற்றிருக்கிறேன். உமக்கு நிகராவாரொருவருமில்லையென்று உறுதியாக நம்புகிறேன் என்று பேசிய முசுகுந்தனுக்கு சர்வகாரணனை பகவான் புன்னகையுடனும் மேக முழக்கம் போன்ற திருமிடற்றொலியுடனும் திருவாய்மலர்ந்தருளினார். அப்பா! என் பிறப்புகளும் தொழில்களும் பெயர்களும் பலவுள. அவற்றுக்களவு கிடையாததலின் என்னாலும் கணக்கிடமுடியாது. ஒருகால் எவனேனுமொருவன் பூமியிலுள்ள நுண்மணற்பொடிகளையெண்ணத் திறம் படைத்தவனானாலும் எனது குணங்களையும் செய்கைகளையும் பெயர்களையும் பிறப்புக்களையும் என்றேனும் எண்ண வல்லவனாகான். முக்காலங்களிலும் உள்ளனவாய் உலகவியற்கைக்குப் புறம்பாயுள்ள எனது பிறப்புச் செயல்களை மகரிஷிகளும் ஆய்ந்து பார்த்து முடிவு காணாது ஒழிவார்கள். ஆகிலும் இப்போதிய பிறப்பு



டுகளியவற்றைச் சொல்வேன் கேள். பூமியின் பாரத்தைத் தீர்த்துத் தருமத்தைரக்ஷிக்க வேண்டுமென்று நான்முகன் வேண்டிக்கொள்ள யதுகுலத்தில் வசுதேவனில்லத்தில் பிறந்தேன். எனக்கு வாசுதேவனென்பப் பேரோதுவார்கள். கம்ஸனாகப் பிறந்த காலநேமி, பிரலம்பன் முதலிய பல அசுரஜாதிகளைக்கொன்றேன். இந்த யவநவேந்தனையும் உனது வெப்பநோக்கத்தால் மடிவித்தேன். தொன்றுதொட்டு எனக்கு வழிப்பட்டிருக்கு முனக்கு நன்மை செய்யும் பொருட்டு இப்போது உன் கண்களுக்குப் புலப்பட இங்குவந்தேன். என்னைக் காணப்பெற்றவர்கள் வேண்டிய இன்பங்கள் பெறுமற்போவதில்லை. ஆதலால் உனக்கு வரமளிக்கவந்த என்னிடத்தில் வேண்டிய வரங்களை கேட்டுக்கொள் என்றுரைத்ததை முசுகுந்தன் செவியுற்று முன்னால் கர்க்காசாரியார் சொல்லிய வாக்கியத்தை நினைத்து ஸ்ரீமந்நாராயணனே இம்மகாபுருஷனென்று உறுதியாக அறிந்து மகிழ்ந்து சர்வேசுவரா, உலகிலுள்ள ஆணும் பெண்ணுமான சகல ஜனமும் உமது மாயையால் மயக்குண்டு பேறின்பம் பெறவேண்டி உன்னைத்தொழாமல் துன்பத்துக்கிடமான சிற்றின்பங்களில் நெஞ்சை யாழ்த்தி அவற்றிலேபடிந்து பிறவிக்கடலில் முழுகி சுவரூபத்துக்குரிய இன்பத்தை யிழந்து கிடக்கிறது. இவ்வுலகத்தில் கிடைப்பதரிதான மானிடப்பிறவியடைந்து அதிலும் அங்கப்பழுது முதலிய குறையில்லாமலிருக்கு மொருவன் உனது திருவடி மலருக்குத் தொண்டுசெய்யகில்லாது பசுபக்ஷிகள் போல உண்டியுமுறக்கமுமே பெறுக நினைத்து வீணே காலங்கழிப்பானேல் அந்த மூடனை மனிதனென்றெண்ணாமல் விலங்கென்றே யெண்ணத்தகும். இப்படி அடியேன் அரசியல் செல்வத்தாற் செருக்கி இறப்பதான உடலையே ஆத்துமாவென்றெண்ணி பிள்ளை, பெண்டு, பொருள், பூமியாகிய இவற்றில் மனத்தை அழுந்த வைத்து அவைகளைப்பற்றிய கவலையினால் காலத்தைக்கழித்தேன். இப்படி விஷய வலைகளிற்பட்டு அதுவே இன்பமென்று விரும்பித் தன்னைமறந்திருக்கும் அடியேன் ஒரு நாள் ஒரு பொழுதில் என்னையுமறியாது உன் திருநாமத்தை உச்சரித்தி

ருப்பேன் போலும். அதை நீ மறவாமல் சமயம் பார்த்து அடியேனைக் காத்தருள. இங்ஙனமெழுந்தருளினும் [illegible] யானை, தேர், பரி யூர்ந்து மகாராஜனென்னப் புகழப்பட்டுள்ள தேகம் இறந்தபின் புழுவாய்ச் சாம்பலாய்ப் போகாமல் நிற்குமோ. பூமண்டலமுழுதும் வென்ற பேரரசர்களும் தம் அந்தப்புரத்து மாதர்களுக்கு அடிமையினுங் கீழாய்க் காத்திருக்கும் இழிவை யென் சொல்க. சிலர் இம்மை யின்பங்களைத் துறந்து மறுமையில் சுவர்க்க வாழ்வு கிடைக்கவேண்டித் தவங்கள் செய்வார். இவ்வுலக வாழ்க்கைபோல் இடையிடையே துயரமும் கடையிற் பெருந்துயரமுமாய் முடியும் விண்ணுலக வாழ்வுக்காகப் பாடுபடுதல் புத்திக்குறைவென்றே சொல்லவேண்டும். இப்படி பலமுகமாம் பிறவிக் கடலிலே அழுந்தும் ஆத்துமாக்களுக்குள் நற்கதி பெறுங்காலம் நேரிடப்பெற்றவன் நல்லவர் கூட்டுறவால் அழியுந்தன்மையதானவற்றிற் பற்றற்று அழியாத துணையாய் உன் திருவடியேபற்றி உய்வான். ஆகலால் ஏதோ புண்ணிய வசத்தால் அடியேனுக்கு உன் திருவடியைச் சேவிக்கக்கிடைத்தது. இதனினும் பெரிதென்று விரும்பத்தக்கது ஒன்றும் அடியேனுக்குத் தோன்றாதிருக்கும்படி அருள் செய்வதே யெனக்கு வரமன்றி மற்று யாதுமில்லை என்று விண்ணப்பஞ்செய்யக் கண்ணன் அருளிச்செய்ததாவது. நன்று. நன்று. உனதுறுதியைப் பரீக்ஷிப்பதற்காக நான் வரமளிக்கிறேன். நீ திடபத்தியுள்ளவனாயிருக்கிறாய். ஆதலால் முன்னம் அரசனாகவிருந்தபோது நேரிட்ட கொலை முதலிய தீவினைகள் நீங்கத் தவமியற்றி இவ்வுடலையொழி. என்மேல் பக்தி நீங்காதிருக்க. பின்பு ஒரு மகாபிராமணனாய்ப் [illegible]பிறந்து அந்த ஜன்மமுடிவில் என்னையே சேர்வாய்.

---

## 52-ம் அத்தியாயம்.

---

## ருக்குமணி கண்ணனிடம் வேதியனைத் தூதனுப்பல்.

---

என்றிப்படி கண்ணன் அருள் செய்யக்கண்ட முசுகுந்தன் பகவானை வலம் வந்து தண்டனிட்டு குகைவாயிலின் வெளிவர



மனிதர், மிருகங்கள், மரங்கள், கொடிகளெல்லாம் சிற்றுருவாயிருப்பதைக் கண்டு, கலியுகங்கிட்டியதென்றெண்ணி வடதிசை நோக்கிச்சென்று, இம்மையப்பற்றற்று நற்கதி கிடைக்குமென்பதிலையுறாமல் கண்ணனிடத்தில் மனத்தைச் செலுத்தி தவம் செய்ய ஆவலுற்று கந்தமாதனமலை சேர்ந்து நரநாராயணர் வசிக்கும் பதரிகாசிரமத்தில் குளிர் வெப்பமுதலிய துன்பங்களுக்குக் கலங்காதவனாய் ஸ்ரீ ஹரிக்கு அர்ப்பிதமாகத் தவஞ்செய்தான். இப்பால் கண்ணனும் மதுரைக்குவந்து அந்நகரை வளைத்துக்கொண்டிருக்கும் யவனனுடைய மிலேச்சசேனைகளை அடித்து அவர்கள் பொருள் முதலியவற்றைப்பறித்துக்கொண்டு துவாரகாபுரி சேர்ந்தார். இப்படி கண்ணன் அந்தப்பொருள்களையெல்லாம் மனிதர்களாலும் எருதுகளாலும் துவாரகாபுரிக்குக் கொண்டுசேர்த்துக்கொண்டிருக்கும்போது ஜராசந்தன் முன்போல அக்ஷௌஹிணிகளைக்கூட்டிக்கொண்டு போருக்குவந்தான். அந்தப்படைகள் வரும் வேகத்தைக்கண்டு வசுதேவபுத்திரர்கள் எளிய மானிடர்போல காட்டிக்கொண்டு பொருளைக்கைவிட்டுப் பயந்தோடுவார்போல விரைந்தோடிப் பலகாதங்கடந்து சென்றனர். அவர்களிவ்வாறு தாமரைப்படிகள் நோக ஓடுவதைக்கண்ட மகதராஜன் குலுங்க நகைத்து அவர்களின் திறமறியாதவனாய்ப் பிடித்து அடிக்கலாமென நினைந்து சேனைகளுடன் துரத்திக்கொண்டு பின்தொடர்ந்தான். அவ்வாசுதேவர்கள் நெடுந்தூரம் அவனுக்கு ஓட்டங்காட்டி சிறிதேனும் சிரமமின்றி எப்பொழுதும் மழை பொழிவதால் பிரவர்ஷணமெனப் பெயர் கொண்ட ஒரு மலையின்மேல் ஏறினர். அப்போது மாகதன் அவர்களின் அடிச்சுவடு புலப்படாமற்போனமையால் இந்தமலையிலே ஒளிந்திருக்கலாமென்று மலையைச்சுற்றவும் பெருங்கட்டைகளையடுக்கி நெருப்புமூட்டியெரித்தான். மலைமேலேறியிருந்த அவ்விருவரும் அதற்குச்சுற்றிலுமுள்ள தீயை பார்த்துப் பதினொரு காத உயரமான அம்மலையினின்று எழும்பிக்குதித்துப் பகைவனுக்கும் அவனுடன் வந்தவர்களுக்கும் அகப்படாமல் கடல் சூழ்ந்த தமது துவாரகாபுரஞ்சேர்ந்தனர். அப்போது ஜராசந்தன் அவ்விருவரையும் எங்குங்காணாதவனாகித் தான் மூட்டிய தீயிலகப்ப

டு வென்றுவிட்டார்களென்று வீணான எண்ணங்கொண்டு மகிழ்ந்து சேனைகளுடன் மகதநாடு சேர்ந்தான். அநர்த்த தேசத்தரசனான ரைவதனென்பவன் தனது குமாரியாம் ரேவதியென்னுங் கன்னிகையை நான்முகன் சொற்படி பலராமனுக்குக் கலியாணஞ்செய்து கொடுத்தான். ஸ்ரீ கண்ணபிரானும் பீஷ்மகனென்கிற விதர்ப்ப தேசத்தரசன் குமாரத்தியும் ஸ்ரீதேவியின் அவதாரமுமான ருக்குமணி யென்னுங் கன்னிகைக்காக சிசுபாலனுக்குத் துணையாக வந்த சால்வன் முதலிய அரசர்களை முறியடித்தோட்டி ராக்ஷஸ விவாக முறைப்படி அந்த கன்னிகாமணியை மணஞ்செய்தார் என்று சுகப்பிரமரிஷி உரைக்க பரீக்ஷித்தரசன் வினவலுற்றான். யோகீச்வரா, ஸ்ரீபகவான், சால்வன் ஜராசந்தன் முதலிய சிசுபாலமித்திரர்களை வென்று ராக்ஷஸ விவாகத்தில் ருக்குமணி தேவியைக்கொண்டுபோய் மணந்த கதையை விரிவாகக்கேட்க விரும்புகிறேன். ஸ்ரீ ஹரிகதைகள் கேட்கக் கேட்கப் புதியது போல இனிதாயிருப்பதுமன்றிக் கேட்பவர்களுடைய சகலபாதகங்களையும் போக்கும். அவற்றைக்கேட்கும்போது இனிவேண்டாம் என்பவனொருவனுமில்லையே. ஆதலாலிக்கதையை விஸ்தாரமாக அருளிச்செய்வீராக. என்று வினவ சுகபகவான் சொல்லத்தொடங்கினார். விதர்ப்ப நாட்டில் பீஷ்மகனெனப் பெயர்கொண்ட ஒரு நல்லரசனுள்ளன். அவனுக்கு ருக்குமி, ருக்குமரதன், ருக்குமபாகு, ருக்குமகேசி, ருக்குமமாலி யென்னும் பெயருள்ள ஐந்து குமாரர்களும் அவர்கட்குப் பின் ருக்குமணி யென்கிற ஒரு குமரியும் பிறந்தனர். அந்தப் பெண்மணி தந்தை வீட்டுக்கு வருபவர்களினால் கண்ணனது அழகு, திறம், குணம், செல்வமுதலியவற்றைக் கேள்விப்பட்டு அந்த பகவானே தனக்கேற்ற கணவனென வெண்ணினாள். அப்படியே கண்ணனும் அறிவு, லக்ஷணம், மேன்மை, அழகு, ஒழுக்கம், குணங்களென்பவற்றுக்கு இருப்பிடமாகிய அவளைத் தனக்கேற்ற மனையாளென்று எண்ணினார். அவ்வாறே உறவினரனைவரும் ருக்குமணியைக் கண்ணனுக்கே யளிக்கத் தகுமென்று கருதியிருக்க அவர்களின் கருத்தைத்தடுத்து கண்ணனிடத்தில் காரணமின்றிப் பகைபூண்ட ருக்குமி யென்பவன், அது தகாது சிசு



பாலனுக்களிப்பதே தகுதி யென்றெண்ணினான். அவன் எண்ணியதற்கு யாவரும் மாறுரைக்கவில்லையென்பதை யறிந்த ஸ்ரீ ருக்குமணிப்பிராட்டி மனம்வருந்தி, ஆலோசித்து நம்புதற்குரிய ஒரு பிராம்மணனைக் கண்ணபிரானிடத்திற்கனுப்பினாள். அந்தப் பிராம்மணன் துவாரகாபுரி சென்று பொற்றவிசில் வீற்றிருக்கின்ற பரமபுருஷனைக்கண்டார். பிராமணர்க்கினிய தேவனான பகவானந்தப் பிராமணனைக்கண்டு ஆஸனத்தினின்றிறங்கி அதன் மேல் இருக்கச் செய்து தனக்குத் தேவர்கள் பூஜை செய்வதுபோலத் தானந்த பிராமணர்க்குப் பூஜை செய்து பின்பு இனிய அடிசிலுண்பித்து இளைப்பாற்றி சாதுக்களுக்கு அஞ்சலேன வருள் செய்யுந்தம் திருக்கையால் பிராமணன் பாதத்தைத் தடவி க்ஷேமம் விரிவாய் வினவினர். கடலைக்கடந்து நீரிங்கே ஏதோ விருப்பத்தோடு வந்தமையால் இங்கே கிடைக்கத்தக்கதாகிய எதையேனு நாடி வந்திருந்தாலும் அதைச் சொல்லக் கூடுமானால் ஒளியாது விளம்புவீராக என்று மானிட வேடம் பூண்டிருக்கிற பரமாத்துமா கேட்டருள அந்த பிராமணன் தான வந்த விஷயமுழுதும் உரைக்கத்தொடங்கினான். விதர்ப்பராஜன் மகள் ருக்குமணியென்பவளுக்கு விவாகம் நடக்க யத்தனமாயிருக்கிறது, அம்மாது உமக்கடிமை செய்ய விரும்பி யென் முகமாக உமக்கொரு விஞ்ஞாபனம் செய்கிறாள். அந்த விண்ணப்பத்தைத் திருச்செவிசாற்றியருளிப் பின்பு செயற்பாலதைச் செய்தருள்வீராக.

## ருக்குமணி சொல்லியனுப்பிய வாக்கியம்:—

...த்தவர் மோகிக்கும்படியான அழகிய பெருமானே, உனது திருக்கலியாண குணங்களை எவரேனுங் காதினால் கேட்கப் பெற்றால் அப்போதே அவருள்ளத்தின் தாபமெல்லாம் ஆறும். கண்படைத்தார் கண்களுக்குள்ள பயனெல்லாம் உன் திருமேனியைக் காணுதலேயன்றி வேறில்லை. அவ்வகைத்தான திவ்வியகுண ரூபமுடைய உன்னிடத்திலேயே என் மனம் நாணமற்றுப் புகுகின்றது. நற்குணமும் நல்லறிவும் நற்குலப்பிறப்புமுள்ள கன்னிகையானவள் விவாககாலம் வந்துபோ

ஆ குலத்திலும், வடிவத்திலும், ஒழுக்கத்திலும், பருவத்திலும், பொருளிலும், ஒளியிலும் ஒத்தாரற்று யாவருள்ளத்துக்கும் இனிய உன்னை வரிக்காமல் மற்றொருவனுக்கு மாலையிடத் துணிவளோ? ஆதலால் உன்னையே எனக்குக் கணவனென மனதில் வரித்து என்னை உனக்கு ஒப்புவித்தேன். அப்படியே நீ எழுந்தருளி என்னை உன்னுடைய மனையாட்டியாக்கிக் கொள்ளத்தகுதி. சிங்கத்தின் ஊற்றை நரிவேண்டுவதுபோல் மகாபுருஷனாகிய உனக்குரிய என்னை அற்பனான சிசுபாலன் கைக்கொள்ள விரும்பும் விருப்பம் பயன்படத்தகாது. நான் முற்பிறவிகளில் பகவானுக்கக்கும்படி கோவில் குளம் முதலியன கட்டல், வேள்வி, தானம் ஒழுக்கந்தவறாமை, நோன்பு, தேவபூஜை, பிராமணபூஜை, குருபூஜை முதலிய நற்கருமங்களைச் செய்திருப்பேனாகில் கண்ணபிரானெழுந்தருளி என் கைப்பற்றுக. சிசுபாலன் முதலிய துஷ்டர்கள் வீணே வெட்கிச் செல்லுக. எனக்கு நாளைக்கே விவாகம் நடப்பதாகக் குறிக்கப்பட்டிருப்பதால் அதற்குள்ளாகத் தனித்திங் கெழுந்தருளி சமயத்தில் சேனைகள் வரும்படி செய்துகொண்டு சிசுபாலாதிகளைப் பறக்கடித்து யாவராலும் வெல்லப்படக் கூடாத உனது வீரத்தனத்தைக் காண்பித்தலே கன்னிகைப் பரிசாகும். ராக்ஷஸவிவாகமுறையில் என்னைக் கைக்கொண்டு போகவேண்டும். அந்தப்புரத்திலுள்ள என்னைக்கொண்டு போவதற்காக அநேகம் உறவினரைக் கொல்ல நேரிடுமென்று நினைக்கவேண்டாம். கலியாணதினத்தின் முன்னமே குலதேவயாத்திரை யொன்று பெரிதாக நடக்கும். அப்போது கலியாணப்பெண்ணாகிய நான் அம்பிகை கோயிலுக்குப் போகும்படி அந்தப்புரம் விட்டு வெளியில் வருவேன். அப்போது நீ என்பாலருள் புரிந்துஉன் தாமரைக்கண்களால் நோக்காயேல் உன்னருளை நான் பெறுமளவும் எத்தனை ஜன்மங்கள் பிறப்பேனாகிலும் அந்தந்தப்பிறவிகளிலேயும் உன்னையே நினைந்து உபவாசம் முதலிய விரதங்களால் வருந்தி உயிரைத்துறப்பேன், என்றிப்படி ருக்குமணி சொல்லியனுப்பிய வாக்கியங்களை உம்மிடத்திற்குக் கொண்டுவந்து ஒப்புவித்தேன். இனி யென் செயற்பாலதோ அதனை ஆலோசித்துச்செய்வீராக.



## 53-ம் அத்தியாயம்.

## நாச்சியார் திருத்தேரேறியது.

இவ்வண்ணம் ருக்குமணியின் விண்ணப்பத்தைப் பிராமணன் முகமாய்க் கேள்வியுற்ற கண்ணபிரான் அந்தப் பிராமணன் கையைத் தன் கையாற் பிடித்துக்கொண்டு ருக்குமணியெவ்வாறு என்மேல் மனம் வைத்திருக்கிறாளோ அவ்வாறே நானும் அவள் மேல் மனம் வைத்து அவளை மணஞ் செய்யுமளவும் சுகநித்திரையில்லாத் தன்மையனாயிருக்கிறேன். என் விவாகத்துக்கு ருக்குமியென்பவன் தடை செய்வதையும் நானறிவேன். அவன் மனதுக்கிணங்கிய ராஜாதமர்கள் எத்தனை பெயர் கூடியெதிர்த்தாலும் அவர்களை வெளியில் ஓட்டிவிட்டு அவளை எனக்குரித்தாக்கிக் கொள்வேன் எனச்சொல்லி கலியாணத்திற்காகக் குறித்திருக்கும் நக்ஷத்திரத்தைப் பிராமணன் சொல்லத் தெரிந்து கொண்டு தாருகனென்னும் தேர்ப்பாகனைத் துரிதமாக ரதங்கொணரநியமிக்க அவன் உடனே, சைந்யம், சுக்கிரீவம், மேகபுஷ்பம், வலாஹகம் என்கிற குதிரைகள் பூட்டிய திவ்விய ரதத்தைக்கொணர்ந்து நிறுத்திக் கை குவித்து நிற்க அத்தேரின்மேல் பிராமணனுக்தானும் ஏறி ஒரு நாளிலே ஆனர்த்த தேசமிருந்து விதர்ப்பதேசஞ் சேர்ந்தார். இது இவ்வாறிருக்க குண்டினதேசத்தரசனை பீஷ்மகனென்பவன் மூத்தபிள்ளைமேலன்பினால் அவனினைத்தபடி நடத்த உடன்பட்டு சிசுபாலனுக்கும் ருக்குமணிக்கும் விவாகஞ் செய்விக்கும்படி நிச்சயித்து நகரமெங்கும் வீதிகளில் நீர் தெளித்து விளக்கி அங்கங்கே கொடிகள் தோரணங்கள் விளக்கு முதலானவைகளாலலங்காரஞ் செய்யும்படி ஆக்ஞைசெய்தான். புரத்திலுள்ள ஏனைய மாதரும் ஆடவரும் ராஜகுமாரியின் விவாஹமென்னும் உற்சாகத்தினால் ஆடையணி பரிமளப்பூச்சு மலர்த்தொடைகள் தரித்துக்கொண்டிருப்பதால் ஒவ்வொரு வீடும் மிகச்சிறப்பாய் விளங்கிற்று. அப்போதவ்வரசன் விவாகாங்கமாக நாந்தி முதலிய சுபகாரியங்களில் பிராமணர்களுக்கு முறைப்படி போஜனஞ் செய்வித்து அவர்களால் ஆசீர்வாதங்கள் சொல்வித்து கன்னிகைக்கு மங்களஸ்

நானஞ் செய்வித்து நல்ஙகாத மடிகள் கட்டுவித்து நவரத்னப் பூண்கள் பூட்டி நறுமலர் சூட்டி நான்மறைவல்ல வந்தணர்களால் ரக்ஷை கட்டுவித்து நவக்கிரகங்களெல்லா மனுகூலமாகும்படி சாந்தி ஹோமங்கள் செய்வித்துப் பிராமணர்களுக்கு பொன் வெள்ளி வஸ்திரம் எள்ளு வெல்லம் பறவை முதலியவைகளை அன்னது அளிக்கும் செல்வத்துக்கும் காலத்துக்கும் பாத்திரத்துக்கும் தக்கபடி சிறப்பாகத் தானஞ்செய்தான். அப்படியே சேதி தேசத்தரசனை தமகோஷனென்பவன் தன் மகனை சிசுபாலனுக்கு விவாகஞ்செய்விக்க பூர்வாங்கமான நல்வினைகளை யெல்லாஞ் செய்து கொண்டு அளவற்ற நால்வகை சேனைகளுடன் குண்டினநகரஞ்சேரும்போது பீஷ்மகராஜனெதிர்கொண்டு போய் தக்கபடி யுபசரித்தழைத்து வந்து அவனுக்காக நியமிக்கப்பட்டுள்ள அலங்காரமான விடுதி மாளிகையிற் அவனைத் தங்கச் செய்தான். அப்போது சாள்வன் ஜராசந்தன் தந்தவக்கிரன் விதூரதன் பவுண்டரகன் முதலிய சிசுபாலன் பக்ஷத்தைச் சேர்ந்த பலர் அங்குவந்து கூடி கிருஷ்ணனும் பலராமனும் ஒருவேளை இங்கு வருவாரேல் அவர்களை ஓட்டிவிட்டுக் கன்னிகையைச் சிசுபாலனுக்கு விவாகஞ் செய்விக்கவேண்டுமென்று ஊக்கத்துடன் காத்திருந்தார்கள். இதெல்லா முணர்ந்த பலபத்திரர், கண்ணன் தனியே போயிருப்பதால் அங்குவந்து கூடியிருக்கும் வலிய பகைவருடன் போர் நேரிட்டால் சகாயம் வேண்டுமேயென்றெண்ணி அநேக சதுரங்க சேனைகளுடன் குண்டினநகரம் வந்து சேர்ந்தார். இவை யெல்லாமிவ்வாறு நடந்து கொண்டிருக்கும் போது, ருக்குமிணிப் பிராட்டி தான் கண்ணனிடத்திற்கு அனுப்பிய பிராமணன் மீண்டுவந்து ஒன்றுஞ் சொல்லக்காணேனெனவீறு கலங்கி, அந்தோ, இவ்விரவு விடிந்தவுடனே விவாகம் நடக்கச் சித்தமாயிருக்கிறதே! கண்ணன் வரக்காணேனே! நானனுப்பிய வேதியனையுங் காணேனே இனி யென் செய்க! என் மீது என்ன வெறுப்புளதோ அதனால் கண்ணன் பராமுகம் செய்துவிட்டிருக்கலாம். பகவான் எனக்கு அனுகூலம் செய்திலன் போலும். குலதெய்வமான கௌரியம்மையும் எனக்குப் பராமுகமானாள் போலும். நான் என்ன தீவினை செய்தேனோ! இவ்வண்ணம்



பாக்கியக்குறை நேரிடப் பெற்றேனே! என்று வருந்திக் கொண்டு கண்ணன்பாலுற்ற மனம் மாறாமல் கலக்கமுற்று ஒன்றும் பார்க்க விரும்பாமல் கண்களை மூடிக்கொண்டு கண்ணீர் பெருக விருக்கும்போது, அம்மாது தனது இடது தொடையும் தோளுங் கண்ணுந் துடிக்கக் கண்டாள். உடனே கண்ணனிடத்தனுப்பிய போன பிராமணனும் திரும்பி அந்தப்புரத்துக்கு வந்து ருக்குமணியைக் கண்டான். அவளும் அவனது முகக்குறியால் மகிழ்ச்சியுள்ளதாக அறிந்து செய்தி யென்ன வென்று வினவினள். அவனும் விருத்தாந்த மெல்லாஞ் சொல்லிப் பகைவரை [illegible] மணங்கொள்ள ஊக்கத்துடன் கண்ணன் வந்திருப்பதைத் தெரிவித்தான். அப்போது பிராட்டி அந்த பிராமணன் செய்ததற்கு கைம்மாறு ஒன்றுங் கிடையாதென்று வணங்கித் தண்டனிடுவதே கைம்மாறென்று செய்தாள். பீஷ்மகராஜன் புத்திரியின் கலியாணம் பார்க்கும்படி பலராமனுங் கண்ணனும் வந்திருப்பதாகத் தெரிந்து வாத்திய முழக்கத்துடனெதிர் சென்று மதுபர்க்கம் கொடுத்து நல்ல வஸ்திரம் முதலானவைகளால் கிரமப்படி பூஜித்து அவர்களுக்கும் அவர்கள் சேனைகட்கும் தக்கதாக நல்ல இடம் அமர்த்தி மனமகிழ்ச்சியுடன் விருந்து முதலிய உபசாரங்கள் செய்தான். அப்படியே அங்கு வந்த மற்ற அரசர்களனைவர்க்கும் அவரவர் திறத்துக்கும், வயதுக்கும், பொருளுக்குந் தக்கதாகச் செய்யவேண்டிய உபசாரங்கள் செய்தான். அப்போது அப்புரத்திலுள்ள ஜனங்கள் கண்ணனெழுந்தருளியதாகத் தெரிந்து அவன் திருமுகத் தாமரை மலரின் அழகைத் தங்கண்களால் கண்டு களித்து இம்மகா புருஷனுக்கும் ருக்குமணிக்கும் விவாகம் நடப்பது தகுமே யன்றி அக்கன்னிகையை அன்னியன் பிடித்தல் தகாது, என்று சொல்லி நாங்கள் ஏதேனும் பகவான் உகக்கும்படியான நல்வினை செய்துளோமாயின் அதின் பயனாக இந்தப் பரமபுருஷனே ருக்குமணி நங்கையின் அங்கை பற்றுக! என்று வேட்கைகொண்டிருந்தார்கள். பிராட்டியும் அம்பிகை ஆலயத்துக்குச் செல்லவேண்டிக் கால்நடையிற் புறப்படும்போது சுற்றும் அன்னைமார், தோழிமார், பிராமண சுமங்கலிகள், வேசிகள் முதலிய மாதர்கள் நன்றாக அலங்

கரித்துக்கொண்டு பற்பல உபஹாரங்கள் கைகளிலெடுத்துக் கூடச்சென்றார்கள். நல்லவுடைகளும் படைக்கலமுங் கொண்ட ராஜ சேவகர்கள் நான்குபுறத்திலுங் காத்துவந்தனர். பலவிதமான வாத்தியங்கள் முழக்கப்பட்டன. சிலர் இனிதாகப் பாடிக்கொண்டும் சிலர் புகழ்ந்து கொண்டும் தொடர்ந்தார்கள். இப்படி பெருங் கூட்டத்துடன் சென்று பிராட்டி கோயிலுக்கருகில் கால்களையுங் கைகளையும் அலம்பிக்கொண்டு ஆசமனஞ் செய்து மனவமைதியுடன் ஆலயம் புகுந்து அம்பிகை கிட்டச் சென்று தரிசித்தாள். அப்போது வயது சென்ற பிராமண சுமங்கலிகள் பிராட்டி கிட்டவந்து சிவனையும் உமையையும் கண்டு நமஸ்கரித்து வேண்டிய வரங்களைச் சொல்லிக் கொள் என்று சொல்ல அவளும் அம்பிகையே, பிள்ளைகளுடன் கூடிய சங்கரா, உங்களை நமஸ்கரித்து வேண்டுகிறேன். பகவானை கண்ணபிரான் என்னைப் பரிணயஞ் செய்யும்படி திருவுள்ளம் வைக்கவேண்டும் என்று பிரார்த்தித்து பின்னும் அந்த தெய்வ தம்பதிகளுக்கு தீர்த்தம், சந்தனம், அக்ஷதை புஷ்பம், வஸ்திரம், அணிகலம், நறும்புகை, தீபம், பலநைவேத்தியங்கள் கொடுத்து பிராமணிகளை முன்னிட்டு விசேஷ பூஜைகள் செய்தாள். பின்பு பிராமணிகளையும் பூஜித்து அவர்கட்கு, கொழுக்கட்டை, தாம்பூலம், மங்கலியச் சரடு, பழம், கரும்பு முதலானவைகள் கொடுக்க அவர்கள் அவளுக்கு ஆசீர்வாதஞ் சொல்லி அக்ஷதைகள் கொடுத்தார்கள். கன்னிகையும் அவர்களுக்கும் அம்பிகைக்கும் நமஸ்காரஞ் செய்து அக்ஷதைகளை சிரசு மேல் அணிந்து கொண்டு மௌன விரதம் விட்டுக் கோயிலினின்று அழகிய மணிமோதிரம் பூண்டிருக்குந் தன் விரலால் தோழிகையைப்பற்றிக் கொண்டு வெளியில் வந்தனள். அவ்வாறு பிராட்டி சிலம்பினொலிக்கும் அடிகளால் மெல்லென நடந்து ராஜசபை நடுவே செல்லுகையில், மகாவீர தீரரும் மயங்கும்படி பகவானது மாயையே வடிவெடுத்து வந்ததெனத்தோன்றும் அக்கன்னிகாமணியினது திருமுகந் திருக்கை முதலிய ஒவ்வொரு அங்கங்களைக் கண்ட ஒவ்வொருவனும் அவ்வங்கத்தை விட்டுக் கண்ணெடுக்க மாட்டாதவனாயிப்படி அரசர்களெல்லாம் மயங்கி தத்தம்



உடைகளும், பரிகளும், அணிகளும், ஆயுதங்களும், இருப்பதும் போனதுந் தெரியாதபடி சோர்ந்து கிடக்க, பெண்மணியும் அவ்வரசர்களைக் கடைக்கணோக்கி வந்து கண்ணபிரானே எப்போது காண்பேனோ என்றெண்ணி முகத்தை மறைக்கு முன்னுச்சிக்குழலினை இடக்கை மெல்விரல்களால் விலக்கிக்கொண்டு செல்லுகையில் கண்ணன் புலப்படக்கண்டு அவனுக்கினிதாம்படியான ஆர்வமமர்ந்த கடைக்கணோக்கத்துடனும் புன்சிரிப்புடனும் மெல்லெனச் செல்ல அதைக் கண்டு புண்டரீகக் கண்ணனும் மகிழ்ந்து பிராட்டி உள்ளக் கருத்தறிந்து, சகலராஜர்கள் நடுவில் நரிப்படை நடுவில் சிங்கஞ் செல்வது போலச் சென்று * அக்கன்னிகையைக் கன்னிரதத்தின்மேலிருத்திப் பகைவர் பார்த்து நிற்கப் பலபத்திரரும் தானும் தமது நகரத்துக்கேகும் வழியிற் சென்றார்கள். அப்போது ஜராசந்தன் முதலிய அரசர்கள் ஐ. ஐ. கெட்டது கெட்டது மகாவீரர்களாகிய நாமிருந்தனே மெயர் வில்லுங் கையுமாய் நிற்க சிங்கங்களை அவமதிக்கும் மான் போல் நம்மை அலக்ஷியஞ் செய்து இடையன் நமது புகழைக்கெடுத்துக் கன்னிகையைத் தூக்கிப் போனானே யென்று பொறுமை கொண்டு சீறினார்கள்.

* "கண்ணாலங் கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான்
இன்னாந்திருந்த சிசுபாலன் தேசழிந்து
அன்னாந்திருக்கவே யாங்கவளைக் கைப்பிடித்த"
என்றாள் ஆண்டாளும்.

# 54-ம் அத்தியாயம்.

## ருக்குமணிப்பிராட்டியார் திருக்கலியாணம்.

இப்படி கோபங் கொண்ட ஜராசந்தாதி ராஜர்களெல்லாரும் கவசம் பூண்டு ஆயுதபாணிகளாய் யானை குதிரை தேர்களிலேறித் தம்படைகள் சூழ [illegible] யாதவர்களைத் தொடர்ந்து ஆரவாரஞ் செய்ய, யாதவர்களும் [illegible] தங்கள் ஆயுதங்களைத் தரித்துக் கொண்டு அவர்களுக்கெதிராக திரும்பி நின்றார்கள். அந்தயாதவர்களின் சதுரங்க சேனையின் மேல் அந்த அரசர்கள் அம்புமாரி பொழிந்து மலைகளை முகில்கள் மழையால் மறைப்பது போலக் கம்பிக்கொண்டார்கள். அப்போது ருக்குமணிப் பிராட்டி கண்ணன் படையைப் பகைவர் கவரக்கண்டு அஞ்சிக் கண்ணன் திருமுகத்தை நோக்க, குறிப்பறிந்த கண்ணன் நீ அஞ்சவேண்டாம். நம்மவர்கள் இப்போதே எதிரிகளை அடித்தோட்டுவார்கள். என்று சொல்லிக் கொண்டிருக்குமளவிலேயே பலபத்திரர் முதலிய யதுவீரர் பராக்கிரமஞ் செலுத்தி யானை, பரி, தேர்கள் மீதிருந்த எதிரிகளை தலையும், கையும், காலும் அறுபட்டு விழும்படி அம்பு மழை பொழிந்து வெற்றி பெற்றார்கள். அவர்களாற் புடையுண்ட ஜராசந்தன் முதலிய எதிரிகள் [illegible] பண்டுபெறி கொடுத்தவன்போலோரிடத்திலிருந்து வருந்தி வாடுகின்ற சிசுபாலனைக் கண்டு நெருங்கி அதிதீரனை. மகாபுருஷனே, நீ இப்படி வருத்த முறத்தகாது. இன்பமாகிலுந் துன்பமாகிலும் ஒரு பிராணிக்கும் நிலையானதன்று. கூத்தாடி இஷ்டப்படி பதுமையாடுவதுபோல் ஈச்வரன் வசத்திலிருக்கும் மனிதன் இன்பதுன்பங்களில் உழலுகிறான். நான் பதினேழுதரம் வாசுதேவனிடத்தில் தோற்று [illegible] முயற்சியால் பதினெட்டாந்தடவை இருபத்து மூன்று அக்ஷௌஹிணி படைகளைக் கூட்டிக் கொண்டு போய் வெற்றிபெற்றேன். காலமும் தெய்வமும் உலகங்களை நடத்துமென்பதை நினைந்து நான் தோல்வியடைந்தபோதும் விசனமுறவில்லை. வெற்றிபெற்ற

71



போதும் மகிழவில்லை. இப்போதும் மகாசேனைகளுடன் வெற்றிபெறத்தக்க பெருமை பொருந்திய நாம் நமக்கு எத்திறத்திலும் இணையாகாத அற்ப யாதவர்களால் தோல்வி யடைந்தோம். இந்த யாதவர்க்குத் தலையானவன் கண்ணனன்று. இவ்வளவு மனிதன் ஏதோ அவர்களுக்கு இந்த காலம் [illegible]யிருக்கக்கண்டு அவர்கள் நம்மை வெல்லவல்லவரானார்கள். இந்த காலம் முற்றுமே அவர்கட்கு அநுகூலமாயே யிருக்குமென்பதில்லை. ஒரு வேளை நமக்கு நல்ல காலம் வரும். அப்போது நாமும் பகைவரை வெல்லுவோம். வருந்தவேண்டாமென்று தேறுதல் சொல்லி அவனை [illegible] குண்டினபுரம் விட்டுப் புறப்பட்டுத் தம் தம் நாடு நகரங்களைப் போய்ச் சேர்ந்தார்கள். அதற்குள் ருக்குமி யென்பவன் தனது [illegible] கண்ணன் ராக்ஷஸ விவாஹமுறைகொண்டு எடுத்துச்சென்றதை பொறுக்க மாட்டாதவனாய் அக்ஷௌஹிணி சேனையுடன் கண்ணனைத் தொடர்ந்து சகல ராஜர்களுங் கேட்க இந்த துஷ்டனை ஜயித்து என் தங்கையைத் திருப்பிக் கொண்டு வரத்தவறினேனாகில் இந்தக் குண்டினபுரம் புகேன் எனச் சபதங் கூறித் தேர்ப்பாகனைச் சீக்கிரம் நடத்தத்தூண்டி. கண்ணன் பெருமை யறியாத மதிகேடனாதலால் என் தங்கையைக் வலிய கொண்டேகுகின்ற இவ்விடையன் செருக்கை யொழிப்பேன். என்று பிதற்றிக் கொண்டு போய் கண்ணனை விளித்து நில் நில் என்றான். வில்லெடுத்து மூன்று அம்புகள் எய்து கண்ணனை யடித்தான். பின்னும் அடா, கணப்பொழுது ஓடாது நில் உன் கொழுப்பை யடக்கி விடுகிறேன். போரில் திருட்டுத்தனஞ் [illegible] த்துக் கொண்டு எதிரிகளைச் சூதினால் மோசஞ்செய்யும் உன்னை நானே மறந்து விடுவேனென்று நினையாதே. என் [illegible] ச் சாகாமல் என் தங்கையை விட்டுவிட்டுப் பிழைத்துப்போ. [illegible] சோற்றைத் திருட்டுத்தனமாய் கௌவிக்கொண்டோடும் நாய்போல் கொள்ளை கொண்டு போகலாமென்று பார்க்கிறாயோ! அது முடியாது. என்று இகழ்ந்து பேசினான். அப்போது கண்ணபிரான் நகைத்துக் கொண்டே அவன் வில்லையறுத்து அவன்மேல் ஆறுகணை யெய்து எட்டம்பால் தேர்க்

குதிரைகளையும், இரண்டால் தேர்ப்பாகனையும், மூன்றால் கொடி
மரத்தையும் அடித்தார். அவன் மற்றொருவில்கொண்டு ஐந்
தம்பு தம்மேலெய்யக்கண்டு அவ்வில்லையும் அறுத்து திரும்ப
ஒருவில்லெடுக்க அதையுமழித்து பலவகைப் படைக்க
லங்களை வீச அவற்றையும் பொடிபடச் செய்தார். பின்னந்த
ருக்குமியென்பவன் கையில் வாளெடுத்துத் தேரினின்றிறங்கி கண்
ணனைக் கொல்ல நினைந்து விளக்கினிற் பாயும் விட்டில் போல்
ஓடினான். கண்ணபிரான் அவன் கைவாளை எள்ளுத்தனைப்
பொடிகளாகப் போம்படி அறுத்து அவனைக் கொல்
லுவதற்காகக் கையில் வாள் பிடித்தார். அப்போது ருக்குமணி
பிராட்டி கண்ணபிரான் வருத்தத்துக்கு என்னண்ணன் பின்றிக்க
மாட்டானென்று கலங்கி அவன் திருவடிகளில் விழுந்து உலக
மெல்லாமாக்கல் முதலானவெல்லாம் உனது சங்கற்பமாத்திரத்
தால் நடக்கும்; உன் பெருமையறிவாரொருவருமில்லை. ஆதலால்
உன்றிறமறியாப் பேதையும் மூர்க்கனுமான என் அண்ணன்
செய்துள்ள பிழைகளை எனக்காகப் பொறுத்து அவனைக் கொல்
லாது விடவேண்டும் என்று பிரார்த்திக்க, கண்ணனும் அப்ப
டியே அருள் செய்து அவனுயிர் வாங்காது விட்டு வஸ்திரத்தாற்
பிணித்து தலையும் முகமும் முண்டமாகும்படி செய்து விட்டார்.
இதற்குள் பகைவரோடு போர் செய்த யாதவர்களும் கண்ணபி
ரானருகில் வந்து சேர்ந்தார்கள். அப்போது பலபத்திரர் விகா
ரப்பட்ட முகத்தோடு கட்டுண்டிருக்கும் ருக்குமியைப்பார்த்துத்
தயவுடன் கட்டவிழ்த்து விட்டு கண்ணா, நீ பந்துஜனமான இவன்
கொடியவனாயினும் இவனை யிப்படி விரூபியாக்குதல் தகுதி
யன்று; இப்படிச் செய்வது கொல்லுதற்குக் குறைந்ததன்று
என்று சொல்லி ருக்குமணியைப் பார்த்துச்சொன்னதாவது. ஒவ்
வொரு பிராணியும் புண்ணிய பாபங்களினாலாய இன்பதுன்பங்
களை நுகர்வதுண்மையாதலால் உனது தமையன் இவ்விரூப்
பட்டது எங்கள் குற்றமாக நீ நினைக்கவொண்ணாது. பந்துவான
வன் கொல்லுதற்கேற்ற குற்றஞ் செய்யினும் அக்குற்றத்தினால்
இவன் செத்தவன் போல்வானென்று அவனைக் கொல்லாமல்
விடவேண்டும். உலகத்தில் க்ஷத்திரியர் பூமி ஆளுகை, பொருள்,



செல்வம் மேன்பாடு முதலிய வற்றுக்காகச் சுற்றத்தாரையுங்
கொன்று விடுவாரென்பது தொன்று தொட்டு வழங்கி வரும்
கொடிய தருமம். சிலர் கர்மவசமன்றிக் கருதி அவர்களுக்கு நன்
மை வேண்டுவதும் பிறரை வேறாக நினைப்பதும் பக்ஷபாதமென்ப.
அஞ்ஞானிக்குத் தகாது. நிஜமாக விவேகமுடையையாதலால் யாவரை
யும் ஒரு நோக்காகக் காண்பாயாக. தேகமே ஆத்துமாவென்று நி
னைக்கும் மூடர்கள் தம்மை யொன்றும் பிறரொன்றும் வேறுபாடுள்ள
எண்ணங் கொள்வார். எவ்வளவு தேகங்களிருக்கினும் ஆத்
துமா மாறுதலற்ற தன்மையதேயன்றி தேகத்திலுள்ள தன்மைகள்
ஆத்துமாவிற் பற்றா. ஆதலால் தேகோபாதியால் ஆத்துமா
பலதன்மையுடைத்தாக நினைத்தல் மூடத்தனம். ஆத்துமாவானது
அனாதியான மாயவசனையால் தன்மை கெட்டிருப்பதால் தன
தல்லாதவற்றைத் தனதென்று நினைத்து தொல் வினையால் வரும்
இன்பதுன்பங்களை நுகரும்படி பஞ்ச பூதங்கள், பிராணன், முக்
குணமென்பவைகளால் உடலங்கள் நிர்மிக்கப்பட்டிருக்கின்றன.
இப்படி ஜீவன் தேகங்களைப்பெற்று சுகதுக்கங்களைப்புசிப்பதா
லெங்கும் வியாபித்திருக்கும் பரமபுருஷனை அந்தந்த வஸ்
துக்களுக்கும் அவ்வவற்றின் தன்மைகளுக்கும் காரணமாயினான்
றிலுங் கலந்தில்லாத தன்மையனாதலால் அவனொரு இன்பதுன்
பமுமில்லாதவன். ஆயினும் அவனவன் வினைகளுக்கேற்ப பயனளி
ப்பதால் இப்புருஷோத்தமன் சங்கற்பத்தாலிந்த உன்னுடையான்
இவ்விரூபமடைவது வினைப்பயனேயன்றி பரம புருஷன்மேல்
குற்றம் நினைக்கவொண்ணாது. பிறப்பிறப்பு முதலியவை தேகத்
துக்கேயன்றி ஆத்துமாவுக்கில்லை. தேகத்தின்மீது பந்தமென்
பது மோகமேயன்றி வேறில்லை. அந்த தேகம் நிலையற்றதாத
லால் பந்துத்தன்மையும் அத்தன்மையதே. ஆதலாலழிதற்
குரிய தேகங்களாலாய துக்கத்தைப்பற்றிச் சோகிப்பது அறிவிற்
சிறந்த வுனக்குத் தகாது. அந்த சோகத்தைத் துறப்பாயாக என்று
சொல்ல பிராட்டியும் மனக்கிலேசத்தை விட்டு அமைதி பெற்றி
ருந்தனள். அப்போது கண்ணனால் தன்பலமும், ஒளியும், மான
மும், நினைத்த எண்ணமுமிழப்புண்டு உயிர் மாத்திரம் இழக்
காமலிருக்கும் ருக்குமியென்பவன் தன் விரூபத்தைக் கண்டு

மணியெரிந்து கண்ணனை வென்று கன்னிகையைத் திரும்பாமல் குண்டினநகரம் புகேன் என்று உறுதி செய்து கொண்டு நகரத்துக்குச் சிறிது தூரத்திலிருக்கும் போஜகடகம் என்கிற இடத்தில் வாசஞ் செய்திருந்தான். பகவானும் இங்ஙனம் அரசர்கள் அனைவரையும் வென்று ருக்குமணி பிராட்டியை துவாரகாபுரிக்கு அழைத்துக் கொண்டுவரும் போது அங்கரில் கிரகங்கடோறு முள்ள ஜனங்கள் யாவரும் கண்ணபிரானையே எல்லாமாகப் பற்றினவர்களாதலால் அந்த ஜனங்களெல்லாம் மஹத்தான உத்ஸவங்கொண்டாடி ஒவ்வொருவரும் நன்றாய் அலங்கரித்துக் கொண்டு ஒவ்வொரு வீடுகளிலும் துவஜ தோரணங்கள் அலங்காரங்கள் செய்து வாயில்களில் பூர்ணகும்பங்கள் தீபங்கள் முதலிய சுபங்களுக்குரியவை யமைத்தி அந்த திவ்ய தம்பதிகளுக்கு விசேஷமான காணிக்கை யெடுத்துக்கொண்டு யானை, தேர், குதிரை, மனிதர்களால் நெருங்கியிருக்கும் வீதிகளில் இங்குமங்கும் விரைந்தோடுவார்களாயிருந்தார்கள். இந்த விபவங்களைக்கண்டு குரு, கேகைய, விதர்ப்ப, யது, குந்தி யென்னும் குலத்தாரெல்லாமிகக் களித்தனர். இப்படி மகாலக்ஷ்மிக்கும் தெரிந்து விளங்க கண்ணபிரான் ருக்குமணிப் பிராட்டியை விவாகஞ் செய்தருளினார். ஆங்காங்குள்ள அரசரும் ராஜகன்னிகைகளும் இங்ஙனம் நிகழ்ந்த ருக்குமணி பிராட்டியின் திருக்கலியாண மஹோத்ஸவத்தை ஆதியோடந்தமாகக் கேட்டு சந்தோஷங் கொண்டார்கள். இப்படி துவாரகையில் ருக்குமணி என்கிற பெரிய பிராட்டியாருடன் கூடி வீற்றிருக்கும் கண்ணன் என்கிற பரமபுருஷனை ஸேவித்துச் சகல ஜனங்களும் இம்மை மறுமையின்பங்களெல்லாங் குறைவறப்பெற்றிருந்தார்கள்.

முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 14 | 7-ம் வரி 4-ம் அடி | எழூர் | எழுவர் |
| 16 | 8 | ஸாதுக ருக்கு | ஸாதுக்களுக்கு |
| 18 | 11 | ஆசனின் | ஆசனீயு |
| 25 | 15 8-ம் அத் | ப்ராத் | பிரார்த் |
| 27 | 19 | விடுக்க | விடுக |
| 29 | 3 | ஸிரளி | ஸிரவி |
| 40 | 26 | வசுராளே | வசுரனே |
| 46 | 15 | பிரதக்ஷண | பிரதக்ஷிண |
| ,, | 25 | அதிகமாயிரு | அதிகமாயிரு |
| 48 | 24 | பறக்கிற | பறக்கின்ற |
| 49 | 8 | [illegible] | தன் |
| 50 | 1 | அத | அவ |
| 52 | 27 | பிரான | பிரானை |
| 65 | 15 | கதரி | கதறி |
| 66 | 14 | இவை முதலிய வெல்லாம் | — |
| 67 | 14 | பாச் | பர்ச் |
| 79 | 22 | பந்துக்ரு | பந்துக்களு |
| 86 | ,, | 30-ம் அத். | 29-ம் அத். |
| 89 | 16 | கண்ணனை | கண்ணனை |
| 119 | 32 | தாகர்ள் | தார்கள் |
| 133 | 27 | பிராணிகளுக்கும் | பிராணிகளும் |
| 141 | 4 | கண்ணனு | கண்ணனுக்கு |
| ,, | 27 | செய்து | செய்துகொள்ள |
| | | | தாவதி |
| 143 | 13 | இன்ன | இன்னு |
| ,, | 22 | கோவிந்த | கோவிந்தா |
| 148 | 7 | பனைஞன் | பனஞன் |
| ,, | 28 | புகழ்வானம் | கவரிதான |
| 149 | 18 | மேனி | மேனி |
| 151 | 20 | கல்லுமுளரு | கல்முள |
| 153 | 2 | வெண்டு | வேண்டு |